2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

வரு.74 இல. 33 ★

www.vaaramanjari.lk

/Thinakaran.lk /ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன்

வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

தினகரன் வாரமன்ஜரி

2022 ஓகஸ்ட் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

August 14 Sunday, 2022

24 பக்கங்கள் 80/-



03 தவறாக நோக்கப்படும் பொருளாதார நெருக்கடி

06 காணாமல் போன கியூ வரிசைகள்!

11 கழுத்தறுக்கப்பட்டு இளைஞர் கொலை!

24 பெக்கிங்ஹாம் கொமன்வெல்த் 1 வெள்ளி 3 வெண்கலம் உட்பட 4 பதக்கங்கள்

பொருளாதார நெருக்கடியிலிருந்து

நாட்டை நிச்சயம் மீட்டெடுப்பேன் என்பதே எனது பிரார்த்தனை

அனைத்து மத கடவுள்களின் ஆசி கிடைக்குமென்கிறார் ஜனாதிபதி



பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்தாலும் அந்த நெருக்கடியிலிருந்து நாட்டை நிச்சயம் மீட்டெடுப்பதாக தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதற்கு புனித தந்தம் மற்றும் அனைத்து கடவுள்களின் ஆசிர்வாதம் பெரும் பலமாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

அனைத்து மக்களுக்கும் நல்வாழ்வைக் கொண்டுவரும் புதிய பொருளாதாரம் தொடர்பில் அனைவரும் புதிய நம்பிக்கைகளுடன் முன்னோக்கிச் செல்ல வேண்டுமெனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். 04

பொலன்னறுவை, வெலிகந்த பகுதியில்

கவனிப்பாரற்ற நிலையில் எண்ணெய்த் தாங்கிகள் விரைவாக புனரமைக்க



பொலன்னறுவை மற்றும் வெலிகந்த ரயில் நிலையங்களுக்கருகில் ரயில்வே திணைக்களத்துக்குச் சொந்தமான

அமைச்சர் பந்துல நடவடிக்கை

வருட இறுதிக்குள் 200 கோடி டொலரே இலக்கு- முதலீட்டுச் சபை

04



06 மாதத்தினுள் 129 கோடி டொலர் வெளிநாட்டு முதலீடுகள் ஈர்ப்பு

இலக்கை அடைவது கடினமல்ல என்கிறார் பணிப்பாளர் நாயகம் ரேணுகா வீரக்கோன்

லோரன்ஸ் செல்வநாயகம்

இவ் வருட இறுதிக்குள் புதிய முதலீட்டு திட்டங்களின் கீழ் 200 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான முதலீடுகளை மேற் கொள்ளும் இலக்குடன் இலங்கை முதலீட்டுச் சபை 04

அத்தியாவசிய தேவைகளுக்கான விநியோகம்; QR முறை தொடர்பில்

வழிகாட்டுதல்களை சரியாக பின்பற்றவும்

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அமைச்சர் கஞ்சன தெரிவிப்பு

அறிவுறுத்தல்களை கடைப்பிடிக்காத நிலையங்கள் மீது நடவடிக்கை எடுக்க CPCக்கு அமைச்சர் கஞ்சன உத்தரவு



QR முறை தொடர்பிலான வழி காட்டுதல்களை கடைப்பிடிக்காத எரிபொருள் நிரப்பு நிலையங்கள் குறித்து உரிய நிர்வாக ரீதியான தீர் மானங்களை எடுக்குமாறு பெற்றோ லியக் கூட்டுத்தாபனத்துக்கு எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜே சேக்கர அறிவுறுத்தல்கள் 04

1,00,000 மெ.தொ. மசகு எண்ணெய் நாட்டை வந்தடைந்தது



போராட்டக்காரர்களால் கைப்பற்றப்பட்டிருந்த கொழும்பு, காலிமுகத்திடல் 123 நாட் களின் பின்னர் மீண்டும் வழமை நிலைக்கு திரும்பியுள்ளது. இப்போது சுதந்திரமாக மக்கள் தங்கள் குடும்பத்தினருடன் மகிழ்ச்சியுடன் சென்று வரக்கூடிய இடமாக இன்று காலிமுகத்திடல் மீண்டும் மாற்றமடைந்துள்ளது. (படம்: துஷ்மந்த மாயாதுன்ன)



பொது மன்னிப்பு ஆவணங்களில் கையொப்பமிட்ட ரஞ்சன் 04

விரைவில் விடுதலையாகும் வாய்ப்பு

தமிழ் அரசியல் கைதிகள் 46 பேர் விரைவில் விடுதலை

நீதி அமைச்சர் உறுதியளித்ததாக சீ.வி. தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



சிறு குற்றங்களுக்காக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 46 தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக் காக ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ உறுதியளித்த தாக தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சீ.வி. விக் கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து கூறுகை யில், 04

நாளை முதல் 05 தினங்களும் பாடசாலைகள் நடைபெறும்

கல்வி அமைச்சு நேற்று அறிவித்தல் விடுப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

அரசாங்க மற்றும் அரச அனுசரணையுடன் இயங்கும் அனைத்து பாடசாலைகளும் நாளை 15 ஆம் திகதி திங்கட் கிழமை முதல் வாரத்தில் ஐந்து நாட்களும் கல்வி நடவடிக்கைகளுக்காக திறக்கப்படுமென கல்வி அமைச்சு தெரிவித் துள்ளது.

வாரத்தில் ஐந்து நாட்களும் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 1:30 மணி வரை பாட சாலைகளில் கல்வி நடவ டிக்கைகள் முன்னெடுக் கப்படும் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை, அதிபர் கள், ஆசிரியர்கள் மற்றும் ம ா ண வ ர் க ளு க் க ா ன போக்குவரத்து அசௌகரியங்கள் நிலவு மானால் விசேட போக்குவரத்து வேலைத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துமாறு அனைத்து மாகாண கல்வி அதிகாரி களுக்கும் கல்வி அமைச்சு 04

தேவைகளை நிறைவேற்ற பொதுமக்கள் தினமும் வருகை

அரச ஊழியர்களை ஐந்து தினங்கள் பணிக்கு அழைக்க அரசு கவனம்

போக்குவரத்து நிலைமைகளும் வழமைக்கு திரும்பியதால் ஆலோசனை

அரசாங்க ஊழியர்களை வாரத்தில் ஐந்து நாட்களும் பணிக்கு அழைப்பது தொடர் பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகி றது.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக ஏற் பட்டிருந்த நெருக்கடி நிலையைக் கருத்தில் கொண்டு, அரசாங்க ஊழியர்களை அழைப் பது கட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

எனினும் நாட்டில் ஏற்பட் டுள்ள எரிபொருள் நெருக்கடி ஓரளவுக்கு தணிக்கப்பட்டு, பொதுப் போக்குவரத்து சேவைகள் இயங்கி வருவதால், வாரத்தின் ஒவ்வொரு வேலை நாட்களிலும் சேவைகளை பெற்றுக் கொள்வ தற்காக பொதுமக்கள், அரச அலுவல கங்களுக்கு செல்கின்றனர். 04

வாரமஞ்சரி எங்கள் கருத்து...

மக்கள் தற்போது புரிந்து கொண்ட யதார்த்தம்!

கொழும்பு, காலிமுகத்திடலில் மாத்திரமன்றி, நாடெங்கும் இப்போது போராட்டங்கள் பெருமளவில் தணிந்து விட்டன. ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆயிரக்கணக்கில் குழுமி நின்றிருந்த காலிமுகத்திடல் போராட்டக் களத்தில் இப்போது ஐம்பது பேரைக் கூட காண்பது அரிதாக இருக்கின்றது.

அங்கே முன்னர் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்த காட்சி களை இப்போது காண முடியாதிருக்கிறது. ஒன்றிரண்டு பேர் மாத்திரமே சலிப்பான சுபாவத்தில் அமர்ந்திருந்ததை இரண்டு தினங்களுக்கு முன்பாக அவ்விடத்தில் காண முடிந்தது. இன்று வெறிச்சோடிப் போய்க் கிடக்கின்றது காலிமுகத்திடல் போராட் டக்களம்!

ஆர்ப்பாட்டங்களுக்கு அறைகூவல் விடுத்தவர்களும் இப்பொழுது சலிப்படைந்து போய் விட்டனர். அவ்விடத்தில் முன்னர் பல்லாயிரக்கணக்கில் திரண்டிருந்த ஆர்ப்பாட்டக் காரர்களுக்கு இரவுபகலாக உணவு விநியோகம் செய்தவர் களும் தங்களது குறிக்கோளில் நம்பிக்கையிழந்து பின் வாங்கி விட்டனர். அவர்களெல்லாம் போராட்டக்காரர்களை இப்போது மறந்து விட்டார்களா? இல்லையேல் மக்களால் பொருட்படுத்தப்படாத போராட்டத்துக்கு ஆதரவளிப்பதால் பய னில்லையென்று சலித்துப் போய் விட்டார்களா? எதுவுமே புரியாதிருக்கின்றது. போராட்டத்தை முன்னெடுப்பதற்காக ஊக்கத்துடன் இயங்குவதற்கு தற்போது ஆட்களைக் காண வில்லை. போராட்டக்காரர்களை நம்பி அவ்விடத்தில் கடை விரித்திருந்தவர்களுக்கும் இப்போது வியாபாரமில்லா மல் போய் விட்டது. 04

இலங்கை கடற்படைக்கு கண்காணிப்பு விமானம்

இலங்கையின் கோரிக்கையை ஏற்று இந்தியா கையளிப்பு



இலங்கை அரசின் கோரிக் கையையேற்று இந்திய கடற்ப டைக்கு சொந்தமான டோனியர் 228 கடல்சார் கண்காணிப்பு விமானத்தை இந்திய அரசாங் கம் இந்நாட்டுக்கு வழங்கியுள் ளது.

புதிய விமானம் 04

பாராளுமன்ற அமர்வு நேரத்தில் சிறு மாற்றம்

பாராளுமன்ற அலுவல்கள் கூட்டத்தில் தீர்மானம்

பாராளுமன்றத்தை எதிர்வரும் 29ஆம் திகதி முதல் மு.ப 9.30 மணிக்கு ஆரம்பிக்கவும், மதிய பேசன இடைவேளையை பி.ப 12.30 மணி முதல் பி.ப 1.00 மணிவரை அரை மணி நேரத்துக்கு மட்டுப்ப டுத்துவதற்கும் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆம் திகதி சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது. 04

ஜாமியா நளீமிய்யா கலாபீட முதல்வராக அகார் மொஹம்மத் நியமனம்



அஜ்வாத் பாஸி

ஜாமிஆ நளீ மிய்யா கலாபீ டத்தின் முதல் வராக அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத் நியமிக்கப்பட் டுள்ளார். இவருக்கான 04

வீரமுனை படுகொலை 32 வருடங்கள் நிறைவு

காரைதீவு குறூப் நிருபர்



1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ஆம் தேதி வீரமுனையில் இடம்பெற்ற மிலேச் சத்தனமான கொடூர மான படுகொலை தினத்தின் 32 வது வருட நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை வீர முனையில் இடம்பெற்றது.

தமிழினத்தின் புனித தலமான ஆலயத்திற்குள் 04

திருடர் அட்காசம் அதிகரிப்பு

வெள்ளவத்தை பகுதி மக்களுக்கு எச்சரிக்கை

வெள்ளவத்தையில் திருடர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. வீதியில் செல்வோரிடம் வழிப்ப றியில் ஈடுபடும் கும்பலொன்று நேற்று முன்தினம் பொலிஸாரிடம் சிக்கியுள்ளது.

வெள்ளவத்தை உருத்திரா மாவத் தையிலுள்ள தமிழ் சங்கத்துக்கருகில் பெண்ணொருவரிடம் கொள் ளையர்கள் கைவரிசையை 04

மே 09 கலவரம் தொடர்பில் இதுவரை 3,310 பேர் கைது

1,182 பேர் இன்னமும் விளக்கமறியலில்

நாட்டில் கடந்த மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற கலவரம் தொடர்பில் நேற்று வரை 3,310 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

இந்தக் குழுவில் இருந்து 1,182 சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளதாகவும் ஏனைய 04

19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட்;

இங்கிலாந்து செல்லும் அணியில் யாழ். இளைஞன்



இ ங் கி ல ா ந் து சுற்றுப் பயணம் மே ற் கொ ள் ள வுள்ள 19 வயதுக் குட் பட்டோருக் கான இலங்கை கிரிக்கெட் அணியில் கனிஸ்ரன் குண ரட்ணம் இணைத்துக் கொள் ளப்பட்டுள்ளார். 04

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

மனிதனின் பேராசைக்கு பலியாகும் அப்பாவி சிறுத்தைகள்!

இந்த உலகில் வாழும் அனைத்து உயிரினங்களும் வாழ்வதற்கே போராடி வருகின்றன. அதில் விலங்குகள் மாத்திரம் விதிவிலக்கல்ல. மனிதனைப் போன்றே காட்டு விலங்குகளும் இன்று வாழ்வதற்காக பாரிய சவால்களை எதிர்நோக்கி வருகின்றன. உலகில் வாழும் மனிதர்களின் தேவைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதனாலும் அபிவிருத்தி என்ற போர்வையில் காடுகள் அழிக்கப்படுவதன் காரணமாக இந்நிலை உருவாகியுள்ளன. இந்நிலையில் இந்நாட்டில் பொறி மற்றும் வலைகள் விரித்து மிருகங்களை வேட்டையாடுவது அதிகமாக காணக்கூடிய ஒரு செயப்பாடாகவே காணப்படுகின்றன.


குறிப்பாக இந்த செயற்பாடு மலையகப் பகுதிகளிலேயே அதிகமாக காணப்படுவதாக அண்மைக்கால புள்ளி விபரங்கள் சுட்டிக்காட்டப்படுகின்றன.

அண்மையில் மனதை உலுக்கிய சம்பவமாக கடந்த ஆறாம் திகதி ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டிக்கோயா வனராஜா பழையகாடு சமர்வில் தோட்டப் பகுதியில் இடம்பெற்ற சிறுத்தை 'வேட்டை'யைச் சொல்லலாம். இலங்கைக்கே உரிதான நான்கு அடி நீள ஆண் சிறுத்தை யொன்று கம்பி வலையில் சிக்குண்டு தன்னை காப்பாற்றிக் கொள்வதற்காக மரத்தில் ஏறியபோது அது மரத்தில் சிக்கிக் கொண்டது. ஆனால் இந்த சிறுத்தையை மிகவும் பாதுகாப்பான முறையில் காப்பற்றுவதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்காது மரத்தினை வெட்டி சாய்த்ததன் காரணமாக சிறுத்தை உயிரிழந்து விட்டது.

இதே போன்று கடந்த 2020 ஆண்டு மே 26 ம் திகதி நல்லதண்ணீர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாழைமலை தோட்டத்தில் மரக்கறி தோட்டம் ஒன்றில் பொறியில் சிக்குண்டு இந்த நாட்டுக்கே உரித்தான அபூர்வமான கறுஞ்சிறுத்தை மாட்டிக்கொண்டது. அப் புலி தப்பிப்பதற்காக முயற்சி செய்த போது கம்பி இறுகி பல இடங்களில் காயங்கள் ஏற்பட்டன. இதனை காப்பாற்றுவதற்காக ரந்தனிகல மிருக வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சிகிச்சை மேற்கொண்ட போதும் அது பலனின்றிஇந்த அபூர்வமான கறுஞ்சிறுத்தை உயிரிழந்தது.

இச் சிறுத்தையை நீண்ட தூரம் கொண்டு சென்றதால்தான் அது உயிரிழந்திருக்கலாம் எனப் பலரும் சுட்டிக்காட்டியதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.







மலைவாஞ்ஞன்

(படங்கள் : ஹட்டன் விசேட நிருபர்)

மணி ஆகியிருக்கும். சிறுத்தையை ஏழு மணியளவிலேயே தான் கண்டதாக ஒருவர் எம்மிடம் தெரிவித்தார்.

நாங்கள் அங்கே சென்றபோது கேபிள் கம்பியில் இறுகி மிகவும் மோசமான நிலையில் தான் சிறுத்தை காணப்பட்டது. பொறியிலிருந்து விடுபடுவதற்கு முயற்சி செய்தமையினால் இந்த கேபிள் அதன் உடலை மென்மேலும் இறுக்கியதில் உடல் உறுப்புக்கள் பாதிக்கப்பட்டிருக்கக் கூடும் எனக் கருதினோம்.

மிருகங்களை மீட்கும்போது மயக்க மருந்து உபயோகிக்கப்படுவதே வழமை. ஆனால் இதற்கான உத்தரவு எமது வன பாதுகாப்பு அதிகாரிகளுக்கு வழங்கப் பட்டிருக்கவில்லை. அதற்கு வனப்பாது காப்பு திணக்களத்தில் உள்ள மிருக வைத்தியர் ஒருவர் வந்துதான் மயக்க மருந்தை செலுத்த வேண்டும்.

எமது பிரதேசத்திற்கு பொறுப்பான மிருக வைத்தியர் ரந்தனிகல பகுதியில் தான் இருக்கிறார். சுமார் 120 கிலோ மீற்றர் கடந்து வரவேண்டும் அவ்வாறு வரும்போது குறித்த புலி மரத்திலேயே இறந்துவிடும். நாம் அவருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது மரத்தை வெட்டி சிறுத்தையை காப்பாற்றுங்கள் என்றார். அப்போது சிறுத்தையின் மூக்கில் இரத்தம் கசிய ஆரம்பித்திருந்தது. இந்நிலையில் மரத்தை வெட்டி சிறுத்தையை காப்பாற்றுவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை. மரத்திற்கு பாதுகாப்பு கயிறு கட்டியே மரம் வீழ்த்தப்பட்டது.

இந்த மரத்தில் அகப்பட்டு சிறுத்தை இறந்தது என்பதில் எவ்வித உண்மையும் கிடையாது. காரணம் மரத்தின் பாரிய இரண்டு கிளைகள் முதலில் பூமியைத் தொடும் அளவிலேயே மரம் வெட்டப்பட்டது. இதில் சிறிய கிளையிலேயே சிறுத்தை சிக்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. ஆகவே இதில் எவ்வித தவறும் இடம்பெறவில்லை.

இதனை பார்ப்பவர்கள் எம்மீது பல்வேறு குற்றங்களை சுமத்தலாம். நாம் எப்போதும் உயிரினங்களை காப்பாற்றுவதற்கே முயற்சி செய்கிறோம். எமக்கென்று போதியளவு வசதிகள் கிடையாது. போக்குவரத்துக்கு போதியளவு வாகனங்கள், உபகரணங்கள், ஆளணிகள் என்பன கிடையாது. நவீன தொழிநுட்ப சாதனங்கள் எவையும் அற்ற நிலையிலேயே சேவையாற்றி வருகிறோம். எனவே இது குறித்த வைத்திய பரிசோதனை ஒன்றை மேற்கொள்ளவும் நீதிமன்றில் முழு விபரங்களையும் சமர்ப்பிக்கவும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளேன். எமது பிரதேசத்தில் உள்ள அரிய உயிரினங்களான சிறுத்தை, புலி, மான், மரை உள்ளிட்ட அனைத்தும் எமக்கே உரிய சொத்துகள். அவற்றின் மூலம் தான் இந்த பூமியின் சமநிலை பேணப்படுகின்றது, அவற்றுக்கும் இந்த பூமியில் வாழ்வதற்கான சகல உரிமைகளும் உண்டு. அவற்றுக்கும் குடும்பங்கள் இருக்கின்றன. எம்மில் ஒருவர் பிரிந்தால் எவ்வாறு நாம் வருந்துகிறோமோ? அதே போன்று தான் அவையும் வருந்தும் என் பதனையும் புரிந்துகொள்ள வேண்டும். அந்த மிருகங்களும் வாழ ஆசைப்படுகின்றன என்பதனை உணர்ந்து செயப்படுவதன் மூலம் தான் இவ்வாறு அசம்பாவித சம்பவங்களை தவிர்க்க முடியுமே தவிர வெறுமனே சட்டத்தால் மாத்திரம் இதனை செய்ய முடியாது என்பது பிரபாத் கருணாதிலக தரும் விளக்கமாகும்.

(15 ஆம் பக்கம் பார்க்க)



சிறுத்தைகள் நடமாடும் பகுதியில் இருந்து வெகு தொலைவில் கடமையாற்றும் வனத்துறை அதிகாரிகள் மலையகத்தில் பணியாற்ற தமிழ் இளைஞர்கள் வனத்துறையினரால் நியமிக்கப்பட வேண்டும்

கடந்த 2020 ஏப்ரல் மாதம் 18 திகதி மஸ்கெலியா காட்மோர் பகுதியில் இதே போன்று கம்பி வலையில் சிக்குண்டு நான்கு வயது நிரம்பிய ஐந்தடி நீளமான சிறுத்தையொன்று மரத்தில் ஏறிக்கொண்டது. ரந்தனிகல மற்றும் நுவரெலியா வன பாதுகாப்பு அதிகாரிகள் அதனை ரந்தெனிகல மிருக வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது அந்த புலியும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தது.

இதுபோன்று அக்கரப்பத்தனை, கம்பளை, நாவலப்பிட்டி, பொகவந்தலாவை, நுவரெலியா உள்ளிட்ட பல பகுதியிலும் பல மலையக சிறுத்தைகள் உயிரிழந்துள்ளன.

வன திணைக்கள அதிகாரிகளின் மேல் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப் பட்டதுடன் ஊடகங்களிலும் இது குறித்து பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து இச்சம்பவத்தை ஆராய்ந்து அறிக்கை தயாரிக்கவும் வன பாதுகாப்பு அதிகாரிகளின் தவறுதலால் உயிரிழந்திருந்தால் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும் விசேட குழு அமைக்கப்பட்டுள்ளது.

எது எவ்வாறிருப்பினும் இதன் உண்மைத் தன்மை என்ன என்பது குறித்து நல்லதண்ணீர் வன பாதுகாப்பு பொறுப்பதிகாரி பிரபாத் கருணாதிலகவிடம் தொடர்பு



கடந்த 04 ம் திகதி தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை லோகி தோட்டத்தில் நாய் ஒன்றை வேட்டையாடுவதற்காக வந்த சிறுத்தை வீட்டின் கூரையை உடைத்து கொண்டு வீட்டினுள் வீழ்ந்துள்ளது. இதனை நுவரெலியா வனத்துறை அதிகாரிகள் வந்து நீண்ட பிரயத்தனத்துக்கு மத்தியில் சிறுத்தையைக் காப்பாற்றி கொண்டு சென்றனர்.; ஒருவர் காயமடைந்தாலும் கூட சிறுத்தைக்கு பொதுமக்கள் எவ்வித தீங்கும் ஏற்படுத்த முயற்சிக்காத தன் காரணமாக அதன் உயிர் காப்பாற்றப் பட்டது.

எது எவ்வாறான போதிலும் மிக அண்மையில் வனராஜ பகுதியில் மரத்திலிருந்து காப்பாற்றுவதற்காக எடுக்கப்பட்ட முயற்சி தோல்வி அடைந்ததையடுத்து கொண்டு கேட்டேன். அன்றைய தினத்தில் 7.45 மணியளவில் வனபாதுகாப்பு தொலைபேசி (1992) இலக்கத்திற்கு வழங்கப்பட்ட தகவல்களுக்கமைய எனது தனிப்பட்ட தொலைபேசிக்கு இவ்விடயம் தொடர்பான தகவல் கிடைத்தது.

நாங்கள் அங்கே செல்வதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டோம். அப்போது இப்பகுதியில் சீரற்ற காலநிலை நிலவியது. இப்பகுதி பாதிப்புக்குள்ளாகியிருந்தது. இதனால் எமது வாகனம் செல்வதற்கான வாய்ப்புகள் காணப்படவில்லை. இந்நிலையில் எமது திணைக்கள அதிகாரிகள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் குண்டும் குழியுமான வீதியில் தமது மோட்டார் சைக்கிள்களில் அவ்விடத்தை அடைந்திருந்தார்கள். அப்போது சுமார் 11

அல்லலுறும் ஏழைகளுக்கு உதவும் அக்கரைப்பற்று சகாத் நிதியம் மற்றும் ஜம்மியத்துல் உலமா சபை



அக்கரைப்பற்று 'சகாத் நிதியம்' மற்றும் அக்கரைப்பற்று 'ஜம்மியத்துல் உலமா' ஆகிய அமைப்புகளும் இணைந்து நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியான இந்நாட்களில் அல்லலுறும் ஏழைகளுக்கு முடியுமான உதவிகளை மேற்கொள்ளுமாறு பொது மக்களுக்கு விடுத்த வேண்டுகோளுக்கு இப்பகுதவிலுள்ள தனவந்தர்களும் பொதுமக்களும் தாரளமாக மனமுவந்து உதவ முன்வந்துள்ளனர். இந்தப்பணி ஆரம்பமாகி நான்கு நாட்களில் ரூபாய் 46 இலட்சம் சேகரிக்கப்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். வசூல்கள் தொடர்ந்து நடபெற்று க் கொண்டிருக்கின்றன.

வீடுகளில் முடங்கிக்கிடக்கின்ற சகோதர சகோதரிகளின் தேவைகளை அறிந்து அவற்றை உடன் நிறைவேற்றுமாறு பொது வேண்டுகோளை விடுத்துள்ள இந்த அமைப்புகள் இந்தப்பணியை செவ்வனே நிறை வேற்ற ஊரிலுள்ள உலமாக்கள், தனவந்தர்கள், பெரியோர்கள், இளைஞர்கள், பெண்கள், சிறுவர்கள் அனைவரையும் முடியுமானவரை உதவுமாறு ஏலவே வேண்டியிருந்தனர். தற்போது சிறுபோக அறுவடை காலமாகவுள்ளதால் ஒரு விவசாய போடியாரிடமிருந்து குறைந்தது ஒரு மூடை நெல்லையாவது இந்தப்பணிக்கு வழங்கு மாறு இக்குழுவினர் வேண்டிஇருந்தனர். இந்த உதவியை பணமாகவோ, நெல்லாகவோ அல்லது பொருளாகவோ வழங்கலாம் எனவும் குறிப்பிட்டிருந்தனர். இதற்காக அக்கரைப்பற்று பட்டின ஜும்மாப்பல்லிவாயல் வளாகத்தில் அமைந்துள்ள சகாத் நிதிய அலுவலகத்தில் விரும்பியோர் தமது உதவிகளையும் நன்கொடைகளையும் வழங்கலாம் எனவும் ஜும் ஆ பிரசங்கங்கள் மூலமாகவும் துண்டுப் பிரசங்கங்கள் மூலமாகவும் ஏலவே அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்கு அமைவாக அநேகமானோர் இக்காரியாலயதிற்கு வருகை தந்து தமது நன்கொடைகளை வாரி வழங்கி வருகின்றனர். இதேவேளை , சகாத் நிதிய தொண்டர்கள் வீடு வீடாகச்சென்று இந்த வசூலை மேற்கொண்டும் வருகின்றனர்.

கலாபூசணம் எம்.எ. பகுர்டீன்
(அட்டாளைச்சேனைகுறூப்நிருபர்)

ஜனாதிபதி மாளிகைக்குள் அத்துமீறி நுழைந்து சேதம் விளைவித்தவர்களின் புகைப்படங்களை பொலிஸ் தலைமையகம் வெளிட்டுள்ளதுடன் இவர்களை கைது செய்வதற்கு பொது மக்களின் உதவியை நாடியுள்ளது



2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

அரசியல் அரங்கம்

அர்ஜுன்



பொருளாதார அறிவு இல்லாத குழுவினர் நெருக்கடியை தவறாக நோக்குகிறார்கள்!

அமைச்சர் பந்துல குணவர்த்தனவுடன் சந்திப்பு

நாட்டில் நிலவுகின்ற பிரச்சினையை மேலோட்டமாகப் பார்ப்பதன் ஊடாக அதன் ஆழத்தைப் புரிந்து கொள்ள முடியாது. அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் ஊடாகவே நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்க முடியும் என போக்குவரத்து மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார். நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் அவர் எம்முடன் விடயங்களைப் பகிர்ந்து கொண்டார்.

கே: ஆர்ப்பாட்டங்களை நடத்தியும், அரசாங்கங்களை மாற்றியும் நாட்டில் தோன்றியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும் என சிலர் முயற்சிக்கின்றனர். ஆனால் அதையும் தாண்டி நீங்கள் நான்கு முன்மொழிவுகளை வைத்துள்ளீர்கள். இதனை விபரமாகக் கூற முடியுமா?

பதில்: எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு மற்றும் மின்சார விநியோகத்தில் உள்ள கட்டுப்பாடுகள் ஆகியவற்றை கவனத்தில் எடுத்துக் கொண்டு பொருளாதார நெருக்கடியின் ஒரு குறிப்பிட்ட அம்சத்தை மட்டுமே மக்கள் பார்க்கிறார்கள். நெருக்கடி என்பது மேலோட்டமாகத்தான் தெரியும். உண்மையான சூழ்நிலையைப் புரிந்து கொண்டு ஆழமான மற்றும் வேறுபட்ட கண்ணோட்டத்தில் அதனைப் பார்க்க வேண்டும்.

கே: உங்கள் நிலைப்பாட்டின்படி உண்மையான பொருளாதார நெருக்கடி என்றால் என்ன?

பதில்: இன்று நாம் பார்ப்பது சுதந்திரத்திற்குப் பின்னர் ஏற்பட்ட மிக மோசமான பொருளாதார நெருக்கடி. 2001இல் பொருளாதார வளர்ச்சி வீதம் 1.7 சதவீதத்தில் இருந்து 3.5 சதவீதமாக குறைந்துள்ளது. 2022 இல் இது 6 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டு மிக உயர்ந்த எதிர்மறையான பொருளாதார வளர்ச்சி வீதத்தைக் கொண்ட ஆண்டாக இருக்கும் என்று புள்ளிவிவரங்கள் நிரூபிக்கின்றன. மொத்தத் தேசிய வருமானம்,வேலைவாய்ப்பு, விலைகள், இருப்புக்கள் மற்றும் நாட்டின் முதலீடு போன்ற பேரினப் பொருளாதார மாறிகளிலும் பாதகமான நிலைமையே காணப்படுகிறது. இது இந்த ஆண்டு உற்பத்தியைக் குறைத்து மக்களின் வருமானத்தில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தி அழுத்தங்களைக் கூட்டும்.

கே: இந்த நெருக்கடிக்கு முன்னாள் ஜனாதிபதியே பொறுப்பு என்றும், அதனால்தான் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அகற்ற முயன்றதாகவும் செயற்பாட்டாளர்கள் கூறுகின்றனர். இதைப் பற்றி நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்.

பதில்: பொருளாதாரம் மற்றும் யதார்த்தங்கள் பற்றிய அறிவு இல்லாத இளைஞர்கள் குழுவின் பார்வை இது. பொருளாதாரப் பேராசிரியரிடம் கேட்டால், இதற்குக் காரணம் கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியல்ல, மாறாக பொது நிதிமுகாமைத்துவத்தில் ஏற்பட்ட தொடர்ச்சியான தவறுகள் என்று கூறுவார். சுதந்திரம் மற்றும் 1977 இற்குப் பிறகு நம் நாட்டின் பொருளாதாரத்திற்கு சரியான முன்மாதிரி இல்லை.

கே: இந்தக் குற்றச்சாட்டில் நீங்களும் உள்ளடங்குகின்றீர்களா?

பதில்: ஆம். 33 வருடங்களாக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில், எமக்கும் இப்பொறுப்பில் பங்கு உள்ளது. ஆனால் எனக்கு குறைவான பொறுப்பு ஒதுக்கப்பட்டுள்ளது. இதைப் பற்றி, வரப்போகும் அழிவுகளைப் பற்றி ஏராளமான புத்தகங்களை அச்சிட்டு வெளியிட்டேன். பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் விவாதங்கள் மூலம் எத்தனை உண்மைகளை முன்வைத்தாலும் சிரிப்பும், அவதூறும், கேலியும் மட்டுமே கிடைக்கும்.

கே: இந்த அரசாங்கத்தை தாம் ஏற்றுக் கொள்ளவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். இதில் உங்கள் கருத்து என்ன?

பதில்: அரசியல் ரீதியாக அது அவருக்கு பாதகமான அறிக்கை. தன்னால் முன்மொழியப்பட்ட டலஸ் அழகப்பெரும அதிக வாக்குகளைப் பெற்றுத் தெரிவு செய்யப்பட்டால் அது சரியான ஆணை பெற்ற அரசாங்கமாக அமையும் என அவர் கூறுகிறார். ஆனால் தோற்ற பிறகு ஆணை இல்லை என்கிறார். இவ்வாறு நாடு முன்னேறுவது சாத்திய மில்லை. வளர்ந்த நாடுகளில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இப்படி நடந்து கொள்வதில்லை.

கே: சில அரசியல் கட்சிகள் தங்களுக்கு அதிகாரம் கொடுத்தால் ஆறு மாதங்களில் பிரச்சினைகளைத் தீர்த்து விடுவதாகக் கூறுகின்றன. நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா?

பதில்: திறமையான எவருக்கும் ஆட்சியை வழங்கத் தயார் என முன்னாள் மற்றும் தற்போதைய ஜனாதிபதிகள் அறிவித்துள்ளனர். ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை ஏற்க விரும்புவதாக கூறியதன் பின்னரே சஜித் பிரேமதாச பிரதமர் பதவியை ஏற்க விரும்புவதாகத் தெரிவித்தார். கடந்த மே மாதம் 9 ஆம் திகதி கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையின் போது துப்பாக்கிச்சூடு நடத்துமாறு இராணுவத்திற்கு உத்தரவிட முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விரும்பவில்லை.எனவே அவர் போராட்டக் காரர்களின் கோரிக்கையின்படி கீழே இறங்கினார்.

கே: ஏன் எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் அவ்வாறு நடந்து கொள்வதில்லை என்று கூறுகின்றீர்கள்?

பதில்: நாடாளுமன்றக் குடியரசு வாதத்தைக் கொண்ட நாடு என்ற வகையில், இலங்கை இன்று எதிர்நோக்கும் அனைத்துப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் அறிவொளி பெற்ற நாடாளுமன்றத்திடம் பதில் தேட வேண்டும். பல நாடுகளைப் போலவே, இந்தியா மற்றும் பாகிஸ்தான் போன்ற அண்டை நாடுகளும் பாராளுமன்ற அமைப்பு மூலம் பதில்களைத் தேடுகின்றன.

கே: இந்தப் பிரச்சினைகளை பாராளுமன்றம் பொறுப்பேற்க வேண்டும் என்று அர்த்தமா?

பதில்: நிச்சயமாக. அரசியலமைப்புச் சட்டத்தின் 148, 149, 150, 151 மற்றும் 152 ஆகிய பிரிவுகள் மாநில நிதியத்தின் அனைத்து அதிகாரங்களும் பாராளுமன்றத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளன என்று கூறுகிறது. எனவே, நாட்டில் ரூபாய் மற்றும் டொலர் இல்லாததால் நாடு திவாலாகி விட்டது என்று அர்த்தம். பொதுநிதி என்பது அரசாங்கத்திற்கு வரிவிதிப்பு அல்லது பிறவழிகளில் வருவாய் சேகரிப்பு ஆகும். இரண்டாவது, அரசு ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவது மற்றும் தொடர் செலவுகள். வருமானம் மற்றும் செலவுகளுக்கு இடையே உள்ள இடைவெளியை ஈடுகட்ட உள்ளூர் மற்றும் வெளிநாட்டுக் கடன்களை பெறுதல். சுதந்திரத்திற்குப் பிறகு இந்த பணி பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டது.

கே: பொது நிதியை பாராளுமன்றம் எவ்வாறு கட்டுப்படுத்துகிறது?

பதில்: பொதுமக்களுக்கு சேவைகளை வழங்குவதற்காக நிதி மேலாண்மை தொடர்பான சட்டங்களை பாராளுமன்றம் இயற்றுகிறது. இப்பணிகளை மேற்கொள்ள நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மத்திய வங்கி 1949 ஆம் ஆண்டு நாணயச் சட்டத்தின் மூலம் 1950 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. பாராளுமன்றத்தின் அனுமதியுடன் பணத்தை அச்சடிக்கும் ஏகபோக உரிமை மத்திய வங்கிக்கு மட்டுமே உள்ளது. எனவே, கடன் தொடர்பான பொறுப்பு மத்திய வங்கியின் மாநில கடன் துறையிடம் உள்ளது.

பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முதல் தேர்ச்சி பெற்று, உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தேர்வுகளில் தேர்ச்சி பெற்று, சர்வதேச பயிற்சி பெற்ற பிறகு இந்தத் துறை அதிகாரிகளை நியமிக்கிறது. அவர்களுக்கு பெரும் சம்பளம் வழங்கப்படுகிறது. பெரும்பாலான மக்கள் இந்த விஷயத்தைப் புரிந்து கொள்வதில்லை. எனவே, மத்திய வங்கியின் பொதுக் கடன் திணைக்களம் கடனைப் பெற்று அதன் பொறுப்பை ஏற்க வேண்டும். ஆனால் இன்று அரசியல்வாதிகள் இதில் ஈடுபட்டுள்ளனர். நாட்டின் திவால் நிலைக்கான காரணங்களை இந்த அதிகாரிகள் விளக்க வேண்டும்.

இரண்டாவது நிறுவனம் நிதி அமைச்சகம். பொதுமக்களுக்காக செலவிடுவது கருவூலமாகும். பட்ஜெட்டை தயார் செய்கிறார்கள். பயிற்சி பெற்ற அதிகாரிகள் கொண்ட ஒரு பெரிய குழு உள்ளது. பட்ஜெட் ஆவணத்தில் உண்மையை நாடாளுமன்றத்தில் முன்வைக்க வேண்டும். திறைசேரி பாராளுமன்றத்தை தவறாக வழிநடத்தி பாரிய தவறுகளை செய்துள்ளது. இலங்கையின் அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பொதுநிதி முகாமைத்துவம் பற்றிய புரிதல் குறைவாகவே உள்ளது. ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, கடந்த மூன்று நான்கு தசாப்தங்களில் ஒவ்வொரு எம்.பியும் இதற்குக் காரணம்.

(15ஆம் பக்கம் பார்க்க)



பாராளுமன்றத்தை தவறாக வழிநடத்தியுள்ள திறைசேரி, பாரிய தவறுகளைச் செய்துள்ளது. இலங்கையின் அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பொதுநிதி முகாமைத்துவம் பற்றிய புரிதல் குறைவாகவே உள்ளது

அதிகாரிகள் எடுக்கும் முடிவுகளுக்கு அரசியல்வாதிகள் எப்படி பொறுப்பேற்க முடியும்?



முடிவுகள் எட்டப்படாவிடின் பொதுத்தேர்தலே ஒரே வழி!

மலரும் யுகத்திற்கு புதியதோர் வடிவம்

மிலிந்த மொரகொட

பாராளுமன்றத்தில் கட்சிகள் இணைந்து சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்கும் யோசனை உள்ளது. அவ்வாறான கருத்துகளுக்கு சரித்திரமொன்று உண்டு. பயங்கரவாதம், சுனாமி அழிவு போன்ற ஆபத்தான சந்தர்ப்பங்களில் ஒன்றாக இணைந்து முகம் கொடுப்பதற்காக கலந்துரையாடப்பட்டது. ஆனாலும் கூட்டமைப்பொன்று உருவாகவில்லை.

சர்வ கட்சி அரசாங்கம் ஒன்று உருவாகுவதற்கு பாதிப்பை ஏற்படுத்திய காரணிகள் இன்றும் அவ்வாறே காணப்படுகின்றன. சர்வகட்சி அரசாங்கம் ஒன்றுக்கான யோசனை கூறப்பட்டாலும் நோக்கம் வேறொன்று. பதவிகளைப் பங்கிட்டுக் கொள்ளவும் அமைச்சுப் பதவி,அமைச்சுகளில் பதவி, திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களில் பதவி, தங்களது ஆதரவாளர்களுக்கும் வழங்கும் கோட்டா பற்றி கலந்துரையாடல்கள் நடைபெறுகின்றன.

மோதல் அங்குதான் உருவாகிறது. சர்வகட்சி அரசாங்கம் குறித்த கொள்கை தீர்வின்றி முடிவுறுகிறது. அதிகாரம் மற்றும் பதவிகளுக்கான ஆசைகளைக் கைவிட்டு,செயலாற்றக் கூடிய தலைவர் ஒருவருக்கு நாட்டை நடத்திச் செல்வதற்கு இந்தக் கஷ்டமான சந்தர்ப்பத்தில் இடமளிக்க வேண்டும். மீள்உருவாக்கத்தின் பின்னர் உரிமைக்காக போட்டியிடலாம்.

பொருளாதார மற்றும் சமூகத்தை மேம்படுத்த விரைவாக எடுக்க வேண்டிய பல முடிவுகள் உள்ளன. சமூக ஒழுக்கம் மற்றும் சட்டத்துக்கு மதிப்பளிப்பதை உறுதி செய்ய வேண்டும். ஒழுக்கமின்மை பிரச்சினையாகும். அனுபவமுள்ள, பெரியோர்களின் தொடர்புடன் கூடிய சமூகம் நாட்டுக்குத் தேவையாகும். சட்டத்தை கையிலெடுத்து செயல்படும் வன்முறை நடவடிக்கைகளுக்கு இடம் அளிக்கக் கூடாது. அமெரிக்காவில் நடந்த சம்பவம் பாடமாகும். ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை ஏற்றுக் கொள்ள முடியாது எனக் கூறி வன்முறையில் ஈடுபட்டவர்களுக்கு 7 வருட கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ஜனநாயகம் மற்றும் வன்முறை நடவடிக்கைகளுக்கு இடையே வேறுபாடுகள் உள்ளன.

உடனடியாக பொருளாதாரத்தை சரியான பாதைக்குக் கொண்டு செல்ல வேண்டும். ஏற்றுமதியை அதிகரித்து அந்நிய செலாவணியைப் பெற வேண்டும். வளர்ச்சியை ஏற்படுத்த பல முடிவுகளை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் செலவை முகாமைத்துவம் செய்யும் அளவுக்கு வரியை அதிகரிக்க நேரிடும். இல்லையென்றால் செலவைக் குறைக்க வேண்டும். வரவு மற்றும் செலவுக்கு இடையேயான இடைவெளியை குறைப்பதற்காக முதலீடு செய்வதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்த வேண்டும். போட்டி மிகுந்த பொருளாதாரத்துக்கு பொருத்தமான புதிய நிதிச் சட்டம் மற்றும் சரத்துக்கள் நாட்டுக்கு அவசியம். காலத்துக்கு ஏற்ப சிந்தித்து காணி, குடிவரவு, குடியகல்வு சட்டம், அந்நிய செலாவணி நடடை முறைகள் திருத்தப்பட வேண்டும்.

தற்போது பெரும் நட்டத்தில் இயங்கும்,தோல்வியுற்ற அரசு நிறுவனங்கள் பற்றி முடிவு எடுக்க வேண்டியது அவசியமாகும். நிறுவனங்களைப் பாதுகாக்க வேண்டுமென்றால் அவற்றின் சேவைக்கான செலவுகளைக் குறைக்கும் முறைகளைப் பின்பற்ற வேண்டும். மின்சாரம், எரிபொருள், எரிவாயு, நீர், பொதுப்போக்குவரத்து போன்ற துறைகளில் மாற்றங்களை செய்ய வேண்டும். தனியார்மயப்படுத்தலுக்கான முடிவுகளை எடுக்க வேண்டும். வெளிநாட்டு முதலீட்டாளர்களை இணைத்துக் கொண்டால் அந்நிய செலாவணி கிடைக்கும். புதிய தொழில்நுட்ப அனுபவங்களை பெற்றுக் கொள்ள முடியும்.

நாடு முகம்கொடுத்துள்ள மோசமான சந்தர்ப்பத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பல உள்ளன. பொருளாதாரத்தை சீர்செய்யும் முக்கிய முடிவெடுக்கக் கூடியவர்களிடம் தற்காலிக முறையை ஒப்படைக்க வேண்டும். பொருளாதார நிபுணர்கள் குழு ஒன்றை தேசியப் பட்டியலில் நியமிப்பதோடு, அவர்களுக்கு அமைச்சு அதிகாரத்தை வழங்கி தொழில்நுட்பத் தீர்வுகளை மேற்கொள்வது இன்னுமொரு யோசனையாகும்.

இவ்வாறான மாற்று யோசனைகளுக்கு அரசியல்வாதிகள் ஒப்புதல் அளிப்பதில்லை. தேர்தல் மூலம் அதிகாரத்துக்கு வந்து கட்சி அரசியல் கட்டமைப்பில் தீர்மானங்கள் எடுப்பதே சாதாரணமாக நடைபெறும். இன்றுள்ள தீர்மான மிக்க நிலைமையின் முன்னால் காலம் தாழ்த்துவது பிரச்சினையை மேலும் சிக்கலாக்கும். நிலைமை நாள்தோறும் மோசமாகக் கூடும். பொது மக்களின் தேவைகள் பூர்த்தியாகாத பின்னணியில் மீண்டும் போராட்டம், வேலை நிறுத்தம், எதிர்ப்புகள் ஏற்படக் கூடும். இரண்டாவது போராட்டம் முதலாவது அலையை விட மிகவும் மோசமாக இருக்கும் என்பது ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய விடயமாகும்.

பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் அணி நாட்டுக்காக முடிவுகளை எடுக்காவிட்டால் இறுதி நடவடிக்கை பொதுத்தேர்தலாகும். திடீர்த் தேர்தலை நடத்துவதற்கு பாராளுமன்றத்தின் ஒப்புதல் அவசியமாகும். அதற்குத் தேவையான பெரும் பணத்தையும் தேட வேண்டியுள்ளது. தேர்தல் அறிக்கைகளில் வழங்கப்படும் வாக்குறுதிகள் காரணமாக அபிவிருத்தி பற்றி உருவாகும் கனவுகள் இறுதியில் இலங்கையை மீண்டும் பழைய வழமையான பலவீனமான வட்டத்துக்குள் உட்படுத்துவதோடு, அது எவ்வளவு அழிவை கொண்டு வரும் என்பது சிந்திக்க வேண்டிய முக்கியமான விடயமாகும். பிரச்சினைகள் இருக்கும் போதே தேர்தல் நடத்தப்பட்ட சில நாடுகளில் அரசாங்கத்துக்கு நீண்ட ஆயுட்காலம் காணப்படவில்லை. மீண்டும் மீண்டும் அந்த அரசாங்கங்கள் வீழ்ச்சி அடைந்ததோடு பொருளாதாரம் மேலும் மோசமாகியது என்பதை குறிப்பிட்டாக வேண்டும். இந்நாட்டில் அரசியல்வாதிகள், கட்சித் தலைவர்கள் இந்த விடயங்களை அறியாமலில்லை. அவர்கள் நாட்டைப் பற்றி விரிவாகச் சிந்திக்கும் முடிவுக்கு வரத் தயாராக உள்ளதாகத் தெரியவில்லை.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

ஒரே குடும்பத்தை சேர்ந்த நான்கு தமிழர் இராமேஸ்வரத்தில் தஞ்சம்

அன்புவழிபுரம் தினகரன், மன்னார் குறூப்,யாழ். விசேட நிருபர்கள்

தொடரும் பொருளாதார நெருக்கடியால் மேலும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு (4) இலங்கை தமிழர்கள் அகதிகளாக நேற்று (13) காலை இராமேஸ்வரம் சென்றடைந்துள்ளனர்.



இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக அங்குள்ள மக்கள் உணவு பொருட்கள், அத்தியாவசிய தேவைகளுக்காக கடும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

இதனால் கடந்த மார்ச் மாதத்திலிருந்து இலங்கையில் இருந்து 129 இலங்கை தமிழர்கள் தனுஷ்கோடிக்கு அகதிகளாக சென்றுள்ளனர்.

இந்நிலையில் திருகோணமலை மாவட்டம் 2ம் வட்டாரம் பகுதியை சேர்ந்த 50 வயதுடைய தாய்,22 மற்றும் 26 வயதுடைய இரு மகன்கள் மற்றும் 19 வயதுடைய மகள் ஆகிய 4 பேரும் இவ்வாறு தஞ்சமடைந்துள்ளனர்.

மன்னாரில் இருந்து படகு மூலம் புறப்பட்டு நேற்று (13) அதிகாலை இராமேஸ்வரம் வந்திறங்கினர்.

ராமேஸ்வரம் வந்த இலங்கை தமிழர்கள் தாங்களாக ஆட்டோவில் ஏறி மண்டபம் மரைன் காவல் நிலையத்திற்கு சென்றனர்.

இதனை அடுத்த மண்டபம் மரைன் பொலிசார் நடத்திய விசாரணையில் இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக தற்போது அத்தியாவசிய பொருட்களான அரிசி, பருப்பு, கோதுமை, விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் வாழ வழியின்றி உயிரை காப்பாற்றி கொள்ள தமிழகத்திற்கு அகதிகளாக வந்ததாகவும், தாங்கள் நால்வரும் 2006 முதல் 2019 வரை மண்டபம் முகாமில் பதிவில் தங்கி இருந்து மீண்டும் இலங்கைக்கு சென்றதாகவும் தெரிவித்தனர்.

மே 09 கலவரம் தொடர்பில்...

சந்தேக நபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

அன்றைய தினம் நாடளாவிய ரீதியில் 858 சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாகவும், அந்தச் சம்பவங்கள் தொடர்பில் பலர் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

நாளை முதல் 05 தினங்களும் ...

பணிப்புரைகளை வழங்கியுள்ளது.

பாடசாலை கல்வி நடவடிக்கைகள் வழமை போன்று நடைபெறுவதுடன் பாடசாலைகளில் நடத்தப்படும் உற்சவங்களை தொடர்ந்தும் மட்டுப்படுத்துமாறும் கல்வி அமைச்சு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

நாட்டில் நிலவிய எரிபொருள் நெருக்கடி, போக்குவரத்து அசௌகரிய நிலைமை காரணமாக பாடசாலை தினங்கள் குறைக்கப்பட்டு பின்னர் வாரத்தில் மூன்று நாட்கள் பாடசாலை நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

அந்த தீர்மானம் நாளை 15 ஆம் திகதி முதல் மாற்றப்பட்டு வாரத்தின் ஐந்து நாட்களிலும் பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

06 மாதத்தினுள் 129 கோடி டொலர்...

செயற்பட்டு வருகிறது.

எதிர்பார்த்துள்ள இலக்கில் அரை வாசிக்கும் மேற்பட்ட முதலீடுகளை தற்போது கொண்டுவர முடிந்துள்ளதாக முதலீட்டு சபையின் பணிப்பாளர் நாயகம் ரேணுகா வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இலங்கை முதலீட்டு சபை, தற்போது 75 திட்டங்கள் தொடர்பில் ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ள துடன் அதன் மொத்த பெறுமதி 129 கோடி டொலருக்கும் அதிகமானதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உத்தேச 75 திட்டங்களில் 26 திட்டங்கள் புதிதாக ஆரம்பிக்கப்படுபவையென தெரிவித்துள்ள அவர், மீதமான 49 திட்டங்கள் நடைமுறையிலுள்ள திட்டங்களை விரிவுபடுத்தும் செயற்பாடுகளாகுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இந்த வருடத்தின் முதல் காலாண்டில் நேரடியாக வெளிநாட்டு முதலீடுகளாக 228 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான முதலீடுகள் கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ள அவர், முதலீட்டுச் சபையின் இலக்குக் கிணங்க 200 கோடி அமெரிக்க டொலர் என்ற இலக்கை அடைவது கடினமல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முதலீட்டுச் சபை உருவாக்கப்பட்டதன் பின்னர் இதுவரை 2,020 கோடி அமெரிக்க டொலருக்கான நேரடி வெளிநாட்டு முதலீடுகள் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அவர், இதுவரை 1,500 தொழிற்சாலைகள் இலங்கை முதலீட்டு சபையின் கீழ் செயற்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திர வர்த்தக வலயத்தில் அந்த தொழில் முயற்சியாளர்களால் 280 திட்டங்கள் செயற்படுத்தப்படுவதாகவும் அதன் மூலம் சுமார் 05 இலட்சம் தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவற்றில் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் பேர் சுதந்திர வர்த்தக வலயத்தில் பணிபுரிவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் யாழ்.விஜயம்



யாழ். விசேட நிருபர்

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தலைமையிலான மத்திய சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள் குழுவொன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்தது.

வைத்தியசாலையின் பகுதிகளை பார்வையிட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், எதிர்கால அபிவிருத்தி தொடர்பாகவும் கலந்துரையாடினார்.

இதன்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி உள்ளிட்ட வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர்கள் வைத்தியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

வழிகாட்டுதல்களை...

வழங்கியுள்ளார்.

எரிபொருள் விநியோகம் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நேற்றுக் காலை பெற்றோலியக் கூட்டுத்தாபத்தின் கொலன்னாவ முனையத்தில் அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தலைமையில் நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர

இந்த அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

குறிப்பாக அத்தியாவசிய சேவைகள், பொதுப் போக்குவரத்து, மீன்பிடித் துறை, விவசாயத் தேவைகள், தொழில்கள், சுற்றுலாத்துறை ஆகியவற்றுக்கான எரிபொருள் விநியோகம் குறித்தும் பரிசீலனை செய்யப்பட்டு இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன் ஒவ்வொரு எரிபொருள் நிலையத்துக்கும் விநியோகிக்கப்படும் எரிபொருளின் அளவு மற்றும் QR முறைமையூடாக பாவனையாளர்களுக்கு வழங்கப்படும் எரிபொருளின் அளவு பற்றிய தரவுப் பகுப்பாய்வு செய்யப்பட்டு இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை 1,00,000 மெற்றிக் தொன் மசகு எண்ணெய்க் கப்பல் நேற்று இரவு கொழும்பை வந்தடைந்துள்ளது. இன்று மசகு எண்ணெய் தரப் பரிசோதனைக்காக மாதிரிகள் எடுக்கப்படுமென்றும் அமைச்சர் கஞ்சன தெரிவித்துள்ளார்.

அதேவேளை 1,20,000 மெற்றிக் தொன் கொண்ட 02ஆவது மசகு எண்ணெய்க் கப்பல் எதிர்வரும் 23 29 திகதிகளில் வரவுள்ளது. இந்த இரண்டு எண்ணெய் கப்பல்களும் ரஷ்ய யூரல் மசகு எண்ணெய்க் கப்பல்களாகும். அத்துடன் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அடுத்த வார நடுப்பகுதி முதல் செயல்படத் தொடங்குமென்றும் அமைச்சர் கஞ்சன தெரிவித்துள்ளார்.

வெள்ளவத்தை பகுதி...

காட்டியுள்ளனர்.

எனினும் அங்கிருந்தவர்களால் கொள்ளைக் கும்பல் வளைத்து பிடிக்கப்பட்ட போதும் அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

இலக்கத்தகடில்லாத முச்சக்கர வண்டியில் வந்த கும்பலொன்றினால் இக்கொள்ளைச் சம்பவ முயற்சி இடம்பெற்றுள்ளது.

வெளியில் செல்லும் பெண்கள் தங்க நகைகள் அணிந்து செல்வதை தவிர்க்கும்படி பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஜாமியா நளீமிய்யா கலாபீட ...

நியமனக் கடிதத்தை கலாபீட பரிபாலன சபைத் தலைவர் அல்ஹாஜ் யாகூத் நளீம் (11) நளீமிய்யா மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் வழங்கினார்.

பல தசாப்தங்களாக இந்நிறுவனத்தின் பணிப்பாளராக கடமையாற்றிய கலாநிதி எம். ஏ.எம்.சுக்ரியின் மறைவுக்குப் பின்னர் பணிப்பாளர் பதவி வெற்றிடமாக இருந்தது. இதனையடுத்தே, கலாபீடத்தின் முதல்வராக உஸ்தாத் அகார் முஹம்மத் நியமிக்கப்பட்டுள்ளார்.

முதல்வர் எனும் பதவி, புதிய கட்டமைப்பின் கீழ் கலாபீடத்தின் தலைமை நிர்வாகப் பதவியாக அமைகின்றது.

கலாபீடத்தின் கல்வித்துறைக்கு பொறுப்பான பணிப்பாளராக அஷ்ஷெய்க் ஸீ. ஐயூப் அலியும் நிர்வாகத்துறைக்குப் பொறுப்பான செயலாளராக ஜனாப் எம்.ஐ.ஏ. இம்தாத் அலியும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நியமனங்களும் பரிபாலன சபைத் தலைவரால் வழங்கப்பட்டன.

கலாபீடத்தின் பல்வேறு துறைகளுக்கும் பிரிவுகளுக்கும் பொறுப்பான தலைவர்களின் நியமனங்களும் இந் நிகழ்வின் போது வழங்கப்பட்டன.

கலாபீடத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள முதல்வர் அஷ்ஷெய்க் அகார் முஹம்மத் குருணாகலையை பிறப்பிடமாகவும் மாவனெல்லையை வசிப்பிடமாகவும் கொண்டவர். நளீமிய்யா கலாபீடத்தின் பழைய மாணவர் என்பதோடு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் உப தலைவராகவும் செயற்பட்டு வருகின்றார்.

நாட்டை நிச்சயம் மீட்டெடுப்பேன்...

வரலாற்றுச் சிறப்புமிக்க தலதா பெரஹர விழா மற்றும் நான்கு மகா தேவாலயங்களின் வருடாந்த பெரஹர விழா வெற்றிகரமாக நிறைவடைந்ததை முன்னிட்டு கண்டி ஜனாதிபதி மாளிகையில் (12) பிற்பகல் நடைபெற்ற வைபவத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மாளிகைக்கு ஊர்வலமாக வந்த தியவடன நிலமே நிலங்க தேல உட்பட நான்கு மகா தேவாலயங்கள் மற்றும் ஏனைய தேவாலயங்களின் நிலமேக்கள் ஜனாதிபதி மாளிகையின் பிரதான நுழைவாயிலில் ஜனாதிபதியினால் வரவேற்கப்பட்டனர்.

பின்னர் தியவதன நிலமே சம்பிரதாயமாக ஜனாதிபதியிடம் சன்னஸ் பத்திரத்தை கையளித்தார்.

பெரஹராவில் கலந்து கொண்ட கலைஞர்களுக்கு சம்பிரதாயபூர்வமாக பரிசுகள் மற்றும் விருதுகள் ஜனாதிபதியினால் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவிக்கையில்,

இந்தப் பாரிய பொறுப்பை நிறைவேற்றியதற்காக தியவடனே நிலமேயை முதலில் பாராட்டுகிறேன். இந்த வரலாற்று சிறப்புமிக்க எசல மகா பெரஹர சில வருடங்களின் பின்னரே பிரமாண்டமான முறையில் நடத்த முடிந்தது. கடந்த இரண்டு வருடங்களாக பிரமாண்டமான முறையில் நடத்தும் வாய்ப்புக் கிடைக்கவில்லை.

இம்முறை பெரஹர விழா முக்கியத்துவம் பெறுகிறது, ஏனெனில் இது மிகவும் கடினமான நேரத்தில் நடைபெறுகிறது. மறுபுறம், இந்த நாட்டில் பெரிய பொருளாதார வீழ்ச்சி உள்ள காலத்தில். இந்த அவலநிலை நம் அனைவரையும் பாதித்துள்ளது. இந்தக் காலத்தை இப்போதே நாம் முடித்துக் கொள்ள வேண்டும். மேலும் இதைவிட சவால்கள் இருக்கும் ஒரு காலம் வரலாம். இந்த எல்லா வற்றிலிருந்தும் நாம் மீள வேண்டும், நம் நாட்டிற்கு புதிய பொருளாதாரத்தை உருவாக்க முன்வருவதற்கு நம்மை தயார்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

பொது மன்னிப்பு ஆவணங்களில் கையொப்பமிட்ட ரஞ்சன்

விரைவில் விடுதலையாகும் வாய்ப்பு



ஜனாதிபதியின் பொது மன்னிப்பு தொடர்பான ஆவணங்களில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க நேற்று கையொப்பமிட்டுள்ளதாக சட்டத்தரணி தினேஷ் விதானபத்திரன உறுதிப்படுத்தியுள்ளார்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பொதுமன்னிப்பு வழங்க பரிசீலிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை கடற்படைக்கு...

ஒன்றை தயாரிக்க சுமார் இரண்டு ஆண்டுகள் ஆகும் என்பதால், ஆரம்ப இரண்டு ஆண்டுகளுக்கு விமானத்தை இலவசமாக வழங்க ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி, முதல் இரண்டு ஆண்டுகளின் முடிவில் புதிய டோனியர் 228 கடல்சார் கண்காணிப்பு விமானத்தை இலவசமாக வழங்க இந்திய அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது.

அதன்படி, இக் கடல்சார் கண்காணிப்பு விமானத்தை எதிர்வரும் 15 ஆம் திகதி தனது கடற்படைக்கு உள்வாங்கவுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

வீரமுனை படுகொலை...

புகுந்து இராணுவத்தினரும், துணை படையினரும் நடத்திய இனவெறி வேட்டையிலேயே 55 பேர் அந்த இடத்திலேயே மரணமானார்கள்.

அவர்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்பதற்காக 32 ஆவது வருடமாக இந் நினைவேந்தல் நடாத்தப்பட்டு வருகிறது .

காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.கே.கோடீஸ்வரன்,சமுக செயற்பாட்டாளர் செல்வராஜா கணேஷ் உள்ளிட்ட அதிதிகள் கலந்து கொண்டனர்.

பாராளுமன்ற அமர்வு...

இதற்கமைய பாராளுமன்றம் எதிர்வரும் 29ஆம் திகதி மீண்டும் கூடவிருப்பதுடன், எதிர்க்கட்சி கொண்டுவரும் மின்சாரக் கட்டண அதிகரிப்புத் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தை அன்று மு.ப 9.30 மணி முதல் பி.ப 4.30 மணி வரை நடத்துவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கடந்த 09ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டுக்கான 2021ஆம் ஆண்டு 30ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டமூலம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்படவில்லையாயின் அச்சட்டமூலம் இவ் விவாதத்தை எதிர்வரும் ஓகஸ்ட் 30, 31, செப்டெம்பர் 01 மற்றும் 02ஆம் திகதிகளில் நடத்துவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

தமிழ் அரசியல் கைதிகள்...

இந்த 46 தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இச் சிறைக்கைதிகள் தொடர்பாக முன்னாள் பிரதம நீதியரசர் அசோக டி சில்வாவின் அறிக்கைகளுக்காக காத்திருப்பதாக நீதியமைச்சர் என்னிடம் தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற பாராளுமன்ற ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

இதன்போது தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நில ஆக்கிரமிப்புகளை உடனடியாக நிறுத்துதல் மற்றும் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவது தொடர்பில் எங்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தாரென்றும் கூறினார்.

இங்கிலாந்து செல்லும் ...

கொழும்பு, கல்கிசை சென்ட் தோமஸ் கல்லூரியின் உப தலைவராக சிறப்பாக செயற்பட்டிருந்த கனிஸ்ரன், அண்மையில் மாகாணங்களுக்கு இடையிலான இலங்கை 19 வயதிற்குட்பட்ட டோருக்கான சுற்றுப்போட்டியில் தனது திறமையை வெளிப்படுத்தி இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

இவர் தற்போது இங்கிலாந்து செல்லும் இலங்கை அணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கனிஸ்ரன் குணரட்ணம், யாழ். கல்லூரியின் பழைய மாணவர்களான டாக்டர் ஹன்றி றோச் குணரட்ணம் மற்றும் டாக்டர் சினோதயா குணரட்ணம் ஆகியோரின் புதல்வன் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே, யாழ். கல்லூரியுடன் தொடர்புகளை கொண்டிருந்த ரஸல் ஆர்ணல்ட் 1997, 2007 ஆண்டு வரையான காலப் பகுதியில் இலங்கை அணியின் சகலதுறை வீரராக பெருமை சேர்ந்திருந்தார்.

தற்போது கனிஸ்ரன் தன்னுடைய பயணத்தை ஆரம்பித்துள்ளமை பெருமைக்குரிய விடயமாகும்.

அரச ஊழியர்களை ஐந்து தினங்கள்...

அதற்கமைய, அரச அலுவலகங்களின் செயற்பாடுகளை வழமையாகப் முன்னெடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதால், காலதாமதத்தைக் குறைக்கும் வகையில், வாரத்தின் ஐந்து நாட்களும் அரசாங்க ஊழியர்களை பணிக்கு அழைப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடியை கருத்தில் கொண்டு, கடந்த ஜூலை மாதம் 24ஆம் திகதி முதல் ஒரு மாத காலத்துக்கு அரச ஊழியர்களை அழைப்பதற்கு கட்டுப்பாடு விதிக்கும் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

இக்கால அவகாசம் முடிவடைந்த தன் பின்னர், நாட்டின் நிலைமையை கருத்திற் கொண்டு வாரத்தின் ஐந்து நாட்களிலும் அரச ஊழியர்களை பணிக்கு அழைப்பது தொடர்பில் தீர்மானிக்கப்படவுள்ளது.

எப்படியிருப்பினும் மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டத்திலான கடமை தேவைகளை கருத்தில் கொண்டு வாரத்தின் ஐந்து நாட்களும் பணிபுரிய உத்தியோகத்தர்களை அழைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட செயலாளர்களுக்கு ஏற்கனவே பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கவனிப்பாரற்ற நிலையில்...

காணி களுக்குள் நிறுவப்பட்டிருக்கும் எண்ணெய்த் தாங்கிகளை துரிதமாக புனரமைத்து எரிபொருள் களஞ்சியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமென போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்த எண்ணெய்த் தாங்கிகள் கவனிப்பாரற்று காடு மண்டிக்கிடப்பதாக தெரிவித்த அமைச்சர் இவை பெற்றோலிக் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமானவையென்றும் தெரிவித்தார்.

பொலன்னறுவை மற்றும் வெலிகந்த ரயில் நிலையங்களின் கண்காணிப்பு விஜயத்தையடுத்தே அமைச்சர் பந்துல குணவர்த்தன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் பந்துல குணவர்த்தன,

பொலன்னறுவை ரயில் நிலையத்தை அண்மித்த பகுதியிலுள்ள எண்ணெய்த் தாங்கிகள் தலா சுமார் 1,00,000 லீற்றர் எரிபொருளை சேமித்து வைக்கக்கூடிய 03 தாங்கிகள் இருப்பதாகவும் வெலிகந்த ரயில் நிலையத்துக்கு அண்மித்த பகுதியிலுள்ள எண்ணெய்த் தாங்கிகள் 54,000 லீற்றர் எரிபொருளை சேமித்து வைக்கக்கூடிய 05 தாங்கிகள் இருப்பதாகவும் தெரிவித்தார்.

ரயில்கள் மூலம் எரிபொருள் போக்குவரத்தை மேற்கொள்ளும் போது குறைந்தளவு செலவே ஏற்படுவதாக குறிப்பிட்ட அமைச்சர் விரைவில் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கரவுடன் பேச்சு நடத்தி கவனிப்பாரற்றுக் கிடக்கும் இந்த எண்ணெய்த்தாங்கிகளை புனரமைக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படுமென்றும தெரிவித்தார்.

அமைச்சரின் இந்த கண்காணிப்பு விஜயத்தின்போது அமைச்சர் ரொஷான் ரணசிங்க, ரயில்வே பொது முகாமையாளர் டபிள்யூ.ஏ.டி.எஸ் குணசிங்க உட்பட ரயில்வே திணைக்கள அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

எங்கள் கருத்து

மக்கள் தற்போது புரிந்து கொண்ட யதார்த்தம்!

ஓரிரு வாரங்களுக்கு முன்னர், மக்கள் காலிமுகத்திடல் வழியாக பேருந்துகளில் பயணம் செய்கின்ற வேளையில், அவ்விடத்தில் எழுச்சியும் பரபரப்பும் தென்பட்டதுண்டு. மேடையில் ஆக்ரோஷமான பேச்சுகள், கலைநிகழ்வுகள், எழுச்சி நாடகங்கள் என்றெல்லாம் அந்தப் பிரதேசமே களைகட்டியிருந்ததுண்டு. ஆனால் இப்போது பார்க்கையில் காலிமுகத்திடலில் நடந்ததெல்லாம் வெறும் கனவுக் காட்சிகள் போல இருக்கின்றன.

எல்லாமே ஓய்ந்து விட்டதென்று சொல்லாமல் சொல்கின்றது காலிமுகத்திடல் போராட்டக்களம்! அங்கு மாத்திரமன்றி, நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் இதே நிலைமைதான். அரசுக்கு எதிராக நாடெங்கும் உருவெடுத்த போராட்டங்கள் ஒட்டுமொத்தமாக ஓய்ந்து விட்டன என்றுதான் கருத வேண்டியிருக்கின்றது. போராட்டத்தின் அடையாளக்குறியாகக் காட்சியளித்த காலிமுகத்திடலே வெறிச்சோடி விட்டதென்றால், முழுநாட்டையும் பற்றி இங்கே கூற வேண்டியதில்லை.

நாடெங்கும் அன்று ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமான வேளையில், அதனை ஆதரித்தவர்கள் அநேகம். கற்றறிந்தோர் மாத்திரமன்றி பாமர மக்களும் ஆதரித்தனர். அவர்களின் கோரிக்கைகளில் நியாயங்களும் தென்பட்டன. மக்களின் கோரிக்கைகள் தற்போது படிப்படியாக நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கையில், அரசை இனி மேலும் எதிர்ப்பதில் அர்த்தம்தான் என்ன என்று இப்போது வினவுகிறார்கள் போராட்டத்தின் முன்னாள் ஆதரவாளர்கள்.

அவர்களது கூற்றில் நியாயம் இல்லாமலில்லை. எரிபொருள் தட்டுப்பாட்டையும், பாவனைப் பொருட்களின் விலையுயர்வையும் கண்டித்தே ஆர்ப்பாட்டங்கள் தலைதூக்கின. எரிபொருளுக்கு இப்போது கியூவரிசைகள் கிடையாது. ஓரிரு உணவுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் காலத்தில் விலைகள் மேலும் குறைந்து விடுமென்ற நம்பிக்கை தோன்றியுள்ளது.

அதலபாதாளத்தில் வீழ்ந்த பொருளாதாரத்தை ஓரிரு நாட்களில் மீட்டுவிட முடியாதென்ற யதார்த்தம் பலருக்கும் புரிந்திருக்கின்றது. நாட்டின் புதிய தலைமைத்துவத்துக்கு அதற்கான காலஅவகாசம் வழங்கப்பட வேண்டுமென்ற எண்ணம் மக்கள் மத்தியில் உள்ளது. அதேவேளை எதிரணி அரசியல்வாதிகளின் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கேற்ப வீதியில் இறங்க முடியாதென்ற புரிதலும் மக்களுக்கு ஏற்பட்டு விட்டதென்பதே உண்மை!

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

பெரும் போகத்துக்கான உரக் கொள்வனவுக்கு நடவடிக்கை

டிசம்பர் மாதம் வரை நாட்டில் அரிசிக்கு தட்டுப்பாடு இல்லை



இரசாயன உரம் 2021 ஆம் ஆண்டு மே மாதம் தடை செய்யப்பட்டது. அதன் பின்னர் வந்த பெரும் போகம் மற்றும் சிறுபோக காலத்தில் எந்தவொரு பயிரையும் பயிரிட உரம் கிடைக்கவில்லை. அதனால் நெல் உள்ளிட்ட பயிர் செய்கை நடவடிக்கைகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டது. கள்ளத்தனமாக நாட்டிற்குள் கொண்டுவரப்பட்ட இரசாயன உரங்கள் பாரிய விலைக்கு விற்கப்பட்டன. இரசாயன உரத்துக்கு பதிலாக சேதன பசளை அறிமுகம் செய்யப்படும் என கூறினாலும் போதுமான அளவு பசளை கிடைக்கவில்லை.

இரசாயன உரத்துக்கு பதிலாக சேதன உரம் அறிமுகம் செய்யப்பட்டதால் அறுவடை 50% தால் வீழ்ச்சியடைந்தது. அது உணவு பற்றாக்குறைக்கு வழி வகுத்தது. கடந்த சிறு போகத்தில் பயிர் செய்வதற்கு தேவையான எந்தவொரு உரமும் கிடைக்காததால் விவசாயிகள் நெற் பயிர் செய்கையிலிருந்து விலக முடிவு செய்தார்கள். மரக்கறி, சோளம் உள்ளிட்ட பயிர்களும் போதுமான அளவு அறுவடையை தரவில்லை. அதனால் அரிசி விலை மாத்திரமல்ல நெல்லின் விலையும் வேகமாக அதிகரித்தது. கொழும்பிலிருந்து பணக்காரர்கள் அனுராதபுரம், பொலன்னறுவை, ஹம்பாந்தோட்டை போன்ற பிரதேசங்களுக்கு சென்று அதிக விலை கொடுத்து நெல் மூட்டைகளை கொழும்புக்கு கொண்டு வந்தார்கள். ஒரு கிலோ நெல்லின் விலை 300 ரூபாய் வரை அதிகரித்தது. அதற்கும் கூடுதலாக பணம் கொடுத்து நெல்லை வாங்க சிலர் முன் வந்தார்கள். அறுவடை குறைந்ததால் நெல்லின் விலை அதிகரித்தது. ஒரு கிலோ அரிசியின் விலை 200 ரூபாவையும் தாண்டியது.

பெரும் போகத்தில் இந்த முடிவு காரணமாக எதிர்பார்க்கப்பட்ட 40% அறுவடை கிடைக்காமற் போனது. விவசாயிகளுக்கு வருமானம் கிடைக்காததோடு பாவனையாளர்களுக்கும் அரிசியை குறைந்த விலைக்கு வாங்க முடியாமற் போனது. விவசாயிகள் எந்தவொரு உறுதியான காரணங்கள் இல்லாமல் போராட்டத்தில் ஈடுபட மாட்டார்கள். ஆனால் நாட்டில் பாரிய ஆர்ப்பாட்டங்கள் உரப்பிரச்சனை காரணமாக கடந்த காலங்களில் ஏற்பட்டன. மக்கள் இந்த பிரச்சினைகள் காரணமாக பெரும் சிரமத்துக்கு உள்ளானார்கள். அன்று சேதன பசளை பற்றி பெருமையாக கூறியவர்கள் இந்த விவசாயிகள் பிரச்சினையில் அமைதியானார்கள்.

பொருளாதாரப் பிரச்சினை தீவிரம் அடைந்தவேளையில் அரசியல் துறையும் சூடாகியது. இந்த நிலைமையில் மக்கள் போராட்டத்தை நோக்கி நாட்டை கொண்டு சென்றார்கள். இன்று காணப்படும் பொருளாதார பிரச்சினை உருவாவதற்கு காரணமாக அமைந்தது உரப் பிரச்சினை காரணமாக ஏற்பட்ட உணவு பற்றாக்குறையாகும். அதனால் பெருமளவு டொலரை உணவு இறக்கும திக்காக செலவழிக்க நேரிட்டது. அந்த டொலரை செலவு செய்து உரத்தை இறக்குமதி செய்திருந்தால் அரிசியை இறக்குமதி செய்ய நேரிட்டிருக்காது. பொருளாதார பிரச்சினை தீவிரமடைந்ததால் ஏற்பட்ட நிலைமையின் இறுதியில் அரசியல் அதிகார மாற்றம் ஏற்பட்டு ரணில் விக்ரமசிங்க பிரதமராக பதவிக்கு வந்தார். பிரதமர் ரணிலின் தலைமையில் அமைக்கப்பட்ட அமைச்சரவையில் விவசாய அமைச்சராக மஹிந்த அமரவீர நியமிக்கப்பட்டார்.

பிரதமர் மக்களிடம் உணவு பிரச்சினை ஏற்படும் என கூறினார். அதனால் உணவு உற்பத்தியில் ஈடுபட தயாராகும் படி கேட்டுக் கொண்டார் . சிறு போகத்துக்காக சிறிதளவு நெற் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டிருந்ததால் பெரும் போகத்திற்கு தேவையான உரத்தை இறக்குமதி செய்வது தொடர்பாக பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டது.

அச்சந்தர்ப்பத்தில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர ஆரம்பமாகவுள்ள சிறுபோகத்திற்கு உரத்தைப் பெற்றுக் கொடுக்க முயற்சி செய்வோம் என்று தெரிவித்தார். அதன்படி சிறு போகத்திற்கான உரத்தை இந்திய அரசின் கடன் உதவியுடன் கொண்டு வருவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. நூற்றுக்கு நூறு வீதம் விவசாயிகளுக்கு உரத்தை வழங்க முடியாவிட்டாலும் குறிப்பிட்ட ளவுக்கு அம்முயற்சியால் விவசாயிகளுக்கு உரத்தை கொடுக்க முடிந்ததாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டார்.

ஆனால் அவ்வேளையில் சிறுபோகம் ஆரம்பமாகி இருந்தாலும் விவசாயத்தில் ஈடுபடாத விவசாயிகளை அரசு இரசாயன உரத்தை பெற்று தருவோம் என கூறி விவசாயம் செய்ய அழைத்தது. அச்சந்தர்ப்பத்தில் சிறுபோகத்துக்கு தேவையான உரம் மாத்திரமே இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. அவ்வேளையில் விவசாய அமைச்சுக்கு இருந்த பெரும் சவால் மக்களை வயலில் இறங்கச் செய்வதாகும்.

உரம் கொண்டு வந்தாலும் வயலில் இறங்க விருப்பமில்லாத விவசாயிகள் அதற்கு இணங்கியது அப்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்க உணவு தட்டுப்பாடு ஒன்று ஏற்படும் என தெரிவித்ததினாலாகும். அதனால் சாப்பாட்டிற்கு உணவு இல்லாமல் போகும் என்ற பயத்தில் விவசாயிகள் வயலில் இறங்க சம்மதித்தார்கள்.

சிறு போகத்தில் இரண்டு லட்சத்து 75 ஆயிரம் ஹெக்டயாரில் பயிர் செய்ய திட்டமிட்டிருந்தாலும் அது வெற்றி பெறவில்லை. இரண்டு லட்சம் ஹெக்டயார் விவசாயத்தை ஆரம்பித்திருந்தாலும் ஏனைய பகுதியை தாமதமாகவாவது ஆரம்பிக்க விவசாயிகள் தயாரானது இரசாயன உரம் கிடைக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலாகும்.

உரம் கிடைக்கும் என்று நம்பிக்கையில் இரண்டு லட்சத்து எழுபத்தையாயிரம் ஹெக்டயார் காணியில் நெல்லை விவசாயம் செய்ய திட்டமிட்டிருந்தாலும் அது ஐந்து லட்சம் ஹெக்டயார் வரை அதிகரித்தது. அது நாட்டில் வரலாற்று ரீதியான மாற்றமாகும். அந்த கௌரவத்தை தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட அணியினருக்கு வழங்குவதை விடுத்து அதனை விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுப்பதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

யூரியா உரம் 65,000 மெட்ரிக் தொன்னை இந்தியாவிடமிருந்து பெற அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அதில் 25000 மெட்ரிக் தொன் சிறுபோகத்துக்காக விநியோகிக்கப்பட்டுள்ளது. உரப் பிரச்சினை காரணமாக சோள பயிர்ச் செய்கை உள்ளிட்ட பல பயிர்ச்செய்கைகள் பாதிப்படைந்துள்ளன. சோளம் கடந்த போகத்தில் 17 % மாத்திரமே பயிரிடப்பட்டது. அதனால் விலங்குணவு உற்பத்தியும் வீழ்ச்சி அடைந்தது.

அதனால் ஏற்பட்ட முக்கிய பிரச்சினை முட்டை மற்றும் கோழி இறைச்சியின் விலை விரைவாக அதிகரித்தமையாகும். விவசாய அமைச்சு தற்போது சோளப் பயிர்ச்செய்கைக்காகவும் இரசாயன உரத்தை பெற்றுக் கொடுக்க முடிவு செய்துள்ளது. சோளப் பயிர்ச் செய்கை 20,000 ஆயிரம் ஹெக்டயாராக மட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும் அதனை 60,000 ஹெக்டயராக அதிகரிக்க விவசாய அமைச்சு விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கி உள்ளது. நெல் மற்றும் ஏனைய பயிர்ச்செய்கை நடவடிக்கையை ஆரம்பித்தால் உணவு இறக்குமதிக்கான டொலரின் அளவை சேமிக்க முடியும். இந்த உர வகைகள் இந்தியாவிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன.

சோளப் பயிர்ச்செய்கை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டால் கோழி வளர்ப்பு தொடர்பான உற்பத்திகள் அதிகரிப்பதன் காரணமாக விலையில் வீழ்ச்சி ஏற்படும். அதனால் அது மந்தபோஷணைக்கு தீர்வாக அமையும். அதே போன்று பால்பண்ணையாளர்களும் உரம் இல்லாமையால் பிரச்சனைக்குள்ளானார்கள். ஏனென்றால் புல் வளர்ப்பிற்கு யூரியா உரம் அவசியமாகும். புல் வெளிகள் குறைவு என்பதால் யூரியா உரத்தை பயன்படுத்தி புல்லை உற்பத்தி செய்ய விவசாயிகள் பழகியுள்ளார்கள்.



யூரியா உரம் கிடைக்காமல் புல்லுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு பால் உற்பத்தியும் வீழ்ச்சி அடைந்தது. அதனால் புல் உற்பத்திக்காகவும் யூரியா உரத்தைப் பெற்றுக் கொடுக்க விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. அதேபோன்று சோயா மற்றும் கிழங்கு உற்பத்திக்கும் உரத்தை வழங்க தீர்மானித்துள்ளது. உர இறக்குமதியில் உலக சந்தையில் விலை குறைவும் நமக்கு சாதகமாக உள்ளது.

உணவு பற்றாக்குறைக்கு தீர்வாக இவ்வருட ஆரம்பத்தில் நான்கு லட்சத்து 20 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசி இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. பெருமளவு டொலரை அதற்காக செலவிட நேரிட்டது. உரத்தை போதிய அளவு வழங்குவதற்கு முடிந்துள்ளதால் எதிர்வரும் பெரும் போகத்தின் பின்னர் அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாது என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அதே வேலை அரசு மீது சுமத்தப்பட்ட முக்கிய குற்றச்சாட்டு இந்தியாவிலிருந்து கொண்டுவரப்படும் உரம் தரம் குறைந்தது என்பதாகும். தரக்குறைவான உரத்தை கொண்டு வந்து நாட்டில் மண்ணை பாதிப்புக்கு உள்ளாக்கப் போவதாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குற்றம் சாட்டினார்கள். ஆனால் விவசாயிகள் நீண்ட காலத்துக்கு பின்னர் தங்களுக்கு கிடைத்த நல்ல உரம் என கூறியுள்ளார்கள்.

உரத்தை இறக்குமதி செய்வதற்கு பணம் அச்சந்தர்ப்பத்தில் நாட்டில் இருக்கவில்லை அதற்காக அன்றைய பிரதமர் ரணில் விக்ரமசிங்கவால் இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது . அவ்வேளையில் இந்திய கடன் திட்டத்தின் கீழ் எஞ்சியுள்ள பணத்திற்கு உரத்தை பெற்றுக் கொடுக்க இந்தியாவை இணங்கச் செய்தார். அவ்வேளையில் உரத்தை பணம் கொடுத்து பெரும் நிலைமை இருக்கவில்லை.

அதனால் அன்றைய பிரதமரும் தற்போதைய ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்க பிரதமர் மோடியுடன் கலந்துரையாடி இணங்கச் செய்தார். தரக்குறைவான உரம் கொண்டு வரப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டை பொய்யாக்கி பரிசோதனை அறிக்கைகள் அவை மிகவும் தரமானவை என சான்றிதழ் வழங்கியுள்ளன.

ஆனால் 10,000 ரூபாவுக்கு விவசாயிகளுக்கு உரத்தை ஏன் வழங்குகிறீர்கள் என எதிர்க்கட்சியினர் கேள்வி கேட்டாலும் 10,000 ரூபாய்க்கு மாத்திரமல்ல 40,000 ரூபாவுக்கு கூட உரத்தைப் பெற முடியாத காலம் ஒன்று காணப்பட்டது. 40,000 ரூபாய்க்கு விற்கப்பட்ட உரத்தை பத்தாயிரம் ரூபாவுக்கு வழங்குவது குறித்து விவசாயிகள் வெறுப்படையவில்லை. அது எதிர்க்கட்சி அரசியல்வாதிகளுக்கே உள்ளதென அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

எதிர்வரும் பெரும் போகத்துக்கான உரத்தை விலைக்கு வாங்குவதற்கு தேவையான பணத்தை தேடும் நடவடிக்கையை ஜனாதிபதி செயலணி தலைவர் சாகல ரத்னாயக்கவிடம் ஜனாதிபதி ஒப்படைத்துள்ளார். அவர் தற்போது அதற்காக உலக வங்கி மற்றும் இந்தியா உள்ளிட்ட நாடுகளுடன் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளார். இரண்டு போகங்கள் பாதிப்படைந்திருந்தாலும் இம்முறை அது வெற்றி அளித்துள்ளது அரசு தலையிட்டு உரத்தை கொண்டு வந்ததனாலாகும். அரசாங்கம் எடுத்த முடிவால் டிசம்பர் மாதம் வரை நாட்டில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படாது.

தமிழில் வீ.ஆர்.வயலட்

அரசாங்கங்கள் மாறினாலும் நாட்டின் கொள்கைகள் மாறக்கூடாது

கட்சிகள் விரும்பும் வகையில் நாட்டின் கொள்கைகளை மாற்றமுடியாதென்கிறார் வஜிர அபேவர்த்தன எம்.பி



எதிர்வரும் பாராளுமன்ற நடவடிக்கை தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டதோடு இந்தக் கூட்டத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள 22 ஆவது அரசியலமைப்பு திருத்தம் மற்றும் சர்வ கட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் பல முக்கிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் மண்டபத்துக்கு வருகை தந்த அரச கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் முன்வைக்கப்பட்ட கொள்கை விளக்க உரை தொடர்பாக பாராளுமன்ற விவாதம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது அதில் கலந்து கொள்வதற்காக பாராளுமன்றத்துக்கு வருகை தந்த வஜிர அபேவர்த்தனவை ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற வராண்டாவில் சந்தித்தார்கள்.

அங்கு வஜிரவை கண்ட அவர்கள் அவரின் அருகில் வந்து தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக பாராளுமன்றத்திற்கு அனுப்பியது, அவருக்கு பிரதமர் பதவியை பெற்றுக் கொடுத்தது, ஜனாதிபதி பதவியை பெற்றுக் கொடுத்தது போன்ற விசேட சந்தர்ப்பங்களில் அருகில் இருந்து அவர் மேற் கொண்ட நடவடிக்கைகள் குறித்து ஞாபகப்படுத்தி அவரை பாராட்டினார்கள்.

அவர்களின் கருத்துகளுக்கு செவிமடுத்த வஜிர கூறியதாவது நாடு முகம் கொடுத்துள்ள சவால்களை வெற்றி கொள்வதற்காக பாரிய மற்றும் முறையான நடவடிக்கைகள் ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்டுள்ள இச் சந்தர்ப்பத்தில் பொது மக்களின் பிரதிநிதிகளாக எம் அனைவரினதும் பொறுப்பு அத்திட்டங்களை வெற்றியடைய செய்து நாடு தற்போது முகம் கொடுத்துள்ள சவால்களை வெற்றி கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாகும். அதற்காக ஜனாதிபதியின் திட்டங்களை வெற்றி பெற செய்வதற்கு உங்களின் ஒத்துழைப்பு அவசியம் எனவும் வஜிர தெரிவித்தார்.

வஜிரவின் அந்த அழைப்பை ஏற்றுக் கொண்ட அவ் அணியினர் எவ்வித தயக்கமும் இன்றி ஜனாதிபதியின் திட்டங்களுக்கு பூரண மான ஒத்துழைப்பை பெற்றுக் கொடுப்பதாக குறிப்பிட்டார்கள். அக் கருத்தினையே ஐக்கிய மக்கள் சக்தியின் அநேகமான பாராளுமன்ற உறுப்பினர்கள் கொண்டுள்ளதாகவும் ஞாபகப்படுத்தினார்கள்.

அவர்களின் கருத்துக்களை செவிமடுத்த அவர் " நாடு முகம் கொடுத்துள்ள பாதிப்பிலிருந்து மீள வேண்டும் என்றால் அனைவரும் ஒன்றாக இணைந்து பொதுவான கொள்கையில் வேலை செய்ய வேண்டிய காலம் உருவாகியுள்ளது.

அரசியலமைப்பின் 24 வது சரத்தின் படி அரச கொள்கைகள் மற்றும் நெறிமுறைகள் என்னும் இரண்டு பக்கங்களும் தற்போது மாற்றப்பட வேண்டும்.

அதன் காரணமாக அவரவருக்கு தேவையான விதத்தில், அரசியல் கட்சிகளுக்கு தேவையான விதத்தில் கொள்கைகளை மாற்றமுடியாது. இந்த தவறை கண்டு தான் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 25 வருடங்களுக்கு மாற்ற முடியாத கொள்கை கட்டமைப்பொன்றை தயாரிப்போம் என்று கூறுகின்றார்.

கொள்கைகளின் தொகுப்பை செயல்படுத்துவதற்கு அரசியல் அமைப்பில் "அரச தேசிய கொள்கைகளும் நெறிமுறைகளும் " என்னும் இரண்டு பக்கங்களுக்கும் பொறுப்புக் கூறல் இல்லை.

கொள்கைகள் உள்ளன, செய்தாலும் ஒன்று செய்யாவிட்டாலும் ஒன்று. யாருக்கும் எதுவும் நடக்காது அவ்வாறென்றால் அரசியலமைப்பில் எமது நம்பிக்கை திருத்தப்பட வேண்டிய முக்கிய பக்கங்கள் தான் அரச தேசியக் கொள்கையும் நெறிமுறையும்.

அதை செயல்படுத்தாவிட்டால் அதற்கு எதிராக எவ்வாறு நடவடிக்கை எடுப்பது ? அரசியல்வாதிகள் மேடையில் பொய்யாக குரல் எழுப்பி பொய்யான செய்திகளை வழங்கினால் அதை ஏற்றுக்கொள்ள முடியுமா? ஏற்றுக்கொள்ள முடியாதா? இதோ இந்த தேசிய கொள்கையும் நெறிமுறையும் என்ற பக்கங்களை மாற்றி தேசிய கட்டமைப்பு அல்லது தேசிய இணக்கப்பாட்டுக்கு வந்தால் ஜப்பான் போன்று ஒரு பிரதமர் சென்ற பின் புதிய பிரதமர் வந்தாலும் கொள்கைகளில் மாற்றம் ஏற்படாது.

இந்தியாவில் அரசாங்கங்கள் வருகின்றன, போகின்றன. ஜப்பானில் ஐந்து வருடங்களுக்கு மூன்று நான்கு பேர் பிரதமராகிறார்கள்.

ஆனால் அவர்களின் கொள்கை அவ்வாறே பயணிக்கின்றன. அப்படி என்றால் இலங்கைக்கும் தற்போது இளைஞர்கள் கூறுவது போன்று சிஸ்டம் சேஞ்ச் ஒன்று அவசியமாகும்.

அந்த சிஸ்டம் சேஞ்ச் தான் அரசியல்வாதிகள் பொய்யாக குரல் எழுப்புவதை நிறுத்தி நாடு ஏற்றுக்கொள்ளக்கூடிய திட்டங்களை செயல்படுத்துவது. அதை செயல்படுத்தினால் தான் தவறான விடயங்களை திருத்திக் கொள்ள முடியும்." என அவர்களிடம் கூறினார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 10.10 க்கு சியத தொலைக்காட்சி அலை வரிசையில் "சுழிய" நிகழ்ச்சியிலும் புதன்கிழமை இரவு 10 மணிக்கு தேசிய தொலைக்காட்சியினூடாக ஒளிபரப்பாகிய பொதுமக்கள் தினம் நிகழ்ச்சியிலும் வஜிர அபேவர்த்தன கலந்து கொண்டார்.

இந்த தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சியில் இணைந்து கொண்ட வஜிர அபேவர் தன இலங்கையில் தற்போதைய நிலைமை மற்றும் நாட்டை மேம்படுத்துவதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எடுத்து வரும் தூரநோக்கு வேலைத்திட்டங்கள் தொடர்பாக தெரிவித்த கருத்துக்கள் உள்ளூர் மற்றும் சர்வதேசத்தில் உள்ள இலங்கையர்களால் பாராட்டப்பட்டுள்ளது.

தேசிய தொலைக்காட்சி பொதுமக்கள் தின நிகழ்ச்சியில் வஜிர அபேவர்தன கருத்து தெரிவிக்கும் போது " ஜன நாயகம் மூலம் நாட்டில் வளர்ச்சியை எதிர்பார்ப்பதானால் சட்டம் மற்றும் சமாதானம் மிகவும் முக்கியமாகும். சட்டத்தில் ஏதேனும் குறைகள் காணப்பட்டால் அவற்றை முற்றாக மாற்ற வேண்டியுள்ளது. இந்நாட்டு மக்கள் அனைவரும் சமமாக சுதந்திரமாக வாழக்கூடிய நாடொன்று உருவாக வேண்டுமென்றே எதிர்பார்க்கின்றார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனநாயகத் தன்மை கொண்ட தலைவராவார். அதனால் இந்தப் பணியை அவராலேயே வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும் . நான் எவ் வேளையிலும் கேட்கும் கேள்வி ஒன்று ரணில் விக்ரமசிங்கவை விட உயர்வான தலைவர்கள் உலகில் வேறு எவரேனும் உண்டா என்பதாகும்.

ஒருமுறை எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது அவருடன் சீனாவுக்கு சென்றேன்.

அவர் பேசுவதற்கு முன்னர் சபையில் சீன ஜனாதிபதி உரையாற்றினார். சீன ஜனாதிபதி தனது உரையை சுருக்கமாக முடிப்பதற்கு முன்னர் கூறுகிறார் இங்கு என்னை விட சீனாவை பற்றி நன்றாக அறிந்த ஒருவர் இருக்கின்றார். அவருக்கு என்னை விட உலகைப் பற்றிய அறிவு உள்ளது. அது வேறு யாருமல்ல அவர்தான் ரணில் விக்ரமசிங்க என கூறி அவர் சபையில் உரையாற்ற சந்தர்ப்பத்தை வழங்கினார். இலங்கை மக்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு இணையான தலைவர் ஒருவர் உலகில் இருக்கிறாரா என இலங்கையர்கள் ஆராய வேண்டும்.

உலகில் ஏனைய நாடுகள் பலம் பொருத்தியதாக இருந்தாலும் இலங்கை இன்று இந்த நிலைமைக்கு ஆளாகியுள்ளது இலங்கையர்களின் எண்ணங்களினாலாகும். ஆனால் அதனை மாற்றுவதற்கு இயற்கையே தற்போது சந்தர்ப்பம் ஒன்றை பெற்றுக் கொடுத்துள்ளது.

இலங்கை மக்கள் அனைவரும் மிகவும் சிந்தித்து செயலாற்றினால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்நாட்டை நிச்சயமாக உலகில் உயர்ந்த இடத்திற்கு கொண்டு செல்வார். அரசியல்வாதியாக எனக்கு அதில் எவ்வித சந்தேகமுமில்லை.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னெடுக்கும் வேலைத்திட்டங்கள் மூலம் நாடு முன்னோக்கி செல்லும் என்பதை இலங்கை மக்கள் வெகு விரைவில் புரிந்து கொள்வார்கள் என எண்ணுகிறேன்.

தமிழில் வீ.ஆர்.வயலட்

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

காணாமல் போன கியூ வரிசைகள்!

இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், மக்கள் முகங்கொடுக்க வேண்டிய பாரிய பிரச்சினையாக எரிபொருள் தட்டுப்பாடு காணப்படுகிறது. அந்நிய செலாவணி இருப்பு வீழ்ச்சி கண்டமை மற்றும் டொலர் பற்றாக்குறை காரணமாக போதியளவு எரிபொருளை இறக்குமதி செய்ய முயாத நிலைமை நாட்டுக்கு ஏற்பட்டுள்ளது.



குறிப்பாக இலங்கையின் நிதி நிலைமை மோசமடைந்திருப்பதாக தரப்படுத்தல் நிறுவனங்கள் குறிப்பிட்டமையால், இலங்கையிலுள்ள வங்கிகளால் வழங்கப்படும் கடனுறுதிக் கடிதங்களை எரிபொருள் வழங்கும் சர்வதேச நிறுவனங்கள் ஏற்றுக் கொள்ளத் தயக்கம் காட்டியிருந்தன. இதனால் இறக்குமதி செய்யும் எரிபொருளுக்கான கொடுப்பனவுகளை நேரடியாக டொலர்களிலேயே செலுத்த வேண்டிய நிலைமை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு ஏற்பட்டது.

எனவேதான் இறக்குமதி செய்யப்படும் எரிபொருளுக்குத் தேவையான டொலர்களை சேகரித்து வழங்குவதற்குத் தாமதங்கள் ஏற்பட்டன. இவ்வாறு எரிபொருளைக் கொண்டு வருவதற்கு காலமாதம் ஏற்படுவதால் நாட்டில் தேவை அதிகரித்து தட்டுப்பாடு நிலவியது.

மறுபக்கத்தில் மசகு எண்ணெய் இறக்குமதிக்குப் பதிலாக நேரடியாக பெற்றோல் மற்றும் டீசல் இறக்குமதி செய்வதற்கும் கடந்த காலத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டமையால், மண்ணெண்ணெய் உற்பத்தி பூரணமாகத் தடைப்பட்டது. இதனால் பெற்றோல் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் போன்றவற்றைப் பெறுவதற்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்து நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

கடந்த சுமார் ஒன்றரை வாரங்களுக்கு முன்னர் வரை இவ்வாறுதான் நிலைமை நெருக்கடியாக இருந்தது. மாதக்கணக்கில் இந்த நெருக்கடி நீடித்தது. பெரும் எண்ணிக்கையிலான வாகனங்கள் எரிபொருளைப் பெற்றுக் கொள்ள நீண்ட வரிசையில் பல நாட்கள் காத்து நிற்க வேண்டி ஏற்பட்டது.

இந்த நெருக்கடி சூழ்நிலையை பலர் தங்களுக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தியமையால் எரிபொருள் பற்றாக்குறை மேலும் தீவிரமடைந்தது. குறிப்பாக பெரும்பாலான முச்சக்கர வண்டி ஓட்டுபவர்கள் எரிபொருள் வரிசையில் நின்று எரிபொருளை பெற்றுக் கொண்டு அதனை சட்டவிரோதமாக சேகரித்து வைத்து அதிக விலையில் விற்பனை செய்வதைத் தமது தொழிலாக மாற்றிக் கொண்டனர். அன்றாடம் முச்சக்கர வண்டி ஓட்டி பணம் உழைப்பதைப் பார்க்கிலும் பெற்றோலை கறுப்புச் சந்தையில் விற்பதனால் அவர்கள் அதிக பணம் உழைத்தனர். முச்சக்கர வண்டி ஓட்டுனர்கள் மாத்திரமன்றி வேறு சிலரும் இதனை வியாபாரமாக மாற்றிக் கொண்டனர். இதுவே நாட்டில் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியது.



எரிபொருள் நிலையங்களில் அடிதடி மோதல்களும், நீண்ட வரிசையும் முடிவுக்கு வந்துள்ள போதிலும், அன்றாடத் தொழிலுக்காக எரிபொருளில் தங்கியிருப்போருக்கு தற்போது வழங்கப்படுகின்ற எரிபொருள் போதாதென்பது நியாயமான ஆதங்கமாகும். அதற்கும் தீர்வு காணப்படுமானால் இனிமேல் நாட்டில் எரிபொருளுக்கான போராட்டமே நின்று விடும்!

நெருக்கடிக்கு முற்றுப்புள்ளி வைத்த அமைச்சர் கஞ்சன விஜேசேகர



கறுப்புச் சந்தையில் ஒரு லீற்றர் பெற்றோல் இரண்டாயிரம் ரூபாவிலிருந்து மூவாயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்பட்டதாக உறுதியான தகவல்கள் வெளிவந்தன. அவசரத் தேவையின் நிமித்தம் எத்தனை ரூபா கொடுத்தும் பெற்றோலை வாங்குவதற்குத் தயாராக இருப்போருக்கு வேறு வழியே இருக்கவில்லை. அவ்வாறானவர்களை இலக்கு வைத்தே பெற்றோல் வியாபாரம் களைகட்டியிருந்தது. பெற்றோல் விற்பனையில் ஈடுபட்டவர்கள் குறிப்பிட்ட வகை வாகனங்களை வைத்திருப்பவர்களாவர் என்று தகவல்கள் வெளிவந்தன. பெற்றோல் பதுக்கலும், கறுப்புச் சந்தை வியாபாரமும் ஒழிக்கப்படும்வரை பெற்றோல் தட்டுப்பாடும் நின்றுவிடப் போவதில்லை என்று மக்கள் புகாரிட்டதையும் காண முடிந்தது.

கறுப்புச் சந்தை வியாபாரம் முடிவுக்கு வருவது எப்போது? என்று மக்கள் ஏங்கிக் கொண்டிருந்ததையும் காண முடிந்தது. இவ்வாறானதொரு நிலைமையிலேயே எரிபொருள் விநியோகத்தை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு எரிசக்தி அமைச்சு நடவடிக்கை எடுத்தது.

அமைச்சு, ஐ.சி.ரி.ஏ நிறுவனத்துடன் இணைந்து இதற்கான பொறிமுறையொன்றைத் திட்டமிட்டு நடைமுறைக்குக் கொண்டு வந்தது. விசேடமாக QR CODE முறைமை அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த முறைமையின் ஊடாக ஒவ்வொரு வாரமும் குறிப்பிட்டளவு எரிபொருளை வாகனமொன்றுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனைப் பயன்படுத்தி இதுவரை நாடு முழுவதிலுமுள்ள 1135 எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் விநியோகிக்கப்படுகிறது. இதுவரை 8.1 மில்லியனுக்கும் அதிகமான வாகனங்களுக்கு எரிபொருள் வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து வாகனங்களும் பதிவு செய்யப்பட்டிருப்பதால் எரிபொருளுக்கான உண்மையான தேவை குறித்த சரியான தகவல்களையும் அரசாங்கத்தினால் பெற்றுக் கொள்ள முடிகிறது. இந்த நடைமுறை செயற்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து எரிபொருள் நிரப்பு நிலையங்களில் காணப்பட்ட நீண்ட வாகன வரிசைகள் பெருமளவில் குறைவடைந்துள்ளன.

அது மாத்திரமன்றி வாடகைக்கு அழைத்தாலும் கூட அதற்குத் தயாராக இல்லாதிருந்த முச்சக்கரவண்டி ஓட்டுனர்கள் பலர் மீண்டும் பழையபடி தங்களது செல்வதையும் காணமுடிகிறது.

(15ஆம் பக்கம் பார்க்க)

பி.ஹர்ஷன்...✍

ஒட்டுமொத்த இந்திய தேசத்தின் உணர்வுக்கு கிடைத்த அங்கீகாரம்!

இந்தியா என்பது பெருந்தேசம். பல்வேறு மாநிலங்களின் ஒன்றிய அரசாக இந்திய தேசம் உள்ளது. ஆனாலும் ஒட்டுமொத்த இந்திய மக்களும் ஒரே தேசத்தின் பிரஜைகள் என்ற நாட்டுப்பற்றுக் கொண்டவர்களாகவே உள்ளனர்.



இந்தியாவுக்கு எந்தவொரு வகையிலேனும் அச்சுறுத்தல் வருகின்ற போது, அத்தேசத்தின் மக்கள் தங்களது மாநிலத்தின் பாதுகாப்பை மாத்திரம் சிந்திப்பதில்லை. ஒட்டுமொத்த இந்திய தேசத்தின் பாதுகாப்புப் பற்றியே சிந்திக்கின்றனர். அக்கறையும் கொள்கின்றனர்.

அதுதான் இந்தியக் குடிமக்களின் சிறப்பான அம்சம். 'நான் இந்தியக் குடிமகன்' என்ற நாட்டுப்பற்று அவர்களிடம் அதிகமாகவே குடிகொண்டிருக்கின்றது. இந்தியாவின் நலனே அம்மக்களுக்குப் பெரியதாகும். இந்திய நலனுக்குக் குந்தகம் எதிர்கொள்ளப்படுகின்ற வேளையில் ஒட்டுமொத்த மக்களும் ஒன்றாகக் கிளர்ந்தெழுவதற்குத் தவறுவதில்லை.

இதற்கான ஒரு உதாரணமாக சீன உளவுக்கப்பல் விவகாரத்தைக் குறிப்பிடலாம். சீனாவின் உளவுக் கப்பல் இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருகை தரப்போகின்றதென்ற செய்தி வெளியானதுமே இந்தியக் குடிமகள் ஒவ்வொருவனும் தனது தேசத்தின் நலன் குறித்து வெளிப்படுத்திய கரிசனைக்குக் குறைவில்லை.

சீன உளவுக் கப்பலின் வருகையினால் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் நேர்ந்து விடுமென்ற அச்சம் ஒவ்வொரு இந்தியப் பிரஜையினதும் உள்ளத்தில் குடிகொண்டிருந்தது. இந்தியாவின் அனைத்துப் பிரதேசங்களிலிருந்தும் கண்டனங்கள் எழுந்தன. ஒட்டுமொத்த இந்திய மக்களின் தேசஉணர்வை நன்றாகவே புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

சீன உளவுக் கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வருகை தரும் திட்டம் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது. இந்தியாவின் இராஜதந்திர நகர்வினாலேயே சீன உளவுக் கப்பலின் வருகை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக இந்திய இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்திய மக்களின் உணர்வுகளுக்கு கிடைத்துள்ள வெற்றியாகவும் அதனை இந்திய இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சீன உளவுக் கப்பலின் வருகையை ஒத்திவைக்குமாறு இலங்கை கேட்டுக் கொண்டுள்ள நிலையில், அக்கப்பலின் வருகை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, கடந்த சில காலமாக சீனாவின் நடவடிக்கைகள் தென்கிழக்கு நாடுகளுக்கு இடையே பதற்றத்தை ஏற்படுத்துவதாகவே உள்ளது. அடுத்தடுத்து சீனாவின் இது போன்ற நடவடிக்கைகளால் உலகின் பல நாடுகள் கடும் அதிருப்தியில் உள்ளன.

முதலில் அமெரிக்க சபாநாயகர் நான்சி பெலோசி தாய்வான் சென்றதை எதிர்த்த சீனா, தாய்வான் வான் எல்லையில் அத்துமீறி நுழைந்ததுடன் மிகப் பெரிய அளவில் போர்ப் பயிற்சிகளையும் மேற்கொண்டது.

அந்தப் பதற்றம் தணிவதற்கிடையில்தான் சீனாவுக்குச் சொந்தமான யுவான் வாங் 5 என்ற கப்பல் ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. சீனா இதனை ஆய்வுக் கப்பல் என்று கூறினாலும், இந்தக் கப்பலால் ஏவுகணை செயல்பாடுகளைக் கண்காணிக்க முடியும். கொழும்பில் இருந்து கொண்டு இந்தியாவைச் சீனா கண்காணிக்க முயல்வதாக இந்தியா எங்கும் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இது தொடர்பாக இந்தியா இலங்கையிடம் தனது அதிருப்திகளை வெளிப்படுத்தியிருந்தது.

இந்தியாவின் கவலை நியாயமானது. இலங்கை மிகவும் இக்கட்டான ஒரு சூழலில் சிக்கி இருந்த போது, இந்தியா மட்டுமே நிதி கொடுத்து உதவியது. இந்தியாவின் அதிருப்தியை உணர்ந்த இலங்கை, சீனக் கப்பலின் வருகையை காலவரையின்றி தாமதப்படுத்துமாறு சீனாவிடம் கேட்டுக் கொண்டது. இலங்கையின் இந்தக் கோரிக்கை சீன அதிகாரிகளிடையே அதிருப்தியை ஏற்படுத்தியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனாலும் இலங்கையைப் பொறுத்தவரை சீனாவின் அதிருப்தியைப் பார்க்கிலும், இந்தியாவின் கவலைகளே இங்கு பிரதானம் என்பது உண்மை.

சீனாவின் 'யுவான் வாங் 5' என்ற கப்பல் ஓகஸ்ட் 11 முதல் 17 வரை ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்று வருகை தந்து தரித்திருப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. தற்போது அக்கப்பல் குறித்த திகதியில் அம்பாந்தோட்டைக்கு வருகை தருவது இடைநிறுத்தப்பட்டிருக்கின்றது.

இந்தியா தனது நாட்டின் பாதுகாப்பில் எப்போதும் தீவிர கரிசனையுடனேயே இருந்து வருகின்றது. இந்தியப் பெருங்கடலில் உள்ள சீன இராணுவக் கப்பல்களின் நடமாட்டத்தை இந்தியா எப்போதும் கூர்ந்து கவனித்தே வருகிறது. கடந்த காலங்களில் கூட இலங்கையில் சீன இராணுவ கப்பல் நிறுத்தி வைக்கப்பட்ட போது, இந்தியா கடும் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. கடந்த 2014இல் அணுசக்தியால் இயங்கும் சீன நீர் மூழ்கிக் கப்பலை தனது துறைமுகம் ஒன்றில் நிறுத்த இலங்கை அனுமதி வழங்கிய போது, இந்தியா_ இலங்கை இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டிருந்தது.

இலங்கையில் கடந்த சில ஆண்டுகளாகவே சீனா மிகப் பெரிய அளவில் உட்கட்டமைப்பில் முதலீடு செய்துள்ளது. இதனால் சீனாவிடம் இலங்கை பெரியளவில் கடன்பட்டுள்ளது. அதேநேரம் மறுபுறம், சுதந்திரத்திற்குப் பின்னர் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு மிக மோசமான பொருளாதார நிதி நெருக்கடியில் இலங்கை சிக்கித் தவித்து வரும் நிலையில், இந்தியா மாத்திரமே பிரதிபலன் பாராமல் இலங்கைக்கு உதவி வருகிறது.

இதேவேளை சீனக் கப்பல் இலங்கைக்கு வருகை தருவது இடைநிறுத்தப்பட்டுள்ளதற்கு இந்திய அரசியல் தரப்பிலிருந்து பலத்த வரவேற்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வெளியுறவுத்துறை கொடுத்த தொடர் அழுத்தம் காரணமாகவே சீனாவின் யுவான் வாங் 5 உளவுக்கப்பல் ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருவது இடைநிறுத்தப்பட்டுள்ளதாக இந்திய அரசியல்வாதிகள் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

1987ஆம் ஆண்டு இலங்கை_ இந்திய ஒப்பந்தத்தின்படி இந்திய ஒற்றுமை மற்றும் பாதுகாப்புக்கு எதிரான செயல்களுக்கு இலங்கை மண் பயன்படுத்தப்படக் கூடாது.

(15ஆம் பக்கம் பார்க்க)

எஸ்.சாரங்கன்...✍

சீன உளவுக் கப்பலின் இலங்கை வருகை இடைநிறுத்தப்பட்டிருப்பது, இந்திய இராஜதந்திரத்தின் வெற்றியென புதுடில்லி வட்டாரங்கள் கருத்து

இந்திய தேசமென்பது பல்வேறு மாநிலங்களின் இணைந்த தேசமாக உள்ள போதிலும், பாரதமென்பது ஒருமித்த தேசமென்பதே இந்திய குடிமக்கள் ஒவ்வொருவரினதும் உறுதியான எண்ணம்!



சீனாவின் நடவடிக்கைகளால் தென்கிழக்கு நாடுகளுக்கு இடையே பதற்றம்; தாய்வான் எல்லையில் ஆரம்பமாகிய போர்ப்பயிற்சியினால் அதிகரிக்கும் அச்சம்!

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -





'அரகல' போராட்டத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும்!

இலங்கையின் அரசியல் களம் கடந்த சில மாதங்களாகப் பரபரப்பு நிறைந்ததாகக் காணப்படுகிறது. கடந்த ஏப்ரல் 9ஆம் திகதி காலிமுகத்திடலில் ஆரம்பமான மக்கள் போராட்டம் படிப்படியாக நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் பரவியதுடன், நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டங்கள் பின்னர் வன்முறைக்கு வித்திட்டமையும் நாம் அறிந்த விடயமாகும்.

குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வீடு செல்ல வேண்டும் என்ற கோஷத்தை முன்வைத்ததாக இந்தப் போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், இதன் இலக்குப் பின்னர் திசைமாறிப் பயணித்ததையும் காணக் கூடியதாவிருந்தது.

சில நாட்களின் பின்னர் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கின்ற அத்தனை உறுப்பினர்களும் வீடு செல்ல வேண்டுமென ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமெழுப்பியதும், சாதாரண மக்களுக்கே இப்போராட்டத்தின் உள்நோக்கத்தில் சந்தேகம் தோன்றியது.

இந்தப் போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட மைக்கான நோக்கங்களை ஆராய்வதாயின், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில் எடுக்கப்பட்ட சில கொள்கை ரீதியான தீர்மானங்கள் நடைமுறைக்குச் சாத்தியமானதாக இல்லாத காரணத்தால் அரசு குறித்து மக்கள் மத்தியில் விசனம் ஏற்பட்டிருந்தது. அதுவே இப்போராட்டத்தின் ஆரம்பப் புள்ளி ஆகும்.

குறிப்பாக சேதனப் பசளையை ஊக்குவிக்கும் நோக்கில் திடீரெனக் கொண்டுவரப்பட்ட இரசாயன உரத் தடை, பல்வேறு பொருட்களுக்கான இறக்குமதித் தடை உள்ளிட்ட கொள்கைத் தீர்மானங்களை இதற்கான உதாரணங்களாக எடுத்துக் கொள்ள முடியும்.

இரசாயன உரத்துக்கு விதிக்கப்பட்ட தடை காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப் பட்டிருந்தனர். இதற்கு எதிராக விவசாயிகள் பல்வேறு எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்திருந்த போதும், அப்போராட்டங்கள் பெரியளவில் எடுபடவில்லையென்றே கூற வேண்டும். இருந்தபோதும் தமது பாதிப்புகள் குறித்து விவசாயிகள் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வந்தனர்.

விவசாயிகளின் இந்தப் போராட்டங்கள் குறித்து பாரம்பரிய ஊடகங்கள் அவ்வப்போது செய்திகளை வெளியிட்டிருந்தாலும், சமூக ஊடகங்களின் ஈர்ப்பை அவை பெற்றிருக்க வில்லை. இதனால் விவசாயிகளின் போராட்டங்கள் அதிகம் பேசப்படவில்லை.

டொலர் பற்றாக்குறை காரணமாகப் போதியளவு எரிபொருளை அரசினால் கொள்வனவு செய்ய முடியாது போனதால் மின்சாரத் துண்டிப்பை அமுல்படுத்தும் நிலைமையும், போதியளவு எரிபொருளை விநியோகிக்க முடியாத நிலைமையும் ஏற்பட்டது.

இரசாயன உரப்பற்றாக்குறையினால் விவசாயம் பாதிக்கப்பட்ட வேளையில் போராட்டங்கள் மீது காண்பிக்கப்படாத அக்கறை, மின்சாரத் துண்டிப்பு மற்றும் எரிபொருள் பற்றாக்குறையை வேளையில் அக்கறையுடன் நோக்கப்பட்டது. கிராமத்திலுள்ள விவசாயிகள் போராட்டம் நடத்திய போது பெரிதாகத் திரும்பிப் பார்க்காதிருந்த சமூக ஊடகங்கள், கொழும்பில் உள்ளவர்கள் மின்சாரத் துண்டிப்பு மற்றும் எரிபொருள் பற்றாக்குறையைத் தொடர்ந்து நடத்திய ஆர்ப்பாட்டங்கள் மீது அக்கறை காண்பிக்கத் தொடங்கின. சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி போராட்டங்களுக்காக மக்கள் ஒன்றிணைக்கப்பட்டனர்.

இவ்வாறு ஒன்றிணைக்கப்பட்ட குழுவினரே கடந்த ஏப்ரல் 4 ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தனிப்பட்ட வீட்டுக்கு முன்னால் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்ததுடன், இறுதியில் அங்கு வன்முறைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன. பெருந்தொகையான பொதுச் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. மக்கள் போராட்டம் வன்முறையாக மாறிய முதலாவது சம்பவமாக இது அமைந்தது.

இவ்வாறு நாட்டின் பல்வேறு பகுதிகளில் சிறிது சிறிதாக மக்கள் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டங்கள் நடத்தி வந்த நிலையில், ஏப்ரல் 09ஆம் திகதி காலிமுகத்திடலில் பெரும் எண்ணிக்கையானவர்கள் ஒன்று கூடி தமது எதிர்ப்பினை வெளியிட்டனர்.

இவ்வாறு ஒன்றுகூடியவர்கள் காலிமுகத்திடலுக்கு அருகில் கூடாரங்கள் அமைத்து அங்கேயே தங்கத் தொடங்கினர். இங்கு ஆர்ப்பாட்டம் தொடங்கிய ஆரம்பத்தில் உண்மையான நோக்கத்தில் மக்கள் தன்னார்வத்துடன் கலந்து கொண்டிருந்தனர். நாட்கள் செல்லச் செல்ல நேர்மையான நோக்கத்துடன் கலந்து கொண்டவர்கள் பின்தள்ளப்பட்டு அரசியல் பின்புலம்கொண்ட சக்திகள் காலிமுகத்திடல் போராட்டக் களத்தைக் கைப்பற்றத் தொடங்கியிருந்தன.

திசைமாறிப் போன போராட்டத்தின் பின்னணியில், தனிப்பட்ட அரசியல் நிகழ்ச்சித் திட்டங்கள்!





அரசியல் தலைவர்கள் அத்தனை பேரும் வீடு செல்ல வேண்டுமெனின், நாட்டை நிர்வகிக்கப் போவது யார்? நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான காலஅவகாசத்தை அரசியல் அனுபவமும், கல்விப் புலமையும் நிறைந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்க வேண்டுமென்பதே தற்போது நாட்டு மக்களின் அபிப்பிராயம் ஆகும்



நாட்டில் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்த வேளையில், போராட்டத்தை நியாயத்துடன் உற்றுநோக்கிய சாதாரண மக்கள், அதன் பின்னர் படிப்படியாக ஆர்ப்பாட்டக்காரர்களை சந்தேகமும் வெறுப்பும் கொண்டு நோக்கியது ஏன்?

இவ்வாறு போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதம் பூர்த்தியடைந்த நிலையிலேயே முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவிப்பதாகக் கூறி கொழும்புக்கு அழைத்து வரப்பட்ட அரசியல் ஆதரவாளர்கள் காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இதன் தொடர்ச்சியாக கொழும்புக்கு அழைத்து வரப்பட்டவர்கள் மீது பதில் தாக்குதல்கள் நடத்தப்பட்டதுடன், நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள பொதுஜன பெரமுன கட்சியின் அரசியல் வாதிகள் பலருடைய வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டு வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

ஏற்கனவே குறிப்பிட்டது போல காலிமுகத்திடல் போராட்டக் களம் அரசியல் பின்னணி கொண்ட சக்திகளால் கைப்பற்றப்பட்டிருந்த நிலையில், பிரதேச ரீதியில் அரசியல்வாதிகளின் வீடுகள் மற்றும் சொத்துக்கள் தீக்கிரையாக்கப்பட்டன. இந்த வன்முறைகளின் பின்னணியில் இடதுசாரிக் கொள்கையைக் கொண்ட அரசியல் கட்சிகள் இருப்பதாகப் பலரும் விமர்சித்திருந்தனர்.

ஆங்காங்கே வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த போதும், காலிமுகத்திடல் போராட்டம் தொடர்ந்து கொண்டே வந்தது. போராட்டம் தொடர்ந்த போதும், நாளுக்கு நாள் அதில் கலந்து கொள்ளும் மக்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறையத் தொடங்கியது.

மறுபக்கத்தில் எரிபொருள் தட்டுப்பாடு, எரிவாயுத் தட்டுப்பாடு என நெருக்கடிகள் அதிகரித்து வந்தமையால் அரசு மீது மக்களுக்கான அதிருப்தி அதிகரித்தது. இந்த நிலையிலேயே ஜூலை 09 ஆம் திகதி நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஆயிரக்கணக்கானவர்கள் காலிமுகத்திடலில் ஒன்றுகூடி அரசுக்கு எதிரான எதிர்ப்பினை வெளியிட்டனர். இதனால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நாட்டை விட்டு வெளியேற வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது.

மக்கள் ஒன்றுதிரண்டு அரசாங்கத்தை மாற்றியதாக இலங்கை வரலாற்றில் பதிவானதுடன், பாரியதொரு மக்கள் எழுச்சியாகவும் அந்நிகழ்வு பார்க்கப்பட்டது. தாம் எதிர்கொள்ளும் அன்றாடப் பிரச்சினைகளுக்கு எதிராக மக்கள் ஒன்றுதிரண்ட போதும், அரசியல் நோக்கம் கொண்ட சக்திகள் ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, பிரதமர் அலுவலகம் என்பவற்றைக் கைப்பற்றின.

இவை தவிரவும், அப்போது பிரதமராகவிருந்த ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட வீட்டையும் விஷமிகள் திட்டமிட்டுக் தீயிட்டுக் கொளுத்தியிருந்தனர். இதனை விட பாராளுமன்றத்துக்குள் நுழைவதற்கான முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதால், போராட்டம் திசைமாறிப் பயணிக்கிறது என்ற சமிக்ஞையை வெளிப்படுத்தியது.

இவ்வாறான வன்முறைகளுக்கு மத்தியில் நாட்டை விட்டு வெளியேறியிருந்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவியை இராஜினாமாச் செய்வதாக அறிவித்துடன், பிரதமராகவிருந்த ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியானார்.

இருந்தபோதும் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் நடவடிக்கை அரசியலமைப்புக்கு உட்பட்டதாக பாராளுமன்றத்தினால் முன்னெடுக்கப்பட்டது. இதில் மக்கள் பிரதிநிதிகளின் பெரும்பான்மையானவர்களுடைய நம்பிக்கையைப் பெற்றவராக ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். பெரும்பான்மை வாக்குகளால் புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவானார்.

ஆரம்பம் முதல் அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது அடக்குமுறை மேற்கொள்ளப்படக் கூடாது என்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெளிவாக இருந்ததுடன், வன்முறைகளுக்கு இடமளிக்கக் கூடாது என்பதையும் கூறி வந்தார். புதிய ஜனாதிபதி தெரிவான போதும், காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது போராட்டத்தைக் கைவிடவில்லை.

புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் வீட்டுக்குச் செல்ல வேண்டும் எனப் புதிய கோஷத்தை அவர்கள் முன்வைக்கத் தொடங்கினர். இதன் மூலம் அவர்களுக்கு தெளிவானதொரு குறிக்கோள் இல்லையென்பது புலப்பட்டது. அரசியல் கட்டமைப்பு மாற்றமொன்று கொண்டுவரப்பட வேண்டும் என்ற கோரிக்கை ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தாலும், அதனை முன்னிறுத்தி நடத்தப்படும் போராட்டம் உரிய இலக்கை நோக்கிச் செல்வதாகத் தெரியவில்லை. இதனால் நாளுக்கு நாள் போராட்டத்தில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை குறைந்து வந்தது.

அதேநேரம், ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவானதும், ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவந்து மூன்றாவது கூட்டத்தொடரை ஆரம்பித்து அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை பாராளுமன்றத்தில் முன்வைத்தார்.

இதில் சர்வகட்சி அரசாங்கமொன்றுக்கான தேவையை அவர் அழுத்தமாக வலியுறுத்தியிருந்ததுடன், இதற்கான பேச்சுவார்த்தைகளையும் ஆரம்பித்துள்ளார். அவருடைய கொள்கைப் பிரகடன உரையில் காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மற்றும் எதிர்க்கட்சிகளால் முன்வைக்கப்படும் பல்வேறு விடயங்கள் உள்ளடக்கியிருந்தன. இதனால் ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை எதிர்க்கட்சிகளாலும் சாதகமாகப் பார்க்கப்பட்டது. அது மாத்திரமன்றி, சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது தொடர்பில் ஜனாதிபதி நடத்திவரும் சந்திப்புக்களிலும் சாதகமான சமிக்ஞைகள் வெளியாகி வருகின்றன.

நாட்டை இக்கட்டான சூழலில் பொறுப்பேற்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உரிய காலஅவகாசத்தை வழங்கிப் பார்க்க வேண்டும் என்றதொரு நிலைப்பாடு சாதாரண பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. பல வருடங்களாக எடுக்கப்பட்ட தவறான தீர்மானங்களால் நாடு பாரியதொரு வீழ்ச்சியை சந்தித்திருக்கும் நிலையில் ஒரு சில வாரங்களில் இதனை மீட்டுக் கொண்டுவருவது எவராலும் சாத்தியமற்றது என்பதை அனைவரும் புரிந்து கொண்டுள்ளனர்.

எனவே ஜனாதிபதிக்கு அதற்கான உரிய அவகாசத்தை வழங்குவதுடன், நாட்டை வீழ்ச்சியிலிருந்து தூக்கிவிடுவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பது பலரது எண்ணமாக உள்ளது. ஆட்சியில் மாற்றங்கள் ஏற்பட்டு சில வாரங்களில் எரிவாயுப் பிரச்சினை, எரிபொருள் பிரச்சினை என்பவற்றில் சாதகமான மாற்றங்கள் தென்படுகின்றன. புதிய ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கு இது ஊக்கசக்தியாகவும் அமைந்திருக்கின்றது.

தற்போது களையிழந்து போயுள்ளது காலிமுகத்திடல் போராட்டக்களம். ஆயிரக்கணக்கில் ஆர்ப்பாட்டக்காரர்கள் திரண்டிருந்த நிலைமை மாறி, இப்போது நூற்றுக்கணக்கான வர்களையே அவ்விடத்தில் காண முடியாமல் போனதற்கான காரணங்கள் ஆராயப்படுவது அவசியம்

இலங்கையிலுள்ள அரசியல்வாதிகளில் கல்விப் புலமையும், மிகவும் அனுபவமும் கொண்டவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காணப்படுவதால், நாட்டின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவர் நடவடிக்கைகள் எடுப்பார் என்ற எண்ணப்பாடு மக்கள் மத்தியில் தோன்றியுள்ளது. தனியொருவராக எல்லாப் பிரச்சினைகளையும் அவரால் தீர்க்க முடியாது என்பதால் அனைவரும் ஒன்றிணைந்த ஒத்துழைப்பு வழங்குவது காலத்தின் தேவையாகும் என்றே மக்கள் கருதுகின்றனர்.

அரசியல் தலைவர்கள் அத்தனை பேரும் வீடு செல்ல வேண்டுமெனின், நாட்டை நிர்வகிக்கப் போவது யார்? நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான காலஅவகாசத்தை அரசியல் அனுபவமும், கல்விப் புலமையும் நிறைந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்க வேண்டுமென்பதே தற்போது நாட்டு மக்களின் அபிப்பிராயம் ஆகும்.

வார இறுதி
அரசியல் குறிப்பேடு

சம்யுக்தனி

களையிழந்து போனது காலிமுகத்திடல் போராட்டக்களம்! ஆயிரக்கணக்கில் ஆர்ப்பாட்டக்காரர்கள் திரண்டிருந்த நிலைமை மாறி, இப்போது நூற்றுக்கணக்கானவர்களைக் கூட அவ்விடத்தில் காண முடியாமல் போனதற்கான காரணங்களை ஆராயப்படுவது அவசியம்!

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

65 இலட்சம் பேருக்கான இடைக்கால நிவாரணம் பெருந்தோட்ட மக்களுக்கும் கிடைக்குமா?

'தமிழக அரசு வழங்கிய இலவச மனிதாபிமான உணவுப்பொருள் நிவாரணங்கள் விநியோகத்தில் சில தோட்டங்கள் புறக்கணிக்கப்பட்டன. இதற்கு தோட்ட நிர்வாகங்களின் அசிரத்தையும் ஒரு காரணம். வீட்டு வசதி இல்லாமையால் இரண்டு மூன்று குடும்பங்கள் ஒரே லயத்துக் காம்பிராவில் வாழக்கூடிய அவல நிலையே இருந்து வருகின்றது. இக்குடும்பங்கள் சம்பந்தமான தனித்தனி விபரங்கள் இதுவரை சேகரிக்கப்படவில்லை'

' நாட்டின் தற்போதைய நிலையில் சுமார் 100 இலட்சம் பேர்வரை பட்டினி அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாக தகவல். இதில் 65 இலட்சம் பேர் உடனடி நிவாரணங்களுக்கு உட்படுத்த வேண்டிய அவசரத் தேவையை கொண்டிருப்பதாக அரசின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது'

இவர்களுக்கு எதிர்வரும் மூன்று மாதங்களை வரையறையாகக் கொண்டு மாதாந்தம் 15 ஆயிரம் ரூபாய் நிதி உதவி, நிவாரணப் பொதி, இடைக்கால நிவாரண முத்திரை வழங்கப்பட வேண்டும் என்னும் விதந்துரையும் முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்கான உதவிகளை மனிதாபிமான அடிப்படையில் வழங்க உலக வங்கி போன்ற நிறுவனங்கள் தயாராக இருப்பதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது. உண்மையில் இவ்வாறான உதவிகள் மிக அவசியம்.

இந்த நிவாரணங்கள் பெருந்தோட்ட மக்களுக்குக் கிடைக்குமா என்பதுதான் கேள்வி. ஏனெனில் ஏற்கனவே வறுமைக் கோட்டுக்கு உட்பட்டோர் பட்டியலில் பெருந்தோட்டத்துறையைச்சார்ந்த மக்கள்உள்வாங்கப்படவில்லை.

அதாவது குறைந்த வருமானம் பெறுவோராக இச்சமூகம் கணிக்கப்படவில்லை. அதனால் தேசிய ரீதியிலான நிவாரண ஒதுக்கீடுகள் இவர்களை சென்றடைவது கிடையாது. குறிப்பாக, குறைந்த வருமானம் பெறுவோருக்கு சமூர்த்தி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மாதாந்தம் நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் சமுர்த்தி பயனாளிகளாக சிலர் மட்டுமே பெருந்தோட்டப் பிரதேசங்களில் தொிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

கொவிட் பெருந்தொற்று காலத்தில் இடைக்கால நிவாரணத் தொகை பல்வேறு கட்டங்களாக பகிர்ந்தளிக்கப்பட்டது. இதனை பெறக்கூடிய அருகதையற்றவர்களாக தோட்ட மக்கள் இருந்தனர். இதேபோலவே தமிழக அரசு வழங்கிய இலவச மனிதாபிமான உணவுப்பொருள் நிவாரணங்கள் விநியோகங்களிலும் கூட சில தோட்டங்கள் புறக்கணிக்கப்பட்டன.

இதற்கு தோட்ட நிர்வாகங்களின் அசிரத்தையும் ஒரு காரணம். வீட்டு வசதி இல்லாமையால் இரண்டு மூன்று குடும்பங்கள் ஒரே லயத்துக் காம்பிராவில் வாழக்கூடிய அவல நிலைமையே இருந்து வருகின்றது. இக்குடும்பங்கள் சம்பந்தமான தனித்தனி விபரங்கள் சேகரிக்கப்படவில்லை. எனவே பெருந்தோட்டங்களில் தற்போது எத்தனை குடும்பங்கள் வாழ்கின்றன என்பது பற்றிய சரியான தகவல்கள் பெறமுடியாதுள்ளது.

தற்போதைய நிலையில் லயங்கள், தற்காலிக குடியிருப்புகள் என்ற வகையில் 301491 வீட்டு அலகுகள் இருப்பதாக தெரியவருகின்றது. இதன் அடிப்படையில் குடும்பங்களின் எண்ணிக்கையை கணிப்பது சரியான விடயமாக இருக்க முடியாது.

வீட்டு அலகுகளின் எண்ணிக்கையை விட அதிகமான குடும்பங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன என்பதே உண்மை. லயக் காம்பிராக்கள் மிகவும் மோசமான நிலையிலேயே காணப்படுவது ஒன்றும் சிதம்பர ரகசிய மல்ல.

சமீபத்தில் பெய்த பெருமழை, காற்றில் பழைய லயன்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. இக் குடியிருப்புகளில் வசிப்பவர்களுக்கு அனர்த்த நிவாரணங்கள் கிடைப்பதற்கான சமிக்ஞைகளும் இதுவரை தெரிவதாக இல்லை. இவ்வாறு பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகியிருக்கும் நுவரெலியா மாவட்ட தோட்ட மக்களுக்கு விமோசனம் கிடைக்குமா? மண்சரிவு அபாயமுள்ள லயக் காம்பிரக்களுக்குப் பதிலாக தனி வீடுகள் பாதுகாப்பான இடங்களில் நிர்மாணித்துத் தரப்படும் என்று அரசியல் வாதிகள் உறுதியளித்திருந்தார்கள். தவிர இந்த லயக்காம்பிராக்கள் இடித்துத் தள்ளப்படும் என்றும் முழக்கமிட்டதை நாம் மறக்கவில்லை.

தற்போதைய நிலையில் இயற்கையே இடித்துத் தள்ளும் கைங்கரியத்தைச் செய்து வடும் போலிருக்கின்றது. ஆனால் மாற்று குடி யிருப்புகளுக்குத்தான் வழியில்லை. அரசாங்கத்தின் பொதுச்சேவை செயற்பாடுகளின் அடிப்படையில் அனர்த்தங்களுக்கான நிவாரண ஏற்பாடுகள் நடைமுறையில் இருக்கின்றன.

பெருந்தோட்ட பிரதேசங்களைத் தவிர்த்து பிற இடங்களில் பாதிக்கப்படுவோருக்கு உணவுப் பொதிகள், சேதமடைந்த வீடுகளுக்கான இழப்பீடுகள், பாதுகாப்பான வீடமைப்புக்கான இடங்கள் என்று உதவிகள் கிடைக்கின்றன. இந்த வரப்பிரசாதங்கள் பெருந்தோட்ட சமூகத்துக்கும் கிடைப்பதில் நிர்வாக ரீதியிலான தடைகள் இன்னும் இருக்கின்றன.

முழுமையாக சேதமடைந்த வீடுகள், பகுதியளவில் சேதமடைந்த வீடுகள் என இழப்பீடுகள் தீர்மானிக்கப்படுகின்றன. பெருந்தோட்ட மக்கள் இதனால் பயனடைய வாய்ப்புக் கிடைக்காது. ஏனெனில் அவர்கள் தமது சொந்த வீடுகளில், சொந்த காணிகளில் வாழ வழியில்லாதவர்களாக இருக்கின்றார்கள். முன்பு காலத்துக்குக் காலம் தோட்டக் குடியிருப்புகளின் கூரைகள் தோட்ட நிர்வாகங்களால் குறைந்தபட்சம் வருடம் ஒரு முறையாவது பழுதுபார்க்கும் நடைமுறை இருந்தது. கூரைக ளைத் திருத்திக்கொள்ள தகரங்கள் வழங்கப்பட்டன. திருத்த வேலைகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு சம்பளமும் வழங்கப்பட்டது. ஆனால் பெருந்தோட்டங்களைகம்பனிநிர்வாகம்கையேற்ற பின் இவ்வாறான நலன்புரி நடவடிக்கைகள் யாவும் நிறுத்தப்பட்டு விட்டன.

இந்த யதார்த்தங்களைப் புரிந்துக்கொள்ளாத நிலையிலேயே நாடு இருக்கின்து. இதற்கு ஏற்றாப்போல பெருந்தோட்டப் பிரதேசங்களைப் பிரதிநிதித்துவப்படுத்த தம் பாராளுமன்ற உறுப்பினர்களும் செயற்படுகின்றார்கள். காலத்துக்கு காலம்

பன். பாலா ...✍

ஏதாவது ஒரு பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுத்து பிற விடயங்களைப் போட்டு மிதித்து விடுகின்றார்கள். இன்னும் முழுமையாக கைக்குக் கிடைக்காத 1000 ரூபா சம்பள நிர்ணயத்துக்காக எத்தனை ஆண்டுகள் வீணடிக்கப்பட்டன. இது சம்பந்தமாக 20 தோட்டக் கம்பனிகள் தொடுத்திருந்த வழக்கின் முடிவு கடந்த 09.08.2022 அன்று அறிவிக்கப்பட்டது. தொழிலாளர்களுக்கு சாதகமான வகையிலேயே வழக்கின் தீர்ப்பு வந்திருப்பது ஆறுதலான சங்கதிதான்.

நாட்டில் பொருளாதார நெருக்கடி தீர்க்கப்படும் நிலையில் பிற சமூகத்தவர்கள் இயல்பு வாழ்க்கைக்கு மீண்டும் இலகுவாக திரும்பி வீடுவார்கள். ஆனால் பெருந்தோட்ட மக்களின் வாழ்வியல் தொடர்ந்தும் போராட்டமயமாகவே இருக்கப்போகிறது.! தற்போது அரசாங்கத்திடம் முன் மொழிந்திருக்கும் 65 இலட்சம் பேருக்கான நிவாரணம் பிற சமூகங்களை ஆசுவாசப்படுத்த உதவும். என வேதான் இது பெருந்தோட்ட மக்களுக்கும் கிடைக்கும் வகையில் இடைக்கால ஏற்பாடு ஏதாவது செய்தாக வேண்டியுள்ளது.

நிர்வாக ரீதியிலான தடைகளைக் காரணம் காட்டி எதனையும் தட்டிக் கழித்து விடக் கூடாது. மாவட்ட அரச செயலகங்களுக்கூடாக இதற்கான முன் ஏற்பாடுகள் செய்யப் படுவது நல்லது. அதேநேரம் இதற்கான ஒத்துழைப்பை தோட்ட நிர்வாகங்களிடம் இருந்து பெற்றுக் கொள்வது உசிதமானது. குறிப்பாக ஓரே குடியிருப்பில் இரண்டு மூன்று குடும்பங்கள் வாழும் நிலையில் இவ்வாறான குடும்பங்கள் சம்பந்தமான தனித்தனி தரவுகள் சேகரிக்கப்பட்டு அதன டிப்படையில் நிவாரணங்கள் பகிர்ந்தளிக் கப்படுவதை உறுதிப்படுத்துவது முக்கியமானது.

சில பிரதேசங்களில் பெருந்தோட்ட மக்கள் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் இந்த அரசு அதிகாரிகளின் செயற்பாடுகள் திருப்தி அளிப்பதாக இல்லை. ஏனோ தானோ போக்கு. எனவே அரசு அதிகாரிகளின் பொறுப்பில் விடப்படும் நிலையில் அதனை கண்காணிப்பது அவசியமாகின்றது.

ஏனெனில் இது வாழ்க்கைச் சுமை சமாச்சாரம். இனவாதத்துக்கு அப்பாற்பட்ட சங்கதி. இதேநேரம் உதவி பெறத் தகுதியானவர்கள் என்று இனம் காணப்பட்டுள்ள 65 இலட்சம் பேரில் பெருந்தோட்ட மக்களும் உள்வாங்கப்பட்டுள்ளார்களா என்பதை உறுதிசெய்ய வேண்டியது மலையகப் பிரதிநிதிகளின் பொறுப்பாகும்.

இருபதாவது அகவையில் தடம் பதிக்கும் மலையக சிறுவர் இல்லம்

மலையகத்தை சேர்ந்த, சட்டத்தின் முன் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டிய சிறுமியர்களாக இனம் காணப்பட்ட பெற்றோரை இழந்த, பாதுகாவலர்களை இழந்த, அரவணைப்பற்ற, சமூகப் பாதுகாப்பற்ற பல்வேறு சிறுமியர்கள் நீதிமன்றத்தின் மூலம் அரவணைக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்து மத அமெரிக்க துறவி சுவாமி தந்திரதேவா அவர்களின் முயற்சியின் பலனாக உருவாக்கப்பட்ட மலையக சிறுவர் இல்லம் பதுளை மாநகரில் தமது இருபதாவது அகவையில் தடம் பதித்திருக்கிறது.

மட்டக்களப்பு சமூக நலன்புரி அமைப்பின் நெறிப்படுத்தலின் ஊடாகவும், லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய நிர்வாக சபை மற்றும் அறங்காவலர் சபையினரின் ஆரம்ப கட்ட 1/3 நிதி உதவியுடனும் மலையக சிறுவர் இல்லம், பதுளை, இல. 168, மஹியங்கனை வீதியில், 2001 ஜூன் 6ஆம் திகதி ஆறு சிறுமியருடன் ஆரம்பிக்கப்பட்டது. இந்த சிறுவர் இல்லத்தின் ஸ்தாபகத் தலைவர் ஆர். எம். கிருஷ்ணசாமி ஆவார்.

பல சாதனைகளுடன் வெற்றி இலக்கை நோக்கி தனக்கென சொந்தமான கட்டிடத்தில் இன்று செயல்பட்டு வருகின்றது. சில தினங்களுக்கு முன் நிரந்தர சொந்த கட்டிடத்தில் இவ்வில்லம் அமைந்ததுடன் இருபதாவது அகவையையும் கொண்டாடியது. இவ் இல்லத்தில் இருந்து வெளியேறிய மாணவிகள் தங்களுடைய வாழ்க்கை பயணத்தை திறம்பட ஆரம்பித்துள்ளதுடன் அநேகர் அரசு தொழில் வாய்ப்புகளையும், தனியார் துறையில் தொழில் வாய்ப்புகளையும் அவர்களிலும் சிலர் மணம் முடித்து நிறைவான திருமண வாழ்வை வாழ்பவர்களாக இருந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய அன்றைய நிர்வாக சபை தலைவர் செ. கருணைலிங்கத்தின் பங்கேற்புடன் பதுளை பிரதேசத்தை சேர்ந்த பல்வேறு பிரமுகர்களின் பங்கேற்புடன் இச்சிறுவர் இல்லம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மலையக சிறுவர் இல்லம் முழுமையாக சமூக உதவி ஸ்தாபனத்தின் கீழ் நிர்வகிக்கப் படுகின்றது. அதன் நிர்வாக குழுவினரின் ஆலோசனைகளின் பெயரில் மலையகத்தில் தொழில் செய்யும் தொழிலாளர்களின் வறுமை காரணமாக தங்களின் பிள்ளைகளின் கல்வியைத் தொடர முடியாதவர்களுக்கு கல்வி கற்பதற்கு உதவிகள் நல்கும் இடமாக இருந்து வருகின்றது.

மலையகத்தில் கல்வி கற்ற இளைஞர், யுவதிகளுக்கு இலவசமான கணனி அறிவு மற்றும் தையல் முதலான தொழில்சார் பயிற்சி நெறிகளை வழங்கி கைதேர்ந்தவர்களாக மாற்ற பல்வேறு முயற்சிகளையும்



எடுத்து வருகின்றது. 1968 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட விவசாய தோட்ட தொழிலாளர் காங்கிரஸின் நோக்கத்தை ஏற்புடையதாக அனைவரின் சம்மதத்துடன் இவ்வில்லம் இயங்குகிறது.

ஆறு பெண் பிள்ளைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இம் மலையக சிறுவர் இல்லத்தில் 14, 23, 31 என்றவகையில் சிறுமியர்களினுடைய எண்ணிக்கை அதிகரித்து வந்தன. தற்போது 35 சிறுமியர் இவ்வில்லத்தில் தற்போது பராமரிக்கப்படுகின்றார்கள்.

சுயாதீனமான இல்லமாக ஆரம்பிக்கப்பட்ட மலையக சிறுவர் இல்லத்தின் சேவைகளை உணர்ந்த அரசாங்கம் 2001 ஆம் ஆண்டு தொடக்கம் ஊவா மாகாண சபையின் சிறுவர் பாதுகாப்பு மற்றும் நன்னடத்தை திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு சிறுவர் இல்லமாக மாற்றி அமைக்கப்பட்டது. மேலும் இலங்கை சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, இலங்கை மகளிர் பொலிஸ் பிரிவு மற்றும் சிறுவர் பாதுகாப்பு பிரிவு முதலான முற்றும் முழுமையான அரச கண்காணிப்பின் கீழ் சமூக உதவி ஸ்தாபனத்தின் மேற்பார்வையில் சிறுவர் இல்லம் அமையப் பெற்றுள்ளது.

இரண்டு தசாப்த காலமாக நிரந்தர கட்டிடம் இன்றி 13க்கும் மேற்பட்ட குத்தகைக்கு எடுக்கப்பட்ட கட்டிடங்களிலேயே, இவ் வில்லம் தனது செயற்பாடுகளை மேற்கொண்டு வந்தது.

இவ்வில்லத்திற்கான நிரந்தர கட்டிடம் ஒன்றை அமைக்கும் பணியில் அதன் ஸ்தாபக தலைவர் ஆர். எம். கிருஷ;ணசாமி மேற்கொண்ட முயற்சிகளுக்கு, லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய அறங்காவலர் தெய்வத்திரு. பிரேமச்சந்திரன் அவர்களின் முழு முயற்சியில் காணி ஒன்றை பெற்றுக்கொள்ள முடிந்தது.

அதன் பின் ஏற்பட்ட பொருளாதார சிக்கல்களுடன் இல்ல கட்டுமான பணிகளை ஆரம்பிக்க முடியாமல் சுமார் ஐந்து வருட காலம் கடந்து சென்றாலும் அடித்தளத்துக்கு தேவையான பண உதவிகளை ஸ்தாபக தலைவர் ஆர். எம். கிருஷ ஷணசாமி பெற்றுக்கொடுத்து ஆரம் பித்து வைத்தார். இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தின் அறங்காவலர் கௌரவ டாக்டர் பரமநாதன் அவர்களின் முழு முயற்சியுடனும் கௌரவ அறங்காவலர் ஸ்ரங்கன் மற்றும் அன்றைய நிர்வாக சபை தலைவர் கௌரவ செ.கருணைலிங்கம் அவர்களின் ஒத்துழைப்புடன் முதலாவது மாடிக்கான அமைப்பு வேலைகள் நிறைவு பெற்றது.

இரண்டு மாடி கட்டிடத்திற்கான அமைப்பு வேலைகள் பூரணப்படுத்தல், நிறைவு வேலைகளை செய்வதில் பாரிய சவால்கள் காணப்பட்ட சூழ்நிலையில் கட்டுமான பணிகள் 6 மாதங்களுக்கு பின் போடப்பட்டிருந்தது.



இவ்வாறான இக்கட்டான சூழ்நிலையில் திரு ரஞ்சன் சிவஞானசுந்தரம் அவர்களின் தலைமையிலான வன்னிஹோப் அவுஸ்திரேலியா நிறுவனத்தார் கனடாவில் வசிக்கும் எம்.டி செல்லையா மற்றும் மனோன் மணி ஞாபகார்த்த நிதியத்தின் ஊடான தொடர்புகளை ஏற்படுத்தி நிறைவு வேலைகளுக்கு ஒத்துழைப்பு நல்கியமை மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும்.

மேலும் ஒரு சில குறைவேலைகள் புதிய கட்டிடத்தில் காணப்படினும் அவை இவ்வாறான கொடை வள்ளல்களினால்







வாழ்க்கை பயணத்தை ஆரம்பித்துள்ளார்கள். விசேட தேவை உடைய எமது பெண் பிள்ளைகளை இனம் கண்டு அவர்களுக்கு தேவையான இயல், இசை, நடனம், தமிழ் மொழி, ஆங்கில மொழி, கணிதம் முதலான வகுப்புகளும் தொடர்ந்தும் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த மனிதநேய பணிக்கு அன்று தொடக்கம் இன்று வரை மனமுவந்து உதவி செய்யும் சமூக ஆர்வலர்கள், வர்த்தக பிரமுகர்கள், நிறுவனத்தினர், வெளிநாட்டு ஒத்துழைப்பாளர்கள் என அனைவரும் பங்கவிப்பு செய்துள்ளனர். இவ்வில்லத்தில் தங்கி தனது வாழ்க்கை பயணத்தை மேற்கொள்ளும் சின்னஞ்சிறார்களுக்கு உணவு உடை, உறையுள், கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு என இவ் அனைத்தையும் இவ்வில்லம் பெற்றுக் கொடுக்கின்றது.

மேலும் இம் மலையக சிறுவர் இல்லம் மாகாணத்திலேயே சிறுவர் நன்நடத்தை மற்றும் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் இயங்கும் 19 இல்லங்களில் ஆன்மீகம், கற்றல், கலாசாரம், ஒழுக்கம், பண்பாடு, கட்டுப்பாடு, விளையாட்டு, மனையியல், தையல் ஆகிய துறைகளிலும் முதன்மை நிலையில் இருப்பதினால் சிறுவர் இல்லங்களுக்கு இடையிலான மதிப்பீட்டில் அரசு முதன்மை சான்றிதழ்களையும் இம்மலையக சிறுவர் இல்லமே தொடர்ச்சியாக தமதாக்கி கொண்டு வருகின்றது. 20 வருட கால இருளுக்கு ஒளி வீச முன்வந்து உழைத்த சிறுவர் நன்னடத்தை மற்றும் பாதுகாப்பு திணைக்களத்தின் ஆணையாளர் அவர்களுக்கும், ஊவா மாகாண சபையின் பிரதம செயலாளர் அவர்களுக்கும் மற்றும் அனைத்து பெருந்தகைகளுக்கும் இவ்வில்லம் தமது பாராட்டையும் நன்றியையும் தெரிவிக்கின்றது.

தகவலும் படங்களும்

பதுளை எம். செல்வராஜா

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

தவித்துக் கிடக்கும் மக்கள் மீது

மின் கட்டண உயர்வு என்ற சுமையை ஏற்றலாமா?


மின் கட்டண உயர்வு தொடர்பாக மக்கள் கருத்து

எஸ்.எஸ். தவபாலன்

நாடு கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் நிலையில் மக்கள் ஒரு நாளைத் தள்ளுவதற்கே பெரும்பாடு பட வேண்டியிருக்கிறது. ஒவ்வொருவரும் அவரவர் பொருளாதார நிலைக்கேற்ப கஷ்டங்களை அனுபவித்து வருகிறார்கள். இச் சந்தர்ப்பத்தில் 75 சதவீத மின்கட்டண அதிகரிப்பு என்பது மரத்தால் விழுந்த வனை மாடேறி மிதித்த கதையாகி விட்டிருக்கிறது.

சாதாரணமாக 3000 ரூபா மாதாந்த கட்டணமாகச் செலுத்திவந்தவர்கள், புதிய கட்டணத்தின்படி ரூபா 5250 அளவில் செலுத்த வேண்டிவரும். இத்தொகை கிட்டத்தட்ட இருமடங்கை நெருங்கிவிட்டது. இது ஒரு வகையில் தாங்கிக் கொள்ள முடியாத சுமைதான். இவ்வாறான திடுதிப்பென்ற மின்சார கட்டண அதிகரிப்பை மக்கள் எப்படி தாங்கிக் கொள்ளப்போகிறார்கள் என்பதுபற்றி அவர்களிடமே வினவினோம்.


சிவலிங்கம்


தர்மேந்திரா


சுமதி

என் சிவலிங்கம் (ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர்),

எனது கோட்டைமுனைப் பிரதேசத்தில் வசதிபடைத்தவர்களும், வசதியற்றவர்களும் வசிக்கிறார்கள். வசதி படைத்தவர்கள் தங்களுக்கான "வாழ்க்கைச் செலவை" வானத்தைத் தொட்டாலும் தாங்கிக்கொள்வார்கள். ஆனால், வசதி குறைந்தவர்களின் நிலை கவலை தோய்ந்தது.

தரமான ஒரு கிலோ கடல்மீன் 2000 ரூபாவுக்கு போகிறது. தக்காளிப்பழம் ஒரு கிலோ 600 முதல் ஆயிரம் வரை விற்பனையாகிறது இந்த நிலையில் 3 அல்லத நாலுபேர் கொண்ட குடும்பத்தின் செலலை எண்ணிப்பார்த்தால் மாதமொன்றக்கு ரூபா 60 அல்லது 70 அயிரம் தேவைப்படும். பாடசாலைப் பிள்ளைகளின் செலவு கணித பாடத்திற்கு ஒன்றரை மணித்தியாலம் ரியூசன் கொடுக்க ஒருவருக்கு 200 ரூபா அறவிடப்படுகிறது. அப்படி படித்தால்தான் பல்கலைக்கழக புகுமுக பரீட்சையை தாண்ட முடியம். இந்த நிலையில் பிள்ளைகளுக்கு நல்ல காற்றோட்டம் அவசியம். மின்சார விசிறியின்றி படிக்க முடியாது.

முன்னர் காரியாலயங்களில் பணியாளர்கள் குறைவு, குறைந்த எண்ணிக்கையில் பணியாளர்கள் இருந்தாலும். அதிகமான வேலைகளைச் செய்தார்கள். இப்போது அரசியல் வாதிகளின் செல்வாக்கில் காரியாலம் நிறைய ஊழியர்களாக இருக்கிறார்கள். ஆனால் வேலைகள் மந்த சதியில்தான். அரசு காலத்திந்குக் காலம் நாட்டில் புதிய மின் உற்பத்தி நிலையங்களை தோற்று விக்கவில்லை. இக்குறைபாடுகளுக்கு மாற்றாக மின்சாரக்கட்டணத்தை உயர்த்தியிருக்கிறத. இதனால் பாதிக்கப்படுவது. அன்றாடம் உழைத்து அன்றாடம் காலம்தைக் கடத்துபவர்களே! மின் சாரத்தின் துணை கொண்டு உற்பத்தியாகும் அனைத்துப்பொருட்களும், அல்லது சேவைகளும் விலை உயர்வை அல்லது சேவைக்கட்டண அதிகரிப்பை மேற் கொள்ளப் போகின்றன. அவர்களது பகத்தில் இருந்து பார்க்கும்போது விலை அதிகரிப்பு, அல்லது சேவைக்கட்டண அதிகரிப்பு நியாயமானதே. மக்களுக்கோ மத்தளத்துக்கு இரு பக்கத்திலும் இடி என் பதாகவே அமையப் போகிறது. மின்சார உற்பத்திக்கான செலவு கூடும்போது மின்சாரக்கட்டணத்தை அதிகரித்தேயாக வேண்டும் என்பது உண்மையானாலும் மின்சார சபையின் அனாவசிய செலவு களையும் ஊழல், முறைகேடு, தவறான நிர்வாகம் என்பனவற்றையும் தடுக்க என்ன செய்யப் போகிறது என்பது முக்கியம். இவற்றைக் களையாமல் சுமையை மக்கள் மீது சுமத்துவது தவறு.

மட்டக்களப்பு உப்போடைப்பகுதியில் வசிக்கும் சுமதி என்ற குடும்பப் பெண்;

என்னதான் இருந்தாலும் அரசாங்கம் மின்சாரக்கட்டணத்தை இவ்வளவு தூரத்திற்கு உயர்த்தியிருக்கக் கூடாது. பதவிக்கு வரும்வரை மக்கள் நலம்தான் என்று கூறும் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சு கதிரையில் அமரந்துவிட்டால் மக்களின் வறுமையையும். அவர்களின் பிரச்சினைகளையும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. இது இந்த நாட்டில் காலம்கால மாக நடந்து வரும் ஒன்று தான்.

அமைச்சர்கள் நாட்டுக்குத் தேவையான நல்லதிட்டங்களை கொண்டுவந்து நிறைவேற்றினார்கள். அதனால் நாட்டின் பொருளாதார நிலையும் உயர்ந்தது. உதாரணத்திற்கு மஹாபொல நிதியத்தைச் சொல்லலாம். அதேபோல மகாவலி திசை திருப்புத் திட்டத்தை கூறலாம். இத்தகைய திட்டங்களை இப்போது காணக் கிடைப்பதில்லை.

பால்பக்கற் வாங்க பணம் போதாது. மீனும், இறைச்சியும், மரக்கறிவகைகளும் வாங்குவதற்கு பணம் போதாதிருக்கும்போது. எப்படி வீடுகட்டுவது? எப்படி வீட்டுக்கத் தேவையான தளபாடப் பொருட்களை வாங்குவது? என்று எண்ணிப்பார்க்கிறேன், ஒரு சன்லைற் சோப்பின் விலை 145 ரூபா இப்படியிருக்கும்போது பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளின் உடைகளை எப்படி சலவை செய்வது? ஒரு குடும்பத்தின் செலவு எப்படி அதிகரித்திருக்கிறது என்பதை எண்ணிப்பாருங்கள்.. இந்த நிலையில் அரசாங்கம் மின்சாரக்கட்டணத்தை 75 விகிதத்தால் அதிகரித்திருப்பது நியாயமான செயலாகப்படவில்லை. இதனை குறைக்க வேண்டும்.

எனது கணவர் கொழும்பில் ஒரு சாதாரண வியாபாரத்தில் ஈடபட்டு வருகிறார். மக்களிடம் பணப்புழக்கம் இல்லை என்பதால் அவரது வியாபாரமும் களை கட்டவில்லை. ஆதலால் தனக்கு பொதிய வருமானமில்லை என்று கூறுகிறார். இந்த நிலையில் நான் மட்டக்களப்பில் இருக்கிறேன். கொழும்பில் அவருக் கொரு செலவு, எனக்கும் எனது இரண்டு பிள்ளைகளுக்கும் இங்கே மற்றொரு செலவு. இந்த நிலையில் அவர் உழைக்கும் பணம் எமது குடும்பச் செலவுக்கு போதாமலிருக்கிறது. சாப்பிடாமல் இருப்பதா அல்லது பிள்ளைகள் இருவரையும் ரியூசனுக்கு அனுப்பாமல் வீட்டில் இருத்தி வைப்பதா? கஷ்டம் புரிகிறது அல்லவா?

யார் ஆட்சிக்கு வந்தாலும் பொருளாதார நெருக்கடி இருக்கத்தான் செய்யும். எனவே பொருளாதார விமோசனத்திற்கான வழியைத் தேட வேண்டும்.

ஸ்ரீமாவின் ஆட்சியின் காலத்தில் உணவு உற்பத்தியின் அவசியம் மக்களுக்கு உணர்த்தப்பட்டது. அப்படியான நல்ல சட்டங்களையம், திட்டங்களையும் ஆளும் அரசுகள் தொடர்ச்சியாக முன்வைத்து செயற்படுத்தியிருக்க வேண்டும். இது நாட்டை முன்னேற்றுவதோடு மட்டுமல்ல, மக்களின் வாழ்க்கைச் செலவை குறைப்பதற்கும் உதவியிருக்கும்.

நான் சிறியதொரு மரக்கறித் தோட்டம் செய்கிறேன். எனது குடும்பத்திற்கு தேவையான மரக்கறிகளை அதிலிருந்து அறுவடை செய்கிறேன். இந்தத் தோட்டம் எனது குடும்பச் செலவை குறைத்திருக்கிறது. இதேபோல எல்லோரும் வீட்டுத் தோட்டச் செய்கையில் இறங்க வேண்டும் அப்படிச் செய்யும் போது நாடும் முன்னேறும் நாமும் முன்னேறலாம் என்றார்

முச்சக்கரவண்டி சாரதி தர்மேந்திரா

ஒவ்வொரு மனிதனின் வசதியான வாழ்க்கைக்கு தேவைப்படுவது பணம். இது எனது சொந்த வாகனம். காலையில் பாடசாலைப்பிள்ளைகளை பாடசாலைக்கு ஏற்றிச் செல்வதிலிருந்து எனது தொழில் தொடங்கும். இரவில் எத்தனை மணிக்கு வேலை முடியும் எனக் கூற முடியாது.

இப்போதெல்லாம் ஓட்டோவை அழைப்பவர்கள் குறைவு. ஹயர கூலி கொடுக்கும் அளவுக்கு அவர்கள் கையில் பணம் இல்லை என்பதே உண்மை.

என்னைப் போலத்தான் மக்கள் கஷ்டத்தை தாங்கிக் கொண்டு வாழ்க்கையை ஓட்டுகிறார்கள். இந்த நிலையில்தான் மின் கட்டணத்தை இரட்டிப்பாக்கியிருப்பது வெந்த புண்ணில் வேல்பாய்ச்சுவது பொன்றது.

பொருளாதார நிபுணத்துவம் கொண்டவர்கள் அரசியலுக்கு வராததும் கண்டவர்களை எல்லாம் மக்கள் பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்ததும் இக் கஷ்டங்களுக்கு காரணமாகி விட்டன. முறையான திட்டமிடலும் மேற்பார்வையம் இருந்திருந்தால் பில்லியன் கோடிக் கணக்கான ரூபாய்கள் ஊழல்களில் மாட்டியிருக்காது.

இவ்வளவு மோசமான நிலையில் மக்கள் இருக்கும்போது மின்சார கட்டணத்தை 75சத வீதமான அதிகரிப்பது கிணற்றில் விழுந்தவன் தலையில் கல்லைத் தூக்கிப் போடுவது போன்றது. எல்லா கட்டணங்களையும் வரைமுறையின்றி ஏற்றிக் கொண்டே போனால் அவர்கள் எப்படித்தான் தாங்குவார்கள்? இதை யோசித்து பார்க்க வேண்டாமா?

அரசாங்கத்தின் பங்காளியாக நாங்கள் அமைச்சரவையில் பங்கேற்க மாட்டோம்

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டிய பொறுப்பு அனைத்து கட்சிகளுக்கும் உண்டு. அதற்கு தாமும் ஆதரவு வழங்குவோம் என்கிறார் வட மாகாணசபைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம். தினகரன் வாரமஞ்சரிக்கு வழங்கிய பேட்டியில் தமது கட்சி அமைச்சரவையில் பங்கேற்பதற்கான சாத்தியங்கள் இல்லையென்றும் கூறுகிறார்.



நேர்கண்டவர்: சுமித்தி தங்கராசா

கேள்வி:- நாட்டின் தற்கால அரசியல் நிலவரம் குறித்து உங்களின் நிலைப்பாடு என்ன?

பதில்:- ஜனாதிபதி சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பிய கடிதத்தைப் பார்க்கின்ற பொழுது, தேசிய திட்டம் தொடர்பாக பேசப்பட்டிருக்கின்றது. ஆனால் அதில் தெளிவற்ற நிலை காணப்படுகிறது. சர்வகட்சி இணைந்து ஒரு அரசாங்கத்தை அமைப்பதற்கு, தற்போது உள்ள 18 அமைச்சர்களும் பதவி விலக வேண்டுமா? தெரிவு செய்யப்பட வேண்டியவர்களில் 18 பேர் ஒரு கட்சியை சேர்ந்தவர்கள், ஏனையோர் ஏனைய காட்சிகளில் இருந்து வந்தாலும் கூட, மொட்டு கட்சி அரசாங்கமாக இருக்கும். தெளிவற்ற நிலையில் தான் இன்று அரசு இருக்கிறது. இன்றைய அரசாங்கத்தின் செயற்பாடுகளை சில காலங்களின் பின்னரேயே மதிப்பீடு செய்யலாம் என நினைக்கிறேன்.

கேள்வி:- ஊடக பேச்சாளர் சுமந்திரன் , சஜித் பிரேமதாச தலைமையிலான டலஸ் அழகப்பெரும அணிக்கு ஆதரவு தெவித்தமை தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன?

பதில்:- அன்றைய காலகட்டத்தில் எதிரணிக்கு ஆதரவு வழங்க வேண்டிய தேவை ஏற்பட்டது. பின்னர், மாற்றங்கள் ஏற்பட்டன. சூழலுக்கு ஏற்றவாறு எதிரணியில் இருந்தவர்களை ஆதரிக்க வேண்டியதாக இருந்தது.

கேள்வி:- நல்லாட்சி அரசை அமைப்பதற்கு ஆதரவாக ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்த, கூட்டமைப்பு, இன்றைய சூழ்நிலையில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்காமல், டலஸ் அழகப்பெரும ஆதரித்ததுடன், ரணில் விக்கிரமசிங்க விற்கு எதிரான கருத்துக்களை முன்வைத்தமைக்கான காரணம் என்ன?

பதில்:- இதில் இரண்டு விடயங்கள் தெளிவுபடுத்தப்பட வேண்டும். 2015 முதல் 2020 வரை ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தார். மைத்திரிக்கும் ரணிலுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது. மகிந்தவை பிரதமராக்கினார். நீதிமன்றம் மூலம் செயற்பட்டார். அது ஒரு தனிநபர் சம்பந்தப்பட்ட விடயமாக நான் பார்க்கவில்லை. அது நல்லாட்சி அரசாங்கத்துடனான உறவு தான். உண்மையைச் சொன்னால், புதியதொரு அரசியலமைப்பை உருவாக்குவதற்கான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, அந்த அரசில் இருந்த ஜனாதிபதியே பின்னர் குழம்பினார். ஜனாதிபதி ஆனாலும் கூட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக இருந்து கொண்டு, முழுமையாக மொட்டு கட்சியின் ஆதரவில் ஜனாதிபதியாக வந்திருக்கிறார். ஆகவே, இது விமர்சனத்திற்குரிய விடயம் தான். அரசியல் ரீதியான கருத்துக்கள் சொல்வதற்கான தேவைப்பாடு உள்ளது. சுமந்திரன் தன்னுடைய கருத்தை திடமாகவும் ஆழமாகவும் தெரிவிக்கின்ற போது, குற்றச்சாட்டுக்கள், விமர்சனங்கள் தென்னிலங்கை அரசியலில் இருக்கத்தான் செய்கின்றன.

கேள்வி: - டலஸ் அழகப்பெரும விற்கு கொடுத்த ஆதரவு பல சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது. தமிழ் மக்களுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு துரோகம் இழைக்கின்றதென்ற கருத்து நிலவிவருகின்றது? இது உண்மையா?

பதில்:- தென்னிலங்கை அரசியல் தொடர்பாக நாங்கள் பெரிதாக அலட்டிக் கொள்ளவதில்லை. எங்களுடைய வரலாற்று ரீதியாக, போராட்டத்தின் முன்னரான மென்போக்கு அரசியலாக இருந்தாலும் சரி, 30 வருட போராட்ட வரலாறாக இருந்தாலும் சரி, தென்னிலங்கை அரசியல் விடயங்களில் தலையிட்டது மிகக் குறைவே. டலஸ் அழகப்பெரும பொதுவாக மென்போக்கான ஒருவராக இருந்தாலும் கூட, அவரும் மொட்டுக் கட்சியில் இருந்து தான் வந்தார். சுதந்திரக்கட்சியில் இருந்து வந்த மைத்திரிபால வை 2015 இல் நாங்கள் ஆதரித்தோம். அதே நிலைப்பாடு தான் இப்பொழுதும், அதே போன்று தான் இரண்டுமே சமமான விடயங்கள் தான். போராட்டம் நடந்த போது, பதில் ஜனாதிபதியாக இருந்தவர் மைத்திரி, சரத்பொன்சேகா போராட்டத்தை நடத்தியவர்.. இருவருமே அங்கிருந்து வந்தவர்கள் தான்.

கேள்வி:- சர்வகட்சி அமைப்பது தொடர்பாக தமிழ் தேசிய கூட்டமைப்புடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துரையாடியுள்ளார். இந்த கலந்துரையாடல் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தீர்விற்கான வாய்ப்பாக அமையுமா?

பதில்:- அனைத்து கட்சிகளுடனும் ஜனாதிபதி பேசுகின்றார். இந்த நாட்டின் அதிஉச்ச அதிகார பரவாக்கலில் ஜனாதிபதி தான் இருக்கின்றார். பேச்சுவார்த்தைக்கு அழைக்கின்ற போது, அரசியல் ரீதியான நிர்ப்பந்தம். அதற்கு கட்டாயம் போக வேண்டும். இனப்பிரச்சினை தீர்வு மற்றும் அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விடயங்கள், காணி அபகரிப்பு போன்ற விடயங்கள் பேசப்பட்டிருக்கின்றன. தீர்க்க வேண்டும் என்று கேட்க வேண்டிய கடமை. கேட்டிருக்கின்றோம். அரசியல் தீர்வு சம்பந்தமாகவும் கவனம் செலுத்த வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலும் எமது விடயங்கள் பேசப்பட்டுள்ளன. அது பற்றி ஜனாதிபதியுடன் பேச வேண்டியது கட்டாயம். எந்த தலைமைத்துவமாக இருந்தாலும் பேச வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

கேள்வி:- சர்வகட்சி அரசாங்கத்திற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆதரவு வழங்குமா?

பதில்:- இது சாத்தியமா என எனக்கு தெரியவில்லை. எத்தனை கட்சிக்கு அழைப்பு விடுவார்கள். எத்தனை கட்சி இணையும்.. எத்தனை பேர் நெல்லிக்காய் மூட்டை போன்று உருண்டு ஓடுவார்கள் என்பதெல்லாம் கேள்விக்குறியான விடயம். நான் எதிர் மறையாகப் பார்க்கவில்லை. கட்சி ரீதியாக தெளிவான நிலைப்பாடு உண்டு. நல்லாட்சி அரசாங்கமாக இருந்தாலும் சரி, சர்வகட்சி அரசாங்கமாக இருந்தாலும் சரி, நாங்கள் அரசாங்கத்தின் பங்காளியாக அமைச்சரவையில் பங்கேற்க மாட்டோம். அந்த நிலைக்கு தமிழர்கள் இன்னும் வரவில்லை. ஆட்சியில் பங்கேற்று அவர்கள் செய்யும் எல்லாவற்றிற்கும் கூட்டுப் பொறுப்பேற்கின்ற நிலைக்கு இருக்க மாட்டோம். நல்லாட்சி அரசாங்கத்துடன் எவ்வாறு இணைந்து செயற்பட்டோமோ, அதே மாதிரியான ஒரு நிலைப்பாட்டை பேணக்கூடிய வாய்ப்பு உண்டு.

கேள்வி:-சர்வகட்சி அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுமா?

பதில்:- வெளியே இருந்து நல்ல விடயங்கள் அனைத்திற்கும் ஆதரவு கொடுப்போம். எங்களுக்கு உடன்படாத விடயங்களில் இருந்து ஒதுங்கியிருப்போம் அல்லது விமர்சிப்போம். இது தான் எங்களுடைய நிலைப்பாடாக இருக்கும். முழுமையாக எதிர்ப்பதா முழுமையாக ஆதரிப்பதா என்ற நிலைப்பாட்டில் இருக்க முடியாது. அதுசரி வராத ஒன்று. ஆனால் வெளியில் இருந்து கொண்டு ஆதரவு கொடுக்க வேண்டிய நல்ல விடயங்களுக்கு ஆதரவு கொடுப்போம்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து இந்த நாட்டை மீட்டெடுக்க வேண்டிய பொறுப்பு நாட்டில் உள்ள அனைத்து கட்சிகளுக்கும் உண்டு. மீட்டெடுக்கும் முயற்சியில் இணைந்தால் மீட்டெடுக்க முயற்சிக்கலாம். உள்நாட்டு ரீதியாகவும் வெளிநாட்டு ரீதியாகவும் எவ்வாறு பிரச்சினைக்கு தீர்வு காணலாம் என முயற்சிக்கலாம். நிதி வசதிகளை, கட்டமைப்புக்களையும், கடன் மறுசீரமைப்பு விடயங்களை கையாளுகின்றோம் என்பன இருக்கின்றன.

கூட்டாக செயற்படுகின்ற பொழுது, இந்த நாட்டில் இருக்க கூடிய ஸ்திரத்தன்மையை சர்வதேசம் பார்க்கும் சர்வகட்சி அரசியலமைப்பு அரசாங்கம் ஒன்று அமைக்கப்படுமேயானால், ஸ்திரதன்மையின் தோற்றப்பாட்டை வெளியில் காட்டுகின்ற பொழுது, ஆதரவு வழங்க கூடிய நிலை ஏற்படும். அவ்வாறான வாய்ப்புக்களை கொண்டு, எமது பொருளாதாரத்தை உடனடியாக மீட்கலாம் என்று சொல்ல முடியாவிட்டாலும், படிப்படியாக மீட்கக்கூடிய வாய்ப்புக்கள் உருவாகக் கூடும்.

நூலறிமுகம்

நூலின் பெயர்: நமது வரலாற்று ஆளுமைகள்
நூலாசிரியர்: கலாபூஷணம் ஸக்கியா ஸித்தீக் பரீட்
வெளியீடு: ரஹ்மத்துல்லா பதிப்பகம், 4/4, நிகபே வீதி, நெதிமால, தெஹிவளை
விலை: 2000.00

'ஒவ்வொரு மனிதனுக்கும் நினைவாற்றல் இருப்பது போன்று எந்த வொரு மக்கள் கூட்டத்திற்கும் தமது வரலாறு குறித்த நினைவாற்றல் அவசியமானது. நிகழ்காலத் தவறுகளைக் களைவதற்கும் எதிர் காலத்தைத் திட்டமிடுவதற்கும் கடந்த கால வரலாறுகள் துணைபுரியக்கூடியன. உலகில் எத்தனையோ பேர் பல்வேறு காரணங்களுக்காக நினைவுகூரப்படுகின்றனர். ஆனால் நம் சமுதாயத்திற்கு பங்காற்றி எம்மைவிட்டு பிரிந்து சென்றவர்களை காலப் போக்கில் நாம் மறந்து விடுகின்றோம். அவர்களது பணிகளைப் பெரும்பாலும் நினைத்துக்கூடப் பார்ப்பதில்லை. அவர்களது சேவைகள், விபரங்களை அவர்களது குடும்பத்தார் கூட நினைத்துப் பார்ப்பதுமில்லை, தேடிப் பார்ப்பதுமில்லை. அவற்றைத் தேடி அறிந்து ஆவணப்படுத்த முயற்சிப்பதுமில்லை. இவை அனைத்தும் இந்நூலை ஆவணப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்ட போது நான் நேரடியாகக் கண்ட உண்மைகள்'.

'ஆனால் நமது முன்னோடிகள் பலர் எத்தகைய உலக இலாபங்களையும் எதிர்பாராமல் அறிவுத்துறைக்கும் சமயத் துறைக்கும் அரசியல் பொருளாதாரத் துறைகளுக்கும் தம்மை அர்ப்பணித்து பணியாற்றியுள்ளனர். அவர்களது அர்ப்பணிப்புகளைப் பின்னைய சமுதாயத்தவர்கள் பின்பற்ற வேண்டும். அவர்களது வாழ்வும் வாக்கும் எதிர் காலப் பரம்பரைகளுக்கு பாடமாக அமைய வேண்டும். விளக்கின் வேலை இருளைப் போக்குவது மட்டுமல்ல இன்னொரு விளக்கை ஏற்றி வைப்பதும் தான் என்பதற் கேற்ப சமகாலமும் எதிர்காலமும் இம்முன்னோடிகளுக்கு கடமைப் பட்டுள்ளது.

நமது சமூகத்தில் பல ஆளுமைகள் இலை மறை காய்களாய் வாழ்ந்து மறைந்திருக்கின்றனர். ஒரு மனிதனின் தகுதியை அம்மனிதனின் செல்வம், செல்வாக்கு, வசீகரத் தோற்றம் என்பவற்றைக் கொண்டு மதிப்பிட முடியாது. ஒவ்வொருவரது நடத்தைகளும் அவர்கள் புரிகின்ற சேவைகளும் அவர்களை மனிதப் புனிதர்களாக மேலோங்கச் செய்கின்றன. அதனால் இம்மண்ணை விட்டு பிரிந்துவிட்ட சேவையாளர்கள் பற்றிய குறிப்புகளை மிகச் சுருக்கமாகத் தந்துள்ளேன். இதற்கு மேல் விரிவாக எழுத எனது வயதும் நேரமும் பொருளாதாரமும் இடம் தருவதாக இல்லை. அதனால் இப்பணியைத் தொடர்ந்து முன்னெடுக்குமாறு எனது இளம் தலை முறையினருக்கு வேண்டுகோள் விடுகின்றேன்'.

இவ்வாறு இந்நூலுக்கு எழுதியுள்ள முன்னுரையில் நூலாசிரியை குறிப்பிட்டிருக்கின்றார்.

உண்மையில் இன்றைய காலத்தை வெளிச்சமிட்டு காட்டும் கருத்துகள் இவை. நமது ஆளுமைகளின் பணிகள், சேவைகளை எண்ணிப் பார்ப்பதானது எதிர்காலத்தைத் திட்டமிட்டு முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்ல வழிவகுக்கும்.

அந்த வகையில் இந்நாட்டின் சமூகம், சமயம், பொருளாதாரம், கல்வி, அரசியல், கலாசாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கும் பங்களித்த நமது ஆளுமைகளை நூலாசிரியர் இந்நூலில் தொகுத்து ஆவணப்படுத்தி இருக்கின்றார். இதுவொரு வரலாற்று சாதனையும் அழியாத்தடம் பதித்த காரியமும் ஆகும். 143 ஆளுமைகள் தொடர்பான விபரங்களை அவர்கள் பங்களித்த துறைகள் வாரியாக உள்ளடக்கியுள்ளது இந்நூல். இவ்வாறான நூலை தொகுப்பதற்கு அவர்களது விபரங்களையும் தகவல்களையும் திரட்டுவது என்பது எவ்வளவு தூரம் சவாலாக அமைந்திருக்கும் என்பதை சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை. அதேநேரம் இன்றைய பொருளாதார சூழலில் 568 பக்கங்களைக் கொண்டதாக இந்நூலை ஆவணப்படுத்தி இருப்பதும் ஒரு இமாலயச் சாதனையேயாகும்.



கொரோனா நோயினால் உயிரிழ்ந்த நூலாசிரியையின் சகோதரர் இப்றாஹீம் ரஹ்மத்துல்லா ஸித்தீக் உள்ளிட்ட அனைத்து முஸ்லிம்களுக்கும் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ள இந்நூலுக்கு பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் முதுநிலை விரிவுரையாளர் கௌரவ கலாநிதி எம்.ஐ.எம். அமீன், கலாநிதி ரவூப் செய்ன், பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எம். எஸ். அப்துல் பாரி, நவமணி பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியரான சிரேஷ்ட ஊடகவியலாளர் என்.எம். அமீன், முஸ்லிம் சமய, கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் இப்றாஹிம் அன்ஸார் ஆகியோர் அணிந்துரைகளையும் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவை முன்னாள் பணிப்பாளர் எம். இஸட் அஹ்மட் முனவ்வர், கொழும்பு டி.எஸ். சேனநாயக்க கல்லூரியின் ஒய்வு பெற்ற ஆசிரியர்கள் சங்கத் தலைவி திலகா பெரேரா, கொழும்பு ஸாஹிரா கல்லூரியின் தமிழ் பிரிவு முன்னாள் தலைவர் என்.எம்.எம். நெஸீன் ஆகியோர் வாழ்த்துரைகளையும் கலாபூஷணம் எஸ். ஐ நாகூர்கனி கவி வாழ்த்தையும் வழங்கியுள்ளனர்.

இந்நாட்டின் சமூக, சமய, அரசியல், பொருளாதார மேம்பாட்டுக்கு பங்களித்த நமது முன்னோர்களை ஆவண ரீதியாக அறிந்து கொள்ள வென நீண்ட காலமாக இருந்து வந்த இடைவெளியை நீக்கும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது. எவரும் படித்து பயன்பெறக்கூடிய வகையில் அமைந்துள்ள இந்நூல் இந்நாட்டு முஸ்லிம்களின் வரலாற்று ஆவணம் என்றால் அது மிகையாகாது.

மர்லின் மரிக்கார்

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

ஜனாதிபதிக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆவணம்

நாட்டில் பொருளாதார மற்றும் சமூக ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதியிடம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கையளித்த ஆவணம்

ஜனாதிபதி அவர்களுக்கு,

பொருளாதார மற்றும் சமூக ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த தேசிய சர்வ கட்சிச் செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்

ஜூலை 29, 2022 திகதியிட்ட உங்கள் கடிதம் தொடர்பில், மேற்கூறிய விடயத்தைப் பற்றிய விரிவான உரையாடலைத் தொடங்குவதற்கான உங்கள் முயற்சிகளை வரவேற்கிறோம். அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை மீண்டும் அறிமுகப்படுத்துவதையும், மேற்கூறிய நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் பாராளுமன்ற மேற்பார்வைக் குழுக்களை மீண்டும் செயற்படுத்தி அவற்றை வலுவூட்டுவதற்கான முன்மொழிவையும் நாங்கள் மதிக்கின்றோம்.

1. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடம் பின்வரும் விடயங்களை உங்கள் முன் வைக்க விரும்புகிறது. இவற்றிற்கு தங்களிடமிருந்து சாதகமான பதிலை நாங்கள் எதிர்பார்க்கின்றோம், மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டிய விடயங்களில் நாங்கள் எவ்வாறு ஒத்துழைக்கலாம் என்பது பற்றிக் கலந்துரையாடுவதற்கான சாதகமான சூழலையும் அதுஉருவாக்கும்.

அவசரகால நிலைமையை நீக்கி, அமைதியான போராட்டக்காரர்களையும் , அவர்களின் தலைவர்களையும் குறிவைத்து கைது செய்வதையும் துன்புறுத்துவதையும் நிறுத்திக் கொள்ள வேண்டும். இந்தக் கைதுகளில் பல தேவையற்றவை. அவை இயல்பு வாழ்க்கையைப் பேணுவதற்கு பாதகமானவையாகவும், ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவை அமர்வுகளில் அரசாங்கத்திற்கு மேலும் சங்கடத்தை ஏற்படுத்துவனவாகவும் அமைந்துவிடும். இவ்வாறான கைதுகளில் பல நாட்டில் சட்டத்தின் ஆட்சியை முறையாக அமுல்படுத்துவது குறித்துக் கவலைகளைத் தோற்றுவித்துள்ளன என்பதும், அவை முதலீடுகளை ஊக்குவித்தல் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வருகை போன்றவற்றைப் பாதிக்கும் வகையிலும் அமைந்துவிடலாம் என்பதும் எங்களது கரிசனையாகும்.

2. பாராளுமன்றத்தில் சம்பிரதாய அமர்வின் போது தாங்கள் வெளியிட்ட அறிக்கையின் பிரகாரம் தாராளவாதம், சகிப்புத்தன்மை மற்றும் மதச்சார்பற்ற தேசத்தின் நோக்கத்தை அடையப்பெறுவது என்பன அவசியமாகும். ஒரே நாடு, ஒரே சட்டம் என்ற தொனிப்பொருளின் கீழ் முன்னாள் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட தீவிரவாத மதகுரு ஒருவரின் தலைமையிலான ஆணைக்குழு, அவரிடம் காணப்பட்ட மதவெறி மற்றும் தப்பெண்ணத்திற்குப் பெயர் பெற்றது. அதன் பரிந்துரைகள் மூலம் சிறுபான்மைச் சமூகங்களின் விகிதாசாரத்தில் குறிவைக்கப்பட்டுள்ளது .அவர்களின் நடைமுறைகள், சமய நம்பிக்கைகள் மற்றும் தனிப்பட்ட சட்டங்களிலான சீர்திருத்தங்கள் என்பன பற்றி அதில் விதந்துரைக்கப்பட்டவை அதிகம் ஊறு விளைவிப்பனவாகும். அவற்றின் காரணமாக குறிப்பாக முஸ்லிம்கள் மத்தியில் அதிர்ச்சியும், அதிருப்தியும் நிலவுகின்றன.





3. அதேபோன்றதுதான் கிழக்கு மாகாணத்தில் உள்ள தொல்பொருள் இடங்களைப் பாதுகாப்பதற்காக எனக் குறிப்பிட்டு அமைக்கப் பட்ட மற்றொரு ஆணைக்குழுவின் நியமனமுமாகும். அதனூடாக, எந்தவொரு சிறுபான்மை சமூகத்தினரினதும் பிரதிநிதித்துவம் இல்லாமல், கிழக்கு மாகாணத்தில் உள்ள தொல்பொருள் இடங்கள் அந்த மாகாணங்களில் வசிக்கும் மக்களால் அழிக்கப்படும் அல்லது சட்டவிரோதமாக அபகரிக்கப்படும் அபாயத்தில் உள்ளன என்றவாறான தோற்றப்பாட்டை ஏற்படுத்துவது மற்றொரு பயனற்ற செயலாகப் பார்க்கப்படுகிறது. இது முஸ்லிம்கள் மற்றும் தமிழர்கள் மத்தியில் அதிக மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது. தொல்பொருள் திணைக்களம் உட்பட பல்வேறு அரசாங்க நிறுவனங்கள் சட்டத்தை மீறுவதை உறுதி செய்வதற்கு கடுமையான சட்டங்களைக் கொண்டிருக்கின்றன. இதனை கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் முஸ்லிம்களும் தமிழர்களும் முன்னைய நிருவாகத்தினால் திட்டமிட்டு சமூகங்களை துருவப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சியாகவே கருதுகின்றனர். இந்த ஆணைக்குழுவின் நியமனம் மற்றும் அது ஏற்படுத்தியுள்ள அச்சங்களையும் ,கவலைகளையும் போக்குவதற்கு தாங்கள் உரிய நடவடிக்கைகளை எடுப்பீர்கள் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.


உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணை மற்றும் அவை தொடர்பில் சில வழக்குகள் தொடரப்பட்ட விதம் என்பன கவனத்தில் கொள்ளத்தக்கன. பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதி வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டிய அதேவேளையில், கறைபடியாத சேவைப் பதிவுகளைக் கொண்ட காவல் துறையின் முன்னாள் உயர் அதிகாரிகள் உட்பட அப்பாவி மக்கள் மீது தேவையற்ற வஞ்சத்துடன் முறைகேடாக நடவடிக்கை எடுக்கப்படுவதை நோக்கமாகக் கொண்டு நடத்தப்பட்ட விசாரணைகளை முறையாக மதிப்பாய்வு செய்ய முயற்சி எடுப்பீர்கள் எனவும் எதிர்பார்க்கிறோம். தவறாகக் கையாளப்பட்ட விசாரணைகள் மற்றும் ஆதாரங்களை மறைப்பதற்கு அல்லது திசைதிருப்புவதற்கு வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் என்பவற்றுடன், மற்றும் சில சம்பவங்களை முறையாக விசாரிக்கத் தவறிய காரணிகளை கர்தினால் மெல்கம் ரஞ்சித் உட்பட மற்றும் பலர் தெரிவித்துள்ள கருத்துக்கள் நன்றாக வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸனரான நாங்கள் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை மற்றும் பாராளுமன்றத் தெரிவுக்குழு ஆகியவற்றின் முன்னிலையில் வைக்கப்பட்ட சாட்சியங்கள் போன்றவற்றை முழுமையாக ஆராய்ந்துள்ளதுடன், சில தடயங்கள் ஏன் சரியாக ஆராயப்படவில்லை என்பதை தெளிவுபடுத்துவதற்காக எமது கவலைகளைப் புலனாய்வாளர்களுடன் பகிர்ந்து கொள்ளத் தயாராக உள்ளோம்

ஒத்திவைக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தல்கள் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் முன்பு இருந்த அதே விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் நடத்தப்பட வேண்டும்.

இந்த வாரத்தில் அறிவிக்கப்பட்ட சில உள்ளூராட்சி மன்றங்களின் தரமுயர்த்தலை வரவேற்கும் அதேவேளையில்,

(22 ஆம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதி ரணில் தலைமையில் நாடு அபிவிருத்தியடையும்



வாழ்த்துச் செய்தியில் களுத்துறை நகர பிதா ஆமிர் நஸீர்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது நாட்டு மக்கள் இன்று அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துள்ளதாகவும் நிச்சயம் புதிய ஜனாதிபதி நாட்டை எல்லாத்துறையிலும் அபிவிருத்தி அடையச்செய்வார் என்பதில் பூரண நம்பிக்கையிருப்பதாகவும் களுத்துறை நகர முதல்வர் டொக்டர் ஆமிர் நஸீர் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அச்செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீண்டகால அரசியல் அனுபவத்தைக் கொண்டவர். பாராளுமன்ற உறுப்பினராக அரசியலை ஆரம்பித்த அன்னார் பல தடவைகள் ஐ.தே.கவின் ஆட்சிக்காலத்தில் பல அமைச்சு பதவிகளை வகித்த அனுபவம் கொண்டவர். அதன் பின் எதிர்க்கட்சி தலைவராக, நாட்டின் பிரதமராக பல தடவைகள் பதவி வகித்து இன்று நாட்டின் ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளார்.

இவ்வாறு அரசியலில் நீண்ட அனுபவத்தைக் கொண்ட ஜனாதிபதியொருவர் எமக்கு கிடைத்திருப்பதானது நாட்டு மக்களுக்கு கிடைத்த பெரு வெற்றியாகவே நான் பார்க்கிறேன்.

அதலபாதாளத்தில் விழுந்த நாட்டை எவ்வித எதிர்பார்ப்புகளுமின்றி பொறுப்பேற்று குறுகிய காலத்திற்குள் சில மாற்றங்களை ஏற்படுத்தி நாட்டு மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளார்.

அதேபோல், சிறந்ததொரு அமைச்சரவையையும் உருவாக்கி நாட்டை கட்டியெழுப்புவதற்கான அடித்தளத்தையும் வகுத்து செயற்பட ஆரம்பித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் திட்டங்களுக்கு அரசியல் கட்சிகள் பேதங்களை மறந்து ஆதரவளிக்க முன்வந்துள்ளதை வரவேற்று பாராட்டுகின்ற அதேநேரம், ஜனாதிபதியின் செயற்பாடுகள் வெற்றியளிக்க தனது பூரண ஆதரவை வழங்குவதாகவும் நகர பிதா ஆமிர் நஸீர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.

எப்போதும் மாற்றங்களை எதிர்பார்க்கும் இலங்கை மக்கள்



அவர்களால் விரைவில் மீண்டெழ முடியும்

கருணாகரன்

தீராத பிரச்சினைகளின் மையக்களமாகியுள்ளது இலங்கை. இனப்பிரச்சினை, சமூக முரண்பாடுகள், மோதல்கள், போர், படைத்துறைக்கான அதிகரித்த செலவீனமும் ஆளணிப் பெருக்கமும், பொருளாதார நெருக்கடி, அரசியலமைப்புக் குழப்பங்கள் – இழுபறிகள், ஆட்சித் தடுமாற்றங்கள் என ஏராளம் தொடர் பிரச்சினைகளில் சிக்கி மீளமுடியாமல் கிடக்கிறது நாடு.

போர் முடிந்த பிறகு நாடு உருப்படும் என்ற கனவு, மிகப் பெரிய படுகுழியில் வீழ்ந்து நாறுகிறது. இது போதாதென்று வெளியுறவுச் சிக்கல்கள் வேறு வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. அதிலொன்றாக இப்பொழுது சீன உளவுக் கப்பல் விவகாரம் தலையெடுத்திருக்கிறது.

"சீனக் கப்பலை உள்ளே எடுக்கக் கூடாது. அது தன்னுடைய பிராந்தியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்" என்கிறது இந்தியா.

"ஆமாம், ஆமாம்" என்று இதை ஆமோதிக்கிறது அமெரிக்கா. (கூட்டாளிகள் அப்படித்தானே சொல்வார்கள் என்று நீங்கள் கேட்பது புரிகிறது).

"இலங்கை ஒரு இறைமையுள்ள நாடு என்ற வகையில் அது சுயாதீனமாகச் சிந்திப்பதற்கு இடமளிக்க வேண்டும்" என்று சொல்கிறது சீனா.

இந்தச் சிக்கலுக்குள் என்ன தீர்மானத்தை எப்படி எடுப்பது என்று தெரியாமல் தடுமாறுகிறது இலங்கை. எந்தத் தரப்பின் சொற்படி நடந்தாலும் இலங்கைக்குப் பாதிப்பு என்பதே இன்றைய நிலை.

இதற்குக் காரணம், நம்முடைய கடந்த காலத் தவறுகளேயாகும்.

எந்தப் பிரச்சினையையும் தீர்க்காமல், அவற்றை வேறு வழிகளில் அடக்கிச் சமாளித்துக் கடந்து விடலாம் என்ற தந்திரோபாயத்தைக் கையாண்டதன் விளைவே இன்றைய அத்தனை நெருக்கடிகளுமாகும். பொருளாதாரப் பிரச்சினை, இனப்பிரச்சினை போன்ற மையப் பிரச்சினைகளுக்குப் பொருத்தமான – நீதியான – தீர்வைக் காணாமல், படையாதிக்கத்தின் மூலம் அவற்றை அடக்கி விடலாம் என்று ஆட்சியாளர்கள் சிந்தித்ததன் விளைவே இன்றைய நிலை.

1970 களிலும் 1980 களிலும் ஜே.வி.பியின் போராட்டங்களை வெற்றிகரமாக அரசாங்கம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. அதைப்போல தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை – புலிகளைத் தோற்கடித்து 2009 இல் வெற்றி கண்டது. இதனையடுத்து இனி எந்தப் பிரச்சினையும் இல்லை. நாடு வளர்ச்சியை நோக்கி றொக்கட் வேகத்தில் பயணிக்கும் என்றே பலரும் நம்பினார்கள். அந்த உற்சாகத்தோடுதான் 2009 க்குப் பின்னர் நாடு முழுவதும் சுற்றுலாவில் உலாத்திக் கொண்டிருந்தனர் பலரும்.

ஆனாலும் அந்தப் பிரச்சினைகள் அப்படியேதான் இன்னும் உள்ளன. மட்டுமல்ல அவை இன்னும் பல பிரச்சினைகளை உண்டாக்கி விட்டுள்ளன.

அவற்றிற் சிலவே ஜனநாயக நெருக்கடி, போர்க்குற்ற விவகாரம், காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினை, பொறுப்புக்கூறல், பொருளாதார நெருக்கடி மற்றும் வெளியுறவுப் பிணக்குகள் வரையாக நீண்டுள்ளன. உண்மையில் அத்தனை நெருக்கடிகளும் ஒன்றோடு ஒன்று தொடர்பு பட்டவை. ஒன்றிலிருந்து ஒன்றாக விளைந்தவை. இதில் முக்கியமானது இனப்பிரச்சினை. 70 ஆண்டுகளாகவே தொடர்ந்து கொண்டிருப்பது. இந்தப் பிரச்சினை லட்சம் வரையான உயிர்களைக் காவு கொண்டுள்ளது. நான்கு தலைமுறையினரின் வாழ்க்கையை நாசமாக்கியுள்ளது. பல கோடி சொத்துகளை அழித்துள்ளது. இயற்கை வளங்களைச் சிதைத்துள்ளது. நாட்டின் வருவாயை மீறிய படைத்துறைச் செலவைச் செய்ய வைத்துள்ளது. இதை ஈடுகட்டுவதற்காக – சமாளித்துக் கொள்வதற்காக – உலகம் முழுவதிலும் கடன்படும் நிலையை உருவாக்கியுள்ளது. இந்தக் கடனால் இன்று அனைவரிடத்திலும் அடங்கிக் கிடக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதைப்போலவே நாட்டின் வளர்ச்சியை நோக்கிய பொருளாதாரக் கொள்கையை மேற்கொள்ளாமல், சீரழிவுப் பொருளாதாரக் கொள்கையை மேற்கொள்ளப்பட்டது.

பெற்ற கடனில் கூட சரியான பொருளாதாரத் திட்டங்களை நடைமுறைப்படுத்தாமல் அவற்றைத் தாராளமாகச் செலவு செய்ததும் அதில் ஊழலை மேற்கொண்டதுமாகும்.

ஆகவே தொடக்கத்திலேயே இந்தப் பிரச்சினைகளை நேர்மையான முறையில் தீர்த்திருந்தால் நாடு இன்று முழுமையான அமைதிக்குத் திரும்பியிருக்கும். பொருளாதார வளர்ச்சியையும் கண்டிருக்கும். யாரிடமும் கையேந்தி, யாருக்கும் கட்டுப்பட்டு, யாவருக்கும் அடிமையாக இருந்திருக்க வேண்டி வந்திராது. நம்முடைய இறைமை பாதிக்கப்பட்டே இருக்காது.

நாட்டின் இறைமை என்பது சொந்தக் காலில் நிற்கும்போதே சாத்தியமாகும். தனி நபருக்கென்றாலும் சரி, குடும்பத்துக்கென்றாலும் சரி, நாட்டுக்கானாலும் சரி இதுதான் உண்மை.

இன்று இலங்கை உலகம் முழுவதிலும் பிச்சையெடுத்துக் கொண்டிருக்கிறது. நாட்டை அந்த நிலைக்குக் கொண்டு வந்து விட்டனர் கடந்த கால ஆட்சியாளர்கள். அப்படி விட்டதைப்பற்றிய எந்தக் குற்றவுணர்ச்சியும் வெட்கமும் இல்லாமல் இவர்கள் அனைவரும் பாராளுமன்றத்திலேயே இன்னும் உள்ளனர். மட்டுமல்ல இன்னும் – இந்த நிலைக்கு நாட்டை கடனில் மூழ்கடித்த பிறகும் அரசியல் அதிகாரப் போட்டியில் எந்தக் கூச்சமும் வெட்கமும் இல்லாமல் தாராளமாக ஈடுபடுகின்றனர்.

இது எதனைக் காட்டுகிறது? இன்னும் இந்த நாடு முன்னேற்றத்தை எட்ட முடியாது என்பதைத்தானே!

ஒரு கணம் கண்ணை மூடிச் சிந்தித்துப் பாருங்கள். இவ்வளவு பிரச்சினைகளையும் தீர்த்திருக்க முடியுமா? முடியாதா என்று. இவ்வளவு பிரச்சினைகளையும் தீர்க்க வேண்டும் என்பதில் உங்களுக்கு மாற்றுக் கருத்துண்டா? இவ்வளவு பிரச்சினைகளையும் தீர்க்க வேண்டும் என்றுதானே நம்பிக்கையோடு நீங்கள் கடந்த காலங்களில் உங்களுடைய வாக்குகளை அளித்திருந்தீர்கள். அந்த நம்பிக்கையை இந்தத் தலைவர்கள் காப்பாற்றியிருக்கிறார்களா? அதற்குக் கண்ணியம் செலுத்தியிருக்கிறார்களா? இதற்கான பொறுப்பை இன்றாவது ஏற்றுக் கொள்வார்களா?

இங்கேதான் நாம் ஆழமாகச் சிந்திக்கவும் நிதானமடையவும் வேண்டியுள்ளது. நிச்சயமாகத் தெளிவடைய வேண்டியுள்ளது.

இப்பொழுது இந்தப் பிரச்சினைகள் எல்லாவற்றுக்கும் தீர்வு காண்பதற்கென்று தேசிய அரசாங்கம் ஒன்றினை அமைக்கும் முயற்சியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொள்கின்றார். இதைப்பற்றி அவர் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் ஆற்றிய அக்கிராசன உரையிலும் குறிப்பிட்டிருந்தார். உண்மையாகவே இதெல்லாம் நடந்தால் நல்லதே. எதையும் எதிர்மறையாகப் பார்க்காமல் நேர்நிலையாகப் பார்ப்பது சிறப்பே.

அப்படியென்றால் அமையவுள்ள தேசிய அரசாங்கத்தின் தன்மையைப் பற்றியும் அதன் கடப்பாடுகள், அது மேற்கொள்ளவுள்ள வேலைகள், அதற்கான கால எல்லை போன்றனவற்றையும் வெளிப்படுத்துவது நல்லது. முக்கியமாக கட்சி நலன், தனி நபர் நலன் போன்றவற்றுக்கு அப்பால் நாட்டின் தேசிய நெருக்கடிக்கு முகம் கொடுப்பதற்கு இந்த ஆட்சியில் அனைவரும் இணைய வேண்டும் என்ற ஜனாதிபதியின் அழைப்புக்கு இது அடிப்படையாகவும் அர்த்தமாகவும் அமையும்.

இனியும் எதையும் ஒழித்து மறைத்து விளையாடுவதோ, தந்திரோபாயமாகக் காலத்தைக் கடத்துவதோ, சூழ்ச்சிகரமாகக் காய்நகர்த்துவதோ சரிப்பட்டு வராது. அதிலும் மக்களை ஏமாற்றும் விதமாக தந்திரோபயங்களை மேற்கொள்வது இனிச் சாத்தியப்படாது. அந்தக் காலம் முடிந்து விட்டது. இனி எதற்குமே அவகாசமில்லை. அப்படி மக்களை ஏமாற்ற முற்பட்டால் இப்போதுள்ளதையும் விட மிக மோசமான நிலையையே நாடு சந்திக்க வேண்டியிருக்கும். நாடு மட்டுமல்ல, ஆட்சியாளரும்தான். இதற்கு அண்மைய நாட்கள் சான்று.

நாடு சுயாதீனத் தன்மையை எட்டு வேண்டும் என்றால் அது பிரச்சினைகளின் ஆழ்குழியிலிருந்து மீள வேண்டும். பொருளாதார எழுச்சியையோ வளர்ச்சியையோ எட்ட வேண்டும் என்றாலும் அதற்கு முன்னுள்ள பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். ஆகவே முதற்கட்ட வேலை என்பது நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வை எட்டுவதேயாகும். இதற்குத் துணிச்சல் வேண்டும். எளிய ஒரு உதாரணம், யுத்தம் முடிந்த பிறகு புலம்பெயர்ந்த தமிழர்களை இலங்கையில் முதலீடு செய்வதற்கு அரசாங்கம் பல தடவை அழைத்தது. ஆனால் எதிர்பார்த்த அளவுக்கு யாருமே வரவில்லை. காரணம், அரசாங்கத்தின் இனப்பாகுபாட்டுத் தன்மையில் மாற்றம் நிகழவில்லை என்பதே. இதைப் புலம்பெயர் தமிழர்கள் பல தடவை தெளிவு படுத்திய பின்பும் எந்த விதமான மாற்றத்தையும் செய்யாமல் அரசாங்கம் – ஆட்சியாளர்கள் இருந்தனர். இன்னொரு உதாரணம், வடக்கில் உள்ள பலாலி விமான நிலையத்தை இயங்க வைப்பதற்கு அரசாங்கம் தொடர்ச்சியாக இழுத்தடிப்புகளைச் செய்து வருவதாகும். பலாலி விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாகத் தரமுயர்த்தப்பட்டு சேவைகள் நடக்குமானால் சுற்றுலாப்பயணிகளின் வருகை மேலும் அதிகரித்திருக்கும். வணிக நடவடிக்கைகளும் ஓரளவுக்கு மேம்பட்டிருக்கும். இப்படிப் பல விடயங்கள் எளிதில் நிறைவேற்றக் கூடிய நிலையில் இருந்தும் அவை செயற்படுத்தப்படாமல் விடப்பட்டுள்ளன.

ஆகவே இந்த மாதிரிப் பல பிரச்சினைகளைத் தீர்த்தால் – செய்ய வேண்டிய வேலைகளை துரிதகதியில் துணிச்சலோடு செய்தால் நாட்டை விரைவாக மீட்டெடுத்து விட முடியும். இலங்கை மக்கள் எப்போதும் மாற்றங்களை விரும்புவோர். அதற்காகத் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துச் செயற்படும் பாரம்பரியத்தைக் கொண்டோர் என்பதால் இன்றைய நெருக்கடிகள், பிரச்சினைகள், சிக்கல்களிலிருந்தும் அவர்களால் இலகுவாக – விரைவில் மீண்டெழ முடியும்.

அதற்கான வாசல்களைத் திறக்க வேண்டிய கடப்பாடு அரசாங்கத்துக்கு உள்ளது. ஆட்சியாளருக்கு, ஜனாதிபதிக்குண்டு. காலம் இதற்காகக் காத்திருக்கிறது. ஆமாம், மிகப் பெறுமதியான ஒரு காலப்பணிக்காக.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

உடப்புஸ்ஸல்லாவையில் கழுத்தறுக்கப்பட்டு இளைஞர் கொலை!



வெட்டியாகத் திரிந்த இளைஞர்களே கொலைக்குக் காரணம்

கடந்த ஜூலை 30ஆம் திகதி நண்பர்கள் தினத்தை கொண்டாடுவதற்கு காத்திருந்த நிலையில் ஜூலை 29ஆம் திகதி உடப்புஸ்ஸலாவை நகரில் இடம்பெற்ற ஒரு கோர சம்பவத்தில் றப்பானொக் தோட்டத்தை சேர்ந்த 19 வயது இளைஞர் ஒருவரின் உயிர் அநியாயமாக பறிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் விஜயதாஸன் தனுஷன் என்ற இளைஞனை அவரது கூட்டாளி கத்தியால் சரமாரியாக வெட்டி படுகொலை செய்த சம்பவம் உடப்புஸ்ஸலாவை பிரதேச மக்களை மற்று மின்றி அனைவரையும் அதிர்ச்சிக்குள் ஆழ்த்தியது.

இந்த சம்பவத்தை இளங்கன்று பயமறியாது என்று எடுத்துக்கொள்வதா,அல்லது சாது மிரண்டால் காடுகொள்ளாது என்று எடுத்துக்கொள்வதா என்று ஆராயும் அளவிற்கு மக்களை யோசிக்க வைத்து விட்டது.

உடப்புஸ்ஸலாவை றப்பானொக் தோட்டத்தில் விஜயதாஸன் ஐ.விஜயலட்சுமி ஆகிய தம்பதிகளுக்கு நான்கு ஆண் பிள்ளைகள்.

இதில் திலிப் என அழைக்கப்படும் வி.தனுஷனே உயிரை பறி கொடுத்தவர். (19) வி.அரவிந்தன், வி.விஜித்ராஜ், வி.வினோத் ஆகியோர் உயிரிழந்த தனுஷின் சகோதரர்கள்.

தனுஷின் தந்தை இப்போது உயிரோடு இல்லை இவர் 2017.04.15 அன்று இடம் பெற்ற விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கத்தி வெட்டு சம்பவ தினத்தன்று உயிரிழந்த தனுஷன் அவரின் சகோதரர் விஜித்ராஜ் மற்றும் கூட்டாளியான நவீன் என அழைக்கப்படும் உதயகுமார் கிஷாந்தன் ஆகியோர் உடப்புஸ்ஸலாவை நகருக்கு வந்து பியர், மற்றும் சாராயத்தை பெற்றுக்கொண்டு றப்பானொக் தோட்ட தேயிலை மலையில் வைத்து மது அருந்தியுள்ளனர்.

அந்த சமயத்தில் கத்தி வெட்டை நிகழ்த்திய றப்பானொக் தோட்டத்தை சேர்ந்த கிஷோர் (வயது 21) மற்றும் முச்சக்கர வண்டி சாரதியான கோபி (வயது21) ஆகியோருடன் இன்னுமொருவரும் இணைந்து தனுஷன், விஜித்ராஜ், மற்றும் இவர்களின் சகாவான நவீன் ஆகியோர் மது அருந்திய இடத்திற்கு மது போத்தல்களுடன் வந்துள்ளனர். பின்னர் இவர்கள் இருந்த இடத்திலிருந்து சுமார் ஐம்பது அடி தூரத்தில் அமர்ந்து மது அருந்தத் தொடங்கியுள்ளார்கள்.

இந்த நிலையில் கத்தி வெட்டை நடத்திய கிஷோர் தனது சகாக்களுடன் போதையில் தனுஷனின் அருகில் வந்து பேச்சு கொடுத்துள்ளார்.

அந்த இடத்தில் மது அருந்திய 19 வயது தொடக்கம் 21 வயதுடைய இவர்கள் அனைவரும் ஒரே பாடசாலையில் கல்வி கற்ற கூட்டாளிகள் ஆவர்.

அதேநேரத்தில் தனுஷுக்கும், கிஷோருக்கும் ஏற்கனவே பகை இருந்துள்ளதால் இருவரும் ஒருவரை ஒருவர் முகம் பார்த்து கொள்வதில்லை.

காரணம் கிஷோர் ஒரு உறவுக்கார பெண்ணை காதலித்ததாகவும், பின் அந்த பெண்ணை விட்டு விலகிய பின் தனுஷன் அந்த பெண்ணுடன் பழகி வந்ததாகவும் இதில் சாதி பிரச்சினை ஏற்பட்டதாகவும் தெரிய வருகிறது.

இதனால் தனுஷன் மற்றும் கிஷோர்க்கு இடையில் குரோதம் ஏற்பட்டு அடிக்கடி இருவரும் சண்டையிட்டு கொண்டதாகவும் இதில் கிஷோரை தனுஷனின் சகாக்கள் அடிக்கடி சரமாரியாக தாக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



வேலை வெட்டியின்றி போதைப் பொருள், மதுவுக்கு அடிமையாகும் தோட்டப்புற இளைஞர்கள் வன்முறையில் ஈடுபடுவதைத் தடுக்க வேண்டும் என்கிறார் பொலிஸ் அதிகாரி.

கொலைச் சம்பவம் இடம்பெற்ற மூன்று நாட்களுக்கு முன் தான் கொழும்பிலிருந்து கிஷோர் விடுமுறைக்காக தனது வீட்டுக்கு வந்துள்ளார்.

அவர் வரும்போது தான் உழைத்த பணத்தில் தங்க சங்கிலி ஒன்றும் வாங்கி கழுத்தில் அணிந்திருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

கிஷோர் முதல் முறையாக கொழும்புக்கு சென்றதால் தன்னுடைய பழக்கவழக்கங்களை கொழும்பில் உள்ளவர்களை போல மாற்றிக் கொண்டு உடை, நடை, பேச்சுக்களிலும் மாற்றத்தை ஏற்படுத்தி கொண்டுள்ளார்.

இவரின் நடத்தை சண்டித்தனம் என்பதால் இது தர்ஷனுக்கு பிடித்திருக்கவில்லை என்றும் அவரின் ஏனைய சகாக்களால் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற காதல் விவகாரம் மற்றும் தொடர்ச்சியாக தனது நண்பர்கள் தன்னை தாக்கிய சம்பவங்களை போதையில் கதைக்க ஆரம்பித்த கிஷோர் மற்றும் அவரின் சகாவான கோபி ஆகியோருக்கும் தனுஷனின் சகாக்களுக்கும் இடையில் வாய் தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

அதே நேரத்தில் நடந்து முடிந்த கசப்பான சம்பவங்களால் ஆத்திரமடைந்திருந்த கிஷோர் பலி வாங்கும் திட்டத்தை மனதில் கொண்டு சந்தர்ப்பத்தை பயன் படுத்தி வாய்தர்க்கத்தில் ஈடுப்பட்டதாகவும் தெரிய வந்தது.

கத்தி வெட்டை நிகழ்த்திய கிஷோர் சாதாரண குடும்பத்தை சேர்ந்தவர்.

அதேபோலவே இந்த கத்தி வெட்டு சம்பவத்தில் ஈடுப்பட்ட ஐவரும் சாதாரணமான குடும்பத்தை சேர்ந்தவர்களே.

இவர்கள் றப்பானொக் தோட்டத்தில் வீட்டுக்கும் ஊருக்கும் அடங்காத கட்டவிழ்த்துவிடப்பட்ட காளைகள் எனவும் மது பாவணைக்கும் போதைவஸ்து பாவனைகளுக்கு சிறுவயதில் அடிமையானவர்கள் எனவும் தெரிகிறது.

இது இவ்வாறிருக்க வாய் தர்க்கத்தில் ஈடுப்பட்ட இந்த கூட்டாளிகள் பின் சமாதானமடைந்ததும் வந்து மீண்டும் உடப்புஸ்ஸலாவை நகருக்கு வந்து மதுபானம் அருந்த தயாராகியுள்ளனர்.

அப்போது மதுபானம் பெறுவதற்கு பணம் போதுமானதாக இருக்கவில்லை உடனே கிஷோர் அணிந்திருந்த தங்க சங்கிலியை அடகு வைக்க தனுஷனின் சகாக்கள்


பொறுப்பதிகாரி வசந்த

துரண்டியிருக்கிறார்கள். அப்போது இவர்களுக்கிடையில் பணத்தகறாறு ஏற்படவே, அவர்கள் கிஷோரை தாக்கியுள்ளனர்.

இந்த தாக்குதலில் கிஷோரின் தங்கச்சங்கிலி தொலைந்து போனது.

இருப்பினும் இவர்களை முச்சக்கர வண்டி சாரதியான கோபி சமாதானப்படுத்திய பின் கையிலிருந்த பணத்தில் தனுஷன் அவரின் சகோதரர் மற்றும் அவரின் சகாவான நவீன் ஆகியோர் மதுபானம் அருந்தியுள்ளனர்.

ஆனால் தனது சங்கிலியையும் இழந்து மீண்டும் தான் தாக்கப்பட்டதை மறக்காத கிஷோர் தனது நண்பரிடம் பணம் கொடுத்து தனக்கு ஒரு கத்தியை பெற்று வருமாறும் வீட்டில் கேக் வெட்ட அதைக் கொண்டு போக வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

இதை நம்பி உடப்புஸ்ஸலாவை நகரில் கோழி கடை ஒன்றின் மேல் மாடியில் கத்திகள் விற்பணை செய்யும் கடையில் நண்பர் கத்தியை பெற்று வந்து கிஷோரிடம் கொடுத்துள்ளார்.

இதை தனது இடையில் மறைத்து கொண்டு கிஷோர் நகரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொரி ஒன்றுக்கருகில் ஒளிந்திருந்துள்ளார்.

இந்த சமயத்தில் முச்சக்கர வண்டி சாரதியான கோபி தனது வண்டியில் தனுஷன்,அவரின் சகோதரர் விஜித் ராஜ் இவர்களின் சகாவான நவீன் என்ற கிஷாந்தன் மற்றும் மேலும் இரு நண்பர்களுடன் ஏழுப்பேர் ஒரே வண்டியில் றப்பானொக் தோட்டத்திற்கு பயணிக்க ஆரம்பித்த போது கிஷோரையும் கூட்டிக்கொண்டு அனைவரும் போவோம் என கோபி கூறியுள்ளார்.

இவர்களின் வருகைக்காக இடை வழியில் காத்திருந்த கிஷோர் வண்டியை மறித்துள்ளார். அப்போது கோபி சட்டென வண்டியின் ஒளியை நிறுத்த வண்டியின் உள்ளே இருந்த தனுஷனை கிஷோர் வெளியில் இழுத்தெடுத்து தான் வைத்திருந்த கத்தியால் தனுஷனின் கழுத்தை அறுத்துள்ளார்.

அப்போது இதை தடுக்க முயன்ற தனுஷனின் சகாவான நவீனையும் கிஷோர் கத்தியால் வெட்டியும் தாக்கியும் உள்ளார்.

பின் பலத்த வெட்டு காயத்துடன் இரத்த வெள்ளத்தில் வீழ்ந்த தனுஷனின் கழுத்தில் பாயும் இரத்தத்தை நிறுத்த அவரின் சகோதரர் தனது டீசேட்டை கழற்றி அவரின் கழுத்தில் கட்டுப்போட்டு கோபியின் முச்சக்கர வண்டியிலேயே டெல்மார் வைத்திய சாலைக்கு சென்றுள்ளார்.

வண்டி வேகமாக வைத்தியசாலையை நோக்கி பயணித்த போது எமஸ்ட் என்ற இடத்தில் வண்டி ஒட்டத்தை நிறுத்திய கோபி வண்டியில் ஏதோ கோளாறு; பெற்ரோல் இல்லை எனச் சொல்லி இரத்த வெள்ளத்துடன் உயிருக்கு போராடிய தனுஷனையும் அவரின் சகோதரரையும் வண்டியை விட்டு இறக்கிய பின் 'வண்டியை தள்ளு ஸ்டாட் வரும்' என தனுஷன் சகோதரரிடம் கூறியுள்ளார்.

பின் தனுஷனின் சகோதரர் தம்பியை நடு வீதியில் படுக்க வைத்து விட்டு வண்டியை தள்ளி விட கோபி வண்டியை இயக்கி கொண்டு இவர்களை நடு வீதியில் விட்டு விட்டு மீண்டும் உடப்புஸ்ஸலாவுக்கே வந்துள்ளார்.

அப்போது செய்வதறியாது தவித்திருந்த தனுஷனின் சகோதரர் வண்டி ஒன்றுக்காக காத்திருந்த நிலையில் இராகலை பகுதியிலிருந்து ஆடை தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றி வந்த பஸ் வந்துள்ளது.

உடனே பஸ் நிறுத்தப்பட்ட நிலையில் அதில் வந்தவர்கள் நிலையை அறிந்து கூச்சலிடவே, எமஸ்ட் மக்கள் அவ்விடத்திற்கு வந்து தனுஷனின் சகோதரர் தான் கத்தியால வெட்டியிருப்பார் எனத் தவறாக புரிந்து கொண்டு அவரை தாக்கியும் உள்ளனர்.

பின் நடந்ததைக் கூற, 1990 அம் புலன்ஸ்க்கு அறிவித்துள்ளனர். உடனடியாக வந்த அம்புலன்ஸ் வண்டியில் உயிருக்கு போராடிய தனது சகோதரனை ஏற்றிக்கொண்டு அருகில் உள்ள டெல்மார் பிரதேச வைத்தியசாலைக்கு வந்த போதிலும் தனுஷனின் மரணத்தைத் தடுக்க முடியவில்லை.

அதேநேரத்தில் வெட்டு காயங்களுக்கு இலக்கான அடுத்த இளைஞர் நவீனையும் அம்புலன்ஸ் வண்டி ஒன்றில் அதே வைத்திய சாலைக்கு கொண்டு வந்து சேர்ந்த பின் மேலதிக சிகிச்சைக்காக நவீன் நுவரெலியா மாவட்ட வைத்திய சாலைக்கு மாற்றம் செய்யப்பட்டு அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப் பட்டுள்ளது.

அதேநேரத்தில் கத்தியால் வெட்டிய கிஷோர் கத்தியுடன் உடப்புஸ்ஸலாவை பொலிஸ் நிலையத்திற்கு சென்று சரணடைந்தார்.

அத்துடன் சம்பவம் தொடர்பில் உடப்புஸ்ஸலாவை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் எ.டி.வசந்த துரிதமாக செயல்பட்டு முச்சக்கர வண்டிச் சாரதியான கோபியையும் கைது செய்தார்.

அத்துடன் இந்த சம்பவம் குறித்து விசாரணைகளை முன்னெடுத்திருந்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எ.டி.வந்தவிடம் வினவிய போது, அதிகளவு மது அருந்திய நிலையில் நண்பர்களுக்கிடையில் இடம்பெற்ற காதல் விவகாரம்,வாய் தர்க்கம்,மோதல் சம்பவம் கத்தி வெட்டு இறுதியில் கொலையில் முடிந்துள்ளது எனத் தெரிவித்தார்.

உடப்புஸ்ஸலாவை பிரதேசத்தில் சட்ட விரோத போதை பொருட்கள் ஒழிக்கப்பட்டுள்ளதாகவும் சிலர் வீட்டுகளில் பணத்தை களவாடி வெளியிடங்களில் போதை பாவனையில் ஈடுபடுவதாகவும் இப்படி போதைக்கு அடிமையாகி வரும் இளைஞர்கள் தமது பெற்றோரையும் தாக்குவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

"இதைத் தடுக்க நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். தோட்டப்புற குதிகளில் வெறுமனே பொழுதை வெட்டியாக போக்கும் இளைஞர் கூட்டமே இத் துயர சம்பவத்துக்கு காரணம்.

இதன் பின்னணியில் ஒரு கொலைக்கான எந்த வலுவான காரணமும் இல்லை.

உடப்புஸ்ஸலாவை தோட்டங்களில் வேலை வெட்டியற்ற இளைஞர்களை தொழிநுட்ப பயிற்சி நிலையங்களில் இணைத்து தொழில் பயிற்சிகளை வழங்க அரசியல் தலைமைகள் முன் வருவது அவசியம். பொலிசாரும் இணைந்து செயற்பட தயார்" என்கிறார் இப் பொலிஸ் அதிகாரி.

மலையக அரசியல் தலைமைகள் கவனம் செலுத்த வேண்டிய விஷயம் இது!





ஆறுமுகம் ரமேஷ்...✍

கனடாவில் தமிழ் ஒலிபரப்பு துறையை உருவாக்கிய நடா ராஜ்குமார்

அறிவிப்பாளர் பி. எச். அப்துல் ஹமீது புகழாரம்

தமிழோசை சினி மீடியா கலை நிகழ்ச்சிகளுக்காகவும் தான் எழுதிய " வானலைகளில் ஒரு வழிப்போக்கன் " என்ற நூலை வெளியீடு செய்யவும் ரொறன்ரோ மாநகர் வந்துள்ள , அறிவிப்பாளர் பி. எச் அப்துல் ஹமீது ஆகஸ்ட் 9 ம் திகதி செவ்வாய்க்கிழமை நடா ராஜ் குமாரின் EAST FM இன் புதிய கலையகத்துக்கு விஜயம் செய்து கலையகத்தைப் பார்வையிட்டதுடன் தனது ஆசியையும் , வாழ்த்துக்களையும் வழங்கினார்

அங்கு நடைபெற்ற கலந்துரையாடலில் அவர், தனது அன்புக்கும் மரியாதைக்கும் உரிய நடா இராஜ் குமார் கனடாவில் ஒரு ஒலிபரப்புச் சாம்ராஜ்யத்தை உருவாக்கி வைத்துள்ளார் என்றும், அவரின் இந்த இமாலய வளர்ச்சி கண்டு தான் பெருமகிழ்ச்சி கொள்வதாகவும் தெரிவித்தார் .

இந்த வியத்தகு வளர்ச்சி தனக்குப் பெருமை தருவதாவும் அவர் அங்கு கூறினார். அவரது இந்த புகழாரம் சூட்டும் வார்த்தைகளை அங்கு கூடியிருந்த அனைத்து வானொலிக் கலைஞர்களும் கரகோசம் செய்து வரவேற்றனர். பி. எச் அப்துல் ஹமீதுடன் ஐரோப்பிய அறிவிப்பாளர் எஸ். கே. ராஜனும் கலையகம் சென்றிருந்தார்.


அவரும் தனது வாழ்த்துக்களை பெரு மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொண்டார்.

உலகத்தமிழ் ஒலிபரப்பாளர் பி. எச் அப்துல் ஹமீதின் நூல் வெளியீட்டு விழா ஆகஸ்ட் 12 ம் திகதி வெள்ளிக்கிழமை 8100 Steeles Ave East , MARKHAM MEADOW திறந்த வெளி அரங்கில் நடைபெற வுள்ளதுடன் இந்த வாரம் வெள்ளி , சனி , ஞாயிறு 3 தினங்களும் கலை நிகழ்ச்சிகள் , வர்த்தக சாவடிகள் என இந்த விழா கோலாகலமாக நடைபெற உள்ளது.

இதில் கலந்து கொள்வதற்காக இலங்கை, இந்திய, ஐரோப்பிய கலைஞர்கள் இங்கு வருகை தந்திருப்பதுடன் கனடிய உள்ளூர் கலைஞர்களும் இணைந்து சிறப்பிக்க உள்ளனர், 3 தினங்களும் அனுமதி இலவசம் என்பது குறிப்பிடத்தக்கது.



2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



மின்சார அதிர்ச்சியில் மக்கள்!

வினைத்திறனின்மையின் பாதிப்புகளை மக்கள் மேல் சுமத்தலாமா?



எரிபொருள் மற்றும் எரிவாயு அதிர்ச்சி. உணவுப்பொருள் அதிர்ச்சி. மருந்துப் பொருள் அதிர்ச்சி என இலங்கைக் குடிமக்கள் ஏக காலத்தில் ஏராளமான அதிர்ச்சிகள்! அடுத்தடுத்து அதிர்ச்சிகளை அனுபவித்து அதிர்ந்து போய் நிற்கும் நிலையில், நீண்டகாலமாக வருது வருது என எதிர்பார்க்கப்பட்ட மின் அதிர்ச்சி கடந்த பத்தாம் திகதி இலங்கை பொதுமக்களுக்கு தாராள மனதுடன் தரப்பட்டது. அதிலும் குறிப்பாக இதுவரை காலமும் மிகக் குறைந்தளவு மின்சாரப் பாவனையாளருக்கு வழங்கப்பட்டு வந்த சலுகை விலையில் ஒரு வெட்டு விழுந்து மிகப்பெரிய ஒரு அடி கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாதாந்தம் 30 அலகுகளுக்குக் குறைவான மின்நுகர்வைச் செய்யும் பாவனையாளர்களின் நிரந்தர மின் கட்டணம் 30 ரூபாவிலிருந்து 120 ரூபாவாகவும் மின்நுகர்வு அலகொன்றிற்கான கட்டணம் 2 ரூபா 50 சதத்திலிருந்து 8.00 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இது 264 சதவீத அதிகரிப்பாகும். உண்மையில் இவர்களே சமூகத்தின் மிக வறிய மக்களாக இருப்பார்கள்.

இந்த கட்டண அதிகரிப்பை இவர்களால் தாங்க முடியுமா என்ற கேள்வியை கேட்டால் இன்றைய நிலையில் 120 ரூபாவோ 8 ரூபாவோ பெரிய காசில்லைத்தானே என்கிறார்கள். அதேபோல 31-60 அலகு பாவனையாளர்களுக்கு நிரந்தரக் கட்டணம் 60 ரூபாவிலிருந்து 240 ரூபாவாகவும் அலகொன்றிற்கான கட்டணம் 4 ரூபா 85 சதத்திலிருந்து 10 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. இது 211 சதவீத அதிகரிப்பாகும். அதற்கடுத்த கட்டத்தில் 61 அலகு தொடக்கம் 90 அலகுப் பாவனையாளருக்கு நிரந்தரக்கட்டணம் 90 ரூபாவிலிருந்து 360 ரூபாவாகவும் அலகொன்றிற்கான கட்டணம் 10 ரூபாவிலிருந்து 16 ரூபாவாகவும் 125 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு குறைந்த அலகுப் பாவனையாளரின் மின் கட்டணங்கள் மிகப் பெரிய சதவீதங்களால் அதிகரிக்கப்பட்டுள்ளன. மொத்த மின் நுகர்வாளர்களில் 75 சதவீதத்தினர் இந்தப் பிரிவினராகவே உள்ளதாகக் கூறப்படுகிறது. எனவே இம் மின் கட்டண அதிகரிப்பு குறைந்த மின் நுகர்வோருக்கு மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். ஆனால் இந்தக் கட்டண அதிகரிப்பும் உற்பத்திச் செலவை ஈடுசெய்யப் போதாது என்கிறது மின்சார சபை.

இப்போது ஓரலகு மின்சாரத்தை உற்பத்தி செய்ய 32 ரூபா ஆவதாகவும் இந்த கட்டண அதிகரிப்பின் பின்னர் 30 அலகுகளுக்கு குறைந்த பாவனையாளர்களுக்கு மொத்தச் செலவின் 25 சதவீதம் மாத்திரமே கட்டணமாக அறவிடப்படுவதாகவும் 75 சதவீதம் மானியம் வழங்கப்படுவதாகவும் அது கூறுகிறது. அத்துடன் 31-60 அலகு பாவனையாளர்களுக்கு 60 சதவீத மானியமும் 61-90 அலகு பாவனையாளருக்கு 50 சதவீத மானியமும் வழங்கப்படுவதாகக் கூறுகிறது.

எனவே மின் பாவனையாளர்களில் 75 சதவீதமானோர் அரச மானியங்களைப் பெறுவதாகவும் கூறி மின் கட்டண அதிகரிப்பு நியாயப்படுத்தப்படுகிறது. அத்துடன் மிக நீண்டகாலமாக கட்டணத்திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் நியாயம் கற்பிக்கப்படுகிறது. அது மட்டுமன்றி 91 அலகுகளுக்கு மேல் நுகர்வோரின் கட்டணங்களும் அலகொன்றுக்கு 45 ரூபாவிலிருந்து 75 ரூபாவாகவும் நிரந்தரக்கட்டணம் 540 ரூபாவிலிருந்து 1500 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அதிக அலகுகளை நுகர்கிறார்கள் என அரசு கருதும் மக்களிடமிருந்து இருமடங்கு கட்டணத்தை உறிஞ்சிக் கொள்கிறார்கள். ஒட்டு மொத்தமாகப் பார்க்குமிடத்து மின் கட்டணங்கள் சராசரியாக 75 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது. ஏற்கெனவே எரிபொருள் விலை அதிகரிப்பு, எரிவாயு விலை அதிகரிப்பு, மூலப்பொருள் விலை அதிகரிப்பு என பல்வேறு காரணங்களைக் காட்டி பொருட்கள் மற்றும் சேவைகளின் நியாயமற்ற விதத்தில் பலமடங்கு இலாபம் பார்த்தவர்கள் இப்போது மின்சார விலையதிகரிப்பையும் காரணம் காட்டி விலைகளை மேலும் அதிகரித்த இலாபம் பார்ப்பர்.

மின் பாவனை அலகுகள்	நிரந்தர கட்டணம் பழையது	நிரந்தர கட்டணம் புதியது	அலகுக்கான கட்டணம் பழையது	அலகுக்கான கட்டணம் புதியது
0-30	30.00	120.00	2.50	8.00
31-60	60.00	240.00	4.85	10.00
61-90	90.00	360.00	10.00	16.00
91-120	480.00	960.00	27.75	50.00
121-180	480.00	960.00	32.00	50.00
180 ற்கு மேல்	540.00	1500.00	45.00	75.00

கைத்தொழில் தேவைகளின் பொருட்டு விநியோகிக்கப்படும் மின்சாரம் மானிய விலையிலேயே வழங்கப்படுகிறது என்பதையும் கவனிக்க வேண்டும். இந்தக் கட்டண அதிகரிப்பின் பின்னரும் மின்சார சபை நட்டத்திலேயே இயங்கும். ஏனெனில் அது நட்டத்தில் இயங்க அதன் வாடிக்கையாளர்கள் காரணமல்ல. மின்சாரத்தை உற்பத்தி செய்யும் செலவுகளும் விநியோகிக்கும் செலவுகளும் குறிப்பாக அதன் நிர்வாக செலவுகளும் மிக உயர்ந்த மட்டத்தில் உள்ளன. அங்கு வினைத்திறனின்மையும் நிருவாக சீர்கேடுகளும் மலிந்து காணப்படுவதாக கோப் குழுவின் விசாரணைகளின்போது அம் பலத்திற்கு வந்துள்ளன. அது தொடர்பான காணொளிகளை இணையத்திலே எவரும் பார்வையிட முடியும்.

இலங்கையிலே நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களின் உயர்மட்ட அதிகாரிகள் தொடக்கம் கடைநிலை ஊழியர்கள் வரை போனஸ் கொடுப்பனவுகளை பெறுவதும் தெரியவந்துள்ளது. அது மட்டுமன்றி மின்மாணி வாசிப்பாளர்கள் வாசிப்பதற்கு ஒரு கொடுப்பனவும் சரியாக வாசிப்பதற்கு இன்னொரு கொடுப்பனவும் சரியாகப் பதிவு செய்வதற்கு மற்றொரு கொடுப்பனவும் பெறுவதாக கோப் குழுவில் தெரிவிக்கப்பட்டது.

மின் உற்பத்திக்கான பல்வேறு மூலங்களிலும் ஊழல்கள் இடம் பெறுவதாக கண்டறியப்பட்டது. இவை வெளியில் இருந்து எழும் குற்றச்சாட்டுகள் அல்ல. அரச நிறுவனங்களின் நடவடிக்கைகளை ஆராய அரசாங்கத்தாலேயே நியமிக்கப்பட்ட பாராளுமன்ற அங்கத்தவர்களைக் கொண்ட கோப் குழுவின் முன் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களாகும்.

மின்சார சபை எந்திரிகளும் அதன் தொழிற் சங்கங்களும் பலம் வாய்ந்ததாக இருப்பதால் இத்துறையில் மீள் சீர்திருத்தங்களை ஏற்படுத்துவது கடினமாக இருப்பதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

அத்துடன் அரசதுறை நிறுவனங்கள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களின் மின் சாரப் பட்டியல்கள் கட்டணங்கள் முறையாகச் செலுத்தப்படாமையும் நட்டங்கள் அதிகரிக்கக் காரணமாகும். மின்னுற்பத்திக்கான மாற்று மூலாதாரங்களைக் கண்டறிவதும் ஊக்குவிப்பதும் அவசியமாகும்.

இலங்கையில் சூரியவலு மின்னுற்பத்தியை மேற்கொள்வது கடினமான விடய மல்ல. ஆனால் ஒரு சராசரி மத்திய வகுப்பு குடும்பத்திற்கு தேவைப்படும் 3.5 KW வலுக்கொண்ட சூரிய கலத்தொகுதியை அமைப்பதற்கு பத்து இலட்சம் ரூவாவுக்கு மேல் செலவாகும். இதனை சாதாரண குடும்பங்கள் ஈடுசெய்வது கடினம். வங்கிக் கடன்கள் கூட அது தொடர்பில் கவர்ச்சிகரமானதாக இல்லை.

நகர்ப்புறங்களில் அடுக்குமாடித் தொடர் குடியிருப்புகளில் வாழ்பவர்கள் இம் மின் கட்டண அதிகரிப்பால் மோசமாகப் பாதிக்கப்படுவார்கள். அங்கெல்லாம் மின்சார மின்றி வாழ்க்கை நடத்த முடியாது. மரமேறிவிழுந்தவனை மாடேறி மிதித்தது போல மின்சார அதிர்ச்சியும் வந்து விழுந்திருக்கிறது. இதையும் இவர்கள் தாங்குவார்கள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை அரசாங்கத்திற்கு.





பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

சீனா – தைவான் போர் நடக்குமானால் அதை எப்படி அமெரிக்கா எதிர்கொள்ளும்?



சீனாவின் புவிசார் அரசியலுக்குள் அமைந்துள்ள தைவான் மீதான முற்றுகைப் போரை சீனா தொடக்கியுள்ளது. அது ஏறக்குறைய போருக்கான முன்னகர்வாகவே தெரிகிறது. அமெரிக்காவின் கடந்த கால அணுகுமுறைகளை மாற்றிக் கொண்டுள்ளதாக தெரிந்தாலும் தைவானுடன் ஒரு போரை நிகழ்த்த சீனா முனைவது உலகளாவிய அதிகாரப் போட்டிக்குள் அதன் பின்னடைவாகவே மாற்றலாம் என்ற எதிர்பார்க்கையுடன் அமெரிக்கா நகர்கிறது. அதற்கு வலுவான ஒரு காரணத்தை அமெரிக்காவின் இந்தோ, பசுபிக் கொமாண்டர் அட்மிரல் பீல் டெவிட்சன் 2027 சீனா தைவானை முழுமையாக ஆக்கிரமித்துவிடும் என்று அண்மையில் குறிப்பிட்டிருந்தார். அதிலும் ரஷ்யா உக்ரைனை ஆக்கிரமிக்க ஆரம்பித்ததன் பின்னர் சீனா அத்தகைய நடவடிக்கையை முழுமையாகத் திட்டமிட்டுள்ளதாக பென்டகன் தெரிவித்துள்ளது. அமெரிக்கா, தைவான் மீதான சீனாவின் போரை வெற்றி கொள்ள திட்டமிடுவதாகவும் அதனை சாத்தியப்படுத்த முடியும் எனவும் அமெரிக்க இராணுவ கட்டமைப்புக்களும் இந்தோ, பசுபிக் பிரிவும் உறுதியாக கருத்துத் தெரிவித்துவருகின்றன. இக்கட்டுரையும் இப்போரில் அமெரிக்காவின் வாய்ப்புக்களையும் தைவானின் நிலையையும் தேடுவதாக அமையவுள்ளது.

முதலில் அமெரிக்கா இப்போரில் வெற்றி கொள்ள முடியும் எனக் கருதுவதற்கான காரணங்களை தேடுவது அவசியமானது. குறிப்பாக பென்டகனும், அமெரிக்க இராணுவ வல்லுனர்களும், இந்தோ, பசுபிக் அமெரிக்கப் படைப் பிரிவும் தைவான் மீதான சீனாவின் போரை வெற்றி கொள்ள இராணுவ ரீதியான காரணங்களை முன்வைக்கின்றன. அதாவது கடல்படை வலுவில் பலமான நாடாக அமெரிக்கா காணப்படுகிறது. அது மட்டுமன்றி தனது கடற்படையில் வலுவான அணுவாயுதத்தைக் காவிச் செல்லும் ஏவுகணைகளை கொண்டுள்ள நாடாக அமெரிக்கா சீனாவை விட வலுவாக உள்ளது. அதனால் போரை வெற்றி கொள்வது சாத்தியமானதாக அமையும் என அமெரிக்க தரப்பு குறிப்பிடுகிறது. அதேநேரம் சீனா அச்சுறுத்துவதை மட்டுமே கொண்ட நாடு எனவும் அது தொடர்ச்சியாக அச்சுறுத்துவதிலேயே கவனம் கொள்கிறது எனவும் அமெரிக்கத் தரப்பு விவாதிக்க முயலுகிறது.

அவ்வாறே அமெரிக்காவுக்கும் தைவானுக்குமான பாதுகாப்பு ஒத்துழைப்பு வலுவானதாகவும் பலமானதாகவும் அமைந்துள்ளதுடன் ஆசியாவில் அமெரிக்காவுக்கான அங்கீகாரத்தை அதிகரிக்கவும் பாதுகாக்கவும் உதவும் என அமெரிக்கத் தரப்பு விவாதிக்கிறது. இரு நாட்டுக்குமான பாதுகாப்பு ஒத்துழைப்பு வலுவானதாக அமைந்துள்ளதாகவும் அதன் மூலம் அமெரிக்காவின் இராணுவ வலிமையை தைவான் பிரயோகிக்க முடியும் எனவும் அமெரிக்கத் தரப்பு கருதுகிறது. அதுமட்டுமன்றி சீனா இதுவரை எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளதே அன்றி தாக்குதல் திறனோ வலுவோ இல்லாத நிலையே காணப்படுவதாகக் குறிப்பிடுகிறது. இக்கருத்துக்கு ஆதரவாக அமெரிக்க சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஹத்லீன் கிக்ஸ் மற்றும் பிரதி பாதுகாப்புச் செயலாளர் மற்றும் ஜெனரல் மார்க் மல்லி ஆகியோர் ஆதரவாக கருத்துக் கொண்டுள்ளதுடன் இது சீனாவை நெருக்கடிக்குள்ளாக்குவதற்கான சிறந்த நிலைப்பாடு எனவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் சீனாவின் பொருளாதார வீழ்ச்சி வலுவான காரணமாக அமெரிக்கத் தரப்பு கருதுகிறது. இதனால் சீனா தனது இராணுவத்திற்கான நிதி ஒதுக்கத்தை அதிகரிக்க முடியாது எனவும் தற்போது ஆண்டுக்கு ஆண்டு 610 சதவீத அதிகரிப்பை மேற்கொண்டு வருகிறது எனவும் இனிவரும் ஆண்டுகளில் அத்தகைய நகர்வுகளை சீனா மேற்கொள்ள முடியாது எனவும் அமெரிக்கத் தரப்பு வாதிடுகிறது. இது நாசி ஜேர்மனி, முன்னாள் சோவியத் யூனியன் மற்றும் ஏகாதிபத்திய ஜப்பான் போன்ற நிலையை அடையும் எனவும் அத்தரப்பு கருதுகிறது. அமெரிக்காவுடன் ஒப்பிடும் போது சீனா மிகக் குறைந்தளவு பாதுகாப்புச் செலவீனத்தை கொண்டுள்ளதுடன் இந்தோ, பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்காவுடன் ஒப்பிடும் போது மூன்றாவது நிலையிலேயே சீனாவின் பாதுகாப்புச் செலவீனமும் முக்கியத்துவமும் காணப்படுகிறது என்று குறிப்பிடப்படுகிறது. முடிந்த ஆண்டில் மட்டும் இந்தோ,பசுபிக் பிராந்திய இராணுவ கடற்படைப் பிரிவுக்கு 1.5 பில்லியன் நிதியை கணக்கிட முடியாத ஒதுக்கமாக மேற்கொண்டுள்ளது.

நடப்பாண்டின் (2022) மே மாதத்தில் அமெரிக்க இராணுவ உபாயத்தை இப்பிராந்தியத்தில் ஆரம்பித்துள்ளது எனவும் குறிப்பாக கப்பல் கட்டுமானத்தையும் கடற்படைத் தாக்குதலுக்கான ஒத்திகைகளையும் நிறைவு செய்துள்ளதாக அமெரிக்காவின் கடற்படைத் தாக்குதல் தளபதியான மைக்கல் டை குறிப்பிட்டுள்ளார். அதாவது நீர்மூழ்கிகள், கப்பலைத் தாக்கி அழிக்கும் ஏவுகணைகள் மற்றும் பாரிய சுடுகலன்களுடனான பயிற்சியும் தாக்குதல் உத்தியும் கட்டமைக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடுகின்றார். அதேநேரம் விமானத் தாக்குதலை எதிர்கொள்ளும் விதத்திலும் அனைத்து தாக்குதல் உத்திகளும் ஆயுததள பாடங்களும் தயார் நிலையில் உள்ளதாக அமெரிக்கத் தரப்பு கூறுகிறது. இதற்காகவே தனியாக படைப்பிரிவென்றை ஆரம்பித்துள்ளதாகவும் அதற்கான முழுமையான பயிற்சிகள் பூர்த்தியாகும் நிலையில் உள்ளதாகவும் அதன் படைப்பிரிவு 2030 இல் ஏனைய பிராந்தியங்களிலும் செயல்பட ஆரம்பிக்கும் எனவும் தெரியவருகிறது. இவற்றைவிட புலனாய்வுத் தகவல்களும் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளது வழிகாட்டல்களும் தைவான் மீதான சீனாவின் நடவடிக்கையை கையாள அமெரிக்கத் தரப்பு தயாராகியுள்ளதைக் காண முடிகிறது.

ஆனால் சீனாவின் புவிசார் அரசியலை அமெரிக்கத் தரப்பு அதிகம் கண்டு கொள்ளாத போக்கினை அவதானிக்க முடிகிறது. குறிப்பாக தைவான் நீரிணையால் பிரிக்கப்பட்டுள்ள இரு நாடுகளும் ஏறக்குறை 100 மைல் இடைவெளியைக் மட்டுமே கொண்டுள்ளது என்பது கவனத்திற்குரியதாகும். அமெரிக்காவிலிருந்து தைவான் 7600 மைல் தொலைவில் காணப்பட்டாலும் அமெரிக்காவின் கடற்படை அமைந்துள்ள குவாம் தீவிலிருந்து தைவான் 1700 மைல் தொலைவில் உள்ளதென்பதையும் கருத்தில் கொள்வது அவசியமானது. எனவே புவிசார் அரசியலாகவும் சீனாவின் செல்வாக்குப் பிரதேசமாகவும் இப்பகுதி அமைந்திருப்பதனால் அமெரிக்கர்கள் விவாதிப்பது போன்று இலகுவில் தைவான் மீதான சீனப் போரை முறியடிக்க முடியுமென கணக்குப் போட்டுவிட முடியாது. அது மட்டுமன்றி சீனாவின் இராணுவ வலுவுடன் ஒப்பிடும் போது தைவான் பலவீனமாகக் காணப்பட்டாலும் அமெரிக்க இராணுவ பலத்துடனே அமெரிக்க தரப்பின் விவாதம் காணப்படுகிறது.

சீனாவின் இராணுவ வலுவானது 142 க்கு 3 எனவும் தைவான் 142 க்கு 21 எனும் நிலையிலேயே காணப்படுகிறது. படைப்பலத்தில் சீனா ஐந்தாவது இடத்திலும் தைவான் 42வது இடத்திலும் காணப்படுகிறது. அதாவது சீனா படையில் 600 மில்லியன் காணப்படும் போது தைவான் 1 மில்லியன் படையினரைக் கொண்டுள்ளது. சீனாவின் இராணுவச் செலவானது 230 பில்லியனாக காணப்படும் போது தைவான் 16.8 பில்லியன் இராணுவச் செலவுக்கு ஒதுக்கியுள்ளமை பொருளாதார ரீதியில் சீனாவுக்கு ஒரு பாதிப்பை ஏற்படுத்தலாம் எனக்கருதும் அமெரிக்க விவாதம் சாத்தியமற்றதாக அமைவது மட்டுமல்ல ரஷ்யாவை எதிர்பார்த்தது போல் ஆகிவிட வாய்ப்புள்ளது. ஐரோப்பியப் பொருளாதார நெருக்கடியானது ரஷ்யா மீதான பொருளாதாரத் தடையினால் ஏற்பட்டதென்பதை புரிந்து கொள்ளுதல் வேண்டும். சீனாவை தோற்கடிப்பதற்கு முன்பு தைவானைப் பாதுகாப்பதுடன் அமெரிக்க பொருளாதாரத்தை நிலை நிறுத்துவதே பிரதான தேவையாக எழுந்துள்ளது. தைவானை போருக்காக தூண்டும் அமெரிக்கா உக்ரைன் நிலைக்கு தைவானை கொண்டு செல்வதுடன் சீனாவை நெருக்கடிக்கு உள்ளாக்க திட்டமிடுகிறது. ஆனால் சீனா இலங்கைத் தீவை நோக்கி நகர்த்தியிருக்கும் அதிதொழில்நுட்பம் பொருந்திய கப்பலானது அமெரிக்காவின் இந்தோ, பசுபிக் உபாயத்தை குழப்புவதுடன் தைவான் மீதான போரை முழுமைப்படுத்த முயலுவதைக் காட்டுவதாக தெரிகிறது. மேற்கு, கிழக்கு அரசியலுக்குள் அகப்பட்டு இரு தீவு நாடுகளும் அதீத அபாயமான நிலையை எதிர்கொள்ள ஆரம்பித்துள்ளன. இதில் இலங்கைத் தீவு வெற்றிகரமாக பிழைத்துக் கொண்டாலும் தைவான் தவிர்க்க முடியாது பாரிய அழிவை எதிர்கொள்ள வாய்ப்புள்ளதாகவே தெரிகிறது. காரணம் சீனாவின் முற்றுகைப் போர் பயிற்சியும் தைவானின் எதிர்ப்புணர்வும் அமெரிக்க நலனுக்காக தைவானியர் பலியிடப்படப் போகின்ற செய்தியை வெளிக்காட்டுவதாகவே தெரிகின்றது.

எனவே தைவான் சீனாவுடன் மோதுவதென்பதை இராணுவ பலத்துடன் ஒப்பிடும் போது சாத்தியமற்றதாகவே தெரிகிறது. ஆனால் போர் என்பது இராணுவ பலம் மற்றும் உத்திகள் என்ற அடிப்படையில் மட்டுமன்றி கூட்டுக்களும் அவற்றின் பலமும் கூட்டுப்பாதுகாப்பின் உத்திகளும் பிரதான தீர்மான சக்தியாக அமைந்து விடுவதைக் காணமுடிகிறது. அமெரிக்காவின் உலகளாவிய போர்கள் அனைத்துமே கூட்டுப் பலத்திலேயே அமைந்திருந்தது. இரண்டாம் உலக போருக்குப் பின்பான அமெரிக்க உத்திகள் அனைத்தும் கூட்டுப்பாதுகாப்பிலேயே தங்கியிருந்தது. நேட்டோ அதன் பிரதான வலுவான அணியாக அமைந்திருந்தது. ஆனால் தைவான் நேட்டோவில் மட்டுமன்றி ஜரோப்பிய பாதுகாப்பு நிலையிலும் இல்லாத ஆசிய நாடு என்ற அடிப்படையில் தைவான் சீன போரை புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

எனவே அமெரிக்காவின் உத்திகள் அதிகம் இப்போரை தூண்டுவதாக அமைந்துள்ளது என்பதை கடந்த வாரம் அவதானித்திருந்தோம். அதற்கான காரணத்ததையும் போரை வெற்றி கொள்வது பற்றியும் அமெரிக்கா வகுத்திருக்கும் திட்டம் எதுவென்பதையும் கவனத்தில் கொண்டுள்ளோம். ஆனால் சீனாவின் புவிசார் அரசியலையும் சீனாவின் கம்யூனிஸ சர்வாதிகாரத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். நீண்ட காலத்திற்கு இப் போரை நகர்த்துவதன் மூலம் மாற்று மூலாதாரங்களைக் கண்டறிவதும் ஊக்குவிப்பதும் அவசியமாகும்.

இலங்கையில் சூரியவலு மின்னுற்பத்தியை மேற்கொள்வது கடினமான விடய மல்ல. ஆனால் ஒரு சராசரி மத்திய வகுப்பு குடும்பத்திற்கு தேவைப்படும் 3.5 KW வலுக்கொண்ட சூரிய கலத்தொகுதியை அமைப்பதற்கு பத்து இலட்சம் ரூவாவுக்கு மேல் செலவாகும். இதனை சாதாரண குடும்பங்கள் ஈடுசெய்வது கடினம். வங்கிக் கடன்கள் கூட அது தொடர்பில் கவர்ச்சிகரமானதாக இல்லை.

நகர்ப்புறங்களில் அடுக்குமாடித் தொடர் குடியிருப்புகளில் வாழ்பவர்கள் இம் மின் கட்டண அதிகரிப்பால் மோசமாகப் பாதிக்கப்படுவார்கள். அங்கெல்லாம் மின்சார மின்றி வாழ்க்கை நடத்த முடியாது. மரமேறிவிழுந்தவனை மாடேறி மிதித்தது போல மின்சார அதிர்ச்சியும் வந்து விழுந்திருக்கிறது. இதையும் இவர்கள் தாங்குவார்கள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை அரசாங்கத்திற்கு.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

வாழ்வாதாரமா சேதாரமா 235



தமிழ்க் சுவி பேசுகின்றார்

உழைப்பை நம்புவதைவிட ராசி பலன்களை நம்புகிறோம்



வானொலியை காலையில் கேட்டாலும், தொலைக் காட்சிப் பெட்டியை காலையில் திறந்தாலும், எம்மில் பலர் முக்கியமாக அறிய விரும்புவது செய்திகளுக்கும் முன்னதாக அன்றைய ராசி பலன்களைத்தான். இது என் சின்ன வயதிலிருந்து நான் அவதானித்து வந்ததாலோ என்னவோ எனக்கும் அந்தப் பழக்கம் ஒட்டிக் கொண்டுள்ளது.

கொஞ்சம்கூட சாதி மத இன மொழி வேறு பாடின்றி சகலரையும் பிடித்து ஆட்டுகின்ற ஒரு (கெட்ட அல்லது நல்ல) பழக்கம் இது. இதே போல இன்றைய மனிதர்களைப் பிடித்தாட்டுகிற இன்னுமொரு பழக்கம் என்ன செய்வதாயினும் ஐயா(ரை)வைக் கேட்பது. அவர்களும் தமக்கொரு பெருமையாக அதைக்கருதிக் கொண்டு ஒவ்வொருவருக்கும் சந்தர்ப்பத்துக்கு தக்க வகையில் ஆலோசனைகளை சொல்வதில் சகுனி நாரதர், சகாதேவன் போன்ற புராண இதிகாச பாத்திரங்களையும் மிஞ்சி நடந்து கொள்கின்றனர். அண்மைக் காலங்களில் பெரும் பெரும் அரசியல் களங்களையே மாற்றிவிட்ட சோதிடர்களைப்பற்றி கேள்விப்பட்டோம் இதெல்லாம் நடக்குமா என்கிற அளவுக்கு அச்சம் தேவையில்லை. இதுவும் எம்மைப்பிடித்தாட்டும் ஒரு பழக்கம்தான் என நான் இலகுவாக இதை முடிக்க முடியாது.

எங்கள் அயலில் ஒரு குடும்பம் வசிக்கிறது. அவர்கள் வீட்டில் என்ன காரியம் செய்வதாயினும் அந்தப்பகுதி கோவில் ஐயரைக் கேட்டுத்தான் செய்கிறார்கள். வீடு கட்டுவதிலிருந்து பயணம் செல்வதுவரை. அவர்களுக்கும் நிறையப் பிரச்சினைகள் வரும். வரும்போது அவற்றை கிரகம் பகை என்ற சொல்லை வைத்து நிரவிவிடுகிறார் அந்த மேதை ஐயா.

கடவுள் நம்பிக்கை என்பது மனிதர்களுக்கு முக்கியம்தான். அதோடு ஓட்டியதாக ஏற்படுத்தப்படும் மூட நம்பிக்கைகள் மிக அதிகம். முன்னோர் எல்லாம் மூடர்கள் அல்ல என்பது நிச்சயமான உண்மைதான். அதற்காக முன்னோர் அனைவரும் புத்திசாலிகள் இல்லை என்பதும், அந்த வாக்கினிலேயே தொக்கி நிற்கிறது. குழந்தை பிறக்கும் நேரமே அந்தக்குழந்தையின் விதியை தீர்மானிக்கிறது. என்ற நிலை போய் எந்த நேரம் நல்ல நேரமோ அந்த நேரத்தில் குழந்தையை தாயின் வயிற்றைக் கிழித்து வெளியே கொண்டுவரும் காலம் வந்திருக்கிறது. நாங்கள் இயற்கைவழியே செல்லும் ஆற்றையும் நிலத்தையும் நிலைமாற்றினோம். இன்னும் கடலையும் வானத்தையும் மாற்றவும் முயன்று கொண்டிருக்கிறோம் பூமியின் அடிவயிற்றையும் நோண்டி அங்கிருந்து ஊற்று நீரை வெளியே கொண்டு வருகிறோம். ஆனால் இன்னும்கூட நாம் சுவாசிக்க காற்றையும் தாகம் தீர்க்க தண்ணீரையும் பசியை போக்க உணவையும் தேட வேண்டியதாக உள்ளது. பசியை தாகத்தை வெல்ல முடிந்தால், எவ்வளவு நன்றாக இருக்கும். ஒரு சித்தன் தான் பசியில் வெந்து பாடினான்,

"கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானா?" இதையே ஔவை பாடினாள்.

"ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்
இருநாளைக்கு ஏலென்றால் ஏலாய் என்னோ
இடும்பை கூர் என் வயிறே
உன்னோடு வாழ்தலரிது"

புலவர்கள் வரிசையில் இரட்டைப்புலவர்கள் பிரசித்தமானவர்கள். அவர்கள் தமக்கு கிடைத்த பொரிமாவை ஒரு பிள்ளை யார் சிலையின் முன்வைத்து விட்டு அதை உண்பதற்குமுன் குளத்தில் இறங்கி நீராடினார்கள். மேலே ஏறி வந்து பார்த்தபோது அந்த பொரிமாவை யாரோ திருடிச் சென்றுவிட்டனர். அதை பிள்ளையாரே பசியில் திருடித்தின்று விட்டார் என அவர்கள் பாடிய பாடலும் உண்டு.

" தம்பியோ பெண் திருடி தாயாருடன் பிறந்த
வம்பனோ நெய்திருடும் மாமாயன் நம்பிய எம்
முன்னால் முடிச்சவிழ்த்தான் என் செயலாம்
கோத்திரத்துக்கு உள்ள குணம்."

என்ன சம்பந்தமில்லாமல் பேசுகிறதாகத் தெரிகிறதா?

ஒருக்காலும் இல்லை மனிதனை பசி வாட்டும் காலம் என்றும் அழியாது என்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு காலம் வரை நாளும் கோளும் நம்மை ஆட்டி வைப்பதும் நடக்கும்.

ஒவ்வொரு பேரிடர்கள் உலகை ஆட்டி வைக்கும் போதும் அதை முன் கூட்டியே அறிவிக்கும் சோதிடர்கள் இல்லை. ஆனால் அது முடிந்த கையோடு அடுத்த இடர் எப்ப வரும் எப்படி வரும், எனக் கணித்து இன்றைய இணைய தளங்களை நிரப்பும் சோதிடர்கள் மிக அதிகம். இன்றைய சோதிடர்களில் பெரும்பாலானோர் கோவில் பூசை செய்பவர்களாகவும் உள்ளனர். தெய்வத்தின் முன் ஆசனம் போட்டு அமரக்கூடாது என்பது விதி அதே போல தெய்வ சந்நிதானத்தில் தெய்வத்தை மட்டுமே வணங்க வேண்டும் என்பதும் விதி. இப்போது வணக்கம் அங்கு வரும் அரசியல் பிரமுகர்களுக்கும், ஐயருக்கும்கூட நடத்தி மகிழும் மக்களைக் காண்கிறோம்.

பகுத்தறிவுக் கொள்கைகள் பிறந்த காலத்தில் நான் பிறந்திருந்தாலும் நான் என்ன மதம் என்று எனக்குத் தெரியாது. நான்காம் வகுப்பு படிக்கும் போது ஆசிரியர் எம்மிடம் அந்தக் கேள்வியை கேட்ட போது நான் தெரியாது என்றுதான் சொன்னேன். அப்போது பாடசாலைகளில் மதக் கல்விக்கு முக்கியத்துவம் இல்லாத காலம். ஆசிரியர் மறுபடி கேள்வியை மாற்றி தீபாவளி கொண்டாடுபவர்கள் யார் யார்? நத்தார் கொண்டாடுவது யார் யார் எனக் கேட்டு அவரே எமது மதத்தை அறிவித்தார். நான் வீட்டுக்குப் போனதும் என் தந்தையிடம் இதைப்பற்றிக் கேட்ட போது, அவர் மதம் என்றால் 'வெறி' என்றார். "அப்ப கடவுள் இல்லையா?" என்ற என் அடுத்த கேள்விக்கு அவர்,

"மந்திரமும் குருவும் மருந்தும் திருவருளும் உண்டென்பவர்க்கு உண்டு இல்லையென்பவர்க்கு இல்லை" என்றார். அது சித்தர் வாக்கு என்பது எனக்கு பல வருடங்களுக்குப் பின்னர் தான் தெரியும். அவர் ஒருபோதும் நாத்திகர் அல்ல கடவுள் நம்பிக்கை உடையவர்தான். ஆனால் அதை மூட நம்பிக்கை ஆகாமல் ஆக்காமல் வாழ்ந்தார். வீட்டுக்கு எந்த சடங்கு சாங்கியங்களுக்கும் ஐயர் வருவதில்லை. ஆனால் அப்படியான தினங்களில் வீட்டில் பலருக்கு உணவு சமைத்து கொடுப்பார்கள். அவர்கள் அறிந்தவர் அறியாதவர்கள் என பலர் இருப்பர்.

காலம் மாறியபோது நான் அப்படி வாழ்ந்தாலும் வாரம் இருமுறையாவது கோவில்களுக்குச் சென்றேன். மாதத்தில் பலநாள் விரதங்கள் அனுட்டித்தேன். அப்படியே மெள்ள மெள்ள தியானம் பிராணாயாமம். என ஆரம்பித்தேன். முப்பது வருடங்களுக்கு மேலாக தொடர்ந்தாலும். இப்போது தெரிகிறது அதுவும் ஒரு போதைப் பழக்கம்தான்.

ஆனால் விட முடியவில்லை. கஞ்சாப்புகையுடன் காசியில் வாழும் சித்தர்களைப் போல மீள முடியாமல் உள்ளே விழுந்துவிட்டேன்.

சோதிடர்களின் கருத்துகளை உடைத்துக் கொண்டு சித்தர்கள் வருகிறார்கள். கோவில்கள் எல்லாம் வெறும் புசத்தல்களாக தெரிகிறது. அதுதான் என்னைப்புடம் போட்டது என்பதை இப்போது என்னால் ஏற்க முடியவில்லை. ஒரு தெய்வ பக்தர் என நான் நினைப்பவர் சொன்னார், 'அன்றாடம் எந்தக்கிரகம் எங்கே சஞ்சரிக்கிறது. எத்தனையாம் இடத்தில் என்ன செய்கிறது என்பதை அறியாமல் என்னால் எதையும் செய்ய முடியவில்லை.' என்று நாம் எங்கே போய்க்கொண்டிருக்கிறோம். உழைப்பை நம்புவதைவிட ராசி பலன்களை நம்புகிறோம். இல்லாமலா இந்த ஊடகங்களெல்லாம் அதை முக்கியமாக ஒலி ஒளிபரப்பு செய்கின்றன.

"தகவம்" பரிசினை வென்ற மாத்தளை வடிவேலன்...



தகவம் இலங்கையில் வெளிவரும் அத்தனை சிறுகதைகளையும் சேகரித்து வாசித்து காலாண்டுக்கு ஒருமுறை சுதந்திரமான அறிஞர்களினால் மதிப்பிடப்பட்டு அவற்றுள்ளே சிறந்த சிறுகதையைத் தெரிவு செய்து வருகின்ற அமைப்பாகும்.

1975ம் ஆண்டில் இருந்து இன்றுவரை (1983 முதல் 2008 வரை நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக நிறுத்தி வைக்க வேண்டியதாயிற்று.) உயிர்ப்புடன் பயணிக்கிறது.

எப்போதுமே இலக்கிய படைப்பிற்கு பரிசு கிடைக்க வேண்டும் எனில் போட்டிக்கு படைப்பை அனுப்புதல் வழமை. ஆனால், தகவம் பரிசு வழங்குவது படைப்பாளனின் படைப்பை அவருக்கு தெரியாமலே ஆராய்ந்தே தகவம் பரிசு வழங்குகிறது.

இதன் காரணமாகத்தான் தகவம் பரிசு பெற்ற சிறுகதை படைப்பு ஒவ்வொரு வருடமும் இலங்கையில் சிறுகதை துறையில் ஏற்படும் மாற்றங்களை, பாய்ச்சலை பரிசோதித்துக்கொள்வதற்கான ஆவணமாக திகழ்கிறது.

சிறந்த சிறுகதை படைப்பு ஒன்றை வாசிக்கும் நுகரும் சந்தர்ப்பம் வாசகனுக்கு கிடைக்கிறது.

ஆகவே தகவம் பரிசு பெறுவது படைப்பாளிகள் பெறும் வெற்றி என்பேன் நான். இலங்கையின் உயரிய விருதான சாகித்திய பரிசை வென்ற மாத்தளை மலரன்பன், அடிக்கடி ஒரு இலக்கிய நண்பரிடம் எனக்கு தகவம் பரிசு கிடைக்குதில்லையே .. என்பாராம்.

நாடறிந்த படைப்பாளர் மாத்தளை வடிவேலன் 1977ல் எழுதிய "அக்கினி" என்கிற படைப்பு தகவத்தின் முதல் பரிசை 1977ம் ஆண்டு பெறுகிறது.

இதுவே மலையக படைப்பாளியினால் பெறப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் ஆகும். 1977ம் ஆண்டில் குருநாகல் போன்ற பகுதிகளில் ஏற்பட்ட தமிழர்களுக்கு எதிரான கலவரத்தின் போதான சிறிய சம்பவத்தை காத்திரமான சிறுகதையாக வடிவமைப்பு செய்துள்ளார்.

இந்த வகையில் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக 1958ம் ஆண்டு நடந்த கலவரத்தை சிறுகதையாக 1960 பொ.கிருஷ்ணசாமி எழுதினார்.

ஆனாலும் அது சிறுகதை என்கிற கோதாவில் எழுதப்பட்ட அழுக்கான கருவாக ஏன் தமிழர்களை கேவலப்படுத்திய ஒரு படைப்பாக கொள்ளமுடியும்.

இந்த கதையை (படைப்பு என சொல்ல முடியவில்லை) மலையக சிறுத்தைகள் எனும் தொகுப்பில் தெளிவத்தை ஜோசப் உள்வாங்கி கொண்டமை ஆச்சரியம் தரவல்லது. 1982 ம் ஆண்டில் மாத்தளை வடிவேலன் பதுளையில் வெளியிட்ட பாரதி மலரில் " உச்சிமீது.. வானிடிந்து ..." என்கிற படைப்பு வெளியாகியது..

தமிழர்களுக்கு எதிரான கலவரங்களில் பயந்து ஓடி ஒளியாது எதிர்க்க வேண்டும் என்கிற நிலைப்பாட்டை படைப்பாளன் உயர்த்தி கொண்டதாகவே தரிசிக்க முடியும்.

ஒருவேளை தகவம் 1983 ம் ஆண்டுக்கு இந்த படைப்பை பரிசீலனை செய்திருப்பின் நிச்சயமாக தகவம் பரிசு வடிவேலனுக்கு வழங்கப்பட்டிருக்கும். அத்துணை காத்திரமான படைப்பு அது....!

இதுவரை மாத்தளை வடிவேலன்,, பரிபூரணன், மாத்தளை சோமு, பதுளை சேனாதிராஜா, சுதர்ம மகாராஜா எனும் படைப்பாளர்களை சென்றடைந்துள்ளது.

சிறப்பு பரிசாக மு.சிவலிங்கம், தெளிவத்தை ஜோசப் எனும் படைப்பாளர்களை தேடிப்போய் இருக்கிறது.

தகவம் பரிசு என்பதில் இருக்கும் இன்னோரு சிறப்பு அம்சம், இலங்கை சாகித்திய விருதை பெற்றவர்களுக்கு சிறப்பு பரிசு என்பதே பரிந்துரை செய்யப்படுகிறது.

மேலதிக தகவல்:

மாத்தளை வடிவேலன் 75வது அகவை சிறப்பிதழாக ஞானம் 266 இதழ் வெளிவந்தது. கலாபூஷணம் கே. பொன்னுத்துரை மாத்தளை வடிவேலன் பற்றி எழுதிய கட்டுரை கனதியானது.

பதுளை சேனாதிராஜா ...✍

சாரல்நாடனின் 'வானம் சிவந்த நாட்கள்' நாவல் வெளியீடும் நினைவேந்தலும்



நாட்டின் நோய்த் தொற்று நிலவரம் காரணமாக கடந்த இரண்டு வருடங்களாக அனுட்டிக்கப்படாத சாரல்நாடன் நினைவேந்தல் நிகழ்வு இவ்வருடம் சிறப்பாக கடந்த ஜூலை 31 அன்று கொட்டகலை தமிழ் மகா வித்தியாலத்தில் நடத்தப்பட்டது.

இந்த எட்டாவது நினைவு தின நிகழ்வில் முக்கிய அம்சமாக மு. நித்தியானந்தன் எழுதிய காத்திரமான முன்னுரையுடன் மலையக பதிப்பாளர் எச். எச். விக்ரமசிங்கவின் முனைப்பில் தமிழகத்தில் பதிப்பிக்கப்பட்ட சாரல் நாடன் எழுதிய 'வானம் சிவந்த நாட்கள்' எனும் நாவல் இலங்கையில் முதன் முதலாக வெளியீடு செய்யப்பட்டது.

மங்களவிளக்கேற்றல் மற்றும் மலரஞ்சலியின் பின் தினேஸ் எழுதிய கவிதை வழி கவிதாஞ்சலி அவரின் தாயாரல் வாசிக்கப்பட்டு நிகழ்ச்சி ஆரம்பமானது.

தலைமை வகித்த கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளரும் இலக்கியவாதியுமான சு.முரளிதரன் இந்த நாவல் ஒரு வரலாற்று நாவலாக அமைவதோடு இந்த நாவல் வெளியீடும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்றார்.

மேலும் உரையாற்றும் போது லண்டனில் நடைபெற்ற மலையக இலக்கிய மாநாட்டில் இந்த நாவல் வெளியிடப்பட்டதோடு, சாரல்நாடன் என்ற பெயரில் ஓர் அரங்கம் நடத்தப்பெற்றது அவருக்கு கிடைத்த மிக உயர்ந்த கௌரவமாகும் என்றார். இந்த மாபெரும் கௌரவத்தை வழங்கிய மலையக இலக்கிய செயற்பாட்டாளர்களான மு. நித்தியானந்தன் மற்றும் எச். எச். விக்ரமசிங்க ஆகியோருக்கு மலையக இலக்கிய உலகு வாழ்த்துக்களையும் பாரட்டுக்களையும் தெரிவிக்கின்றது.

நாவல் பற்றிய பார்வையினை பதிவு செய்த சு. தவச்செல்வம் இந்த நாவல் மூலம் சாரல்நாடன் எவ்வாறு தொழிலாளர்களை நேசிக்கும் ஒருவராகவும் விளங்குவதோடு உண்மையாக தொழிலாளர் விடுதலைக்கு போராடும் ஆளுமைகளை முன்னிருத்தி போராட்டங்களை முன்னெடுப்பதன் முக்கியத்துவத்தையும் உணர்த்துகின்றது எனக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து இடம்பெற்ற 'சாரல்நாடன் மலையகத்தின் ஒரு சகாப்தம்' எனும் தலைப்பிலான நினைவேந்தல் உரைகளில் முதலாவதாக அவருடைய பள்ளி சகபாடி சாகித்யரத்னா மு.சிவலிங்கம் ஹைலண்டஸ் கல்லூரியில் கல்வி கற்கும்போது ஜொலித்த மாணவர்கள் சிலரிடையே சாரல் நாடன் எவ்வாறு கலை இலக்கிய செயற்பாடுகளில் அக்கறை கொண்டிருந்தார் என விபரித்ததோடு 24 நூல்களை படைத்த சாரல் நாடனின் வெற்றிக்கு அவரின் துணைவியாரின் பங்களிப்பை போற்றினார். அவரை அடுத்து பேசிய கலாபூசணம் மொழிவரதன், சாரல்நாடன் எவ்வாறு மலையக இலக்கியத்துக்கு பங்களித்ததோடு தனது நூல்களும் வெளிவருவதற்கு ஒத்துழைத்தார் எனக்கூறியிருந்தார்.

ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியின் முன்னாள் துணைப் பீடாதிபதி வ. செல்வராசா, சி.வி. வேலுப்பிள்ளையை வெகுஜனப்படுத்தவதில் சாரல்நாடன் ஆற்றிய பணியை பாராட்டினார்.

கொட்டகலை ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ஜெ.சற்குருநாதன் சாரல்நாடனின் பதிப்பு முயற்சிகள் குறித்தும் அதன் முக்கியத்துவும் குறித்தும் எடுத்துரைத்தார்.

மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரி முன்னைநாள் பீடாதிபதி சிவ ராஜேந்திரன் சாரல் நாடனோடு பழகிய காலத்தில் அவருக்கு அறிமுகப்படுத்திய மலேசிய நாட்டின் மக்கள் செயற்பாட்டாளர் தோழர் வரதராஜனோடு அவர் உரையாடிய வேளையில் சாரல்நாடன் பங்களித்த விதத்தை எடுத்துரைத்து சிலாகித்தார்.

இல நாகலிங்கம் தன்னை எவ்வாறு ஒரு சிறுகதை எழுதத்தூண்டி அவுஸ்ரேலிய நாட்டில் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெறச்செய்தார் எனக்குறிப்பிட்டார்.

சிவனு மனோகரன், எவ்வாறு தனது ஆரம்ப கால சிறுகதைகள் வெளிவந்த போது அதனை வாசித்து தனிப்பட்ட ரீதியில் கடிதம் எழுதி கதைகளை குறித்து மதிப்பீடு செய்து ஊக்குவித்தார் என்றும் இனி சாரல் நாடனை அடுத்த தலைமுறைக்கு முன்னெடுப்பது குறித்து கருத்துக்கள் கூறினார். கொட்டகலை ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் அகிலன் தமிழகத்தில் கலாநிதிப் பட்ட ஆய்வு மாணவர் பெருமாள் சரவணக்குமார் நடேசய்யர் 1915 ஆம் ஆண்டு எழுதிய 'ஒற்றன்' நாவலை பதிப்பித்து அதனை சாரல்நாடனுக்கு சமர்ப்பணம் செய்து அவருக்கு பெருமை சேர்த்துள்ளார் என்பதை பதிவு செய்தார்.

பத்தனை டேவிட் நூல்களின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்ததோடு சாரல் நாடனின் நூல்கள் எப்போதும் உசாத்துணைகளாக பயன்படுத்த வல்லன என்றார். சுதர்மமகாராஜன் பேசுகையில் தமது பெருவிரல் இயக்கம் மாணவர்களிடையேயும் இளைஞர்களிடையேயும் நல்ல வாசிப்பு பழக்கத்தை முன்னெடுக்க பணி செய்த போது அதில் சாரல்நாடனின் புலமைத்துவ வழிகாட்டல் பங்களிப்பு செய்தது பற்றிக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய கணேசலிங்கம் சாரல் நாடன் தன்னை எப்படி ஒரு ஆய்வாளனாக நிலைமாற்றம் செய்ய அனுசரணை செய்தார் என்பதை கூறி அவரின் நூல்கள் மலையக ஆய்வுகளுக்கு துணைக்கரமாகுமென்றார். ஆசிரியர் யுகேஸ்வரி பேசும் போது தான் பணியாற்றும் பாடசாலையில் சாரல்நாடனின் மகள் ஜீவகுமாரியும் பணியாற்றுவதால் சாரல்நாடன் பற்றி பேசும் போது ஒரு பெருந்தந்தையோடு நமக்கும் உறவிருக்கும் உணர்வு தோன்றுகின்றது என்றார்.

ஜீவகுமாரியின் நன்றியுரையோடு முடிவடைந்த நிகழ்சின் பின்னர் மு.சிவலிங்கம் மற்றும் சு.முரளிதரன் ஆகிய இருவரின் வழிகாட்டலின் கீழ் சாரல்நாடன் கீர்த்தியை அர்த்தபுஷ்டியாக முன்னெடுக்க செயற் குழு அமைக்கப்பட்டது.

அ.கனகசூரியர் ...✍

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

மொழிதலற்ற மொழி

இர்ஷாத் இமாமுதீன்

மௌனக்
கோப்பைக்குள்
சந்தோச பானம்
அருந்தாமலே
அழகிய சுவையோடு
காட்சி தருகிறது

எல்லா வார்த்தைகளையும்
நிரப்பி வைத்தாலும்
அந்த மௌனக் கோப்பையின்
வெகுமதி குறைவதில்லை

காதலின் மொழிக்குள்
மௌனத்தின்
வலிமை வசீகரித்துக்கொண்டே
இருக்கும்

எத்தனை
உறவுகளின்
ஆரம்பம்
மௌனத்தின்
பாசையால்
உயிர்பெற்றிருக்கிறது

சில வேளை
ஒரு மௌனம்
ஒரு புயலை விட
அசுர வேகத்தில்
ஒரு உறவை
தகர்த்தெரியக்கூடியது

மௌனத்தின்
புரட்சி
பாசைகளின்
எழுச்சியால்கூட
கட்டுப்படுத்த முடியாதவை

எல்லாச் சொற்களும்
ஒரு காதலியின்
மௌனத்திடம்
தோற்றே போகின்றன

மௌனத்தை
அதிகமாக
கையாளும் பெண்கள்
காதல் தேசத்தின்
முடிசூடா
இளவரசிகளாகின்றனர்

ஓர் எழுத்தோவியம்
சொல்லாத
வார்த்தை மலர்களை
மௌனத்தின் மொழி
அன்பின் மலர்களாய்
மலர்ந்து மணம்
பறப்புகின்றன

ஓர் மௌனம்
பல தற்கொலைகளையும்
தள்ளிப்போடக்கூடியது

ஓர் எழுத்தாளனின்
மௌனம்
பல படைப்புகளின்
பிரதி விம்பங்கள்

ஒரு கவிஞனின்
மௌனம்
பல கவிதைகளின்
அர்த்தம் பொதிந்தவை

ஒரு ஓவியனின்
மௌனம்
பல வண்ணங்களின்
கலவை

ஒரு சிந்தனையாளனின்
மௌனம்
பல எண்ணங்களின்
விஸ்வரூபம்

எல்லா
மௌனங்களையும்
ஆறப்போடும்
ஒரு குழந்தையின்
மௌனம்

சலவைத் தொழிலாளியைப்போல்
கோபங்களை
காயப்போடுகிறது
மௌனத்தின் மொழி

ஒரு குளிர்ந்த
தேனீரைப்போல
மனசின் வெப்பம்
தணிகிறது
மௌனத்தின்
நீட்சியில்

ஒரு கொடிபோல்
படர்கிறது
நிராகரிப்புகளால்
உருவான
மௌனமான வலி

சில வேளைகளில்
காயப்பட்ட
காலங்களுக்கு
சில ஆறுதல்கள்
மௌனத்தால்
ஒத்தடமிடுகிறது

மௌனத்தை
மௌனத்தால்
கடந்து
செல்கிறது
முன்னாள் காதலர்களின்
இந்நாள் சந்திப்புகள்

சில பிரிவுகள்
மௌனத்தை
மட்டுமே
நிரப்பி வைத்திருக்கின்றன

மரணம் வரை
சில மௌனங்களுக்கு
அர்த்தம் புரிவதில்லை



புன்சிரிப்பு

என். பாரத்,
மானிப்பாய்

உன் கன்னக்குழியினுள்
சிறைக்கைதியாக விட்டேன்
விடுதலை வேண்டாம்
உன் புன் சிரிப்பு போதுமடி
சிறைக் கைதியாக வாழ்ந்திட
உன் கன்னக்குழியினுள்



கவிதை மஞ்சரி

கிருஷா

வாழ வைக்கும் சேவை

குப்பிளான் குமரன்

உலக மக்கள்
உள்ளூர விரும்புவது
உவகை கொடுக்கும்
உன்னத வாழ்வே
உன்னத வாழ்வில்
மகிழ்ச்சி அவசியம்

கோடி செல்வம்
கிடைத்த போதிலும்
நாம் நாடும்
மகிழ்ச்சியான வாழ்வு
நிச்சயம் இல்லை

நாளும் நாம்
மகிழ்ச்சியுடன் கூடிய

அமைதி பெறுவதற்கு
நமக்கு என்றும்

கை கொடுப்பது
மற்றவர்களுக்கு நாம்
சேவை செய்வதே

சேவை செய்வதற்கு
கோடிகள் தேவையில்லை
நம் மனம் சம்மதித்தால்
எங்கும் எவருக்கும்
நாம் முழு மனதுடன்
சேவை செய்யலாம்

சேவை பெறுபவரின்
உண்மையான மகிழ்ச்சியே
சேவை கொடுப்பவருக்கு
மகிழ்ச்சியைக் கொடுக்கிறது

இது இயற்கை நமக்கு
கொடுத்த கொடை அன்றோ

காலப் பெட்டகம்

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்



கதை பேசிய கணங்கள்
காற்றில் அலைமோதி
காதுக்குள் ஒலியலைகள்

பாதையோரச் சுவடுகளை
பூக்கள் நிறைத்து
மறைத்த நாட்கள்
மணம் வீசும்

பரிமாறிய பிரியங்கள்
மழைத்துளிகளின் சுகங்களாக
சில்லிட வைக்கும்

எல்லை இல்லாத
மனவானத்தில்
நீ எழுதிய இராகங்கள்
ஆனந்தத்தின் உச்சத்தில்
நடனமாடும்

இதழ்களின் முறுவலைப்
படம் பிடித்த இதயம்
வலுவாக ஆணியடித்து
மாட்டிக்கொண்டதை
நீ அறியாய்

கிழித்துப்போட்ட
காகிதமும்
நீ தொலைத்து விட்டதாய்
நினைத்திருக்கும்
கால் கொலுசும்
நிரந்தர சேமிப்பாய்

நட்பையும் காதலையும்
வேறுபிரித்தறியாமலே
காலப் பெட்டகத்துள்
ஒளிந்து கொண்டாய்
இதயத்தின் கூவலை
கேவி அழும் ஒலியைக்
கேட்காமலே

நிலத்தில் அவ்வப்போது
பெய்த மழையாய்க்
காயாமல் பிசுபிசுப்பாக
இந்தக்காதல்

வாழ்வில் வெற்றியோ
என்னவோ
காதலில் தோற்றுவிட்டாய்
என் இதயம்
உண்மை விளம்பி
நீ அறியாய்

நானும்தான்
அன்று வந்தேன்
உண்மை விளம்ப
ஒரு பூச்செண்டோடு
நீ கண்டு கொள்ளவேயில்லை

பசுமை நினைவுகள்

குமாரசாமி சண்முகம்
வந்தாறுமூலை

அன்று நானொரு துடிப்புள்ள பள்ளிச் சிறுவன்
காலையில் எழுந்து ஆர்வத்தோடு கால்நடையாக
ஆடி அசைந்து பாடசாலைக்குச் செல்வோம்
போகும் வழியில் நண்பர்களும் வந்து சேர்ந்திடுவர்

பள்ளிக் கடப்பும் சற்று அகலத் திறந்திருக்கும்
ஆட்டு மந்தைபோல ஒதுங்கியே உட்செல்வோம்
பள்ளிக் கிணற்றில் இரு காலையும் கழுவுவோம்
வகுப்பறை சென்று நீள வாங்கில் அமர்வோம்

வேட்டியும் சட்டையும் சால்வையும் அணிந்த
குருமார் கையில் பிரம்புடன் சுற்றியே நிற்பர்
வேண்டும் அறிவுரை குறையாது உரைத்திட
தலைமைக் குருவும் கடவுள்போல் வருவார்

எண்ணும் எழுத்தும் கற்றிட முனைவோம்
இசைப் பாடலுடன் குரு கணிதம் புகட்டுவார்
எழுத்துப் பாடம் மணலில் எழுதிப் படிப்போம்
இலக்கியப் பாடம் இன்னிசையுடன் தொடரும்

அங்கொரு மாது பால் காய்ச்சி வச்சிருப்பார்
கோப்பையில் வாங்கி சுவைத்துக் குடிப்போம்
அன்று வட்டக்காவடி விளையாடி மகிழ்ந்தோம்
அந்தப் பசுமை நினைவுகளை மீட்டுகின்றேன்
மீண்டும் மணியொலிக்க வகுப்புக்கு சென்றிடுவோம்
கையில் பிரம்புடன் கற்பிக்க காத்திருப்பார் ஆசான்
மீன்கொத்திப் பறவைபோல் கவனமாய்ப் படிப்போம்

தசாப்தம் நாலுதான் வேகமாய் கடந்தும் போனபின்
தற்செயலாக ஒரு அன்னையைக் காணக்கிடைத்தது
தானே நகைத்தாள் கிட்ட நெருங்கியும் வந்தாள்
எப்படி சுகம் என்று அன்புடன் என்னிடம் கேட்டாள்

பசுமை நினைவுகளில் இதுவும் ஓர் அங்கம்தான்
அன்றுகண்ட முகம்
பால்ய நண்பியைக் கண்டேன்
அங்கத்தில் களையில்லை சோகம் கப்பிய முகம்

ஆறு குஞ்சுகளைப் பெற்று வளர்த்தவள்
அவர்களை கரை சேர்த்துவிட்டாள்
இன்றோ அவள் துணையிழந்த தனிமரம்
ஆடியவள் அடங்கியது கண்டு கரைந்து போனேன்

காலங்கள் மாறலாம் கனவுகள் மறக்கலாம்
இளமை உறவுகளும் இன்ப உணர்வுகளும்
காலத்தால் மறைந்துவிடாது
உயிருள்ளவரை யாவும் பசுமை நினைவுகளே

பெண்

ஷப்ரா இல்முத்தீன்
அட்டாளைச்சேனை



ஆயிரம் ஆசைகளை
மனதில் சுமந்து
படிப்பு எனும் காற்றாடியை
கையில் பிடித்து

வாழ்க்கை எனும்
வட்டத்துக்குள் சங்கமித்து

பெற்றோருக்கும்
மற்றோருக்கும் இடையில்
தன் அடையாளத்தை பதித்து
வாழ்நாள் கழிக்கும்
எல்லாப் பெண்களுக்கும்

என்றோ ஒரு நாள் நிச்சயிக்கப்படுகிறது
அவளது இரண்டாம் கட்டமான
திருமண வாழ்க்கை...

படித்து முடித்து
அடுக்களையில்
தாய்க்கு உதவி புரிந்து
தம்பிமாரையும் கவனித்து

தனக்கென வாழாது பிறருக்காய்
தன்னை அர்ப்பணிக்கும் பெண்ணவள்
திருமணத்துக்குள் நுழைகையில்
அவளைக் கட்டித் தழுவும்
பேரின்பங்கள் எத்தனை மகத்தானது

புது உறவு
புது சூழல்
புது அனுபவங்களென

திருமணம் முடித்து
திருப்தியாய் தன் வாழ்வை
தொடங்கும் ஒருத்திக்கு
கணவனின் திடீர் மரணமும்
அவளை அவன் கை விட்டு
வேறு திருமணம் செய்தலும்
எத்தனை வேதனை தரக் கூடியது...

பெண்ணவள் மனம்
சுக்கு நூறாய் உடைந்து
விம்மி அழுகையில்

குடும்பப் பாரம் தீர்க்க
வழியின்றி தவிக்கையில்

உதவி செய்யாத
கரங்கள் எல்லாம்
அவள் தனக்காய் உழைக்க
வெளிநாடு சென்றால் மட்டும்
அவள் பக்கம் திரும்பி
புறம் பேசுவது ஏனோ

குற்றம் செய்த
கணவனை விட்டு
அப்பாவி அவள் மீது
அவப் பெயர் செலுத்துவது ஏனோ

பெற்றெடுத்த பிள்ளைகளுக்காய்
அவள் கஷ்டப் பட
எல்லோருமாய் அவளை
வெறுப்பதன வலி
எத்தனை கொடுமை நிறைந்தது

பணமிருக்கும் போது
ஒரு குணத்துடனும்
இல்லாத போது
இன்னொரு குணத்துடனும்
நடந்து கொள்வது
எத்தனை வேதனை நிறைந்தது

பெற்ற பிள்ளையாகட்டும்
சுற்றியிருக்கும் உறவினர்களாகட்டும்
கைவிட்ட கணவனாகட்டும்

எல்லோரும் ஒரு நாள்
பதில் சொல்ல வேண்டி வரும்
படைத்தவன் முன்னால்

அவளுக்குள்ளும் ஓர் இதயம் உண்டு
உணராத வரை
உடைத்துக் கொண்டே இருப்பார்கள்..



என்ன?

பசறையூர்
மல்லிகா பத்மநாதன்

கண்கள் பேசும் வார்த்தைதான் என்ன
கன்னியே உன்மனம் நினைப்பதுவும் என்ன
பின்னே வந்து நிற்கும் காரணம் தான் என்ன
பேசிட நினைக்கும் வார்த்தைதான் என்ன
வஞ்சியே நீ கேட்க நினைப்பது என்ன
வாஞ்சையால் தேடும் பொருள் தான் என்ன
கொஞ்சியே நெஞ்சினில் அமர்ந்த கதை என்ன
கூடி வாழ்ந்திடுவோம் உன் யோசனைதான் என்ன?

அலைகள்



ஏரூர் றமீஸ்
ஏறாவூர்

வெள்ளை பூக்களை
அள்ளி வீசுகின்றாய்
துள்ளிக் குதித்தே
தொட்டு விளையாடுகிறாய்

தீண்டிடும் காற்றிலே
சீரிட்டுப் பாய்கிறாய்
படை யெடுத்தேனும்
கரை தொடுகிறாய்

கருங்கடல் நீயும்
கொதித் தெழுந்திடவே
கர்ஜ்ஜித்திடும் குரலிலே
கலங்கடிச்சி போகின்றாய்

கட்டுடலை வருடிடும்
கண்ணியின் முந்தானையாய்
மேனியை உரசிடும்
மெல்லிய காற்று

கலைந்தாடும் கூந்தலிலே
கவர்ந்திடும் அழகினிலே
கரைகின்றது கவலைகளும்
சிரிக்கின்றது மனமிங்கே

நாங்களும் பிணங்களே..!

ஏரூர்
எம்.ரி.எம்.அன்ஸார்

தொழிலின்றி வருமானமின்றி
வறுமை நிலைக்கிறது
களிப்பின்றி சிரிப்பின்றி
வாழ்வும் தொலைகிறது

விடியலைத் தேடியே
உள்ளமும் வாடுகிறது
துடியாய்த் துடித்தே
இன்பத்தைத் தேடுகிறது

திரும்பும் திசையெல்லாம்
வறட்சியே தெரிகிறது
இரும்பான மனமுடையோரால்
துன்பமே எரிகிறது

மரணித்த மனிதர்களே
வெற்றி பெற்றவர்கள்
தரணியிலே நடப்பவற்றைக்
காணாது விட்டவர்கள்

அன்றாடம் நாங்களும்
நடப்பவற்றால் இறக்கின்றோம்
இன்னலைச் சுமந்தே
இன்பத்தைத் துறக்கின்றோம்

வாழ்க்கையைத் தொலைத்ததால்
நாங்களும் பிணங்களே,
புதைக்கப்படாத இன்னும்
எரிக்கப்படாத
நடைப்பிணங்களே..!

அலை பேசியின் ஆபத்துகள்!

கலாபூஷணம், கீழ்கரவை கி. குலசேகரன்,
அப்புத்தளை.

அலை பேசியால் வரும்
ஆபத்துகள் அதிகம்!
அறிந்துமே திருந்துதல்
அனைவர்க்கும் அவசியம்!
நிலையான அமைதியை
நித்தம் கெடுக்குதே!
நிம்மதியை இழந்து
வருந்திடவும் வைத்திடுதே!

காதல் தொடர்புகள்,
கற்பழிப்பு வன்முறைகள்,
களவுகள், கொலைகள்
கொள்ளைகள், பாதகங்கள்,
பாதையில் நடக்கின்ற
விபத்துக்கள், சமூகச்
சீரழிவு அனைத்துக்கும்
காரணமாய் இருந்திடுதே!

கற்கும் மாணாக்களும்
கவனத்தைத் திசை திருப்பி
காலத்தை வீணே
கழிக்கின்றாரே! இதனால்
பெற்றோரும் துன்பத்தில்
வாடுகின்றாரே! இந்தத்
தொலைபேசி தொல்லைபேசி
ஆகவே மாறிடுதே!

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

மனிதனின் பேராசைக்கு

இது போன்ற எத்தனையோ சம்பவங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். எனினும் மனிதனுக்கும் விலங்குகளுக்கும் இடையே நடக்கின்ற இந்த போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்குத்தான் முயற்சிகள் போதவில்லை..

இன்று உலகில் எட்டு வகையான சிறுத்தையினங்கள் காணப்படுகின்றன. இதில் ஒரு சதவீதமே இலங்கையில் உள்ளன. அதிலும் எமது நாட்டுக்கே உரித்தான விஞ்ஞான பெயரான பந்தரா பாதூஸ் என்ற சிறுத்தையினம் மிகவும் அரியவகையானது. இது எமது நாட்டுக்கே உரித்தான ஒன்று. இவற்றுக்கு மேலாக எமது நாட்டில் மூன்று வகையான சிறுத்தை இனங்கள் காணப்படுகின்றன. அவை ஆங்கிலத்தில் குஎளாஃபெஉரவஇ தரபெடநஉரவளஇ ஞஉழவநஉயவ என அழைக்கப்படுகின்றன.

இவற்றினை பாதுகாப்பது குறித்து உரிய திட்டங்கள் அமுல்படுத்துவது காலத்தின் தேவை. அருகிவரும் உயிரினங்களில் இவையும் ஒன்றாகவே சூழல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். எனினும் இவற்றினை பாதுகாப்பது பற்றிய முறையான தெளிவூட்டல் செய்யப்பட்டன. எனினும் அவை போதுமானதாக இல்லை. குறிப்பாக தமிழ் மொழியில் இவ்வாறான தெளிவூட்டல் செய்வதற்குரிய அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் இல்லாமையும் இவ்வாறு சம்பவங்கள் அதிகரிக்கக் காரணமாகின்றன.

கடந்த காலங்களில் நுவரெலியா மாவட்டத்தில் பொறிகள் அகற்றும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டபோது சோகம் தோட்டத்தில் மட்டும் ஒரு நாளில் சுமார் 50 பொறிகள் அகற்றப்பட்டன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மிருக வேட்டை என்பது மிகவும் கொடூரமான செயல் என்பதனை புரிந்துகொள்ள வேண்டும் சுய நலத்திற்காகவும் இலவச மாமிச உணவிற்காகவும் ஒரு உயிரினை அழிப்பது மிகவும் பாவம் என்பதனை உணர வேண்டும். தன்னுயிரைப் போல் மண்ணுயிரை நேசி என்பதற்கிணங்க பொது அமைப்புக்கள், சூழல் ஆர்வலர்கள் மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும். மலைப் பாங்கான பகுதிகள் அழகு பெறுவதற்கு இரம்மியமான சூழலாக இருப்பதற்கும் மிருகங்களும் மரங்களும் தாவரங்களும் தான் காரணமாகின்றன. எனவே இதனை பாதுகாக்க முன்வரவேண்டும்

இதேநேரம் இன்று சிறுத்தை, மான், மரை போன்றவை அழிவதற்கு மனிதனின் பேராசையே காரணம். எமது தேவைக்காக நாம் அவற்றின் வாழ் விடங்களை அழித்துள்ளோம். அதனால்தான் அவை வாழ்விடங்களை மாற்றிக்கொண்டுள்ளன. மனிதர்கள் வாழும் பிரதேசங்களை நோக்கி படை யெடுத்துள்ளன. மலையகப்பகுதியில் அண்மைக்காலமாக இவ்வாறான சம் பவங்கள் அதிகரித்து காணப்படுகின் றன. இதற்கு பிரதான காரணமாக இருப் பது தேயிலை மலைகள் காடுகளாகி இருப்பதுதான். மக்கள் குடியிருப்பு அருகாமையில் சிறிய பற்றைக்காடுகள் காணப்படுவதனாலும் காட்டு விலங் குகளுக்கு இலகுவாக உணவு கிடைப் பதனாலும் இவை வாழ்விடங்களை மாற்றிக்கொண்டுள்ளன. இதனால் அச் சமடையும் பொது மக்கள் ஏதோ ஒரு வகையில் இவற்றினை அழிக்க முயற்சி செய்கின்றனர். இதே நேரம் விவசாய காணிகளை பாதுகாப்பதற்காகவும் வேட்டையாடும் நோக்கிலும் தான் இவ்வாறான கம்பிப் பொறிகள் வைக் கப்படுகின்றன. ஆகவே, மக்கள் மத்தி யில் விழிப்புணர்வு ஏற்படுத்தி மிருகங் களை பாதுகாக்க தூண்ட வேண்டும் என்பது முக்கியம். மலையகத்தில் உள்ள வனப் பாதுகாப்பு அலுவலகங்க ளுக்கு போதுமான மலையக இளைஞர் களை நியமனம் செய்வதன் மூலமும் இவ்வாறான வனவிலங்குகளை பாது காக்க முயடியும் என்பதனை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

கலைந்த கனவுகள்...

(16 பக்கத் தொடர்)

விவாகரத்து பெற்றிருந்த வனிதா.. அவளது தேவைக்காக நகுலனை கல்யாணம் செய்து ஏமாற்றி விட்டதாக அறிந்த நகுலன்.. தன்னையே முடித்து விட உறுதி பூண்டான். அதன் விளைவுதான் அவனது தற்கொலை முயற்சி. ஆண்கள்தான் இது மாதிரி ஏமாற்று நாடகம் ஆடுவார்கள்.. பெண்களும் இப்படியா செய்வார்கள்! உடைந்துபோனான் நகுலன். அன்று அதிகாலை தன் வீட்டு கொல்லைப் புறத்தில் இருந்த வேம்பு மரத்தில் சுருக்கிட்டு உயிரை மாய்க்க முனைந்த நகுலனை உறவுகள் துரிதமாக வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதால் மயிரிழையில் காப்பாற்றப்பட்டான்.

தன்னுடைய பூட்டப்பட்டு இருக்கும் பழைய கடையை மீண்டும் திறந்து தன் வியாபாரத்தை மேற் கொள்ளும் உறுதியுடன் கலைந்த கனவுகளோடு நகுலன் தன் மிதி வண்டியில் அங்குதான் போகிறான்.

காணாமல் போன கியூ வரிசைகள்!...

(06ஆம் பக்கத் தொடர்)

அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ள இந்த நடைமுறையின் ஊடாக ஒவ்வொரு வாகனத்துக்கும் வழங்கப்படும் எரிபொருளுக்கான வரையறை காணப்படுகின்றமை தொடர்பில் சில கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

அதாவது வாகனத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்வாதாரத்தை உடையவர்கள் குறிப்பாக முச்சக்கரவண்டி ஓட்டுனர்கள், பாடசாலை வான் சேவை, பயணிகள் போக்குவரத்து சேவை, லொறி சேவை நடத்துவோர் போன்றவர்களுக்கான எரிபொருள் அளவு போதுமானதாக இல்லை எனக் கூறப்படுகிறது.

உண்மையில் முச்சக்கரவண்டியொன்றுக்கு வாரமொன்றுக்கு 5 லீற்றர் பெற்றோலே வழங்கப்படுகிறது. இருந்தபோதும் நாள் முழுவதும் சவாரிக்கு இது போதுமானதாக இருக்காது. எனவே குறைந்தது வாரமொன்றுக்கு 20 லீற்றராவது வழங்கப்பட வேண்டும் என முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அது மாத்திரமன்றி பஸ் உரிமையாளர்கள் மற்றும் லொறி உரிமையாளர்களும் தமக்கு வழங்கப்படும் எரிபொருள் கோட்டாவின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இது விடயத்தை அரசாங்கம் குறிப்பாக அமைச்சு சாதகமாகப் பரிசீலித்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கறுப்புச் சந்தை எரிபொருள் விற்பனை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டால் அனைவருக்கும் எரிபொருள் கிடைக்கச் செய்வதற்கான திட்டத்தை முன்னெடுத்துச் செல்வது வெற்றிகரமாக அமையும். இவ்வாறான நிலையில் அரசாங்கம் தற்பொழுது நடைமுறைப்படுத்தியுள்ள இத்திட்டத்தில் உள்ள விடயங்களை கவனத்தில் கொண்டு, வழக்கப்படும் எரிபொருள் கோட்டாவின் எண்ணிக்கையை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் பலரது கோரிக்கையாகும். இது இவ்விதமிருக்க, நாட்டில் தனியார் வாகனங்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றது. குறிப்பாக இரண்டு மூன்று வாகனங்களைக் கொண்ட வீடுகளில் உள்ளவர்கள் தனித் தனியாக ஒவ்வொரு வாகனத்தையும் பயன்படுத்தும் நிலைமை இன்னமும் காணப்படுகிறது. எனவே, பொதுப்போக்குவரத்து சேவையை குறிப்பாக பேருந்து மற்றும் ரயில் சேவையை விஸ்தரித்து தேவைக்கு ஏற்ற வகையில் அவற்றில் மாற்றங்களைக் கொண்டு வந்தால் தனிநபர்களின் வாகனப் பயன்பாட்டைக் கணிசமாகக் குறைக்க முடியும். இதன் மூலம் எரிபொருளுக்கான செலவினங்களையும் கட்டுப்படுத்த முடியும்.

ஒட்டுமொத்த இந்திய தேசத்தின்...

(06ஆம் பக்கத் தொடர்)

அந்த ஒப்பந்தத்தை இலங்கை மதித்து நடப்பதை இந்திய மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும் என்று இந்திய அரசியல் முக்கியஸ்தர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

சீன உளவுக் கப்பல் இலங்கைக்கு வருகை தருமானால் இந்தியாவின், குறிப்பாக தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களின் பாதுகாப்புக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடும். சீன உளவுக்கப்பல் மிகவும் சக்தி வாய்ந்ததாகும் என்று இந்திய தரப்பில் எச்சரிக்கை தெரிவிக்கப்பட்டிருந்தும் குறிப்பிடத்தக்கது.

750 கி.மீக்கும் அதிக சுற்றளவில் உள்ள அனைத்து நிலைகளையும் செயற்கைக்கோள் உதவியுடன் உளவு பார்க்கும் திறன் சீனக் கப்பலுக்கு உண்டு. அதாவது இந்தியாவின் கூடங்குளம், கல்பாக்கம் அணுசக்தி ஆராய்ச்சி மையங்களையும், சென்னை, தூத்துக்குடி உள்ளிட்ட தென்னிந்தியாவின் ஆறு துறைமுகங்களையும் யுவான் வாங் கப்பலால் எளிதில் உளவு பார்த்து, அது குறித்த தகவல்களையும் சேகரித்து விட முடியும்.

அணுசக்தி ஆராய்ச்சி நிலையங்கள் இந்தியாவின் பாதுகாப்புடன் எத்தகைய தொடர்பு கொண்டவை என்பதை அறிந்தவர்களால், சீனக் கப்பலின் இலங்கை வருகை தென்னிந்தியாவுக்கு எத்தகைய அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்பதை புரிந்து கொள்ள முடியும் என்கிறார்கள் இந்திய அதிகாரிகள்.

சீனக் கப்பலின் வருகை இடைநிறுத்தப்பட்டிருப்பது இந்திய மத்திய அரசின் இராஜதந்திர நடவடிக்கைகளுக்கு கிடைத்துள்ள தற்காலிக வெற்றியாகவே இந்திய தரப்பினால் கருதப்படுகிறது. அதே நேரத்தில், எதிர்காலத்தில் இதுபோன்ற சூழ்நிலை ஏற்படாமல் இருப்பதற்கான முயற்சிகளையும் இந்திய மத்திய அரசு எடுத்துள்ளதாக புதுடில்லி செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரதமர் நரேந்திர மோடி அரசின் இராஜதந்திர நடவடிக்கைகளால்தான் சீனக்கப்பலின் வருகை இடைநிறுத்தப்பட்டதாக அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் தாய்வான் ஜலசந்தியில் தீவைக் கைப்பற்றும் பயிற்சிகளை சீன இராணுவம் கடுமையாக மேற்கொண்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதில் அதிநவீன போர் விமானங்கள் உட்பட இராணுவத்தின் அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கி இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், பயிற்சி எப்போது முடியும் என்பது குறித்த விவரங்கள் தற்போதுவரை வெளியிடப்படவில்லை.

சீனா இவ்வாறு கடுமையாக போர் பயிற்சி மேற்கொள்வது இதுவே முதன் முறை என இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் 'ஜனநாயக தாய்வானை ஆதரிப்பீர்' என தாய்வான் ஜனாதிபதி சாய் இங்வென் சர்வதேச நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

எங்கள் அரசாங்கமும் இராணுவமும் சீனாவின் இராணுவப் பயிற்சிகள் மற்றும் போர் நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றன, எங்கள் இராணுவம் தேவையான பதிலடிக்கு தயாராக உள்ளது என்று சாய் இங் தெரிவித்திருந்தார்.

இது ஒருபுறம் இருக்க, இந்த சர்ச்சைகள் சீன_அமெரிக்க போருக்கு வழி வகுக்கும் என பலரும் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

பொருளாதார அறிவு...

(03ஆம் பக்கத் தொடர்)

கே: இதற்கு நீங்களும் பொறுப்பு என்று அர்த்தமா?


பதில்: நான் பட்ஜெட் ஆவணங்கள் எதையும் தயாரிக்கவில்லை. கடந்த காலங்களில் வரவு செலவுத் திட்டங்களை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவும் பின்னர் கலாநிதி என்.எம்.பெரேராவும் தயாரித்தனர். ஆனால் மற்றவர்கள் தயாரிக்கப்பட்டதை மட்டுமே படிக்கிறார்கள். இது தொடர்பாகப் பாராளுமன்றத்தில் வாதிடுகின்றனர். டொலர்கள் இருந்தால் எல்.சி திறந்து எலெக்ட்ரிக் வாகனம் கொண்டு வந்து அந்நிய செலாவணியை முதலில் செலுத்த வேண்டும் என்று பரிந்துரைத்தோம். நாங்கள் முன்மொழிந்தாலும், மத்திய வங்கி அதிகாரிகள் அங்கீகரிக்கா விட்டால் அதைச் செய்ய முடியாது. அவர்களுக்கு தனி அதிகாரம் உள்ளது. இலங்கையில் டொலர் வைத்திருப்பவர்களுக்கு டொலரில் வர்த்தகம் செய்வதற்கான சந்தை வழங்கப்பட வேண்டும். அப்போதைய மத்திய வங்கியின் ஆளுநராக இருந்த வர்ணசேன ராசபுத்ரவின் காலத்தில், தாங்கி பிணைப்பு முன்மொழியப்பட்டது.

பணமதிப்பழிப்புக்கு ஆளாக நேரிடும் என்பதால் வேண்டாம் என்று கூறினர். எனவே மத்திய வங்கி மற்றும் பிரதமர் அதிகாரிகள் இதற்கான வழியை முன்மொழிந்தனர். எனவே, இந்த அதிகாரிகள் எடுக்கும் முடிவுகளுக்கு அரசியல்வாதிகள் எப்படி பொறுப்பேற்க முடியும்?

பெண் சமையலாளர் தேவை

கொள்ளுப்பிட்டியிலுள்ள ஓர் முஸ்லிம் குடும்பத்திற்கு தங்கி வேலை செய்யக்கூடிய 50 வயதிற்குக் குறைந்த எல்லா உணவுகளையும் தயாரிக்கக்கூடிய ஓர் அனுபவமுள்ள பெண் சமையலாளர் தேவை.

தயவு செய்து
தொடர்பு கொள்ளவும்.
077 5929979



ශ්‍රී ජයවර්ධනපුර පල්කලෙක්කළගම, ඉලංගෙ

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், இலங்கை

University of Sri Jayewardenepura, Sri Lanka

வெளிவாரி பட்டப்படிப்பு மற்றும் நீடித்தல் கற்கை நெறிப் பிரிவு

விசேட அறிவித்தல்

2017 கலைமாணி ஆங்கில வெளிவாரி (பொது) பட்டம் பகுதி 3 பரீட்சை

1. தவிர்க்க முடியாத காரணங்களால் மேற்படி பரீட்சை, 2022.07.02 மற்றும் 2022.07.09 என்பன பிற்போடப்பட்டு 2022.08.20 மற்றும் 2022.08.27 ஆகிய தினங்களில் நடைபெறும்.

2. பரீட்சை நிலையம் மஹரகம, வித்யாகர மகளிர் வித்தியாலயத்திலிருந்து ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் பண்டார நாயக்க மண்டபத்திற்கு மாற்றப்படுகிறது.

3. அதே அனுமதி அட்டைகள் மேற்படி பரீட்சைகளுக்கு செல்லுபடியாகும்.

வேலை நாட்களுக்கான ஹொட்லைன்
011-5929791

பதிவாளர்
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
14.08.2022

ශ්‍රී ලංකා

பெறுகை அறிவித்தல்

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

லங்கா சதொச லிமிடட்
நிறுவனத்திற்கு வெப்பக் காகிதங்களை (Thermal Papers) வழங்கல்

விலைமனு இலக்கம் : LSL / PRO /05 / 117 / Thermal Papers / 2022

தேசிய போட்டிரீதியான விலைமனுக் கோரல்

லங்கா சதொச லிமிடட் நிறுவனத்திற்கு 03 மாத காலத்திற்கு வெப்பக் காகிதங்களை வழங்குவதற்காக உள்நாட்டு வழங்குனர்கள், உள்நாட்டு முகவர்கள், அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்களிடம் இருந்து லங்கா சதொச லிமிடட் திணைக்கள பெறுகைக் குழுவினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விபரக்குறிப்புகள் :- விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ளது
தேவைகள் :-

	பொருட்களின் விபரம்	மதிப்பிடப்பட்ட அளவு
1	POS இயந்திரத்திற்கு அட்டவணை அச்சிடப்படும் காகித சுருள்கள் (POS Machine Paper Rolls)	168,000
2	நிறுக்கும் தராசுக்காக அச்சிடப்பட்ட விலைப்பட்டியல் ஸ்டிக்கர் அட்டை (Sticker Roll for the Weighing Scale)	68,000

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களுக்கு குறித்த ஆங்கில மொழியிலான குறித்த விலைமனு ஆவணத்தின் இரண்டாவது பாகத்தை, **ரூபா 3,000.00 (மீளளிக்கப்படாதது) கேள்விமனு கட்டணம்** ஒன்றை செலுத்தி **2022 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் 2022 செப்டெம்பர் மாதம் 05 ஆம் திகதி** வரையான காலத்தில், இலக்கம் 27, சதொச பொதுச் செயலாளர் அலுவலகக் கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு 02இல் அமைந்துள்ள லங்கா சதொச தலைமை அலுவலகத்தின், பெறுகைப் பிரிவில் (3ஆவது மாடி) பெற்றுக்கொள்ள வேண்டும்.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு **2022 ஆகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி மு.ப. 11.00க்கு** மேலுள்ள முகவரியில் இடம்பெறும்.

சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் **2022 செப்டெம்பர் மாதம் 05 ஆம் திகதி பி.ப. 01.00க்கு அல்லது அதற்கு முன்னர்,** லங்கா சதொச லிமிடட், இலக்கம் 27, சதொச பொதுச் செயலாளர் அலுவலகக் கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு 02 என்ற முகவரிக்கு கிடைக்கின்றவாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். இல்லையேல் அந்த முகவரியில், பெறுகைப் பிரிவில் (3ஆவது மாடி) வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இட வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"லங்கா சதொச லிமிடட் நிறுவனத்திற்கு வெப்பக் காகிதங்களை வழங்கல்"** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்களும் இலங்கையில் செயற்படுகின்ற அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து வழங்கப்பட்ட **நிபந்தனையற்ற விலைமனு பிணை ஒன்றை (மீளளிக்கப்படுகின்ற)** விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். குறித்த பெறுமதி விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு இல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்களை ஏற்பது **2022 செப்டெம்பர் மாதம் 05 ஆம் திகதி பி.ப. 01.00 க்கு** முடிவுறுவதோடு விலைமனுக்கள் திறக்கப்படுவது, விலைமனுகள் ஏற்பது முடிவுற்ற உடன் விலைமனுதாரர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. **வெற்றிகரமான விலைமனுதாரர்** மூலம் ஒப்பந்தப் பெறுமதியில் **10% தொகையை செயல்திறன் பிணை (மீளளிக்கப்படுகின்ற)** ஒன்றாக செலுத்த வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு கீழுள்ள அதிகாரியை அழைக்கவும்.
சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி (திலினி) 070 1560428

கேள்விமனு/ ஒப்பந்தம் வழங்குவது தொடர்பான இறுதி முடிவு, **லங்கா சதொச லிமிடட் திணைக்கள பெறுகைக் குழுதலைவர் வசமானதாகும்.**

தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, லங்கா சதொச லிமிடட்
இல.27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம்,
வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

கலைந்த கனவுகள்



நகுலன் தங்கமானவன், ஏன் இப்படிச் செய்தான். எல்லோரிடத்திலும் எழுந்த கேள்வி இதுதான். அமைதியானவன் அனைவரோடும் அன்பாகப் பழகும் நகுலன் ஏன் இப்படி ஒருமுடிவு எடுத்தான். எல்லோரும் அவன் மேல் இரக்கப்பட்டனர். இன்று அதிகாலை நகுலன் மேற்கோண்ட தற்கொலை முயற்சிதான். அக் கிராமத்தில் அன்று பேசு பொருள்.

நகுலனின் கிராமத்துக்கு மட்டக்களப்பு களு வாஞ்சிகுடியில் இருந்து மேற்கில் பதினைந்து கி.மீ பயணத்தில் போய்ச் சேர முடியும்.

நகுலன் பதினைந்து வயதாக இருக்கும் போது செல் வீச்சு ஒன்றில் தந்தையை கண் முன்னால் பறி கொடுத்தவன். போர் விமானம் வீசிய எறிகணை வீச்சில் அந்த கிராமத்தில் மரணம் அடைந்தவர்களில் நகுலனின் தந் தையும் ஒருவர். நகுலனும், தாய், தங்கை தம்பியுமாக நால்வரும் தவித்துப் போயினர். இவர்களைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பு நகுலனின் தோளில் சுமையானது. பத்தாம் வகுப்போடு அவனது பள்ளிவாழ்க்கை பாதியிலே நின்றது.

நகுலன் பாடசாலை வாழ்க்கைக்கு முற் றுப்புள்ளி வைத்ததும், பதினைந்து வயதி லேயே கல்முனை பலசரக்கு கடை ஒன்றில் வேலைக்குப் போய்விட்டான். தாய்க்கும், தம்பி, தங்கைக்கும்.. உதவியாக இருந்தவன் தனது பத்தொன்பதாவது வயதில், "அம்மா.. தங்கை, தம்பியப் படிக்க வைக்க வேணும். இந்த ஓலை குடிசையில் எத்தனை நாளைக்கு அம்மா இருப்பது. ஒரு வீட்டை நல்ல படியாக கட்ட வேணும். நான் கட்டாருக்கு போகப் போறன் என்று சொல்லிய போது வெளி நாட் டுக்கா.. என ஆச்சரியப்பட்டாள் தாய்.

உழைச்ச காசு எல்லாம் செலவாப் போயிற்று. இனி வெளிநாடு போகும் எண்ணம் எனக்கு இல்ல.இப்ப கொஞ்சம் கையில் காசு இருக்கு. அதை வைச்சுக் கொண்டு ஒரு தொழில் செய்ய வேணும்.நானும் கல்யாணம் செய்யப் போய்..கையில் இருக்கும் காசும் இல்லாமல் போய் கடைசியில் கஷ்டப்பட வேண்டி வரும்.. அம்மா. இப்ப கல்யாணக் கதையை எடுக்க வேணாம்." என்றான் ஒரே போடாக. பின்னர் கல்முனை நகரில் வாடகைக் கட்டிடத்தில் பல சரக்கு கடையை ஆரம்பித்து நகுலன் கடந்த ஐந்து ஆண்டுகளாக நடத்தி வருகிறான்.

இப்போது நகுலனுக்கு நாற்பது வயது. எனினும் ஐந்து வருடமாக கடையில் கிடைத்த இலாபம் நகுலனை பெரும் முதலாளியாக மாற்றி விட வில்லை.

போட்டி நிறைந்த வியாபாரத்தில் ஈடுகொ டுக்க முடியாது அவனது வியாபாரம் சுமாராக.. போய்க் கொண்டிருந்தது. அதனால் அவன் கல்யாணமும் கைகூடாமல் தள்ளிக் கொண்டே போனது. "மச்சான் நகுலா என்னடா.. இப்படி எத்தனை நாளைக்கு ஒண்டிக் கட்டையாக இருக்கப் போறாடா." நகுலனின் பள்ளிக்கால நண்பன் கண்ணன் கடைக்கு வந்தபோது உரி மையோடு பேசினான். எப்போது கடைக்கு வந் தாலும் கல்யாணக்கதையைக் கதைக்காமல் போக மாட்டான் அவன். நகுலனின் வயது தான் திருமணமாகி இப்போ மூன்று பிள்ளை களுடன் இருக்கான்.

"அந்தக் கதைய விடுடா.. எனக்கு நாற்பது வயது இப்ப. இனி என்னடா.. கல்யாண ஆசை என்போன்றவர்களுக்கு வரக் கூடாதுடா."

"உன்னைப் பார்த்தா இப்பதான் இருபத் தைந்துவயசு போல இருக்கு.."என்று ஆரம் பித்தவன், "மச்சான் எனக்கு தெரிஞ்ச ஒரு புறோக்கரும் கண்ணனும் அவனது தாயுடன் கதைத்த படி அவனை எதிர்பாத்துக் கொண்டி ருந்தனர்.

"இவர்தான் நான் சொன்ன சம்பந்தம் கொண்டு வந்த புறோக்கர். எல்லாமே அம் மாவிடம் சொல்லியாச்சு. உனக்கு விருப்பம் எண்டா அம்மாவுக்கும் சம்மதமாம்.. என்னடா நீ சொல்லுறா." "தம்பி நகுலா.. நேரடியா கவே நான் சொல்லுகிறன்." "பிள்ளையின் போட்டோ இருக்கு.. இந்தாங்க அம்மா நீங்க ளும் பாருங்க." போட்டோவில் பிள்ளை நல்ல வடிவாக இருந்தாள். நகுலனும் பார்த்தான். அவனுக்கு பிடித்துப் போனது.

"என்னடா நகுலா பிடிச்சிருக்காடா?" கண்ணன் கேட்டான். நகுலன் எதுவும் பேசல்ல. வீட்டார் கூறியதை சொல்லிப் போட்டன். தம்பி உங்க வீட்டுக்கு செலவுக்கும் இரண்டு லட்சம் தருவார்கள். தம்பி உங்க போண் நம்பரை தாங்க பிள்ளை கேட்டாள். தம்பியோடு கதைக்க வேணுமாம்.

வீடியோ மூலம் கதைப்பாள். தம்பியின் சாத கத்த தாங்க நான் சுவீஸ்க்கு மெயில் பண்ண வேணும். எல்லாம் ஓ. கே. என்றால் மற்றவற் றைப் பற்றி அவங்க சொல்லுவினம்."

மறு நாள் இரவு சுவீஸ்சில் இருந்துவீடியோ கோல் நகுலனுக்கு வந்தது. வீடியோவுக்குள் வந்தான் நகுலன். அழகான பெண்..தான் வீடி யோவில்வந்தாள்.

"ஹலோ.. நீங்க நகுலன் தானே." "ஓ மோம்.. நகுலன்தான் கதைக்கிறன். நீங்கள்..?"

"ஓ.. நான் முதலில் சொல்லி இருக்கவே ணும். சொரி.. நான் வனிதா.. கதைக்கிறன். என்னுடைய திருமண விடயமாகத்தான்.. நேற்று உங்கள் வீடு வந்த புறோக்கர் கந்தையா அங்கிள் உங்கள் போண் நம்பரை எனக்கு அனுப்பியவர்." "ஓ..அப்படியா... என்னுடன் அம்மாவும் இரு தங்கைகளும் இருக்கின்றனர். அப்பா இல்ல. நான் வங்கியில் வேலை பார்க் கிறன். மற்றைய கல்யாண விடயங்கள் எல்லா வற்றையும் உங்களுக்கு புறோக்கர் சொல்லி யிருப்பார். உங்கள் சாதகம் என் சாதகத்துடன் நன்றாக பொருந்தியிருக்கு..நகுலன்."

"ஓ.கே. வனிதா.. சொல்லுங்க."

"பல வரன்கள் எனக்கு பார்த்தும் சாதகம் பொருந்தி வரல்ல. உங்கசாதகம் பொருந்தி வந்தது மட்டுமல்ல உங்களை வீடியோவில் பார்த்த பின் இப்போ உங்களையும் எனக்குப் பிடிச்சிருக்கு. சரி உங்களுக்கு என்னைப் பிடிச் சிருக்கா..?"

வீடியோவில் வந்த வனிதா பார்க்க நல்ல அழகியாக இருந்தாள். சற்று பருமன்தான்.. எனினும் பார்ப்பவர்களை சுண்டியிழுக்கும் அழகு.. அவளிடம் இருந்தது. அவள் அழகில் நகுலனும் மயங்கி விட்டான்.

"உங்கள யாருக்காவது பிடிக்காமல்போ குமா? நீங்கள் அழகாகவும் இருக்கிறீர்கள்.. போட்டோவில் கூட அதை விட அழகாகாக இருந் தீர்கள். நான் உங்கள் போட்டோவை முன்பே பார்த்தேன் வீடியோவில் இன்னும் அழகுதான் நீங்க.. எனக்கும் ஓகேதான்."

"நகுலன்.. இனி கல்யாண ஒழுங்குகள் செய் வதில் பிரச்சினை ஏதும் இல்லைஎன நினைக்கி றன்."

"ஓம் வனிதா..இனி பிரச்சினை எதுவும் இல்ல.நீங்க ஒழுங்குகள செய்யுங்க."

கல்யாண காரியங்கள் எல்லாம் துரிதமாக நடை பெற்றன. நகுலனை அடிக்கடி புறோக்கர் வந்து சந்தித்தார். வனிதாவும் அடிக்கடி வீடியோ வில் வந்து நகுலனோடு கதைத்தாள். "நாங்கள் சுவீஸ்சில் இருந்து இந்த மாதம் ஐந்தாம் திகதி சிறிலங்கா வாறம். இருபது நாட்கள் அங்கு நாங்கள் இருப்போம்..வரும் இருப தாம் திகதி தீர்மானித்த படி திருமணம் நடக் கும். புறோக்கர் மூலம் எல்லா ஏற்பாடுகளும் செய்தாயிற்று நகுலன் சரிதானே. புறோக்கர் உங்கள சந்திப்பார். உங்களுக்கு எல்லா உத விகளும் ஒத்தாசைகளும் செய்வார்.நாங்கள் அங்கு வரும் போது திருமணப் பத்திரிகையை யும் கொண்டு வருகிறோம். வனிதா எல்லாவற் றையும் சொல்லி முடித்தாள்.

நகுலனைச் சந்தித்த புறோக்கர் கந்தையா, "கல்யாணம் கல்முனை சிவகாமி மண்டபத்தில் நடக்கும். கல்முனை பிள்ளையார் ஆலயத்தில் திருமாங்கல்யம் நிகழ்வு நடைபெறவும் ஒழுங்கு செய்தாயிற்று.

தம்பி இந்த கவரில் பணமிருக்கு. வனிதா மேடம் சொன்னபடி அனுப்பி இருந்தாங்க. இது உங்கள் செலவுக்கு" சொல்லி முடித்தார் கந்தையா.

வனிதா சொன்னது போலவே சிறிலங்கா வந் தனர் வனிதா குழுவினர். வனிதாவின் தாயும் கூடவே அவளது இருதங்கைகளும் வந்தவர்க ளில் அடங்குவர். அன்று மாலை கல்முனையில் உள்ள நகுலனின் சித்தியின் இல்லத்தில் வந்த வர்கள் சந்தித்து கதைத்தனர். நகுலனின் தாய் உள்ளிட்டோரும் உறவுகளும் கலந்து கொண்ட னர்.'அத்தை..' என உரிமையுடன் நகுலனின் தாய் பூமணியை அழைத்த வனிதா. ."தாலி, கூறைப் புடவை எல்லாமே இந்தப் பெட்டியில் இருக்குது அத்தை.முறைப்படி நீங்கள் கோயி லுக்கு கொண்டு வாருங்கள் என்றாள். திட்டமிட டியே கோயிலில் திருமணம் நடைபெற்றதோடு.. சிவகாமி மண்டபத்தில் விருந்துபசாரங்களும் நிறைவாக நடந்து முடிந்தன.

நகுலன் வனிதா திருமணம் முடிந்து இரு நாட்கள் கடந்தன. அவர்கள் கல் முனையில் உள்ள உறவினர் வீடொன்றில் தங்கியிருந்த னர். "சரி வனிதா.. கல்யாணம் முடிந்த உடனே முதலில் எங்கள் வீட்டுக்கு போய் இருக்க வேணும். நேரமும்நாளும் சரிவரல்ல.

இன்றைக்கு வீட்டுக்கு வருவதாக தகவல் சொல்லிவிட்டன். நாளும் நல்லா இருக்குவ னிதா." "இன்றைக்கு நல்ல நாள்தான் நகுலன். நாம் போவதற்கு வேன் வரும்."

"சரி வனிதா நான் சுவீஸ் வரும்.. ஒழுங் குகள் பற்றி ஒன்றும் இன்னும் சொல்லவே யில்லையே."

"அது ஒரு பிரச்சினையுமில்ல. நேற்றுடன் நாங்கள் வந்து பதினைந்து நாட்கள் முடிந்து விட்டன. 25 ந் திகதி நாங்க 'பிளைட்'. நாங்கள் சுவீஸ் போன பிற்பாடு, அடுத்த மாதம் முடிவதற் குள் நீங்களும் அங்கு வந்து விடலாம். விஸா.. டிக்கட் எல்லாமே உங்களுக்கு ஒரு வாரத்துக் குள் அனுப்பி விடுவோம்."

"ஓ.கே. வனிதா. சுவீஸ் போகும் எனது கனவும் நம்திருமணம் மூலம் கிடைத்திருப்பது மகிழ்ச்சிதான்."

"நீங்கள் குடும்பதுக்காக வாழ்ந்தது பற்றி.. எல்லாமே புறோக்கர் சொன்னவர் நகுலன். இனி உங்கள் குடும்பமும் என் குடும்பம்தான்.

நீங்க சுவீஸ் வந்த பின்னர் இன்னமும் நிறையவே குடும்பத்துக்கு செய்யலாம். இனி கவலைப்பட வேணாம்."

நகுலனின் வீடு சென்ற தம்பதியினர் பெரும் வரவேற்பு கண்டு மகிழ்ந்து போயினர். மதிய விருந்து முடிந்து நகுலன் உறவுகளுடன் அவர்கள் உறவாடி பிற்பகல் ஐந்து மணிக்குப் பின்னரே கிராமத்திலிருந்து கல்முனை வீடு வந்து சேர்ந்தனர்.

வனிதா சுவிஸ் புறப்படுவதற்கான நாளும் வந்தது. "நாளைக்குநானும் உங்கள வழிய னுப்ப கொழும்பு வாறன் வனிதா." என்றதும், "நகுலன்..நீங்க வந்து திரும்புவது எல்லாம் உங் களுக்கு கஷ்டமாக இருக்கும்.நீங்கள் கொழும்பு வர வேண்டாம்." என்றாள் வனிதா. அது சரியெ னப் பட்டது நகுலனுக்கு அன்று மாலை வனிதா குழுவினர்.. நகுலனிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு கொழும்பு போய் அன்று அதிகாலை யில் சுவீஸ் பயணமாகினர். வனிதா மகிழ்வோடு காணப்பட்டாள். கழுத்தில் தாலி, நெற்றியில் குங் குமம் புதுப்பெண்ணாக பயணமானாள். சுவீஸ் போனவுடன் வீடியோ கோலில் கதைத்தாள்.

"நகுலன் நீங்க சுகமா. நாங்க சுவுஸ் வந்து சேர்ந்து விட்டோம்." "ஓ.கே..வனிதா நான் சுகமாக இருக்கன்." "சரி நகுலன் எனக்கும் வேலை அதிகமாய் இருக்கு. இரவுக்கு கோல் எடுக்கன்."

அன்று.. இரவு வனிதாவிடமிருந்து அழைப் புசிறுகதைவரும் என நடு இரவு வரை விழித்து

இருந்தான். அழைப்புவரவில்லை. காத் திருந்தான் நகுலன்.. ஒரு வாரம் கழிந் தது. அழைப்பு வரவேயில்லை. ஒரு மாதம் உருண்டோடியது. வனிதா அழைப்பு எடுக் கவேயில்லை. நம்பிக்கை இழந்தவனாக நகுலன் வனிதாவுக்கு அழைப்புஎடுத்தான். ரிங்..போய்க் கொண்டிருந்தது. வனிதா.. எடுக்கவே இல்லை. பலதடவை முயற்சித் தான். பயனற்றுப் போனது. நண்பன் கண் ணனுடன் புறோக்கர் கந்தையாவை தேடிப் போனான் நகுலன். கந்தையனை கண்டு பிடிக்கவே முடியவில்லை. ஆறுமாதங்களா கின.. வனிதாவிடம் இருந்து எந்தத் தகவலும் இல்லை. நகுலன் இன்னும் நம்பிக்கையோடு காத்திருந்தான். நல்ல பதில் வரும் என்று. ஆனால் மாதங்கள் தான் கடந்து கொண்டிருந் தன. நகுலனின் நம்பிக்கை கொஞ்சம் கொஞ்ச மாக கரையத் தொடங்கியது.

ஒரு மாதத்தில் சுவீஸ் பயணம்.. அதற்காக ஒரு திருமணம். அவன் ஏமாந்து போனான். ஊரில் பலரின் கேலிப் பேச்சுக்கள்.. தாங்க முடி யல்ல.

(15 பக்கம் பார்க்க)

வெல்லாவெளி **விவேகானந்தம்** ...✍

"என்னால முடியும்.. நான் கட்டாருக்கு போகத்தான் போறன். அம்மா என் சினேகி தன் குமரன் உதவிசெய்வதாக சொல்லி இருக் கான். கொஞ்சம் காசு வேணும். சிவலிங்கம் வட்டிக்கு காசு கொடுக்கிறவன். அவனிடம் கேட் டிருக்கன். நான் கட்டார் போனபின் வட்டியோட திருப்பிக் கொடுக்கவேணும். இனி என்னை தடுக்கவேணாம்.. அம்மா." என்றவன் வெளி நாடு போவதில் சுறுசுறுப்பானான். கட்டார் போன நகுலன். பத்து வருடங்கள் கஷ்டப்பட்டு உழைத்தான். சிவலிங்கத்தின் பணத்தை வட் டியோடு ஒரு வருடத்திலேயே கொடுத்து முடித் தான். தங்கை குமுதினியை கலைவாணி மகாவித்தியாலத்தில் ஏ.எல் வரை படிப்பித்து பல்கலைக்கழகம் அனுப்பி பட்டதாரியாக்கி அழகு பார்த்தான். விரலுக்கேற்ற வீக்கம் என்று சொல்வது போல அழகான அளவான ஒரு கல் வீட்டை கட்டி முடித்தான். தன் தம்பி குமர னுக்கு ஏ.எல் முடித்த பின் பல்கலை அனுமதி கிடைக்காமல் போக வெளிவாரி பட்டத்தை பெற்றுக் கொள்ள வழி செய்தான். தங்கைக்கு முகாமைத்துவ அதிகாரி பதவி கிடைத்ததும் பூரித்துப் போனான். விடுமுறையில் வீடு வந்த நகுலன்.. தங்கைக்கு திருமண பேச்சு எழுந்த போது "அம்மா மூணு மாதம் லீவு இருக்கு. நீங்க கவலைப் படாதிங்க. அதை எல்லாம் நான் பார்க்கிறன். அம்மா." என்று கூறினான். மூன்று மாதத்திற்குள் தங்கள் உறவினன் நவநீதன் ஆசிரியர் வீடு சென்று பேசி திரும ணமும் செய்து வைத்தான். நகுலன் படித்தது பத்தாம் வகுப்புத்தான். என்றாலும் அவனது செயற்பாடுகள் அவனுக்கு அந்த சமூகத்தில் தனிப் பெறுமானத்தைப் பெற்றுக் கொடுத்தி ருந்தது.

நகுலனின் நல்லொழுக்கம்.. அவனின்கு டும்பப் பொறுப்புணர்வு கண்டு அவருக்கு பெண் கொடுக்க பலர் முன்வந்தனர். ஆனால் நகுலன் அதைக் கண்டு கொள்ள வில்லை. திருமணத்துக்கு அம்மா நச்சரித்துக் கொண்டே இருந்தாள் "அம்மா எனக்கு இப்ப கல்யாணம் செய்யும் எண்ணமே இல்ல. வெளிநாட்டில் கல்யாணப் புறோக்கர்.. தான் கல்யாணம் விட யமாக கதைத்தவர். உனக்கு அவர் சொன்ன அத்தனை தகுதிகளும் பொருந்தி வருகுதடா. அதுதான் நான் உன்னிடம் கதைக்க வந்தன். எனக்கும் அது நல்லதாகப் பட்டது. வயதைப் பற்றியே பிரச்சினையே இல்லடா. நீ..ஓ.கே சொன்னால் கல்யாணம் முடிந்து ஒரு மாதத் தில சுவீஸ் போகலாம்."

"என்னடா சொல்லுறா...?" "மச்சான் நகுலா.. உன்னிடம் சர்வதேச பாஸ்போர்ட் இருக்காடா சொல்லு. இல்லாவிட்டால் நீ உடனே 'சர்வதேச' பாஸ்போர்ட எடுக்க வேணும்." "என்னிடம் அதுதான் இருக்கு. அதுசரி..என்னடா நீயே கதைத்துக் கொண்டு போகிறாய். எனக்கு தலை கால் எதுவும் புரி யல்ல."

"சரிடா..இப்ப சொல்லறன் கேள்.. வடிவான பெட்டையாம். அவளுக்கு வயது 38, நீண்ட காலமாக அவள் பெற்றாரோடு வசிக்கிறாள்.

அவளது சொந்தங்கள் எல்லாருமே சுவீஸில் தானாம். கல்யாணம் முடிந்து ஒரு மாதத்தில் நீ சுவீஸ் போகலாம். தாலி கூறை உள்ளிட்ட கல்யாணச் செலவுகளுக்கு அவர் களே பொறுப்பு. உனக்கும் கல்யாண செல வுகளுக்கு காசு தருவார்கள். இவ்வளவுதான் புறோக்கர் என்னிடம் சொன்ன விடயங்கள்." மூச்சு விடாமல் சொன்னான் கண்ணன்.

"மச்சான் நகுலா இப்ப புரியுதா. உனக்கு விருப்பம் எண்டால் சொல்லு. ஆனால் உன் சாதகம் வேணும். பின்னேரம் நான் ஊரில் சந்திக்கிறன். எனக்கு அவசரமாக போக வேணும்." கண்ணன் கிளம்பிப்போய் விட்டான். கல்யாணமே வேண்டாம் என்றி ருந்த நகுலனுக்கு சுவீஸ் போகும் கனவு இருந்தது என்னவோ உண்மைதான். ஆனால் காசுப் பிரச்சினையால் அவன் கனவு கனவா கவே இருந்தது. இப்போது அவனது சுவீஸ் கனவு கல்யாண வடிவத்தில் வர மனம் சலனப் படத் தொடங்கியது.

மகிழ்வான எண்ணங்கள் வந்து வந்து போனது.. மாலை வீடு சென்றவனுக்கு அங்கு பார்த்தேன் வீடியோவில் இன்னும் அழகுதான் நீங்க.. எனக்கும் ஓகேதான்."

"நகுலன்.. இனி கல்யாண ஒழுங்குகள் செய் வதில் பிரச்சினை ஏதும் இல்லைஎன நினைக்கி றன்."

"ஓம் வனிதா..இனி பிரச்சினை எதுவும் இல்ல.நீங்க ஒழுங்குகள செய்யுங்க."

கல்யாண காரியங்கள் எல்லாம் துரிதமாக நடை பெற்றன. நகுலனை அடிக்கடி புறோக்கர் வந்து சந்தித்தார். வனிதாவும் அடிக்கடி வீடியோ வில் வந்து நகுலனோடு கதைத்தாள். "நாங்கள் சுவீஸ்சில் இருந்து இந்த மாதம் ஐந்தாம் திகதி சிறிலங்கா வாறம். இருபது நாட்கள் அங்கு நாங்கள் இருப்போம்..வரும் இருப தாம் திகதி தீர்மானித்த படி திருமணம் நடக் கும். புறோக்கர் மூலம் எல்லா ஏற்பாடுகளும் செய்தாயிற்று நகுலன் சரிதானே. புறோக்கர் உங்கள சந்திப்பார். உங்களுக்கு எல்லா உத விகளும் ஒத்தாசைகளும் செய்வார்.நாங்கள் அங்கு வரும் போது திருமணப் பத்திரிகையை யும் கொண்டு வருகிறோம். வனிதா எல்லாவற் றையும் சொல்லி முடித்தாள்.

நகுலனைச் சந்தித்த புறோக்கர் கந்தையா, "கல்யாணம் கல்முனை சிவகாமி மண்டபத்தில் நடக்கும். கல்முனை பிள்ளையார் ஆலயத்தில் திருமாங்கல்யம் நிகழ்வு நடைபெறவும் ஒழுங்கு செய்தாயிற்று.

தம்பி இந்த கவரில் பணமிருக்கு. வனிதா மேடம் சொன்னபடி அனுப்பி இருந்தாங்க. இது உங்கள் செலவுக்கு" சொல்லி முடித்தார் கந்தையா.

வனிதா சொன்னது போலவே சிறிலங்கா வந் தனர் வனிதா குழுவினர். வனிதாவின் தாயும் கூடவே அவளது இருதங்கைகளும் வந்தவர்க ளில் அடங்குவர். அன்று மாலை கல்முனையில் உள்ள நகுலனின் சித்தியின் இல்லத்தில் வந்த வர்கள் சந்தித்து கதைத்தனர். நகுலனின் தாய் உள்ளிட்டோரும் உறவுகளும் கலந்து கொண்ட னர்.'அத்தை..' என உரிமையுடன் நகுலனின் தாய் பூமணியை அழைத்த வனிதா. ."தாலி, கூறைப் புடவை எல்லாமே இந்தப் பெட்டியில் இருக்குது அத்தை.முறைப்படி நீங்கள் கோயி லுக்கு கொண்டு வாருங்கள் என்றாள். திட்டமிட டியே கோயிலில் திருமணம் நடைபெற்றதோடு.. சிவகாமி மண்டபத்தில் விருந்துபசாரங்களும் நிறைவாக நடந்து முடிந்தன.

நகுலன் வனிதா திருமணம் முடிந்து இரு நாட்கள் கடந்தன. அவர்கள் கல் முனையில் உள்ள உறவினர் வீடொன்றில் தங்கியிருந்த னர். "சரி வனிதா.. கல்யாணம் முடிந்த உடனே முதலில் எங்கள் வீட்டுக்கு போய் இருக்க வேணும். நேரமும்நாளும் சரிவரல்ல.

இன்றைக்கு வீட்டுக்கு வருவதாக தகவல் சொல்லிவிட்டன். நாளும் நல்லா இருக்குவ னிதா." "இன்றைக்கு நல்ல நாள்தான் நகுலன். நாம் போவதற்கு வேன் வரும்."

"சரி வனிதா நான் சுவீஸ் வரும்.. ஒழுங் குகள் பற்றி ஒன்றும் இன்னும் சொல்லவே யில்லையே."

"அது ஒரு பிரச்சினையுமில்ல. நேற்றுடன் நாங்கள் வந்து பதினைந்து நாட்கள் முடிந்து விட்டன. 25 ந் திகதி நாங்க 'பிளைட்'. நாங்கள் சுவீஸ் போன பிற்பாடு, அடுத்த மாதம் முடிவதற் குள் நீங்களும் அங்கு வந்து விடலாம். விஸா.. டிக்கட் எல்லாமே உங்களுக்கு ஒரு வாரத்துக் குள் அனுப்பி விடுவோம்."

"ஓ.கே. வனிதா. சுவீஸ் போகும் எனது கனவும் நம்திருமணம் மூலம் கிடைத்திருப்பது மகிழ்ச்சிதான்."

"நீங்கள் குடும்பதுக்காக வாழ்ந்தது பற்றி.. எல்லாமே புறோக்கர் சொன்னவர் நகுலன். இனி உங்கள் குடும்பமும் என் குடும்பம்தான்.

நீங்க சுவீஸ் வந்த பின்னர் இன்னமும் நிறையவே குடும்பத்துக்கு செய்யலாம். இனி கவலைப்பட வேணாம்."

நகுலனின் வீடு சென்ற தம்பதியினர் பெரும் வரவேற்பு கண்டு மகிழ்ந்து போயினர். மதிய விருந்து முடிந்து நகுலன் உறவுகளுடன் அவர்கள் உறவாடி பிற்பகல் ஐந்து மணிக்குப் பின்னரே கிராமத்திலிருந்து கல்முனை வீடு வந்து சேர்ந்தனர்.

வனிதா சுவிஸ் புறப்படுவதற்கான நாளும் வந்தது. "நாளைக்குநானும் உங்கள வழிய னுப்ப கொழும்பு வாறன் வனிதா." என்றதும், "நகுலன்..நீங்க வந்து திரும்புவது எல்லாம் உங் களுக்கு கஷ்டமாக இருக்கும்.நீங்கள் கொழும்பு வர வேண்டாம்." என்றாள் வனிதா. அது சரியெ னப் பட்டது நகுலனுக்கு அன்று மாலை வனிதா குழுவினர்.. நகுலனிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு கொழும்பு போய் அன்று அதிகாலை யில் சுவீஸ் பயணமாகினர். வனிதா மகிழ்வோடு காணப்பட்டாள். கழுத்தில் தாலி, நெற்றியில் குங் குமம் புதுப்பெண்ணாக பயணமானாள். சுவீஸ் போனவுடன் வீடியோ கோலில் கதைத்தாள்.

"நகுலன் நீங்க சுகமா. நாங்க சுவுஸ் வந்து சேர்ந்து விட்டோம்." "ஓ.கே..வனிதா நான் சுகமாக இருக்கன்." "சரி நகுலன் எனக்கும் வேலை அதிகமாய் இருக்கு. இரவுக்கு கோல் எடுக்கன்."


அன்று.. இரவு வனிதாவிடமிருந்து அழைப் புசிறுகதைவரும் என நடு இரவு வரை விழித்து

இருந்தான். அழைப்புவரவில்லை. காத் திருந்தான் நகுலன்.. ஒரு வாரம் கழிந் தது. அழைப்பு வரவேயில்லை. ஒரு மாதம் உருண்டோடியது. வனிதா அழைப்பு எடுக் கவேயில்லை. நம்பிக்கை இழந்தவனாக நகுலன் வனிதாவுக்கு அழைப்புஎடுத்தான். ரிங்..போய்க் கொண்டிருந்தது. வனிதா.. எடுக்கவே இல்லை. பலதடவை முயற்சித் தான். பயனற்றுப் போனது. நண்பன் கண் ணனுடன் புறோக்கர் கந்தையாவை தேடிப் போனான் நகுலன். கந்தையனை கண்டு பிடிக்கவே முடியவில்லை. ஆறுமாதங்களா கின.. வனிதாவிடம் இருந்து எந்தத் தகவலும் இல்லை. நகுலன் இன்னும் நம்பிக்கையோடு காத்திருந்தான். நல்ல பதில் வரும் என்று. ஆனால் மாதங்கள் தான் கடந்து கொண்டிருந் தன. நகுலனின் நம்பிக்கை கொஞ்சம் கொஞ்ச மாக கரையத் தொடங்கியது.

ஒரு மாதத்தில் சுவீஸ் பயணம்.. அதற்காக ஒரு திருமணம். அவன் ஏமாந்து போனான். ஊரில் பலரின் கேலிப் பேச்சுக்கள்.. தாங்க முடி யல்ல.

(15 பக்கம் பார்க்க)

பசிக்குத் தெரியாது பாதை



கடந்த ஜூலை 10, தியாகத் திருநாள் (ஹஜ்ஜுப் பெருநாள்) கொண்டாட்டத் திற்குப் பிறகு மற்றுமொரு நிகழ்வு அதே மாளிகாவத்தைப் பகுதியில்.

அதனால், உங்களை மீண்டும் அங்கே மறுபிர வேசம் செய்ய விழைகிறேன்.

இந்தப் பகுதியில் பெரிய பள்ளிவாசல் என்ற தொழுகைப்பள்ளி அமைந்துள்ள பாதையிலே மிகவும் நீண்டது. 'ஜும்ஆ மஸ்ஜித் வீதி' என்ற அழகுப் பெயர்.

அங்கே இருபுறத்திலும் உணவகங்களும், பல சரக்குக் கடைகளும் நடைபாதை வியாபாரங்க ளும் நிறைய நிறைய.

இன்று அந்த வீதியில் புலனாய்வு ஊடகக்கா ரன் எனக்கு ஒரு முக்கிய வேலை உள்ளது.

அதோ. அதோ

காலை இளம் பொழுதில் அழகான ஒரு சிட்டுக் குருவியை சின்னஞ்சிறு பாடசாலைப் பெண் பிள்ளையை — பாடப்புத்தகப்பை தொங்க, அவள் கையை இறுகப் பற்றிய வண்ணம் பர பரப்பாய் அழைத்துச் சென்று கொண்டிருக்கி றானே தகப்பன் இல்யாஸ், அந்த நடுத்தர வய துக்காரனை நான் பின் தொடர வேண்டும்!

இது ஒரு வேண்டாத வேலை! இருந்தாலும் என் புலனாய்வு ஊடகப்பணி அப்படிச் செய்ய வைக்கிறது.

ஏதோ ஓர் உள்ளுணர்வு அவன் நடவடிக்கை களை அவதானிக்க என்னை உந்துகிறது.

அந்தச் சிறிய 'அவசர அவசர' உணவுக்க டையை நோக்கியே தன் செல்ல மகளுடன் அவன் வேக நடை! கையில் ஒரு பையும் வைத் திருக்கிறான்.

அந்தக் கடையோ ஏழை பாழைகளுக்கு என்றே உண்டானது. விலை மலிவு. அதே சமயம் தரமானவை.

கடைக்கு ஒரு பிரசித்தியான அறபு கலந்த ஆங்கிலப் பெயர்.

கடை முன் குழுமியிருந்த சாமான்ய மனிதப் பிறவிகளின் முண்டியடிப்புடன் இல்யாசும் குழந் தையுடன் இணைவு.

நானோ ஓர் ஓரத்தில் ஒதுங்கி நின்று அவதா னம்.

அவனது சின்னஞ்சிறு சிட்டுக்குருவி சில உணவு வகைகளைச் சுட்டிக் காட்டுவதை என்னால் பார்க்க முடிகிறது.

ஆனால்? ஆனால்?

அவன் நிலைமையை அல்லாஹ் ஒருவனே அறிந்தவன். நானும் பின்னரே புரிந்தேன்.

ஆங்கிலத்தில் சொல்வதே ஏற்புடையது. தமிழில் தயங்குகிறேன்.

இல்யாஸ் ஒரு 'எம்ப்டி பொக்கட்'!

ஆனாலும் மகளுடன் வந்திருக்கிறான் ஏதோவொரு துணிவான முடிவில்.

கூட்டமோ அச்சிறு கடையில் அலைமோதுகி றது.

அவன் அங்கிருந்து பிள்ளையை புகழ்பெற்ற 'தாருஸ்ஸலாம்' மகா வித்தியாலயத்திற்குத் தாமதம் ஏற்படாமல் கொண்டு சேர்க்கவும் வேண்டும்.

திடீரென ஆள் நின்ற இடத்தில் இல்லை!

என் கழுகுப் பார்வைக்குத் தப்பி மாயம்!

கொஞ்சம் பொறுமை காக்கிறேன்.

அதோ அதோ! மீண்டும்!

அக்கூட்டத்தின் மத்தியில் ஆசாமி! சிலர் அவனை ஒதுக்கித் தள்ளி வெளியேற்றுவதும் புலப்படுகிறது.

அவனுக்கும் அதுவே அவசிய உதவியாகவும் தென்படுகிறது.

ஆம். கணிப்புச் சரி! ஒரு கையால் பிள்ளை யைப் பற்றிப் பிடிக்க, மற்றொன்றால் உணவுப் பையை இறுக்கிக் கொண்டு கடை வாசலிலி ருந்து அகன்று பாதையைக் கடக்க முற்படுகி றான்.

அதே சமயம் அவன் எதிர்பாராததும், அவனும் நானும் நினைத்திராததும் நடக்கிறது.

ஒருவர் உரத்து அழைக்கிறார் அவன் மகளாரை!

"மவள். மவள். வாப்பாவக் கொஞ்சம் நிக்கச் சொல்லுங்கோ!"

அந்தக் குரல், அந்த கடை உரிமையாளரின் குரல்! பக்கீர் அஹமது!

"உங்கட வாப்பா மிச்ச சல்லி வாங்காம ஓடுராரு"

இல்யாஸின் பிள்ளை திருதிரு வென விழிக்கிறது.

"மிஸ்டர், உங்களத்தானே. பெலன்ஸ் வாங்காமப் போறீங் களே, இந்தாங்க புடிங்க, மிச்ச சல்லிய!

இல்யாஸ் தடுமாற்றம். திகைப்போ திகைப்பு!

"என்ன பெலன்ஸ் பக்கீர் நாநா?

"நல்ல கதை பேசுறீங்கோ, பெரிய அஞ்சாயிரம் நோட்டைத் தந்திட்டு மிச்ச சல்லி எடுக்காமப் போறிங்களே மிஸ்டர்! இந்தாங்க மவள், நீங்க எடுங்கோ.. வாப்பாக் கிட்ட பத்திரமாக் குடுங்கோ."

பக்கீர் நாநா பிள்ளையின் வலது கரத்தை வலிந்து பிடித்திழுத்து ரூபாய் நோட்டுக்களைத் திணிக்கி றார்.

சிட்டுக்குருவிக்கு என்னதான் புரியும்?

அ

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



ஈழத்து நவீன இலக்கிய முன்னோடிகள் 18

மூத்த எழுத்தாளர் தி. ஞானசேகரன்

ஈழத்து தமிழ் நாவலுக்கு புதிய பரிமாணத்தை கொடுத்தவர்

ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம் என்ற தனது ஆய்வுநூலில் கலாநிதி நா. சுப்பிரமணியன் இளங்கீரனது நாவல் இலக்கியப் பங்களிப்பு பற்றிப் பின்வருமாறு விபரித்துள்ளார்:

'ஐம்பதுகளில் ஈழத்துத் தமிழ் நாவலுக்குப் புதிய பரிணாமத்தைக் கொடுத்தவர் என்ற வகையில் இளங்கீரன் வரலாற்று முக்கியத்துவம் உடையவராகின்றார். ஏறத்தாழ இருபது நாவல்களை எழுதிச் சாதனை புரிந்தவர் என்ற வகையில் மட்டுமல்லாது சமூகப் பிரச்சினைகளுக்கான அடிப்படைகளை அணுகி தீர்வுகூற விழைந்த முதல் நாவல் ஆசிரியர் என்ற வகையிலும் ஈழத்துத் தமிழ் நாவலுக்குத் தேசியச் சாயல் தரமுயன்ற முதல்வர் என்ற வகையிலும் இவருக்குச் சிறப்பானதோர் இடமுண்டு. இவரால் ஈழத்தைக் களமாகக் கொண்டு எழுதப்பட்ட பத்துத் தொடர் நாவல்களில் நூல்வடிவம் பெற்றவை தென்றலும் புயலும் (1955) நீதியே நீ கேள்! (1959) இரண்டுமாகும்.

தென்றலும் புயலும், நீதியே நீ கேள்! இரண்டும் சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளின் பகைப்புலத்திற் காதலைப் பொருளாகக் கொண்டு எழுதப்பட்டவை. முதலாவது நாவலிற் சாதியை மீறிய காதலும் இரண்டாவது நாவலில் இனத்தை மீறிய காதலும் வெற்றி பெறுகின்றன. இரண்டிலும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்குட்பட்ட காதல்கள் தோல்வியடைகின்றன.

யாழ்ப்பாணத்தில் உயர் சாதியைச் சேர்ந்த பாலுவின் குடும்பம் வீட்டை ஏலத்தில் இழந்து அல்லலுறுகின்றது. வேலை தேடிக் கொழும்புக்குச் சென்ற பாலு அங்கு பணக்காரப் பெண்ணான மனோன்மணியைக் காதலித்து உடலுறவும் கொள்கிறான். அந்தஸ்த்து வேறுபாட்டால் மனோன்மணி வேறொருவனுக்கு மனைவியாகிறாள். பாலு காதல் தோல்வியால் மன முடைந்து வருந்துகிறான். பாலுவின் தங்கை தங்கம் தாழ்த்தப்பட்ட சாதியினன் எனப்படும் பூபதியைக் காதலித்துப் பலத்த எதிர்ப்புகளுக் கிடையில் மணம் புரிந்து கொள்கிறான். பாலுவும் தந்தையும் மனத்துயர் தாழாமல் மரணமடைகின்றனர். தென்றலும் புயலும் நாவலின் இக் கதைப்போக்கில் ஆசிரியரின் குரலாக நடராசன் என்ற பாத்திரம் அமைகிறது. யதார்த்த சமூக நிலையை உணர்த்தும் சிந்தனையாளனாக இப் பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.

தாழ்த்தப்பட்டோர் எனப்படுவோர் மீது உயர்சாதியினரெனக் கூறப்படுவோர் கைக்கொள்ளும் அடக்குமுறை, வெறுப்பு மனப்பான்மை என்பனவும் பொருளாதார நிலையிலே தாழ்ந்த வேளையிலும் சாதிப்பிடிப்பை விட்டு நீங்கா மனவியல்பும் இந்நாவலில் காட்டப்படுகின்றன. தங்கம் தனது சாதியை மீறிப் பூபதியைக் கரம்பற்றுவதாகக் காட்டுவதன் மூலம் இளங்கீரன் தனது சமூக மாற்ற விருப்பத்தின்படியான தீர்ப்பை அவள்மீது சுமத்தியுள்ளார் எனலாம்.

தென்றலும் புயலும் நாவல் தொட்டுக் காட்டிய வர்க்கவேறுபாட்டை விரித்து வளர்த்துக் காட்டுவது நீதியே நீ கேள்! நாவல். இரண்டு நாவல்களிலும் சில பொதுப்பண்புகள் உண்டு. சமூக ஏற்றத்தாழ்வுகளையும் முரண்பாடுகளையும் பொதுவுடமைத் தத்தவத்தினூடாக அணுகித் தீர்வுகாண விழைகிறார் இளங்கீரன். தென்றலும் புயலும் நாவலில் அரும்பிய இக்கண்ணோட்டம் நீதியே நீ கேள்! நாவலில் விரிவடைந்து அடுத்து வந்த நாவல்களில் மேலும் தெளிவாக வற்புறுத்தப்படுவதைக் காணலாம் (பக் 6567;)

இளங்கீரன் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் தையல் தொழிலாளியான சுல்தான் மொஹிதீன் நாச்சியா தம்பதிகளின் புதல்வராகப் 04011927அன்று பிறந்தார். இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் முஹம்மது கலீல். இருந்தபோதிலும் இவர் வீட்டில் சுபைர் என்றே அழைப்பட்டார்.

1933இல் இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணத்திலுள்ள கிளினர் கல்லூரியில் கற்றார். இவரது காலில் ஏற்பட்ட சுகயீனம், பொருளாதார வசதியின்மை போன்ற காரணங்களால் 1940ஆம் ஆண்டில் ஏழாம் வகுப்புடன் பாடசாலைக் கல்வியை நிறுத்திக் கொண்டார்.

இவர் பிறந்தது முதல் இருபதாவது வயது வரை யாழ்பாணத்திலேயே வாழ்ந்தார். யாழ்ப்பாணத்தின் இயற்கைசூழல், சமூக அமைப்பு, சுரண்டல் சீர்கேடுகள் என்பவற்றோடு முக்கியமாக யாழ்ப்பாணத்தில் அன்றைய காலகட்டத்தில் நிலவிய சாதி அமைப்பு தீண்டாமை போன்ற மனித நேயத்திற்கெதிரான சமூகக் குறைபாடுகளையும் இவர் நன்கு அறிந்திருந்தார். அதனால் யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டு பல நாவல்களை பிற்காலத்தில் அவரால் எழுத முடிந்தது.

இளங்கீரன் 1947ஆம் ஆண்டில் மலேசியா சென்றார். இவரது தந்தை தொழில்தேடி ஏற்கனவே அங்கு சென்றிருந்தார். அங்குதான் இவர் முதன்முதலில் தனது எழுத்துப்பணியை இளங்கீரன் என்ற புனைபெயரில் ஆரம்பித்தார். அங்கு கோலாலம்பூரில் வெளிவந்த ஜனநாயகம் என்ற தினசரியில் இரண்டாவது உலக யுத்தத்தின்பின் உலகநிலை| என்ற கட்டுரையை எழுதினார். இந்தக் கட்டுரையே இளங்கீரனின் எழுத்துலகப் பிரவேசத்தின் கன்னி முயற்சியாகும். தொடர்ந்து பல அரசியல் கட்டுரைகளை எழுதினார்







அக்காலத்தில் இவர் இனமணி என்ற வார இதழுக்கு ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இவர் எழுதிய காரசாரமான அரசியற் கட்டுரைகள் அதிகாரவர்க்கத்தினருக்குப் பிடிக்காததால் கெடுபிடிகளுக்கும் நிர்ப்பந்தத்துக்கும் உள்ளாக்கப்பட்டார்; நாட்டைவிட்டு வெளியேறுமாறும் உத்தரவிடப்பட்டார்.

1950ஆம் ஆண்டு சென்னைக்குச் சென்றடைந்தார். அக்காலகட்டத்தில் தமிழ் இலக்கியத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளின் தாக்கம் பெரிதும் காணப்பட்டது. இவர் சென்னையில் இருந்தபோது வெளியிட்ட நாவல்கள் பெரும்பாலும் திராவிட முன்னேற்றக்கழகப் பாணியிலேயே அமைந்திருந்தன.

இவ்வாறு கடல்கடந்த நாடுகளில் தமது இலக்கிய வாழ்வின் முதற் கட்டத்தை முடித்துக் கொண்டு இளங்கீரன் 1954 ஆம் ஆண்டு இறுதியில் தாய்நாட்டுக்குத்திரும்பினார். இக்காலப்பகுதியை அடுத்து ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில் முதன்மை பெற்ற ஸ்தாபனமாக இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் செயற்பட்டது. 1954ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கத்தின் தோற்றத்திற்கு மூலகர்த்தாவாகவும் அதன் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவராகவும் இளங்கீரன் செயற்பட்டார. அத்தோடு 1955ஆம் ஆண்டில் யாழ். கிளைத் தலைவராகவும் செயற்பட்டார். இவரது நாவல்கள் பல இக்காலகட்டத்தில் தினகரன் பத்திரிகையில் தொடர்கதைகளாக வந்தன.

1961ஆம் ஆண்டில் இளங்கீரன் மரகதம் என்ற கலை இலக்கியத் திங்கள் இதழை வெளியிட்டார.; இச்சஞ்சிகை நான்கு இதழ்களுடன் நின்றுவிட்டது.

1960ஆம் ஆண்டில் இளங்கீரன் கொம்யூனிஸ்ட பத்திரிகையான தேசாபிமானியின் ஆசிரியராகப் பணியாற்றினார். 1965ஆம் ஆண்டு தொடக்கம் 1970 ஆண்டுவரை தொழிலாளி என்ற பத்திரிகைக்கும் 1971ஆம் ஆண்டு தொடக்கம் 1977வரை ஜனவேகம் என்ற பத்திரிகைக்கும் ஆசியராகக் கடமையாற்றியுள்ளார்.

1970ஆம் ஆண்டு தொடக்கம் 1973ஆம் ஆண்டுவரை மருதமுனையில் வாழ்ந்தார். 1973இலிருந்து 1987வரை கொழும்பில் வாழ்ந்த இளங்கீரன் 1987இல் நீர்கொழும்புக்கு தனது மூத்த மகளுடன் இடம் பெயர்ந்தார். பின்பு 1990ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தார்.

இவரது இலக்கிய முயற்சிகளுள் நாவல்களே பிரதான இடம் பெற்றுள்ளன.

இளங்கீரன் 1950ஆம் ஆண்டில் சில சிறுகதைகளை எழுதியுள்ளார். சில சிறுகதைகள் வானொலியிலும் ஒலிபரப்பப்பட்டன. இவரது 10 சிறுகதைகள் கொண்ட தொகுதி ஷநிறைவைத் தேடி| என்ற மகுடத்தில் வெளிவந்தது.

இளங்கீரன மேடை நாடகங்களையும் எழுதியுள்ளார். அவற்றுள் மூன்று நாடகங்கள் தடயம் என்ற பெயரில் 1992இல் நூலாக வெளிவந்தது.

வானொலிக்காக 12 நாடகள்வரை எழுதியுள்ளார். இவர் எழுதிய வானொலி நாடகங்ளில் ஐந்து நாடகங்களின் தொகுப்பு ஷவெறுங்கன வல்ல| என்ற தலைப்பில் நூலுருவம் பெற்றுள்ளது.

இளங்கீரன் இலங்கை வானெலியில் பல்துறை சம்பந்தமான உரைகளை ஆற்றியுள்ளார்.

இவர் எழுதிய கட்டுரைகள் சில நூலுருவம் பெற்றுள்ளன. அவையான, ஆணும் பெண்ணும் (1954) இலங்கையின் இரு மொழிகள் (1957) பாரதிகண்ட சமுதாயம் (1955) பேராசிரியர் கைலாசபதி நினைவுகளும் கருத்துக்களும் (1992) தேசிய இலக்கியமும் மரபுப் போராட்டமும் ஈழத்து முற்போக்கு இலக்கிய இயக்கமும் (1994) என்பனவாம்.

இளங்கீரனது பணிகளைப் பாராட்டி 1992இல் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு தாஜுல் இதீப் என்ற பட்டத்தையும் இந்து கலாசார அமைச்சு இலக்கியச் செம்மல் என்ற விருதினை வழங்கியது.

1993ஆம் ஆண்டு சுதந்திர இலக்கிய விழாவிலும் கௌரவிக்கப்பட்டார். மறைந்த பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் 80ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு 1996ஆம் ஆண்டில் விஷ்வ பிரசாதினி என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

(சுபைர் இளங்கீரன் பற்றிய விபரங்கள் திருமதி றாஹிலா எியாட் எழுதிய ஈழத்துப் புனைகதை உலகின் சாதனையாளர் என்ற கட்டுரையில் இருந்து பெறப்பட்டவை. அவருக்கு எனது நன்றி)

இளங்கீரன் 12 செப்டெம்பர் 1997இல் அமரரானார்.

இளமை ஊஞ்சலாடும் விறுவிறுப்பான தொடர்

இனியவனே என்று பாடி வந்தேன்!





ஜனரஞ்சக எழுத்தாளர்
மொழிவாணன்

ஜீவாவின் வீட்டைப் பற்றி பார்வதி ஞாபகப்படுத்தியதும்,

அவனது வீட்டைப்பற்றிய சிந்தனை அவன் மனத்திரையில் ஓடியது,

அவனது தாத்தா ஒரு விவசாயி.

அவனது அம்மா யசோதா

தங்கை குமுதா

அமைதியான அந்தக் கிராமத்தில்,

சிறிய ஒரு குடிசைக்கு சொந்தக் காரர்கள் அவர்கள்.

பலவிதமான பிரச்சினைகளுக்கு மத்தியில் சீவியத்தை ஓட்டிக் கொண்டிருக்கும் அவர்களைப் பற்றிய நினைவுகள் மிதந்து வந்ததும்,

அவனது இமைகள்,

ஈரம் கண்டன.

புறங்கையால் விழிகளைத் துடைத்துக் கொண்டான் ஜீவகன்,

அதே நேரம்,

தேநீர் கோப்பையைக் கொண்டு வந்து,

அவனிடம் கொடுத்துவிட்டு,

அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டாள் பார்வதி.

நாற்காலியில் அமர்ந்து கொண்ட அவன் ஏதோ பேச வாயெடுத்த போது,

பரபரப்புடன் உள்ளே நுழைந்தான் பிரேம்.

பிரேம்,

பார்வதிக்கும் சிவாவுக்கும் பிறந்த ஒரே மகன்.

அவன் ஒரு புகைப்படப்பிடிப்பாளன். எந்த நேரமும் கெமரா அவனது தோளில் தொங்கிக் கொண்டுதான் இருக்கும்.

பொரளையில் உள்ள ஒரு கெமரா கடையில் தான் அவன் வேலை செய்கிறான்.

எப்போதுமே அழகான உடைகளை அணிந்து கவர்ச்சியாக இருக்க விரும்பும் அவனுக்கும் ஜீவகனுக்கும் கிட்டத்தட்ட ஒரே வயதுதான்.

"என்ன அம்மாவும் மகனும் ரகசியமாக பேசிக்கொண்டிருக்கிறீங்க.... ஏதாவது சதித்திட்டமா?" உள்ளே நுழைந்த பிரேம் கேட்டான்.

"ம்... உனக்கெதிராகத்தான் சதி பண்ணுறோம். உன்னுடன் சேர்ந்து சதி பண்ணுறதுக்கு நீதான் வீட்டுல இருக்க மாட்டியே...!" ஒரு வித பாவனையுடன் சொன்னாள் பார்வதி.

"ஐயோ... அம்மா... நான் இல்லாட்டி என்ன... இதோ உங்களுக்குத்தான் ஒரு அருமை மகன் இருக்கிறானே!" சொல்லிவிட்டு,

கவர்ச்சியாகச் சிரித்தான் பிரேம்.

ஜீவகனும் மெல்ல சிரித்து படியே அவன் கையைப் பிடித்துக் கொண்டான்.

"ம்... அம்மா நான் உடனே அவசரமாகப் போகவேண்டும். பார்ட்டி இருக்கிறது அதை கவர்பண்ண வேண்டும்!"

"ம்... உனக் கென்னப்பா... பார்ட்டி என்பாய், இல்லைன்னா திருமணம் என்பாய்... ஒரே ஊர் சுத்துறது தானே உனது வேலை"...

"பார்ட்டிக்கு நானும் வரவாடா பிரேம்...?" ஆர்வமுடன் கேட்டான் ஜீவகன்.

"இல்ல... இல்ல... நீ எல்லாம் அங்க வரத்தேவ இல்லை!" என்று சொல்லியபடி,

விரைந்து உள்ளே சென்றான் பிரேம்.

பிரேம் அப்படிச் சொன்னதும்,

ஜீவிகனின் முகத்தில் ஒருவித மாற்றம் ஏற்பட்டது.

பார்வதியும் இதைக் கவனித்து விட்டாள்.

மெல்ல எழுந்து நின்ற ஜீவகன்,

எதிரில் இருந்த ஒரு துணைப்பிடித்த படியே,

தோட்டத்தை பார்த்துக் கொண்டிருந்தான்.

படாரென்று எழுந்து நின்ற பார்வதி,

விரைந்து நடந்து,

பிரேமின் அறைக்குள் நுழைந்தாள்.

வேறு ஒரு சட்டையை மாற்றிக் கொண்டிருந்த பிரேமின் கன்னத்தைப் பிடித்து கிள்ளி விட்டாள்.

"என்னம்மா.... இது...?" கன்னத்தைத் தடவிய படியே கேட்டான் பிரேம்

"என்னம்மான்னா கேக்குறாய்... நீ பேசுன வார்த்தை சரியாடா?" அதட்டலுடன் கேட்டாள் பார்வதி.

"என்ன வார்த்தை அம்மா?"

"என்ன வார்த்தை அம்மாவா... உனக்கு கூட்டிக் கிட்டு போக இஸ்டமில்லாட்டி அத நாகரீகம் சொல்லியிருக்கணும்!"

"நீங்க என்னம்மா சொல்றீங்க கொஞ்சம் புரியும் படிதான் சொல்லுங்க



மாட்டேன்.!"

"இந்தா பாரு பிரேம்... நீ அவன கொஞ்சம் அனுதாபத்தோடு பாருப்பா, சின்ன ஒரு விஷயத்துக்கு கூட அவன் சங்கடப் பட்டுப் போகிறான்!"

"சும்மா போங்கம்மா.... நீங்கதான் அவன தொத்த பபா வாக்கப்பார்க்கு றீங்க..."

"நீ ஒரு விஷயத்த மறந்துவிடாத பிரேம்... அவனோட அப்பா இல்லாட்டி உன் அப்பாவோட பொணத்த கூட நீ பார்த்திருக்க மாட்டா!"

பார்வதி இப்படிச் சொன்னதும்,

பிரேம் சிறிது நேரம் வரையில் எதுவுமே பேவில்லை.

அந்த ஞாபகம் அவனுக்கும் வந்தது.

அம்மா சொல்வதைப் போல் ஆயுட் காலம் பூராவும் மறக்கக் கூடாத ஒரு உதவி தான் அது.

"சரிம்மா... நான் அவனை வித்தியாசம் ஏதும் பார்க்கல்லியே...!"

"அப்படீன்னா நீ போற எடத்துக்கு அவனையும் கூட்டிக் கிட்டுப் போ... அவனும் ஆம்புள புள்ளதானே வீட்டுலேயே உக்கார்ந்திருக்க முடியாதே...!"

"இப்போது, "பிரேம் கொஞ்சம் யோசிக்க ஆரம்பித்தான்.

காரணம்,

அவன் உண்மையிலேயே இப்போது பார்ட்டியை கவர் பண்ணபோக வில்லை!" "நான் அவனையும் உடுத்துக்கொள்ளச் சொல்றேன்...!" சொன்னபடியே, அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள் பார்வதி.

"ம்... சரி.... சரி... சொல்லுங்க சீக்கிரமா ரெடியாக சொல்லுங்க .... நேரமாகி விட்டது!" பிரேமின் அதரங்கள் மெல்ல அசைந்தன. மகிழ்ச்சியுடன் விரைந்து நடந்தாள் பார்வதி. அவள் வெளியே வரும்போது, அதே இடத்திலேயே நின்றிருந்தான் ஜீவகன்.

"ம்.... ஜீவா உன்னையும் உடுத்துக் கொள்ளட்டாம்... பிரேம் சொன்னான்!"

"இல்ல மாமி வேண்டாம்!" மெல்லிய குரலில் சொன்னாள் ஜீவகன்.

"இல்ல... இல்ல... நீ போய் உடுத்து கிட்டு வா ஜீவா...!" அவனைப் பிடித்து தள்ளி விட்டாள் பார்வதி.

"இல்ல மாமி... நீங்களும் தனியா தானே இருக்கிறீங்க... நான்...!"

"அம்மாவ யாரும் தூக்கிட்டுப் போக மாட்டாங்க... நீ இங்கவந்து டிரஸ்ச மாத்திக்கோ... அங்க அலுமாறிக்குள்ள உடுப்பிருக்கு எதையாவது எடுத்துவிட்டு சீக்கிரம் வாடா!" ஜீவகன் பேச்சை முடிப்பதற்குள். அங்கே வந்த பிரேம் சொன்னா.

அடுத்து,

பார்வதியையும் பிரேமையும் மாறி மாறிப் பார்த்துவிட்டு,

தலையைக் குனிந்த படியே அறையை நோக்கி நடந்தான் ஜீவகன்.

"இங்க பாரு பிரேம்... அவனை உன்னோட ஒரு சகோதரனாகவே நெனச்சி பழகுடா!" ஜீவகன் மறைந்ததும் பார்வதி சொன்னாள்.

" என் னம் மா . . . இது... அந்த அளவுக்கு கொடுமைக் காரனாவா என்னைய நெனச்சிட்டுங்க!"

பிரேம் இப்படிச் சொன்னதும்,

அவனைக் கட்டிப்பிடித்துக் கொண்ட பார்வதி,

அவன் கன்னத்தில் மாறி மாறி முத்தம் கொடுத்தாள்.

தோட்டன் வழியாக நடந்து வந்த பிரேமும் ஜீவகனும் ஒருவருடன் ஒருவர் பேசிக் கொள்ள வில்லை.

ரோட்டுக்கு வந்தும்,

அப்படியே நின்ற பிரேம்,

ஜீவகனைப் பார்த்தான்.

"ஜீவா, நான் இப்போது எங்கே போகிறோம் என்று உனக்குத் தெரியுமா?""எனக்கென்ன தெரியும்... நீ வரச் சொன்னாய்... நான் வந்தேன்!" என்றான் ஜீவகன்.

"சரி... வந்ததுக்கு பரவாயில்ல ஆனா... இந்தப் பயணத்துல நீ பார்க்குற கேக்குற எதையும் அம்மாகிட்ட சொல்லக் கூடாது! என்ன புரிந்ததா?"

அவன் இப்படிக் கேட்டதும்,

வியப்புடன் அவனைப் பார்த்தான் ஜீவகன்!

(தொடரும்)

02 பல்வலி வந்தால் பல்லைப் பிடுங்கலாம்; கண் வழி வந்தால் கண்ணைப் பிடுங்கலாமா?

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

இலங்கையில் அதிகரித்துவரும் பொருளாதார நெருக்கடி

அன்றாட வாழ்க்கைக்கான எரிபொருளைப் பெற வரிசையில் நின்று போராடும் ஒருவருடன் பேசும்போது அல்லது மருந்துகளைப் பெற்றுக்கொள்ள போராடும் ஒருவருடன் கதைக்கும் போது, அவர்களிடமிருந்து வெளிபடும் பல விதமான உணர்ச்சிகள் இவ்வாறு காணப்படுகின்றன : இ ழந்த வாழ் வாதாரங்கள் குறித்த கவலை, நாம் இருக்கு ம் நிலைமை குறித்த குழப் பம், நிச்சயமற்ற நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் குறித்த பயம் மற்றும் பதற்றம் மற்றும் பொருளாதாரத்தின் தவறான நிர்வாகத்திற்கு காரணமான வர்கள் மீது ஏற்படும் கோபம் ஆகிய வையே.

அந்த உணர்வுகளுடன் மூன்று கேள்விகள் கேட்கப்படுகின்றன. முதலில் இந்த குழப்பத்திற்குள் நாம் எப்படி வந்தோம்? கடன் மறுசீரமைப்பு என்றால் என்ன, அது எப்போது முடிவடையும்? இறுதியாக, இந்த நெருக்கடியிலிருந்து விடுபட நாம் என்ன செய்ய வேண்டும்? அனைவருக்கும் புரியும் வகையில் சுருக்கமாக பதில்களைத் தர நான் முயற்சிக்கிறேன்.

நாம் பின்னோக்கிப் பார்ப்போம்;

இலங்கையின் கடன்கள், குறிப்பாக அதன் வெளிநாட்டுக் கடன்களுடன் ஆரம்பிப்போம். 2000ஆம் ஆண்டில், பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி மொத்த உள் நாட்டு உற்பத்தியில் 39 சதவீதமாக இருந்தது; 2020ல் அவை 20 சதவீதமாக குறைந்துள்ளது. இலங்கை பல தசாப்தங்களாக 'இரட்டைப் பற்றாக்குறை' பிரச்சினையை எதிர் கொண்டுள்ளது: ஏற்றுமதியை விட இறக்குமதி தொடர்ந்து உயர்ந்து வருவதோடு, வருவாயை விட அரசு செலவினம் தொடர்ந்து உயர்வ டைந்து வருகிறது.

கடந்த 20 ஆண்டுகளாக வரி குறைப்பு மற்றும் வரி விதிப்பு ஆகிய இரண்டும் பெருந்தொகையான பொதுத்துறை மற்றும் கட்டுப் படியாகாத மானியங்கள் போன்ற கொள்கைத் தவறுகளின் தொடர் கதையாக இருந்தது. இவை இரண் டும் சேர்ந்து திறைசேரியை அழித் தார்கள்.

அதிக இறக்குமதி மற்றும் ஏற் றுமதி காரணமாக நமது வர்த்தக சமநிலை நீண்ட காலமாக அழுத் தத்தில் உள்ளது. போட்டியின்மை மற்றும் குறைந்த அந்நிய நேரடி முதலீடு உள்ளிட்ட பல்வேறு கார ணங்களால் ஏற்றுமதி வளர்ச்சியடை யவில்லை, இது நாட்டின் உறுதியற்ற தன்மை மற்றும் நிர்வாக சிக்கல்க ளைத் தோற்றுவித்தது. 2011 முதல்



ரவி அபேசூரிய
(CFA, FCMA, CGMA, MBA)
Advocacy Chair/Board Director the Chartered Financial Analyst Institute (CFA)

மீட்சிக்கான பாதை மிகவும் கடினமானது

2021 வரை, இலங்கையின் ஏற்றுமதி 1.2% மட்டுமே அதிகரித்தது, அதே நேரத்தில் வியட்நாமின் ஏற்றுமதி 3 மடங்கு மற்றும் பங்களாதேஷின் ஏற்றுமதி 2 மடங்கு அதிகரித்திருந்தது. ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் மற்றும் கோவிட் தொற்று நோய்க்குப் பிறகு வர்த்தக சமநிலை சிக்கல்கள் மோச மடைந்தன, இது சுற்றுலாப் பயணிகளின் வருகையில் சடுதியான வீழ்ச் சிக்கு வழிவகுத்தது.

வெளிப்புறமாக, அதிக வட்டி விகி தத்தில் சந்தை அடிப்படையிலான கடன்கள் மூலம் நிதியளிக்கப்பட்ட 'வீணாண' மற்றும் உற்பத்தியற்ற உள் கட்டமைப்பு திட்டங்களில் முதலீடு செய்வது வெளிநாட்டு கடன் நெருக் கடியின் தொடக்கமாகும். உள்கட் டமைப்பு திட்டங்கள் ஊழலின் மையமாக மாறிய பிறகு அது இன்னும் மோசமாகியது. அரசியல், தவறான கொள்கைகள் நிலைமையை மேலும் மோசமாக்கியது.

வங்கரோத்து அல்லது திவால் என்றால் என்ன? நாட்டின் அனைத்து அந்நிய செலாவணி கையிருப்புக ளும் தீர்ந்துவிட்ட நிலையில், அத்தி யாவசிய மருந்துகள் மற்றும் எரிபொ ருளை கூட இறக்குமதி செய்வதற்கு எந்தவொரு நிதி நிறுவனமும் இலங் கைக்கு கடன் வழங்குவதில்லை என் பதாகும்.

முதலாவதாக, 2019 நவம்பரில் வரிக் குறைப்பு இலங்கையின் கடன் நிலைத்தன்மை பற்றிய கவலை களை எழுப்பியதால், இலங்கைப் பொருளாதாரம் பெரும் பாதிப்பைச் சந்தித்தது, இது கடன் மதிப்பீட் டைக் குறைப்பதற்கு வழிவகுத்தது. இது மேலும் வெளிநாட்டுக் கடன் வாங்குவதற்கான உலகளாவிய இறையாண்மைக் கடன் சந்தைக்குக் கிடைத்துள்ளது, இது வெளிநாட்டு வணிகக் கடனைத் திருப்பிச் செலுத் தும் நாட்டின் திறனில் முதலீட்டா ளர்களின் நம்பிக்கையால் மட்டுமே அடைய முடியும்.

கடன் மறுசீரமைப்பு செயல்முறை நீண்ட நாட்கள் எடுக்கும்

17ஆவது தடவையாக சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்வதை தவிர இலங்கைக்கு வேறு வழி யில்லை. கடனை நிலைநிறுத்தக்கூ டிய அளவுகோல்களை இலங்கை பூர்த்தி செய்யாததால், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து (IMF) சலுகைகளைப் பெறுவது இம்முறை கடினமானதாகவும் அதிக காலமும் எடுக்கும்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவி யுடன் கூடிய மேக்ரோ பொருளாதார வேலைத்திட்டம் தொடர்பில் பேச்சு வார்த்தை நடத்துவது, பொருளாதார வளர்ச்சி மற்றும் கடன் நிலைத்தன் மையை அடைவதற்கு இலங்கை விரைவான கட்டமைப்பு சீர்திருத்தங் களை மேற்கொள்வதில் தங்கியுள் ளது. இந்த செயல்முறையானது பத் திரதாரர்களுடன் கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தத்தை அடைய வேண்டும், அதைத் தொடர்ந்து பலதரப்பு நிதி நிறுவனங்கள் (MFIs) மற்றும் பிற இரு தரப்பு கடன் வாங்குபவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

முதல் கட்டமாக IMF உடன் பணி யாளர் நிலை ஒப்பந்தத்தில் (SLA) நுழைவதும், அதன்பின், விரிவாக் கப்பட்ட நிதி வசதிக்கான (EFF) IMF நிர்வாகக் குழுவின் ஒப்புதலைப் பெற்றுக் கொள்வதாகும். உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஜப்பான், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நட்பு நாடுகளால் EFF மேலும் ஒத்துழைப்புக்கள் வழங்கப்படும். 2023 ஆம் ஆண்டிலேயே எந்தவொரு நிதியுதவியையும் நாம் எதிர்பார்க்கலாம், மேலும் 2026ஆம் ஆண்டில் நாடு ஓரளவு இயல்பு நிலைக்குத் திரும்பும்.

பிணக்கைத் தீர்ப்பதற்கு ஆதரவளித்தல்;

முதல்கட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்யும் Active Citizens



பயனுறுதிமிக்க வகையில் பிணக்கைத் தீர்ப்பதற்கு ஆதரவளித்தல் (SEDR) என்பது ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் பிரிட்டிஷ் கவுன்ஸிலினால் செயல்படுத் தப்படும் நான்குவருட நீதிக்கான அணுகல் திட்டமாகும்.

இது ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையில் மேற்கொள்ளும் நிலை மாற்றம், நல்லிணக்கம் மற்றும் உள் ளடக்கிய ஜனநாயக ஈடுபாட்டை வலுப்படுத்துதல் (STRIDE) நிகழ்ச்சி யின் ஓரங்கமாகும்.

SEDR இன் அடிப்படை நோக்கம் அமைதியான சகவாழ்வு மற்றும் நியாயமான மற்றும் நீதியான இலங் கைக்கான அபிலாஷையாகும். டிசம் பர் 2021 மற்றும் ஜூன் 2022 க்கு இடையில், SEDR இனால், சமூகப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும், சன சமூக பிணக்குத்தீர்வை மேம்படுத் துவதற்கும், உள்ளூர் பிணக்குத்தீர்வு மற்றும் சமூக உள்வாங்கல் ஆகியவற் றின் பக்கம் பலத்த கவனம் செலுத்தி சிறப்பாக வடிவமைக்கப்பட்ட மூன்று SEDR Active Citizens திட்டங் களைத் திட்டமிட்டு செயல்படுத்தத் தொடங்கியது. இந்நிகழ்ச்சித் திட் டங்கள் SEDR இன் மூன்று இலக்கு மாகாணங்களிலும் (வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா) நடத்தப்பட்டதோடு, அதன்முதல் கட்டம் அண்மையில் வெற்றிகரமாக முடிவுக்கு வந்தது.

நாட்டின் மிகப்பெரிய குழந்தைகள் மருத்துவமனையான

லேடி ரிட்ஜ்வே மருத்துவமனைக்கு டயலொக் நிறுவனம் உபகரணங்கள் அன்பளிப்பு

நிலவும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களின் பற்றாக் குறையை எதிர்நோக்கும் நாட்டின் சுகாதாரப் பாதுகாப்புத் துறைக்கு ஆதரவளிக்கும் அதன் தொடர்ச் சியான முயற்சிகளில், டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, Doc990 உடன் இணைந்து, நாட்டின் மிகப்பெரிய குழந்தைகள் மருத்துவமனையான லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையின் (LRH) இதய மார்பு தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு (CTICU) இரத்த வாயு பகுப்பாய்வுகளுக்கு அவசரமாகத் தேவைப்படும் உபகரணங்களை வழங்குகின்றது.

இதய மார்பு தீவிர சிகிச்சைப் பிரிவில் (CTICU) இன்றியமையாத மருத்துவ உபகரணங்களில் ஒன்றான இரத்த வாயு பகுப்பாய்வுகளுக்கு மருத்துவ உபகரணங்களை நன்கொடையாக வழங்கி, குழந்தைகளுக்கு அத்தியாவசியமான மற்றும் உயிர் காக்கும் மருத்துவச் சேவையை மருத்துவமனை வழங்குவதற்கும், எவ்விதமான தடைகளும் இன்றி இதய மார்பு அறுவை சிகிச்சைகள் தொடர்ந்து நடைபெறுவதை உறுதி செய்வதற்கும் உதவும்.

இந்த அறிவிப்பு, பாதிக்கப் படக்கூடிய சமூகங்களுக்கான டயலொக்கின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை மீண்டும் வலியுறுத் துகிறதுடன் நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் பின் னணியில், அவர்களின் சமீபத்திய நிவாரண முயற்சியான மனிதநேய ஒன்றிணைவு, எனும் செயற்றிட்



டத்தை, ஒத்த எண்ணம் கொண்ட பெருநிறுவனங்களுடன் இணைந்து ஆரம்பித்தது. நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் பின் ணணியில் பாதிக்கப்பட்ட சமூகங் கள் மற்றும் இலங்கையின் சேவைத் துறைகள் ஆகிய இரண்டிற்கும் டய லொக்கின் தொடர்ச்சியான அர்ப்ப ணிப்பை இந்த அறிவிப்பு மீண்டும் வலியுறுத்துகிறது.

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி இன் குழுமப் பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ கருத்துத் தெரிவிக்கையில் பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்பட்டுள்ள சவால்களுக்கு மத்தியிலும் தமது இளம் நோயாளிகளைக் கவனிப்ப தற்காக 24 மணி நேரமும் அயராது உழைக்கும் லேடி ரிட்ஜ்வே மருத் துவமனையில் அர்ப்பணிப்புள்ள மருத்துவக் குழுக்கள் வழங்கும் சேவைக்கு நாங்கள் நன்றியுள்ளவர் களாக இருக்கிறோம். இந்த நன் கொடையானது மருத்துவமனையின் நோயாளிகள் மற்றும் மருத்துவ நிபு ணர்களின் சுமையை குறைக்கும் அதே வேளையில் தீவிர சிகிச்சை தேவைப்படும் அனைவருக்கும் ஆதரவளிக்கும் என்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

எதிர்கால பொறியியல் தலைவர்களை உருவாக்கும் 'Project Summit' தளத்தை ஆரம்பிக்கும் Sysco LABS

எதிர்கால பொறியியல் தலைவர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ள 'Project Summit' தளத்தை Sysco LABS Sri Lanka நிறுவனம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துள்ளது.

பல்கலைக்கழகத்தில் இருந்து நேரடியாக வேலைக்கு உள்வாங்கப்படுபவர்கள் '4ஆவது தொழிற்புரட்சி தொழில்நுட்பத்தின்' (4IR) கீழ் வகைப்படுத்தப்பட்ட புதிய தொழில்நுட்பக் கருத்துக்களைச் செயல் படுத்த உதவுவதற்கு வசதிகளை ஏற்படுத் தும் வகையில் Sysco LABS இன் Project Summit அமையும்.

Project Summit ஆனது 4 வருட கற்றல் காலத்தைக் கொண்டிருப்பதுடன், இதில் பங்கெடுப்பவர்கள் ஆறு மாதங்களில் திட் டத்தை முடிக்க முடியும். இது அவர்களின் வாழ்க்கைப் பயணத்தை விரைவாக்குவ தற்கு இயலுமானதாக்க உதவும். "தொடக்க நிலையைக் கற்றுக்கொள்ளுங்கள்" என்ற அடிப்படையில் 4IR செயல்படுத்தப்பட்ட தீர்வுகளை அடையாளம் கண்டு உருவாக்க வும், உற்பத்தித்திறன் அளவீடுகளை மேம் படுத்தவும் இத் திட்டம் உதவும்.



நிறுவனம் முழுவதும் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கான மனநிலையை மேலும் வளர்ப்பது மற்றும் கண்டுபிடிப் பின் அடிப்படையிலான பொறியியல் கலாச்சாரத்தை வெளிப்படுத்துவது என்பது இத்திட்டத்தின் இரண்டாம் நிலை நோக் கமாகும். அதே நேரத்தில் வணிகக் களம் மற்றும் கட்டடக்கலை, திட்ட முகாமைத் துவம் மற்றும் விநியோக செயல்முறை என்பவற்றிலும் திறன்களை மேம்படுத்து வதற்கு இது உதவியாக இருக்கும்.

இத்திட்டம் தொடர்பில் கருத்துத் தெரி வித்த நிறுவனத்தின் பொறியியல் மற்றும் கட்டுமானப் பணிப்பாளர் நிஷாந்த ஹெட் டியாராச்சி, "எங்களின் தனித்துவமான பொறியியல் வழிகாட்டுதல் மற்றும் பயிற் சித் திட்டமான Project Summit ஆனது தொழில்நுட்பத்தால் இயங்கும் உலகின் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தயாராக இருக்கும் புதிய தலைமுறை பொறியாளர் களை உருவாக்கிறது. பெஸ்போக் மற்றும் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட அமர்வு களைப் பயன்படுத்தி, வேலையிடத்தில் சிறந்து விளங்குவதற்குத் தேவையான திறன்கள் மற்றும் அனுபவத்துடன் இளம் பொறியாளர்களை விரைவாகக் கண்கா ணிப்பதை இது நோக்காகக் கொண்டுள் ளது' என்றார். எதிர்கால பொறியியல் தலைவர்களை உருவாக்கும்

விடைபெறும் CCBSL நிர்வாகப் பணிப்பாளர்; அவரது இடத்திற்கு தீபக் செந்தில்

CocaCola Beverages Sri Lanka (CCCBSL) நிறுவனம் அண்மையில் அதன் முகாமைத்துவப் பணிப்பாளர் மயங்க் அரோராவுக்கு பிரியாவிடை வழங்கியிருந்தது. அவர் பங்களாதேஷ் அலுவலகத்தில், ஜூலை முதல் பொதுமுகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மயங்க் கடந்த வருடங்களாக இலங்கையில் மேற்கொண்ட தனது வெற்றிகரமான பணியின்போது, ஒன்றரை வருடங்களாக, இப்பகுதியில் பல்வேறு சிக்கலுக்கு மத்தியில் மிகவும் திறனுடனும், திறமையாகவும் வழிநடாத்தி, பல்வேறு கூட்டாண்மைகளை நிறுவவும் வலுப்படுத்தவும் நடவடிக்கைகளை டுத்துள்ளார்.

அவரது பதவிக்காலத்தில், நிறுவனத்தில் கொவிட் தொற்றுநோயின் தாக்கத்தை நிர் வகிப்பது முக்கிய சவால்களில் ஒன்றாகஇ ருந்ததோடு, தேவை அவசியமான உள்ளூர் சமூகங்களுக்கும் மயங்க் உதவிகளையும்வ ழங்கிவந்தார்.

கடந்தஐந்துவருடங்களாகஅவரதுதலை மையின்கீழ், CocaCola வினதுஇலங்கை செயற்பாடுஒவ்வொருவருடமும்அதிகரித்த சந்தைப் பங்கினை தொடர்ச்சியாகப்பெற்று வந்துள்ளது. இது செயற்றிறன் மற்றும் உற் பத்தித்திறனில் தொடர்ச்சியான முன்னேற்றத் தின் வலுவான திட்டத்தை காண்பிப்பதுடன், CocaCola Bottling Investments Group (BIG) சந்தைகளில், இலங்கை சிறப்பாகச் செயற்ப டும் ஒரு சந்தையாகவெற்றிகரமாக நிலைநி றுத்தியிருப்பதை காண்பிக்கிறது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள், கொவிட் 19 தொற்றுநோய் மற்றும் அண்மைய பொரு ளாதார நெருக்கடி ஆகியவற்றிலிருந்து கடந்த மூன்று வருடங்களாக எதிர்கொள்ளும் சவால் களுக்கு மத்தியிலும், நிறுவனத்தின் நிலைபே றான தன்மைதொடர்பான நோக்கை மயங்க் உறுதியுடன் முன்னேற்றி வந்துள்ளார். அந்த ஆண்டில் அதன் உலகளாவியநீர்நிரப்புதல் இலக்கையும் கடந்தது. அதன் உள்ளூர் நீர்திட் டங்கள் மூலம் சமூகங்களுக்கும் இயற்கைக் கும் அதன் பானங்களின் உற்பத்திக்காகப் பயன்படுத்தும் நீரைவிட இரண்டு மடங்கு நீரை அது மீளவழங்கிவருகிறது. இதன் முத லாவது கோகா கோலா செயற்பாடு, தென் மேற்கு ஆசியாவில் ஆரம்பிக்கப்பட்டது.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



நல்லதை சொல்கிறோம்

எச்சரிக்கும் வீதி விபத்துகள்!



2022ம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் இலங்கையில் இடம்பெற்ற வீதி விபத்துகள் காரணமாக 1,459 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். இக்காலப் பகுதியில் 1,387 பாரிய வீதி விபத்துக்கள் பதிவாகியுள்ளன. இந்த விபத்துகளில் மேலும் 3,326 பேர் படுகாயமடைந்துள்ளனர். அத்துடன், இந்த காலகட்டத்தில் 4,309 சிறு விபத்துகளும், மற்றும் 2,229 விபத்துக்களில் சொத்துக்களுக்கான சேதங்களும் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்கூறிய தகவல்களை கவனிக்கும்போது வீதி விபத்துக்களினால் உயிரிழப்போரின் எண்ணிக்கை எந்த அளவு அதிகளவில் காணப்படுகிறது என்பதை இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும். பயங்கர தொற்று நோய்களால் கூட இந்த அளவு உயிரிழப்புக்கள் ஏற்படுவதில்லை என்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

வீதி விபத்துக்களுக்கு முக்கிய காரணங்களாக மது போதையில் வாகனம் செலுத்துதல், அதிக வேகம், வீதி ஒழுங்குகளை முறையாக பின்பற்றாமை, முன்னால் செல்லும் வாகனங்களை முறையற்று முந்திச்செல்ல முயற்சித்தல், தூக்க மயக்கத்தில் வாகனங்களை செலுத்துதல் போன்றவையே விசேடமாக கூறப்படுகின்றன. இவற்றை நன்கு சிந்திக்கும் போது வாகனத்தை செலுத்துபவர்கள் நிதானமாகவும் போதிய கவனத்துடனும், சுய உணர்வுடனும் வாகனங்களை செலுத்துவார்களாயின் பெருமளவு விபத்துக்களை, இலகுவாக, உறுதியாக தவிர்த்துக்கொள்ள முடியும் என்பதோடு உயிரிழப்புகளையும் தடுத்துக்கொள்ள இயலுமாகும்.

இதேவேளை பாதையிலே நடந்து செல்லும் பாதசாரிகளும் முறையாக பாதை ஒழுங்கு முறைகளை பின்பற்றுதல், ஒதுக்கப்பட்ட இடங்களில் மட்டுமே பாதையின் குறுக்கே செல்லுதல், கவனமின்றி பாதையை ஊடறுத்துச் செல்வதையும். கைபேசிகளில் பேசிக் கொண்டே அல்லது கைபேசிகளில் எதையேனும் பார்த்துக் கொண்டே பாதையில் செல்வதையும் தவிர்த்தல், போன்றவையும் வீதி விபத்துக்களை தடுத்துக்கொள்வதற்கான காரணங்களாகின்றன.

பாதையை பயன்படுத்தும் ஒவ்வொருவரும் இவற்றை புரிந்து, சரியாக கருத்தில் கொண்டு, பாதை ஒழுங்குகளை முறையாகப் பேணி நடந்து கொள்ள முன் வர வேண்டும். இதன் மூலமே வீதி விபத்துக்களை தவிர்க்கவும் அல்லது குறைக்கவும் முடியும்.

நெஞ்சுக்கு நீதி

'நாளை நமதே' நெஞ்சத்தில்உறுதிகொள்
நாளும் நல்லதையே நீ நன்றாகவே செய்
நலவை உணர்ந்தே உதவிகள்நிறைசெய்
நாயனருள்வான் சீர் நன்மைகள்நீயுணர்

வாசிக்க ஒரு நூல்

அக்கினியாய் வெளியே வா



புரவலர் ஹாசிம் உமரின் 'புரவலர் புத்தகப் பூங்கா'வின் 37வது வெளியீடாக வெளிவந்த நூல், 'அக்கினியாய் வெளியே வா'. இராகலை தயானி எனும் பெயரில் கவிதை, கட்டுரை, சிறுகதைகள் எழுதும் நுவரெலியா மாவட்ட, இராகலையைச் சேர்ந்த தயானி விஜேகுமாரின் கவிதைத் தொகுப்பு இதுவாகும். இதுவே இவரது முதல் நூல்.

இராகலை தயானியின் எழுத்துலக வளர்ச்சிக்கு துணை நிற்கின்ற, 'வளரி' கவிதை இதழ் ஆசிரியரான, , தமிழ்நாடு அருணாசுந்தரராசன், இப்படி கூறியுள்ளார்.

"துயரங்களை மட்டுமே வாழ்க்கையாகக் கண்ட மலையகச் சமூகத்திலிருந்து தனது கவிதைப் பயணத்தைத் தொடங்கியிருக்கிறார் இராகலை தயானி. மகாகவி பாரதியின் ரௌத்திரத்தைத் தன் எழுதுகோலில் நிரப்பியுள்ள வீரியம் இவரது வரிகளில் தெறித்து விழுகின்றன. தேயிலைத் தோட்டங்களில் பரந்து கிடக்கும் இயற்கை அழகினைப் பாடுவதைக் காட்டிலும் அங்கு அல்லலுறும், வஞ்சிக்கப்படும் மானுட உணர்வுகளைக் கவிதையாக்க புனைந்திருப்பது தயானியின் மனித உரிமைச் சிந்தனையின் வெளிப்பாடாக அமைந்திருக்கிறது."

இந்நூலில் சிறியதும், பெரியதுமாக இடம்பெற்றுள்ள பல கவிதைகளில் 'மனித எரு' எனும் தலைப்பில் இடம் பெற்றுள்ள ஒரு சிறப்பான கவிதை உங்கள் பார்வைக்கு:

கவ்வாத்துச் செடி
என் முழங்காலில்
கிழித்தெடுத்த
இரத்த உரத்தால்

நூல்: அக்கினியாய் வெளியே வா, ஆசிரியர்: இராகலை தயானி, பக்கங்கள்: 72, வெளியீடு: புரவலர் புத்தகப் பூங்கா, 25, அவ்வல் சாவியா றோட், கொழும்பு 14,

தொலைக்குத் தீனி

ஒன்றுக்கு மற்றொன்று இலவசம்
கோபத்தை வாங்கினால் இரத்தக் கொதிப்பு இலவசம்!
பொறாமையை வாங்கினால் தலைவலி இலவசம்!
வெறுப்பை வாங்கினால் பகை இலவசம்!
கவலையை வாங்கினால் கண்ணீர் இலவசம்!
மாறாக
நம்பிக்கையை வாங்கினால் நண்பர்கள் இலவசம்!
உடற்பயிற்சியை வாங்கினால் ஆரோக்கியம் இலவசம்!
அமைதியை வாங்கினால் ஆனந்தம் இலவசம்!
நேர்மையை வாங்கினால் நித்திரை இலவசம்!
அன்பை வாங்கினால் அனைத்து நன்மைகளும் இலவசம்.
எது வேண்டும்? முடிவு உங்கள் கையில்!

சுகவல் களஞ்சியம்

ஆசியாவின் மிகப் பெரிய தனியார் நூலகம்

ஆசியாவின் மிகப் பெரிய தனியார் நூலகமாக தமிழ் நாடு, விருத்தாசலத்தில் அமைந்திருக்கும், புலவர் பல்லடம் மாணிக்கம், நிறுவியுள்ள நூலகம் திகழ்கிறது. இதில், அவர் தான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற காலத்திலிருந்தே சேமித்த ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட நூல்களைச் உள்ளன.

இந்த நூலகத்தில் 250 ஆண்டுகளுக்கு முன்பு அச்சிடப்பட்ட பெப்ரீஷியஸ் அகராதி, சங்க இலக்கியம் தொடங்கி சிற்றிலக்கியங்கள் வரைப் பல் தொகை நூல்களின் முதல் பதிப்புகள், தொல்காப்பியம் முதல் பதிப்பு, கம்பராமாயணத்தின் பத்துக்கு மேற்பட்ட பதிப்புகள் எனப் பல முதல் பதிப்பு நூல்கள் உள்ளன.

திருக்குறளின் அத்தனைப் பதிப்புகளோடு, திருக்குறள் தொடர்பான 1500க்கும் மேற்பட்ட நூல்கள், கம்பன், இளங்கோ, பாரதி, பாரதிதாசன் ஆகியோரின் படைப்புகளின் பல்வேறு பதிப்புகளும் அவை பற்றிய அனைத்து ஆய்வு நூல்களின் தொகுப்புகள், நான்கு வேதங்கள், உபநிடதங்கள், ஆங்கில, தமிழ்க் கலைக்களஞ்சியங்கள், பல்கலைக் கழகங்களின் வெளியீடுகள், சமைய நூல்கள், சித்தாந்த சாத்திரம், பன்னிரு திருமுறை, நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் எனப் பல பரிமாணங்களில் நூல்கள் இங்குவ கைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன.



மறைமலை அடிகள், தெ.பொ.மீ., வையாபுரி, மு.வ.,பாவாணர், ந.சி. கந்தையா, முதலிய ஆய்வு முதல்வர்களின் நுட்பமான ஆய்வு நூல்கள், காந்தியடிகள், காரல்மார்க்ஸ், அம்பேத்கர், பெரியார், அண்ணா முதலிய சமுதாய சிந்தனையாளர்களின் அரிய நூல்தொகுதிகளும், 500க்கும் மேற்பட்ட ஆய்வேடுகள், உலகின் தலை சிறந்த திரைப்படங்களின் இறுவட்டுக்கள், இசைக் குறுந்தகடுகள் எனப் பல அரிய குறுந்தகடுகளும் இங்கிருப்பது இந்நூலகத்தின் கூடுதல் சிறப்பாகும்.

தரைத் தளத்தில் நூலகமும் மேல் தளத்தில் கூட்டம் நடத்துவதற்கான அரங்கும் ஆய்வாளர்கள் தங்கி ஆய்வு செய்வதற்கான அறைகளும் அமைந்த கலை நயம் மிக்க கட்டடமாக இது திகழ்கிறது. நூலகத்திற்கான தனி கட்டடத்தை 50 இலட்ச ரூபாய் செலவில் 2000ஆம் ஆண்டில் கட்டி முடித்ததோடு, நூலகத்தின் முன்புறம் கண்ணைக் கவரும் அழகிய பூங்காவையும் கலை நுணுக்கத்தோடு உருவாகி வைத்துள்ளார் புலவர் பல்லடம் மாணிக்கம்.

'தமிழைக் காக்க வேண்டுமென்றால் தமிழ் நூல்களைக் காக்க வேண்டும், அவை தமிழறிஞர்களுக்குப் பயன்பட வேண்டும், அதன் மூலம் தமிழ் வளர்க்கப்பட வேண்டும்' என்ற கொள்கையைக் கொண்டு தமிழுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள இவர், 'நிறங்கள்' என்ற கலை இலக்கிய அமைப்பை ஏற்படுத்தி பல நூல்களை வெளியிட்டுள்ள இவர், 'வள்ளுவம்' என்ற இதழையும் நடத்தியுள்ளார்.

புலவர் பல்லடம் மாணிக்கம் போன்ற தமிழ் நேசர்கள் வாழும் காலமெல்லாம் தமிழ் செழித்து வாழும் என உறுதியாக நம்பலாம்.

கொஞ்சம் சிரிங்க!

கணவனா? மிருகமா??

ஒரு பெரிய கம்பெனியில் உயரதிகாரியாக வேலை பார்த்துக் கொண்டிருந்த ஒருவர், ஓர் ஒவ்வாமை நோய்க்கு ஆளானார். பல மருத்துவர்களிடம் காண்பித்தும் போதிய பயன் கிடைக்கவில்லை. என்னசெய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தவரிடம் அவரது மனைவி, "நீங்கள் ஏன் ஒரு மிருக வைத்தியரிடம் போகக் கூடாது?" என்று கேட்டாள்.

கோபமடைந்த கணவன், "உனக்கு என்ன மூளை கெட்டுப் போச்சா?" என்றார் சத்தமாக..

மனைவி மிக அமைதியாகச் சொன்னாள்:

"எனக்கொன்றும் பைத்தியம் இல்லை. உங்களுக்குத் தான் எல்லாம் கெட்டுப் போச்சு. காலங்காத்தால கோழி மாதிரி எந்திரிச்சு, அப்புறம் காக்கா மாதிரி குளிச்சிட்டு, குரங்கு மாதிரி லபக் லபக்னு தின்னுட்டு, பந்தயக் குதிரை மாதிரி வேக வேகமாக ஆபிசுக்கு ஓடி, அங்க மாடு மாதிரி உழைக்கிறீங்க.

அப்புறம் உங்களுக்குக் கீழே உள்ளவங்ககிட்ட கரடி மாதிரி கத்துறீங்க. சாயந்திரம் வீட்டுக்கு வந்ததும் எங்கிட்ட நாய் மாதிரிக் குறைக்கிறீங்க. அப்புறம் முதலை மாதிரி ராத்திரி சாப்பாட்டை சரக் சரக்னு முழுங்கிட்டு, எருமை மாடு மாதிரி தூங்குறீங்க. அதனால தான் சொல்றேன், இப்படி இருக்கிற உங்கள கால்நடை டாக்டர்தான் குணப்படுத்த முடியும்."

மனைவியின் தெளிவான பதிலைக் கேட்டு என்ன சொல்வதென்று கணவன் முழிக்க, "என்ன ஆந்தை மாதிரி முழிக்கிறீங்க?" என்று முடித்தாள் மனைவி.

கைவண்ணம் காணீர்

வெறும் களிமண்ணால் ஓர் உயிரோவியம்!



இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207

திருவள்ளுவத்தில் தலைமைத்துவம் (Leadership)



திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர்



கே. பத்மானந்தன் 19

ஒரு முகாமையாளர் தனக்குத் துணையாகத் தெரிவு செய்யப் படுபவன் ஒரு செயலை நிறை வேற்றுவற்கு அன்பு உள்ளவனாக, அறிவுடன் கூடிய தெளிந்த சிந்தனை உள்ளவனாக, அளவற்ற ஆசை இல்லாதவானாக, தனது பணி தொடர் பாகத் தெளிவு உள்ள ஒருவனாகவும் இருக்க வேண்டும் என்பதை உறுதி செய்ய வேண்டும் என்ற கருத்துக் களை திருவள்ளுவர் கீழ் வரும் ஈரடி யில் கூறுகின்றார்.

"அன்பறிவு தேற்ற மவாவின்மை யிந்நான்கு
நன்குடையான் கட்டே தெளிவு"
(குறள் 513)

அதாவது அன்பு, தொழில் அறிவு, தொழில் நுட்பங்களை ஐயமில்லாமல் தெளியும் ஆற்றல், குறுக்கு வழியால் உழைக்க அவா இல்லாமை ஆகிய இந் நான்கு பண்புகளையும் நிலையாக உடையவனையே முகாமையாளர் தனக்குத் துணையாகத் தெரிவு செய்ய வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். இங்கு அன்பு என்பதை ஒருவருக்கு தொழில்மீ துள்ள காதல் அல்லது செயல் மீது உள்ள உள்ளார்ந்த ஈடுபாடு (Passion) எனக் கொள்ளலாம். அறிவு என்பது செயலறிவு அல்லது தொழில நிவைக் குறிக்கும். ஒரு செயல் அல்லது தொழில் வெற்றி பெற அது பற்றிய அறிவு அதாவது தொழில் நுணுக்கங்களை ஒருவர் அறிந்திருக்க வேண்டும்.

தேற்றம் என்பது தெளிவு அதாவது தெளிந்த சிந்தனை என்ற பொருள் தரும். தனக்குக் கொடுக்கப்பட்ட பணியின் நோக்கம் என்ன, பணி நிறைவுக்கான கால அளவு என்ன, முகாமையாளர் தன்னிடம் எதை எதிர்பார்க்கிறார் ஆகியவை பற்றிய தெளிவு ஒருவரிடம் இருக்க வேண்டும். அவரிடம் செயல் தொடங்கியபின் இடர் நேரும் பொழுது காணவேண்டிய தீர்வுகள் பற்றிய தெளிவும் இருக்க வேண்டும். இத்திறங்களையே திருவள்ளுவர் தேற்றம் என்று குறிப்பிடுகிறார். அவாவின்மை எனும்போது தன்னை நம்பிப் பொறுப்புக்களைத் தந்த நிறுவனத்துக்கு உரிய பொருள்களைக் கவர்ந்து கொள்ள நினையாமையையும் கையூட்டுப் பெறாமல் வேலை செய்வதையும் அவாவின்மை குறிக்கும் எனக் கொள்ளலாம்.

முகாமையாளரிடம் இருக்க வேண்டிய மற்றுமொரு தலைமைத்துவப் பண்பு எந்தவித மான பாகுபாடுமின்றி அல்லது பேதம் காட்டாது செயலாற்றுதல் (Unbiased behavior) ஆகும். ஒரு வேலையினைப் போதிய தெளிவுடன் செய்யும் ஒருவர் மீது எந்தவிதமான பாகுபாடும் காட்டாமல் அவரைத் தெரிந்து எடுத்து அவரிடம் சரியான வழிகாட்டுதல்களை வழங்கி பணிகளை ஒப்படைப்பது முகாமையாளரின் நல்ல பண்பாகும். இக்கருத்துக்களை



திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் கூறுகின்றார்.

"ஓர்ந்து கண்ணோடாது இறைபு
ரிந்து யார் மாட்டும்
தேர்ந்து செய்வஃதே முறை".
(குறள்541)

அதாவது ஒரு செயலினைப் போதிய தெளிவுடன் செய்யும் எந்த நபர் மீதும் பேதம் காட்டாது அவரைத் தெரிவு செய்து சரியான வழிகாட்டலுடன் பணிகளை ஒப் படைத்தலே உரிய முகாமைத்துவ முறையாகும் என்கிறார் திருவள்ளுவர். அதாவது தீர ஆராய்ந்து யாரிடமும் இரக்கம் காட்டாமல், தக்கவர்களுடன் பேசி எண்ணிச் செய்வதே சிறந்த முகாமைத்துவம் ஆகும். முகாமைத்துவம் தொடர்பான நடவடிக்கைகளை எல்லாவகைகளிலும் ஆராய்ந்து, இவர் நம்மவர், நம்மவர் அல்லாதவர், வேண்டப்பட்டவர், வேண்டப்படாதவர், நண்பர், உறவினர், உதவி செய்தவர் என்று எந்தவித சார்பும் இல்லாமல் முகாமைத்துவம் செய்வதே சிறந்த முகாமைத்துவம் என்கிறார் திருவள்ளுவர்.

ஓர்ந்து என்ற சொல் முகாமையாளர் தனது ஆலோசகர்களுடன் கலந்து பேசி அவர்களின் கருத்துக்கும் வாய்ப்பளித்துத் தானும் சிந்தித்து செயலாற்றுதல் என்ற பொருளினைத்தரும்.

இறைபுரிந்து என்று சொல்வதன் மூலம் முகாமையாளர் எவ்வாறு நடுநிலைமையாக நின்று தனது பணிகளைச் செய்ய வேண்டும் என்பதைத் திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார் .இவ்வாறு நடுநிலைமையாக நின்று முகாமையாளர் பணி செய்வதனையே திருவள்ளுவர் முறை என்று சொல்கிறார் .

ஒரு முகாமையாளருக்கு இருக்க வேண்டிய நடுநிலைமைப் பண்பு அதாவது அவர் அப்பொறுப்பிலிருக்கும் காலம் முழுவதும் எந்தச் சூழ்நிலையிலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்றத் தாழ்வில்லாத சீரான நிலைப் பாட்டினை அல்லது முடிவினை எடுக்கக்கூடிய அதாவது மனத்தளவிலும் கூட வளையாத எப்பக்கமும் சாயாதிருக்கும் பண்பினைக் கொண்டிருக்க வேண்டும் என்ற கருத்தினைத் திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியிலும் வலியுறுத்திக் கூறுகின்றார் .

"கேடும் பெருக்கமும் இல்லல்ல
நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி"
(குறள் 115)

அதாவது கேடும் ஆக்கமும் ஒரு முகாமையாளரின் வாழ்வில் இல்லாதவை அல்ல அது எப்போதும் வரும் போகும் ஆனால் நெஞ்சில் ,மனதளவில், எண்ணங்களில், சிந்தனைகளில் நடுவுநிலைமை தவறாமல் இருத்தலே ஒரு நல்ல முகாமையாளரின் பண்பாகும் என்கிறார் திருவள்ளுவர் . ஒரு நிறுவனத்தில் ஏற்றமும் இறக்கமும் நடைபெறுவது இயல்பான ஒன்றாகும் ஆனால் முகாமையாளர் இவற்றினைப் பொருட் படுத்தாது இறக்கத்தையும் ஏற்றத்தையும் ஒன்றுபோலவே எண்ணி நடுநிலைமை தவறாமல் தனது பணியினைச் செய்ய வேண்டும் என்கிறார் திருவள்ளுவர் .

மேலும் நல்ல தலைமைப் பண்பினை உடைய முகாமையாளர் நடுநிலை தவறாதவராக இருப்பதோடு நிதானந்தவறாதவராகவும் இருக்க வேண்டும் (Balanced). அதாவது ஒரு செயலின் சாதக பாதகம் ஆகிய இரு பக்கங்களையும் சரியான முறையில் ஆராய்ந்து துலாக்கோல் போல எப்பக்கமும் சாயாது இருக்க வேண்டும் என்ற கருத்தினைக் கீழ் வரும் ஈரடியில் திருவள்ளுவர் கூறுகின்றார் .

"சமன்செய்து சீர்தூக்கும்
கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி".
(குறள்118)

அதாவது ஊழியர்களிடமும் சரி நிறுவனத்தின் உரிமையாளர்களிடமும் சரி தான் சமமாக இருந்து செய்யப்படும் செயல்களையும் அதன் விளைவுகளையும் சீர் தூக்கும் துலாக்கோல்போல் அமைந்து , ஒரு பக்கமாகச் சாயாமல் நடு நிலமையாக நின்று ஆராய்ந்து செயலாற்றுவது ஒரு முகாமையாளருக்கு அழகு என்கிறார் திருவள்ளுவர் . பல்வேறு கருத்துக்களைச் சமநிலையில் கேட்டல், ஆய்வு செய்தல், ஏற்கக்கூடியவற்றை ஏற்றல், ஏற்க முடியாதவ தவற்றைத் தொடர்ந்து விவாதித்துக கருத்துக்களை உள்வாங்கிச் செழுமைப்படுததி ஏற்றல் முதலிய குணங்கள் முகாமையாளருக்கு மிகவும் முக்கியம்.

இததகைய நடுநிலைப் பண்பு உடைய முகாமையாளர்கள் இனம், சமயம், உறவினர், அயலார், பகைவர், நட்பு கொண்டோர், வலியவர், மெலியார், செல்வர், வறியர் போன்ற காரணங்களைக் காட்டிச் சார்புநிலை எடுக்காமல் ஒன்றை ஆய்வு செய்வதிலும் ஏற்பதிலும் விலக்குவதிலும் முறை பிறழாது நடந்து , அறம் நோக்கியே செயற் பட்டு அறத்தியல்பை இலக்காகக் கொண்டு நிறுவனம் தொடர்பான முடிவுகளை எடுப்பார்கள் என்பது திருவள்ளுவரின் கருத்து

முகாமையாளரிடம் ஏனையவருக்கு முன்மாதிரியாக (Role Model) விளங்கக்கூடிய தலைமைப்பண்பு இருக்க வேண்டும் .அதாவது ஊழியர்களிடம் கருணை ,அவர்களைக் கனிவோடு அணுகும் பண்பு அவர்களின் நலனில் அக்கறை கொள்ளும் பண்பு ,அவர்களைப் பாராட்டும் பண்பு எவற்றையும் சரிவரச் செவ்வனே செய்யும் பண்பு ஆகியன ஒரு முகாமையாளரிடம் இருக்க வேண்டும் . இவரே முகாமையார்களுக்குள்ளே விளக்கொளி போன்று பிரகாசிப்பார் என்ற கருத்துக்களை கீழ்வரும் ஈரடியில் திருவள்ளுவர் விளக்குகின்றார் .

"கொடைஅளி செங்கோல் குடிஒம்
பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி"
(குறள் 390)

அதாவது ஊழியர்களிடம் கொடை என்னும் கருணை , அருள் என்னும் அன்பு , செங்கோல் முறை என்னும் ஊழியர்களுக்காக எதையும் சரிவரிச் செய்யும் பண்பு , தளர்ந்த ஊழியர்களினைக் காக்கும் பண்பு ஆகிய நான்கும் உடைய முகாமையாளர் முகாமையாளர்களுக்கு எல்லாம் விளக்குப் போன்றவன் என்கிறார் திருவள்ளுவர் .

இங்கு அளி என்பதன் மூலம் துன்பப்படுகின்ற பணியாளர்களிடம் அல்லது நலிவுற்ற பணியாளர்களிடம் முகாமையாளர் அன்பு காட்ட வேண்டும் என்று கூறும் திருவள்ளுவர் செங்கோன்மை என்பதன் மூலம் பணியாளர்கள் செய்த குற்றங்கள் குறைகளை ஆராய்ந்து, வேண்டிய வன் வேண்டாதவன் என்ற பாகுபாடு காட்டாமல் நடுநிலைமையாகச் செயல்படுகின்ற பண்பு முகாமையாளருக்குத் தேவை என்கிறார் .குடி ஓம்பல் என்பது பணியாளர்களைத் துன்பத்திலிருந்து பாதுகாத்து வைத் திருப்பது என்று பொருளாகும். உதரணமாக விசேட தேவை உடைய பணியாளர்களை நிறுவனத்தில் ஏற் படக்கூடிய அசௌகரியங்களில் இருந்து பாதுகாக்கின்ற பண்பு முகாமையாளரிடம் இருக்க வேண்டும்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

சிறு விளம்பரங்கள்

தினகரன் வாரமஞ்சரி

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 I E-mail - classified@lakehouse.lk

வர்த்தகம்

233 இயந்திராதிகள்/ கை கருவிகள் விற்பனைக்கு

கெபித்திகொல்லாவ பிரதேசத்தில் பாவனையில் உள்ள கல்மனல் அகற்றும் நெல் ஆலை விற்பனைக்கு. அழையுங்கள். 077 8341363. 046823

வேலைவாய்ப்பு

308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்

முன்னணி நிதி நிறுவனத்தில் கொள்ளுப்பிட்டிய புதிய கிளையில் சந்தைப்படுத்தல் நிறைவேற்று தர ஊழியர்கள் துரிதமாக சேர்த்துக் கொள்ளப்படுவர். காப்புறுதி துறை விரும்பத்தக்கது. அழையுங்கள். 077 3627519. 046913

309 வெற்றிடங்கள் கணக்கியல்/ நிதி

கணக்காய்வு/ கணக்காளர் பயிலுநர்கள் விண்ணப்பிக்கவும். முகாமையாளர் 891/2, பேங்ஷால் வீதி, கொழும்பு 11. தொலைபேசி / வட்ஸ்அப் 075 5030954. மின்னஞ்சல்: agapeaccservices@gmail.com 038818

310 வெற்றிடங்கள் எழுது வினைஞர்/ செயலாளர்கள்

தெஹிவளையிலுள்ள விலங்கு வைத்தியசாலைக்கு வரவேற்பாளர்/காசாளர் தேவை. சிறந்த ஆளுமையும் விலங்குகளுடன் நட்பாகவுமிருத்தல் வேண்டும். பகுதி நேரம் அல்லது முழுநேரம். வார இறுதிகளிலும் மாலை நேரங்களிலும் வேலை செய்தல் வேண்டும் சாதாரண தரத்தில் கணிதம் மற்றும் ஆங்கிலத்தில் திறமைச் சித்தி தேவை. சுயதரவை கொழும்பு தெற்கு விலங்கு வைத்தியசாலை, 13, அத்தபத்து ரெரஸ், தெஹிவளை என்ற முகவரிக்கு அனுப்பவும். csahospital@gmail.com 3 மொழிகளிலும் தேர்ச்சி முன்தகைமையாக கருதப்படும். முழுநேர ஆரம்பசம்பளம் 25,000/ மற்றும் படிகள். 046794

318 வெற்றிடங்கள் டிரைவர்கள்

சாரதிகள் தேவை. 35 வருட பாவனையாளர் நம்பிக்கையை வென்ற நெட்கோ நிறுவனத்திற்கு சாரதிகள் சேர்த்துக் கொள்ளப்படுவர். களுத்துறை, பாணந்துறை, இரத்மலானை, தெஹிவளை, நீர்கொழும்பு, வென்னப்புவ அருகில் தேவை. ரூ. 45000/ கூடுதல் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளலாம். அழையுங்கள் 0 777 263954, 076 7639155 விண்ணப்பத்தை எமக்கு அனுப்புங்கள். முகவரி இல. 29/5, 4ஆம் ஒழுங்கை, இரத்மலானை. 046457

319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

சமையல்காரர் பெண் 40 வயதிற்கு குறைவான பெண். தங்கியிருந்து பொறளை, கொட்டா வீதியிலுள்ள பல கம்பனிகளின் தலைவரின் வீட்டிற்கு தேவை. ஆங்கிலம் பேசவும் விளங்கக் கூடியவரும் வட இந்திய உணவு வகைகளை தயாரிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொடர்பிலக்கம் 070 5363099 மின்னஞ்சல் kectgroup@gmail.com 047018

பணிப்பெண்கள். வீட்டுப் பணிப் பெண்கள் மற்றும் சுத்திகரிப்பாளர்கள் தேவை. வயது 30 இற்கு கீழே அனுபவம் தேவையில்லை. நல்ல சம்பளம். வேலை நிபந்தனைகள் உண்டு. தொடர்பு முகவரி 75/1, W.A. சில்வா மாவத்தை, கொழும்பு 6. தொலைபேசி 2591169. 0 777 452447, 0 755 091379. 047049

பாணந்துறை வீடு ஒன்றில் தங்கி இருந்து வேலை செய்ய பெண் ஒருவர் தேவை. வயது 1825 விண்ணப்பிக்கவும். 071 4199893. 046334

320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

கிரிபத்கொட உணவகத்திற்கு கோக்கி, ரொட்டி, அப்பம், ரைஸ் அன்ட் கறிக்கான அனுபவமுள்ள ஊழியர்கள் தேவை. 076 375 54 57, 075 3448844. 046940

321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

தேவை. பன்றிப் பண்ணைக்கு ஊழியர்கள் மற்றும் திருமணமான குடும்பங்கள் சம்பளம் 50,000/ தங்குமிடம் இலவசம். S.N. பிரதர்ஸ், திவுலப்பிட்டிய. 0 777 780587. 046943

பொது

431 நானாவிதப் பொருட்கள் விற்பனைக்கு

புத்தம் புதிய washing machine television original packing உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு. mobile 076 5790835. 046592

சொந்த விடயம்

528 தங்குமிட வசதிகள்

கொழும்பு 6 வெள்ளவத்தை, பெண் பாதுகாப்பு ஊழியர்களுள்ள தொடர்மாடி, அறைகள், இணைக்கப்பட்ட குளியலறைகள், உணவு அறை, சமையலறை, குக்கர். துணி கழுவும் இயந்திரம், குளிர்சாதனப் பெட்டி. 75/1, W.A. சில்வா மாவத்தை. தொலைபேசி 011 2591169, 07 5 5091379, 07 77 452447. 047089

காணி/தோட்டம்

616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

மஹரகம இசிபத்தன வீதி 14 பேர்ச் உடன் விற்பனைக்கு. ஒரு பேர்ச் 24 இலட்சம். தொடர்பு 075 9576605. 046438

619 வீடு சொத்து குருணாகல் மாவட்டம் விற்பனைக்கு

037 2221666 Very Close to Kurunegala - Dambulla main Road. Valuable 13 Blocks (Maraluwawa) in a security Zone Surrounded by walls with private Entrance. Very Close to Muththettugala Railway Station & Highway Entrance (Yaggapitiya) From 380,000/- per perchers. 074 1 234565. 046994

037 2 221666/ 074 12345 65 Beautiful & Calm Overseing Luscious Paddy Fields. 5 Min to the Kurun egala to wn. (Wadu ragala) 900m to the Highway Entrance, With All Public Facilities. Starting From 630,000/- per perch ideal place to invest or reside. 046 996

641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

149/6, தேவானம்பியதிஸ்ஸ மாவத்தையில் 2 அறைகளுடன் வீடு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு உண்டு. 072 8261822. 043392

திருமண சேவைகள்

மணமகன்

இலங்கை முஸ்லிம் பெற்றோர் அவர்களின் இறைவன் பக்தியுள்ள நேர்மையான கௌரவமான குடும்ப பின்னணியுள்ள மகனுக்கு கல்வி பயின்ற மணமகளை தேடுகின்றனர். மகனின் வயது 27, உயரம் 5'9" tan நிறம். அவர் கடந்த 5 வருடங்களுக்கு மேலான IT கம்பனியில் சிரேஷ்ட முகாமையாளராக பதவி வகிப்புடன் முகாமையாளருக்குரிய 6 இலக்க சம்பளம் மற்றும் கம்பனி காரும் வழங்கப்பட்டுள்ளது. proposalbr321@gmail.com என்ற வழியாக தயவு செய்து தொடர்பு கொள்ளவும். G184973

தினகரன் வாரமஞ்சரி

திருமண சேவைகள்

உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.

உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.

முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377

*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.





யாழ்.சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களின் போசாக்குணவை கருத்தில் கொண்டும் யாழ்.கலட்டி மெதடிஸ்ட மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களின் போசாக்குணவை கருத்தில் கொண்டும் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவதற்காக ஒரு தொகை உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. கனடாவிலிருக்கும் மல்ரி மீடியா நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களின் தமது வேதனத்தின் ஒரு பகுதியை யாழ்.சிறுப்பிட்டி பாடசாலை மாண வர்களுக்கு வழங்கினர். யாழ்.கொட்டடியைச் சேர்ந்த குணரட்ணம் சத்தியலட்சுமியின் நினைவாக அவரது குடும்பத்தினர் யாழ்.கலட்டி மெதடிஸ்ட மிசன் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கினர். இப் பொருட்களை இலங்கையிலுள்ள பிரதிநிதியான லயன் கலாநிதி. நா.தனேந்திரன் மூலமாக பாடசாலை அதிபர்களிடம் கையளித்த போது பிடிக்கப்பட்ட படம். (படம்: வேலணை குறூப் நிருபர்)





ரோல் பிளக்

மிகவும் உயர் தரத்தில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட ரோல் பிளக் சகல அளவுகளிலும் விற்பனைக்கு.

(மொத்தமாக மட்டும்)
077-8800892

பாணந்துறை ஒரேதுடுவ முஸ்லிம் வித்தியாலயத்தில் கடந்த 04 ஆம் திகதி மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டுதல் மற்றும் தரம் ஐந்து மாணவர்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்வுகள் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றன. நிகழ்வுக்கு சிறப்பதியாக உளவியல் ஆலோசகர் எ.எம்.அஸ்ரின், கௌரவ அதிதியாக களுத்துறை வலயக் கல்வி உதவிப் பணிப்பாளர் (தமிழ் மொழி) கலந்து கொண்டு மாணவர்களுக்கு சின்னம் சூட்டி பரிசுகளை வழங்கினர். நிகழ்வுகள் வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெற்றது.





அண்மையில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் நடைபெற்ற **'இலங்கையில் சைவ ஆலயங்கள்'** என்ற நூல் வெளியீட்டு விழாவின்போது நூலாசிரியர் யோகநாயகி நடராஜா பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவதையும், நூலின் ஆய்வுரையை நிகழ்த்திய சைவப் புலவர் செ.கந்த சத்தியதாசன், வாழ்த்துரையை வழங்கிய சைவப் புலவர் ச.தில்லைமணி ஆகியோர் கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

இலங்கை வங்கி

விலைமதிப்புள்ள சொத்துக்களின் விற்பனை

ஆதன இலக்கம்	நகரம்	ஆதனம் காணப்படும் இடம்	ஆதன வகை	பரப்பளவு
கமல் பீ.வீ.சீ	கொழும்பு	முன்பு கமல் பீ.வீ.சீ தனியார் நிறுவனம் இல: 25, பஞ்சிகாவத்தை வீதி, கொழும்பு - 10	காணியும், தொழிற்சாலை கட்டடமும்	ஏ - 0 ரூ - 0 பேர் - 9.94

மேற்குறிப்பிட்ட சொத்துக்களுக்கான விலைகூறல்களை முன்வைக்க ஆர்வமுடையோருக்கு (முதல் தரப்பினருக்கு மட்டும்) அழைப்புவிடுக்கின்றோம்.

விண்ணப்பங்கள் 2022.08.29 ஆம் திகதி வரை மட்டுமே விநியோகிக்கப்படும். அத்தோடு மீளளிக்கப்படாத 2,000.00 ரூபாவுக்கான வைப்பொன்றையும் மீளளிக்கப்படும் 50,000.00 ரூபாவுக்கான வைப்பொன்றையும் எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் வைப்பிலிடலாம்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை, குறித்த சொத்துக்கள் தொடர்பான இலக்கத்தோடு (PROP/05/2022) எனப் பெயரிட்டு சீல் வைக்கப்பட்ட உறையிலிட்டு 2022.08.30 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். விண்ணப்பதாரிகள் விலைக்கூறல்கள் திறக்கப்படும் 2022.08.30 ஆம் திகதியன்று இங்கு சமுகமளிக்குமாறும் அழைப்புவிடுக்கின்றோம்.

விண்ணப்பதாரிகளின் ஏலவிலைக்கூறல்களை அங்கீகரிப்பது அல்லது புறக்கணிப்பது இலங்கை வங்கிக்குரிய உரிமையாகும்.

மேலதிக விபரங்களை வேலை நாட்களில் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுக்கு அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்:

முகவரி : இலங்கை வங்கி, கையகப்படுத்தப்பட்ட சொத்துகள் பிரிவு, 3 ஆம் மாடி, தலைமையகம், "இலங்கை வங்கிச் சதுக்கம்" இல : 01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

தொலைபேசி : உதவிப் பொது முகாமையாளர், பெருநிறுவன அறவிடற் பிரிவு - 011 238 6080 / 011 220 3410
சிரேஷ்ட முகாமையாளர் - 011 232 1170 / 011 220 3429 / 076 962 7068
உதவி முகாமையாளர் - 011 220 3470 / 071 841 8898

மின்னஞ்சல் முகவரி : mgrforeclosed@boc.lk

தயவுசெய்து www.boc.lk என்ற இணையதளத்தில் பிரவேசித்து அங்கிருக்கும் Special Notices என்பதன் கீழுள்ள Foreclosed Properties for sale என்பதைப் பார்வையிடவும்.

1975 BOC CALL CENTRE www.boc.lk

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

தினகரன் வாரமஞ்சரி BUDGET

It suits your budget

ADZ

Hot Line - 011 2 429 369 I 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845

LAND WITH WAREHOUSE FOR SALE IN WELLAMPITIYA
20 perches, High roof, Three phase current
Double gate, Perfect square block
20ft Container access available. No brokers
Rs. 60 Million Negotiable
Contact: 0777569490

ALTAIR APARTMENT
3 BR+ 2 WR
1820 Sq.ft.
above 35 floor
Sloping tower with port city view
FOR SALE
Selling Price
Rs.275 Million
0777 258 280

LAND NEEDED
15-30 ACRE LAND NEEDED
close to Wellawaya, Monaragala, Thanamalwila, Nikaveratiya, Naththandiya, Tissa or Netolpitiya
Call Lalith
0716 81 46 25

Charging via Solar Panel / Electric Plug
Durable Heavy Duty Design
3 Speed Control
USB Output for Phone Charging
Solar FAN
Rs.25,500
1 YEAR WARRANTY
0777 806 542
NO. 96, NEW MOOR STREET, COLOMBO 12.
SOLARX

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



மேஷம்

ஆடி 23ம் திகதி (08/08/2022) குரு வக்ரம் பெற்றுள்ளார். உங்கள் ராசி அடிப்படையில் பார்க்கும் பொழுது 9 ,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. அவர் வக்ரம் பெறும் பொழுது நன்மை தீமை இரண்டும் கலந்தே நடைபெறும். 12க்கு அதிபதியாக குரு இருக்கிறார். விரையாதிபதி வக்ரம் பெறும் நேரம் விரயங்கள் குறையும். இந்த காலகட்டத்தில் சுபகாரியங்கள் நடத்துவதில் கவனம் செலுத்தலாம். 9ம் இடத்திற்கும் குரு அதிபதி. அந்த வகையில் இந்த வக்ர காலத்தில் தந்தை வழி உறவில் விரிசல்கள் ஏற்படலாம். சொத்துக்களில் முறையான பங்கு கிடைப்பது அரிது. வாகன பழுது வாட்டத்தை கொடுக்கும். உடல்நலத்தில் அச்சுறுத்தல் உருவாகும். இடம் மாற்றம், வீடு மாற்றம் ஏற்படலாம்.

ரிஷபம்

ஆடி 23ஆம் திகதி (08/08/2022) மீன ராசியில் குரு வக்ரம் பெற்றுள்ளார். உங்கள் ராசிநாதன் சுக்கிரனுக்கு பகை கிரகமாகும். எனவே அவர் பக்கம் வக்ரம் பெறுவது நன்மைதான். என்றாலும் லாபாதிபதியான குருவால் சிலசமயங்களில் பொருளாதார சிக்கல்கள் ஏற்படும். வெளிநாட்டு முயற்சியில் தடை ஏற்பட்டு அகலும். தொழில் போட்டியாளர்களை சமாளிக்க புதிய உத்திகளைக் கையாள்வார்கள். ஒருசிலருக்கு வாங்கிய இடத்தை விற்க நேரிடலாம். வியாபாரப் போட்டி அதிகரிக்கும். உத்தியோகத்தில் சலுகை கிடைக்காது. குரு பகவான் அஷ்டமாதிபதியாக விளங்குவதால் அவர் வக்கிர காலத்தில் ஒரு சில நன்மைகளும் நடைபெறும். கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம் என் பதற்கேற்ப அரசு வழியில் சில சலுகைகள் கிடைக்கலாம். சில நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவீர்கள். குல தெய்வ வழிபாடு அவசியம்.

மிதுனம்

ஆடி 23ம் திகதி (08/08/2022)மீன ராசியில் குரு வக்ரம் பெற்றுள்ளார். உங்கள் ராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு கேந்திராதிபத்திய தோஷம் பெற்ற குரு பகவான் வக்கிரம் பெறுவது ஓரளவு நன்மை தான். என்றாலும் எதிர்பாராத சில பின்விளைவுகளை சந்திக்க நேரிடும்.தொழிலில் மாற்றங்களை செய்ய முன்வருவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சுயதொழில் தொடங்குவது பற்றி சிந்திப்பீர்கள். 7ம் இடத்திற்கு அதிபதியாகவும் குரு விளங்குவதால் வாழ்க்கைத் துணை வழியே பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். வரன்கள் கைநழுவி செல்லலாம். குடும்ப ஒற்றுமை குறையலாம். அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வதால் அமைதி காண இயலும்.

கடகம்

ஆடி 23ம் திகதி (08/08/2022) மீன ராசியில் குரு வக்ரம் பெற்றுள்ளார். உங்கள் ராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குருபகவான் 6க்கு அதிபதியான குரு, வக்ரம் பெறுவது நன்மைதான். என்றாலும் அவர் பாக்கிய ஸ்தானத்திற்கு அதிபதியாக இருப்பதால் ஒரு சில நல்ல வாய்ப்புகளை இழக்க நேரிடும். உறவினர் பகை அதிகரிக்கும். மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டிய நேரம் இது 6ம் இடத்திற்கு அதிபதியாக இருக்கிறார். குரு பகவான் மறைவிடத்திற்கு அதிபதியான குருபகவான் வக்ரம் பெறுவது நன்மைதான். உத்தியோகத்தில் எதிர்பாராத மாற்றங்கள் இனிமை தரும். கடன்களை செலுத்தி நிம்மதி காண்பீர்கள் தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும்.

சிம்மம்

ஆடி 23ம் திகதி (08/08/2022)மீன ராசியில் குரு பகவான் வக்கிரம் பெற்றுள்ளார். உங்கள் ராசிக்கு 5 ,8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு அஷ்டமாதிபதி வக்ரம் பெறுவது நன்மைதான். என்றாலும் பூர்வபுண்ணிய ஸ்தானாதிபதியான புத்திர ஸ்தானாதிபதியாக குரு விளங்குவதால் சில பிரச்சினைகளையும் சந்திக்க நேரிடும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. தொழிலில் சில மாற்றங்களை செய்ய முன்வருவீர்கள். அஷ்டமாதிபதியான குரு வக்ரம் பெறுவதால் இழந்த பதவி மீண்டும் கிடைக்கும். எதிர்கால முன்னேற்றம் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். வாகன மாற்றம் இடமாற்றங்கள் பற்றிய சிந்தனை மேலோங்கும். நண்பர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர். இல்லத்தில் சுப காரியம் நடைபெற வழி பிறக்கும்.

கன்னி

ஆடி 23ஆம் திகதி (08/08/2022)மீன ராசியில் குரு வக்ரம் பெற்று உள்ளார். உங்கள் ராசிக்கு 4 ,7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு கேந்திராதிபத்திய தோஷம் பெற்ற குரு வக்ரம் பெறுவது யோகம் தான் 4 க்கு அதிபதி வக்ரம் பெறுவதால் சுகஸ்தானம் பலம் இழக்கிறது. எனவே ஆரோக்கியம் பாதிக்கும். இடம், பூமி வாங்கும் முயற்சியில் சிறு தடைகள் ஏற்பட்டு அகலும். தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை. தன்னிச்சையாக செயல்படுவார்கள். சில தடுமாற்றங்களை சந்திப்புக்கு அதிபதியான குரு வக்ரம் பெறுவதால் வாழ்க்கைத் துணை வழியே பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். பாசம் மிக்கவர்கள் பகையாக மாறலாம். உத்யோகத்தில் வளைந்து கொடுத்துச் செல்வது நல்லது.

துலாம்

ஆடி 23ஆம் திகதி (08/08/2022)மீன ராசியில் குரு வக்ரம் பெற்றுள்ளார். உங்கள் ராசிநாதன் சுக்கிரனுக்கு பகை கிரகமாகும். குரு வக்ரமாக இருக்கையில் உடன்பிறப்புகளுடன் மோதல் உருவாகலாம். வழக்குகள் எதிராக திரும்பலாம். வருமானப் பற்றாக்குறை அதிகரிக்கும். தொழிலில் பிரச்சினைகள் ஏற்படும். எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்வது நல்லது. குருபகவான் 6 க்கு அதிபதியாக விளங்குவதால் உத்தியோகத்தில் மாற்றம் ஏற்படும். நிறுவனங்களிலிருந்து அதிக ஊதியத்துடன் அழைப்பு வரலாம். சுய ஜாதகத்தை ஆராய்ந்து பார்த்து அதை ஏற்றுக் கொள்வதே நல்லது. எதிரிகள் பலம் குறையும். புதிய வாகனம் வாங்க முயற்சிப்பீர்கள். பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும்.

விருச்சிகம்

ஆடி 23ஆம் திகதி(08/08/2022) மீன ராசியில் சஞ்சரிக்கும் குருபகவான் வக்ரம் பெற்று உள்ளார். தன் சொந்த வீட்டிலேயே குரு வக்ரம் பெற்றிருப்பதால் எதிர்பார்த்த நல்ல மாற்றங்கள் ஏற்படும். உங்கள் ராசிக்கு அதிபதியான குரு என்பதால் ஒரு தொகை செலவழித்த பின்னரே அடுத்த தொகை கைக்கு கிடைக்கும். குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்லுங்கள் .சுப காரியங்கள் முடிவாகும். வீடு, இடம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு குரு பகவான் அதிபதி என்பதால் அவர் வரும் காலத்தில் பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். பாகப்பிரிவினை உங்களுக்கு சாதகமாக அமையும். உத்தியோகத்தர்கள் சுய தொழில் தொடங்கும் முயற்சி செய்வர்.

தனுசு

ஆடி 23ம் திகதி (08/08/2022) மீன ராசியில் குரு வக்ரம் பெற்று உங்கள் ராசிநாதன் குரு வக்ரம் பெறும் போது எதையும் திட்டமிட்டு செய்ய இயலாது. திடீர் திருப்பங்கள் நிகழும். ஆரோக்கிய தொல்லை உண்டு. உங்கள் ராசிநாதனாகவும் சுக ஸ்தானத்திற்கு அதிபதியாகவும் குரு இருப்பதால் கவனத்தோடு செயல்படுங்கள். நீங்கள் நன்மை செய்தாலும் பிறருக்கு தீமையாக தெரியும். வாகனங்களில் செல்லும்போது கவனம் தேவை. வெளிநாட்டிற்கு சென்றவர்களில் சிலர் வேலை இன்றி திரும்ப நேரிடும். படித்து முடித்து பல காலமாக வேலை என்று தவிர்த்தவர்களுக்கு தற்காலிக பணி அமையலாம். இந்த நேரத்தில் குரு தெய்வம் மற்றும் எல்லை தெய்வங்களை வழிபடுவது நல்லது.

மகரம்

ஆடி 23ம் திகதி (08/08/2022) மீன ராசியில் குரு வக்ரம் பெற்றுள்ளார். சகோதர சகாய ஸ்தானாதிபதியாகவும் விளங்கும் குரு பகவான் வக்கிர இயக்கத்தில் செயல்படும்போது சகோதரர்களால் பிரச்சினைகள் உருவாகலாம். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். குரு பகவான் சொந்த வீட்டில் சஞ்சரிப்பதால் பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படாது. உத்தியோகத்தில் நிரந்தர பணி அமையும். 12 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் குரு விளங்குவதால் விரயாதிபதி குரு வக்ரம் பெறுவது ஒரு வழிக்கு நன்மைதான். பயணங்கள் பலன் தரும் வீடு மாற்றம் இடமாற்றம் விரும்பும் விதத்தில் அமையும். ஜென்ம சனி வக்ரம் பெற்று உள்ளதால் எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்யுங்கள்.

கும்பம்

ஆடி 23ம் திகதி (08/08/2022) மீன ராசியில் குரு வக்ரம் பெற்றுள்ளார்.உங்கள் ராசிக்கு 2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு தனாதிபதி குரு வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல.பொருளாதாரத்தில் பற்றாக்குறை ஏற்படும் புதிய மனிதர்களை நம்பி எதையும் செய்ய வேண்டாம். குடும்ப பிரச்சினை அதிகரிக்கலாம். கொடுக்கல் வாங்கல்களில் ஏமாற்றம் வரக்கூடும். புதிய முயற்சிகளில் ஈடுபடும் பொழுது ஆலோசித்து முடிவெடுங்கள். லாப ஸ்தானத்திற்கு அதிபதியாக குரு விளங்குவதால் லாபம் வருவதில் சிறு குறுக்கீடு ஏற்படும். பங்குதாரர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்ள மாட்டார்கள். தொழில் பிரச்சினைகள் அதிகரிக்கும். விற்பனை பிரதிநிதிகளை அனுசரித்து செல்லுங்கள். உங்களுக்கு கிடைக்க வேண்டிய சலுகைகள் மற்றவர்களுக்கு போகலாம்.

மீனம்

ஆடி 23ஆம் திகதி (08/08/2022) மீன ராசியில் குரு வக்ரம் பெற்றுள்ளார். உங்கள் ராசிக்கு அதிபதியாகவும் 10ம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் குரு வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. உடல்நல பாதிப்புகளும் மனக் கசப்புகளும் அதிகரிக்கும். வாழ்க்கை தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும். உத்தியோகம் மற்றும் தொழிலில் இடமாற்றம் ஊர்மாற்றம் வந்துசேரும். 10ம் இடத்திற்கு அதிபதியாக குரு விளங்குவதால் தொழில் பங்குதாரர்களால் தொல்லைகள் ஏற்படும். திட்டமிட்ட காரியங்கள் திசைமாறிச் செல்லும். பணிபுரியும் இடத்தில் உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்காது. மனக்குழப்பம் அதிகரிக்கும் நேரமிது.

இலங்கைப் பத்திரிகைத் துறை வரலாற்றில் நீண்ட நெடுங்காலம் ஓர் தேசிய பத்திரிகையில் பிரதம ஆசிரியராக பணிபுரிந்தவர் என்ற பெருமையை தன்னகத்தே கொண்டவர் கலாசூரி இ. சிவகுருநாதன். இலங்கை தமிழ் இலக்கியத்தின் உருவாக்கத்திலும், வளர்ச்சியிலும் தினகரன் ஏற்படுத்திய பங்களிப்பும், தினகரன் பிரதம ஆசிரியர் கலாசூரி ஆர். சிவகுருநாதனின் பங்களிப்பும் மிக அளப்பரியதே.

பத்திரிகைத்துறையில் ஒரு சகாப்தம் :

எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் கலாசூரி சிவகுருநாதனின் இயற்பெயர் "இரத்தினதுரை".*(1931.10.07 2003.08.08)*

இலங்கை பத்திரிகைத்துறையில் ஒரு சகாப்தம் :

தினகரன் பத்திரிகை வரலாற்றின் சாதனையாளர் நீண்டகால பிரதம ஆசிரியர் கலாசூரி சிவகுருநாதன்



யாழ்ப்பாணம், கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நீண்ட காலமாக பணியாற்றிய ஊடகவியலாளர் என்ற பெருமைக்குரியவர். இவரது தந்தையாரின் பெயரே சிவகுருநாதன். பத்திரிகையுலகில் பிரவேசித்த பின் தந்தையாரின் பெயரையே தன் எழுத்தாள பெயராக தன் பிதாவை கௌரவப்படுத்தினார்.

அத்துடன் கலாசூரி ஆர். சிவகுருநாதன் பலரை எழுத்தாளர்களாகவும் பத்திரிகையாளராகவும் உருவாக்கியதில் சாதனையே செய்துள்ளார் எனபதும் உண்மையே. அவரின் வல்லமை, ஆளுமை, எல்லோருடனும் நட்புடன் பழகும் தன்மை சிவகுருநாதன் அவர்களை மக்கள் மனதில் என்றும் பதிய வைத்துள்ளது

கலாசூரி ஆர். சிவகுருநாதன் பத்திரிகைத் துறைப்பணி ஒரு சகாப்தம் என்றே கூற வேண்டும். ஏரிக்கரை தேசிய பத்திரிகை ஆசிரிய பீடத்தில் சுமார் நாற்பது வருட காலம் பணியாற்றியமை என்பது சாதனைக் குரியது ஒன்றாகும். இலங்கையின் தேசிய தினசரிகளில் ஒன்றான 'தினகரன்' என்றவுடன் நமது ஞாபகத்திற்கு வருபவர் தினகரன் பத்திகையில் நீண்டகாலம் பணிபுரிந்த தினகரன் பிரதம ஆசிரியர் கலாசூரி ஆர். சிவகுருநாதன் அவர்களே.

கலாசூரி ஆர். சிவகுருநாதன் பத்திரிகை ஆசிரியராகப் பணியாற்றியவாறே பட்ட மேற்படிப்பை மேற்கொண்ட அவர், 'இலங்கையில் தமிழ்ப் புதினப் பத்திரிகைகளின் வளர்ச்சி" என்ற பொருளில் ஆய்வு நூலைச் சமர்ப்பித்து முதுகலைமாணிப் பட்டத்தினைப் பெற்றுக்கொண்டார். கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவராகப் பல ஆண்டுகள் தமிழ்ப்பணியாற்றியவர். இவரது பணிகளைப் பாராட்டி இலங்கை அரசு 'கலாசூரி" விருதினை வழங்கிக் கௌரவித்தது.

யாழ்ப்பாணம் இந்துவின் மாணவர்:

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்வி கற்றுப் பின்னர், மேற்படிப்புக்காகவும் தொழில் காரணமாகவும் கொழும்பில் பல காலம் வாழ்ந்தார். 1955 ஆம் ஆண்டு தினகரன் பத்திரிகையின் உதவி ஆசிரியராகச் சேர்ந்த இவர் ஆரம்பத்தில் பாராளுமன்ற நிருபராகப் பணியாற்றிப் பாராளுமன்ற நிகழ்வுகளை பத்திரிகை மூலம் கொண்டு வர வழி வகுத்தார். பின்னர் 1957 ஆம் ஆண்டு தினகரன் பத்திரிகையின் செய்தி ஆசிரியராகி 1961 ஆம் ஆண்டு முதல் பிரதம ஆசிரியராகப் பணியாற்றினார்.

இலங்கையின் தேசியமட்ட பத்திரிகை வரலாற்றில் 33 வருடங்கள் பிரதம ஆசிரியராக இருந்த பெருமை இவருக்கு உண்டு. இலங்கைப் பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம், இலங்கை பத்திரிகை சபை ஆகியவற்றில் பகுதிநேர விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளார்.



உழைக்கும் பத்திரிகையாளர் சங்க தலைவர் :

சிறந்த பத்திரிகையாளர் சேவைக்கான விருது, சமூக மாமதி, தமிழ்மணி ஆகிய சிறப்புப் பட்டங்களைப் பெற்றுக் கொண்ட இவர், தமிழ் மக்களினால் செய்தி மன்னன் எனவும் அழைக்கப்பட்டார். இலங்கை நீதி அமைச்சினால் இலங்கை முழுவதற்குமான சமாதான நீதவானாக நியமனம் பெற்றது டன், சிலகாலம் கொழும்புத் தமிழ்ச்சங்கத் தின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

இவர் இலங்கை அரசின் அதிவிசேட விருதான கலாசூரி விருதினைப் பெற்றுள்ளார். சட்டத்துறையில் நுழைந்து படித்துச் சட்டத்தரணியாகவும், சட்டக்கல்லூரி பகுதி நேர விரிவுரையாளராகவும் பல ஆண்டுகள் கடமையாற்றினார். இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத் தலைவராக இரு தடவைகள் தெரிவுசெய்யப்பட்டுப் பணிபுரிந்தார். அச்சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழர் அவர் ஒருவரே என்பது குறிப்பிடத்தக்கது. சகல இன மக்களின் நன் மதிப்பையும் பெற்ற பண்பாளராக விளங்கினார்.

மலையக எழுத்தாளர் அந்தனி ஜீவா தினகரன் பிரதம ஆசிரியர் ஆர். சிவகுருநாதனை பற்றிக் குறிப்பிடுகையில் அவர் என்றும் பெருந்தன்மையானவர், தன்னை விமர்சிப்பவர் ஆற்றலை மதித்து அவர்களின் படைப்புகளை பிரசுரித்து ஊக்குவிப்பவர். அவர் தினகரன் பத்திரிகையில் பிரதம ஆசிரியராக இருந்த கால கட்டத்தில் வார வாரம் தனது எழுத்துக்கள் தினகரனில் இடம்பெற்றதை மறக்க முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தினகரன் பத்திரிகையில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக பிரதம ஆசிரியராக பணியாற்றிய பெருமையும் புகழும் கலாசூரி ஆர். சிவகுருநாதனையே சாரும். நீண்ட காலம் முதல் சிவகுருநாதன் அமரராகும் வரை அவருடன் தொடர்புகளைப் பேணி வந் தி ருந் தி ரு க் கி றேன் என்றும் , தனது எழுத்து முயற்சிகளுக்கு ஊக்கமளித்து ஆக்கங்களை வாரந்தோறும் தினகரன் வாரமஞ்சரியில் பிரசுரித்து ஊக்கமளித்தவர். நாடறிந்த எழுத்தாளராக, பத்தி எழுத்தாளராக பரிணமிக்க அவரே காரணகர்த்தா என்றும் அந்தனி ஜீவா பெருமைப்படுகிறார்.

எல்லோருடனும் நண்பனாக :

அவரது மறைவின்போது நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் ஊடகத்துறையினர், எழுத்தாளர்கள், கலை இலக்கிய அமைப்புகளின் பிரதிநிதிகள், அமைச்சர்கள், உயர்நீதிமன்ற நீதிபதிகள், பேராசிரியர்கள், அரசியல்வாதிகள் பலருட்பட ஏராளமான புத்திஜீவிகள் அஞ்சலி செலுத்தினர் என்பதை அறியும் போது அவர் நற்பண்புகளும், பத்திரிகை உலகிற்கு ஆற்றிய பங்களிப்பும் புலனாகின்றது.

ஆகையினாலேயே அவரை எல்லோருடனும் நண்பனாக வாழவைத்தது.

நீண்ட காலம் பத்திரிகை உலகின் மதிப்புப் பெற்ற தலைமகனாக விளங்கிய சிவகுருநாதன் அவர்கள் தமிழ் மக்களின் மனங்களில் என்றும் நிறைந்திருப்பார்



சிவகுருநாதனும் விருதுகளும் :

கலாசூரி சிவகுரு நாதன் இந்து மதத்தைச் சார்ந்தவர் ஆயினும் இஸ்லாமிய சமயத்தையும், முஸ்லிம்களையும் என்றும் மதித்தார். இலக்கியக் கூட்டங்களில் அவர் உரையாற்றும் போது. "பிஸ்மில்லாஹிர்ரஹ் மானிற் றஹீம"'அஸ்ஸலாமு அலைக்கும்' என்று சொல்லி முஸ்லிம்களின் விசேட வைபவங்களில் தன் உரையை ஆரம்பிப்பார். அன்னாரின் சிரித்த முகமும் சீரியசிந்தனையும் மனதில் மாறாத பதிவுகளாகும் என மௌலவி காத்தான்குடி பௌஸ் தன் நினைவுரையில் குறிப்பிட்டுள்ளார்.

1955ஆம் ஆண்டு தினகரன் ஆசிரியர் பீடத்தில் சட்டத்தரணி சிவகுருநாதன் நுழைந்து புதிய சிந்தனைகளைப் புகுத்தி தினகரனுக்கு புதிய மகுடம் சேர்த்தார். 1955ஆம் ஆண்டு செய்தி ஆசிரியராகத் தரம் உயர்த்தபட்டு எழுத்துலகில் புதிய கோணத்தில் தினகரனை வழிநடாத்தி வந்ததனால் 1960ஆம் ஆண்டு விஜேவர்தன விருதை பெற்றதுடன் 1961ஆம் ஆண்டு தினகரன் பிரதம ஆசிரியர் கதிரையை அலங்கரித்தார். இந்தக் காலகட்டத்தில் தமிழ் முஸ்லிம் எழுத்தாளர் அணியை உருவாக்கினார்.

அன்னாரின் காலத்தில் எழுதிய எழுத்தாளர்கள் இன்னும் பிரகாசிக்கின்றனர். 1994ஆம் ஆண்டு ஜனாதிபதி விருதையும் பெற்றார்.

தினகரன் வளர்த்த இலக்கிய களம்:

ஈழத்துப் பத்திரிகைகள் நவீன இலக்கியத்திற்கு களம் அமைத்துக் கொடுக்க ஆரம்பித்த பின்னர் பல புதிய படைப்பாளிகள் உருவானதுடன், கணிசமான இலக்கிய படைப்புகளும் தோற்றம் பெற்றன. தினகரன் இவ்விடயத்தில் அதீத அக்கறை கொண்டு ஆற்றிய பணி மகத்தானது. அன்றைய காலகட்டத்தில் அதிகம் பேர் வாசிக்கும் பத்திரிகையாக தினகரன் விளங்கியதும் ஒரு காரணமெனலாம். அதன் காரணமாக இலக்கிய வளர்ச்சியில் குறிப்பாக இளம் படைப்பாளர்களின் இலக்கிய வளர்ச்சியில் காத்திரமான பங்களிப்பினை செய்தது.

தினகரன் இலக்கியப் பக்கங்களில் புதிய இளம் படைப்பாளிகளின் ஆக்கங்களை தேர்ந்தெடுத்து அவற்றை மெருகூட்டி வெளியிட்டது.தினகரன் ஆசிரியராகப் பணியாற்றிய கலாசூரி ஆர். சிவகுருநாதன் காலத்தில் இரண்டு தலைமுறை எழுத்தாளர்களை வெளிக்கொணர்ந்தாரென என்ற வரலாற்றுப் பெருமையும் அவருக்கு உண்டு.

கலாசூரி ஆர். சிவகுருநாதன் தனது ஆய்வு நூலில் குறிப்பிட்டது போல, இலங்கையின் தமிழ்ப் புதினப் பத்திரிகைகள் தோன்றி வளர்ந்த வரலாற்றை அறிவதிலும் ஆராய்வதிலும் ஒரு பத்திரிகையாளனுக்கு ஆர்வம் தோன்றுவது இயல்பானதே. இத்தகைய ஆர்வம் தனது நெஞ்சிலே நெடுநாட்களாய் ஊன்றியிருந்தது என்கிறார். இவ்வார்வமே "இலங்கைத் தமிழ்ப் புதினப் பத்திரிகை வளர்ச்சியில் 'தினகரன்' என்ற ஆய்வுக் கட்டுரையை எழுதுவதற்குத் தூண்டுகோலாயிற்று என்கிறார்.

ஐங்கரன் விக்கினேஸ்வரா ...✍

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 35

01		02	03	04		05	06
		07			08		
09				10		11	
		12	13		14		
15	16		17	18			
19		20				21	22
23			24				
	25					26	

திரு/திருமதி.செல்வி .....
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி .....
.....
.....
....
திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 35
த.பெ.இல.834. கொழும்பு

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 35

இடமிருந்து வலம்

(01) நமது நாட்டின் அதிகாரமிக்க அதியுயர் பதவி.
(05) சாப்பிடத் தூண்டும் உணர்வு.
(07) இறக்குமதி, ஏற்றுமதி பொருட்கள் மீதான வரிவசூலிக்கும் அரசுத் துறை. (குழம்பியுள்ளது)
(09) வரண்ட நிலத்தில் காணப்படும் முட்கள் நிறைந்த பச்சைநிற ஒருவகை தாவரம். (திரும்பியுள்ளது)
(10) மனநிறைவு.
(12) ஒரு விஷ ஜந்து. (திரும்பியுள்ளது)
(14) ஒருவகை கொடிப் பயிர்.
(15) வருத்தம், வேதனை.
(17) உதட்டில் காணும் மெல்லிய சிரிப்பு. (குழம்பியுள்ளது)
(19) பயிரிடப்படாத வெற்று விவசாய நிலம்.
(21) பறவை.
(23) பயனற்ற செலவு. (திரும்பியுள்ளது)
(25) கொடி பறக்க விடுவதற்கு இது தேவை. (குழம்பியுள்ளது)
(26) பூமி.

மேலிருந்து கீழ்

(01) துணி வகைகள்.
(02) சந்திரன்.
(03) வீட்டு வளர்ப்புப் பிராணி.
(04) நாட்காட்டியுடன் இணைந்தது.
(06) ஒரு தமிழ் மாதம்.
(08) இளமொட்டு, தளிர். (குழம்பியுள்ளது)
(11) அழகு குழம்பிவிட்டது.
(13) மருத்துவக் குணமுள்ள இது இனிமையானது.
(15) விசாரணையின்போது ஆதாரங்களை முன்வைத்து நியாயப்படுத்துவது.
(16) மனத்துணிவு.
(18) உடுத்துக் கொள்ளும் சாரத்தை இப்படியும் சொல்வர்.
(20) காய்ச்சல்.
(22) விடை காண்பதற்கு முன் வினா குழம்பிவிட்டது.
(24) பாடல். (தலைகீழ்)

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 34

விடைகள்

இடமிருந்து வலம்

(01) சிரஞ்சீவி	(05) வாசி	(07) கைதி
(08) காதலி	(10) சாளரம்	(11)பம்பரம்
(12) அகதி	(13) தனிமை	(16) பல
(17) சகா	(19) சதா	(20) வயல்
(22) மாது	(24) நாம்பன்	(25) சினம்

மேலிருந்து கீழ்

(01) சிகை	(02) ரதி	(03) சீதளம்
(04) விகாரம்	(06) சிவிகை	(09) பலிதம்
(10) சாரதி	(11) பகலவன்	(12) அபயம்
(14) சனி	(15) மைதானம்	(18) காது
(21) பல்	(23) மாசி	

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 33

பரிசு பெறுவோர்

முதலாம் பரிசு
வேல்நாயகம் இராஜேந்திரன்,
இல. 88, விபுலானந்த வீதி,
காரைதீவு 01.

இரண்டாம் பரிசு
எம்.ஏ.எப். அஸ்கா,
இல. 41/15 D, வித்தியாலய
ஒழுங்கை,பதுளை.

மூன்றாம் பரிசு
கே. சித்திரவேலாயுதன்,
இல. 57, ஹஸ்கிசன் வீதி,
திருகோணமலை.

பாராட்டு பெறுவோர்

1. பாத்திமா பஸ்னா பவாஸ்,
191/3, மூர் வீதி,
மன்னார்.

2. ஏ.எஸ்.எப். ரஸ்மியா,
குன்னேப்பான மடிகே,
மடவள பஸார்.

3. ரஞ்சினி சிவஞானம்,
இல. 43/1,
புகையிரதநிலைய வீதி,
மட்டக்களப்பு.

4. எம். பாஸிர்,
21/2A, நுவரெலியா வீதி,
ஹாலி எல.

5. கே. புண்ணியநேசன்,
151, சாரதா வீதி,
காரைதீவு 05. (கி.மா)

6. எம்.வி.எப். பஸினா,
71, மரிக்கார் வீதி,
களுத்துறை தெற்கு,
களுத்துறை.

7. மல்லிகாதேவி பத்மநாதன்,
டெமேரியா குறூப்,
முதலாம் பிரிவு,
பசறை.

8. கே. தாரணி,
கிளனமேறா டிவிசன்,
தலவாக்கலை.

★ ★ ★

தேசிய சர்வதேச முதலீட்டாளர்களின் வசதி கருதி ஒன்லைன் மூலம் விசாவுக்கான பரிந்துரை

புதிய செயற்திட்டம் அங்குரார்ப்பணம்

இலங்கை முதலீட்டுச் சபையானது தமது வர்த்தக நடவடிக்கைகளை டிஜிட்டல் மயப்படுத்தும் அம்சத்தின் ஒரு திருப்பமாக ஒன்லைன் மூலமான விசா பரிந்துரை செயல்திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

அதன் ஆரம்ப உத்தியோக பூர்வ வைபவம் கொழும்பு உலக வர்த்தக மையம் உள்ள முதலீட்டு சபை செயலகத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் நாயகம் ரேணுகா வீரக்கோன் கலந்து கொண்டு ஒன்லைன் முறைமையை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

முதலீட்டுச் சபையின் இந்த செயற்திட்டமானது இலங்கைக்கு முதலீட்டாளர்களை வரவழைப்பதற்கும் வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் விசேட சலுகைகளை கொண்ட நாடாக சர்வதேசத்தில் இலங்கையை நிலைநாட்டும் நடவடிக்கையாகவும் அமைந்துள்ளது.

இந்த செயற்திட்டமானது இலங்கை முதலீட்டுச் சபை, குடிவரவு குடியகல்வு திணைக்களம் மற்றும் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை முதலீட்டு சபையானது முதலீட்டாளர்களின் தேவைகளின் அடிப்படையில் வருடாந்தம் 7500 மற்றும் 8000 ற்கும் இடைப்பட்ட அளவிலான விசாக்களை விநியோகிப்பதற்கு பரிந்துரைத்துள்ளது.



இதன் மூலம் முதலீட்டாளர்கள் பல தடவைகள் முதலீட்டு சபையின் பிரதான அலுவலகத்திற்கு வருகை தரவேண்டிய அவசியம் தவிர்க்கப்பட்டுள்ளது.

இந்த செயற்பாட்டை இலகுபடுத்தும் வகையில் இலங்கை முதலீட்டு சபை குடிவரவு குடியகல்வு திணைக்களம் மற்றும் பாதுகாப்பு அமைச்சு ஆகியன இணைந்து புதிய ஒன்லைன் மூலமான விசா விநியோக செயற்பாடுகளை அறிமுகப்படுத்தியுள்ளன.

அதற்கான ஆரம்ப உத்தியோகபூர்வ நிகழ்வே கொழும்பு கோட்டை உலக வர்த்தக மத்திய நிலையத்தில் அமைந்துள்ள இலங்கை முதலீட்டு சபை அலுவலகத்தில் நடைபெற்றது.புதிய முறையை அறிமுகப்படுத்துவதோடு எந்த ஒரு விண்ணப்பதாரரும் முதலீட்டு சபைக்கு வருவதற்கான அவசியம் தவிர்க்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் அனைத்து செயற்பாடுகளையும் அவர்கள் ஒன்லைன் மூலமாக மேற்கொள்ள முடியும். அனைத்து விசா விண்ணப்பதாரர்களினதும் விசா விண்ணப்பம் இலங்கை முதலீட்டு சபை பரிந்துரை செய்துள்ள குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு குறுகிய குறுஞ்செய்தி அல்லது ஈமெயில் மூலம் அது தொடர்பில் அறிவிக்கப்படும்.

இந்த முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதனால் மோசடியான ஆவணங்கள் மற்றும் சான்றுப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் நடவடிக்கைகள் இடம்பெறுவது தவிர்க்கப்படுகிறது.

புதிய முறைமையின் கீழ் 3 வகையான விசா தொடர்பில் தேவையான பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன அந்த வகையில் நாட்டிற்குள் பிரவேசிக்கும் விசா, குடி இருப்பதற்கான விசா மற்றும் விசா பத்திரத்தை நீடித்துக்கொள்வது ஆகியன இதில் உள்ள டங்குகிறது.

இதன் மூலம் முதலீட்டாளர்களுக்கும் சேவையாளர்களுக்கு மற்றும் அதனோடு இணைந்த தரப்பினருக்கும் விசாவுக்காக விண்ணப்பிக்க முடியும்

இந்த புதிய ஒன்லைன் மூல விசா செயற்பாடுகளின் மூலம் முதலீட்டாளர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்கள் எதிர் நோக்கும்அசௌகரியங்கள்மட்டுப்படுத்தப் படும்.

டிஜிட்டல் மயமாக்கல் மூலம் இலங்கைக்குள் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் வர்த்தக பெயரை பிரபலப்படுத்துவதற்கும் அதன்மூலம் அரச துறையின் சிறந்த முதலீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வாய்ப்பும் இதன் மூலம் அதிகரிக்கப்படுகிறது.

லோரன்ஸ் செல்வநாயகம்

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

THE WORLD BANK
Funded by The European Union

பெறுகை அறிவித்தல்

சர்வதேச அபிவிருத்தி சங்கம் - கடனிலக்கம் 5873 மற்றும் ஐரோப்பிய ஒன்றிய மானிய இல.: TF-B-5382 செயற்றிட்ட ஐடி இல.: பி156019 – ICT முறைமையினூடாக அபிவிருத்தி செய்யப்பட்ட முகாமைதுவ முறைமையைக் கற்றலைப் பாவித்து விவசாயி வியாபார பாடசாலை பயிற்சியை நடாத்துவதற்காக குறுகியகால சேவை வழங்குநனொருவரை வாடகைக்கமர்த்துதல்

கொள்வனவு இல. LK-MOA-PMU-277934-NC-RFB

2022 ஜூலை 24 ஆம் திகதியன்று ஞாயிறு புதினப்பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட மேற்குறிப்பிட்டுள்ள கொள்வனவின் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்காக மூடும் திகதியானது ASMP இன் செயற்றிட்டக் கொள்வனவுக் குழுத் தலைவரினால் நீடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, விலைமனுக்கள் 2022 ஓகஸ்ட் 29 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு விலைமனுக்களை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். மேற்குறிப்பிட்டுள்ள விளம்பரத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள் மற்றும் தேவைப்படுத்தல்களில் எந்தவொரு மாற்றமுமில்லை.

தலைவர்,
செயற்றிட்டக் கொள்வனவுக் குழு,
விவசாய துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,
கமத்தொழில் அமைச்சு,
இல.: 123/2, பன்னிப்பிட்டிய வீதி,
பத்தரமுல்ல.
2022 ஓகஸ்ட் 14 ஆம் திகதியன்று.

கல்வி அமைச்சு
தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்

பெறுகை அறிவித்தல்

பாதுகாப்புச் சேவையை நடாத்திச் செல்லல்

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் மற்றும் அதன் கீழ் உள்ள 09 தொழில்நுட்பவியல் கல்லூரிகள், 29 தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு 2022-09-15ஆம் திகதி முதல் ஒரு வருட காலத்திற்கு தனியார் பாதுகாப்பு சேவைகளை நடாத்திச் செல்வதற்காக பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ள அங்கீகரிக்கப்பட்ட கேள்விதாரர்களிடமிருந்து மட்டும் கொழும்பு-10, தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் 2022-08-31ஆம் திகதி மு.ப. 10.30 மணி வரை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்வி இலக்கம்	வேலை விபரம்	(கேள்விப் பிணை முறி) (ரூபா)
DTET/14/07/03/2022	பாதுகாப்புச் சேவையை நடாத்திச் செல்லல் - 2022/2023	402,000.00

1. கேள்விப் பிணை முறியை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் பெற்று சமர்ப்பித்தல் வேண்டும்.
2. மீளளிக்கப்படாத 3,500.00 ரூபாவை மக்கள் வங்கியின் நகர மத்திய கிளையில் 176-1001-3-9026228 எனும் கணக்கிலக்கத்திற்கு ''பணிப்பாளர் நாயகம் - தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்'' எனும் பெயரில் வைப்புச் செய்து 2022-08-15ஆம் திகதி முதல் 2022-08-29ஆம் திகதி வரையான காலத்தில் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.30 மணிக்கிடையிலான எந்தவொரு நேரத்திலும் பற்றுச்சீட்டை தொழில்நுட்ப உதவிச் சேவைப் பிரிவிற்குச் சமர்ப்பித்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
3. அண்மைய கடந்த 3 வருடங்களின் சராசரி வருடாந்த வியாபாரப் புரள்வு 72 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன், திணைக்கள இடப்பரப்பு மற்றும் ஏனைய இடப்பரப்புகளைப் பரீட்சித்துப் பார்த்து ஒப்பந்தத்திற்கு இயைபான புரிந்துணர்வைப் பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்களை திணைக்களத்திற்கு வருகை தந்து அல்லது இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
5. கேள்வி ஆவணங்கள் வழங்குதல் 2022-08-29ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும்.
6. கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளல் 2022-08-31ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முடிவுறுத்தப்படும்.
7. எந்தவொரு வேளையிலும் ஒரு கேள்வியை அல்லது பல கேள்விகளை அல்லது சகல கேள்விகளையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தன்னகத்தே கொண்டுள்ளார்.

பணிப்பாளர் நாயகம்,
தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்,
த.பெ. 557, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-10.

தொலைபேசி இல. 011 2327008
தொலைநகல் இல. 011 2424977
இணையதளம்: www.dtet.gov.lk

ஜனாதிபதிக்கு முஸ்லிம்... *(10 ஆம் பக்கத் தொடர்)*

மூதூர் பிரதேச சபை, கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபை மற்றும் சம்மாந்துறை பிரதேச சபை ஆகியன நகர சபைகளாக தரமுயர்த்தப்பட வேண்டுமென வலியுறுத்துகிறோம். கோறளைப்பற்று மத்திய பிரதேச செயலகப் பிரிவு தொடர்பில் பன்னம்பலம ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரையானது தோப்பூர் பிரதேச பிரதேச சபையையும் உருவாக்குவதுடன் தாமதமின்றி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். கல்முனை முஸ்லிம் பிரிவு மற்றும் கல்முனை தமிழ்ப் பிரிவு சர்ச்சையானது அங்கீகரிக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்து , இரு சமூகத்தினரின் கரிசனைகளையும் கருத்தில் கொண்டு கிராம சேவகர் பிரிவுகளின் முறையான மீள் எல்லை நிர்ணயத்தின் பின்னர் தீர்க்கப்பட வேண்டும்.

அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் ஏனைய முக்கிய சிவில் சேவை பதவிகள் போன்ற நியமனங்களில் சிறுபான்மையினர் புறக்கணிக்கப்பட்டுவருவது கவலைக்குரியது. இந்த முரண்பாட்டைச் சரிசெய்யுமாறு தங்களை நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

வடக்கு மற்றும் கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளிலிருந்தும், ஆக்கிரமிக்கப்பட்ட, பயிரிடப்பட்ட நிலங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட, பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான விவசாயிகளின் மனுக்களை ஆய்வு செய்து நியாயத்தை நிலைநாட்ட ஒரு குழுவை அமையுங்கள்.

2005 ஆம் ஆண்டுக்குப் பிறகு வெளியிடப்பட்ட வர்த்தமானிகள் மற்றும் சுற்றறிக்கைகளின் அடிப்படையில், வன வள மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களங்களால் தொடங்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக, அந்த நிலங்கள் பல ஆண்டுகளாக அவர்களுக்குச் சொந்தமானவையாக அல்லது மாவட்ட காணி அபிவிருத்தி அலுவலரின் செல்லுபடியான அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள நிலையில் பயிரிடப்பட்டனவாக இருக்கத்தக்கனவாக உண்மை தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளது கவலைக்குரியது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பாரிய உணவுப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கு கிடைக்கக்கூடிய அனைத்து நிலப் பரப்புகளிலும் பயிர்களைச் செய்கை பண்ணுவதை ஊக்குவிக்கும் முயற்சிக்கும் அது பெரிதும் உதவும்.

நன்றி.

பரிசீலனையில் உள்ள இறப்பர் ஆலையைக் கொள்வனவு செய்வதில் ஆர்வமுள்ள உத்தேச கொள்வனவாளர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன. மேலதிக விபரங்களுக்கு ருவன்வெல்ல, மொரலிஓய எஸ்டேட், குரூப் முகாமையாளருடன் தொடர்பு கொள்ளுங்கள்

வஹரக்கவில் இயங்காமலிருக்கும் CHESTERFORD தொழிற்சாலையில் இறப்பர் ஆலைகளின் பட்டியல் உண்டு.

தொடர்புகள்:- குரூப் முகாமையாளர், மொரலிஓய எஸ்டேட் ருவன்வெல்ல.

தொடர் இல.	இயந்திராதிகளின் பெயர்
01	Grooved Mill (22"x12")
02	Smooth Mill (26”x14”)
03	Smooth Mill (22”x12”)
04	Smooth Mill (22”x12”)
05	Smooth Mill (22”x12”)
06	Grooved Mill (22”x14”)
07	Scrap Washer
08	Ruston Engine (Size 11 Class H) (Generator)
09	Ruston Engine (Size 08 Class HRS) (Generator)

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

குறுக்கெழுத்துப் போட்டி இல. 24

01	02		03	04	
05	06	07	08	09	
			10		11
12	13	14		15	16
	17	18	19	20	
	21	22		23	24

பெயர் .....

வகுப்பு .....

தொலைபேசி இல .....

பாடசாலை பெயர் .....

வதிவிட முகவரி .....

.....

....

மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

இடமிருந்து வலம்

(01) அக்காலம் முதல் இக்காலம் வரை இலக்கியங்களிலும், பாடல்களிலும் உவமையாக குறிப்பிடப்படுகின்ற அழகிய பறவை. இதன் குரல்ஒலி கேட்பதற்கு இனிமையானது. சிறுவர் பாடல்களில் இப்பறவை குறிப்பிடப்படுவது வழக்கம். பழம், தானிய வித்துகள் உணவாக உட்கொள்ளும் பறவை.

(03) நாம் பயணம் செய்கின்ற வீதியை இவ்வாறும் கூறலாம்.

(05) தெனாலிராமனுக்கு இவ்வாறான சிறப்புப் பெயர் உண்டு. நகைச்சுவைப் பேச்சுகள் காரணமாக வழங்கப்பட்ட பெயர்.

(12) ஆகாயத்தில் உலவித் திரிகின்ற வெண்பஞ்சுக் கூட்டம்.

(15) விவசாயி தனது பயிர்நிலத்தை உழுவதற்கான உபகரணம் இது. (தலைகீழான சொல்)

(17) பெண்கள் தங்களது கைகளில் அணிகின்ற ஆபரணம். (தலைகீழான சொல்)

(21) இந்து, பௌத்த துறவிகளின் சீருடையின் நிறம் இது. (தலைகீழான சொல்)

(23) பலாப்பழத்தின் உள்ளீடு.

மேலிருந்து கீழ்

(01) மிகச்சிறிய பறவை இது. இப்பறவை பறப்பதில்லை. எமது நாட்டில் இப்பறவை இல்லை. நியூசிலாந்து நாட்டில் காணலாம். அந்நாட்டின் தேசியப்பறவை இதுவாகும்.

(02) மட்பாண்டங்கள், கூரை ஓடு தயாரிப்பதற்கான மூலப்பொருள் இது. எமது நாட்டின் சில பிரதேசங்களில் ஈரலிப்பான நிலத்தில் இருந்து பெறப்படுகின்றது. (தலைகீழான சொல்)

(03) தேர்ச்சாரதியையும், யானையைப் பராமரிப்பவனையும் குறிப்பிடுகின்ற பொதுச்சொல்.

(04) பூத்துக் காய்க்கின்ற தாவரங்களில் பெரும்பாலானவை இதன் மூலமே இனப்பரம்பல் அடைகின்றன. இது நிலத்தில் வீழ்ந்து புதிய தாவரமாக முளைக்கின்றது. (தலைகீழான சொல்)

(11) வறியவரைக் குறிக்கின்ற பொதுப்பாற் சொல். (தலைகீழான சொல்)

(13) மாணவர்களாகிய உங்களுக்கு அறிவுக்கண் திறக்க வேண்டுமானால், இதுதான் பிரதானம்.

(14) விபத்துகளின் போது எமக்கு ஏற்படுகின்ற பாதிப்பு இது. சில நாட்கள் சென்றால் குணமாகி விடும். (தலைகீழான சொல்)

(15) இதனை கட்டியெழுப்பியே கட்டடங்கள் உருவாகின்றன. கற்களும் சீமெந்தும் மணலும் கொண்டு கட்டப்படுவது. (தலைகீழான சொல்)

குறுக்கெழுத்துப் போட்டி இல. 23

விடைகள்

இடமிருந்து வலம்

(01) நெல் (03) மான் (06) மாங்காய்
(11) தவளை (14) முள் (18) அலை
(21) கமுகு (24) விண்

மேலிருந்து கீழ்

(01) நெய் (02) முக்கால் (03) அந்தமான்
(09) கிளை (14) குறள் (18) கலை
(20) பாண்

குறுக்கெழுத்துப் போட்டி இல: 22

பரிசு பெறுவோர்

முதலாம் பரிசு
ஆர். அக்ஷயா கவிதாஞ்சலி,
தரம் 10, மா/ பாக்கியம் தேசியக்கல்லூரி,
இல. 1/2, தெஹிபிட்டிய, வறக்காமுற, உக்குவெல.

இரண்டாம் பரிசு
எம்.ஆர்.நாதிர் நூரி,
தரம் 09 A, அல் அஸ்ஹர் தேசியப் பாடசாலை,
361/2, வாரன வீதி, திஹாரிய.

மூன்றாம் பரிசு
ச. அஷ்மிதன்,
தரம் 07B, யா/யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,
இல. 46, மாளியாவத்தை வீதி, சங்கானை.

பாராட்டு பெறுவோர்

1. எம்.ஏ. அஹ்மத்,
தரம் 08A, மாறை/அறபா தேசிய பாடசாலை,
411, புதிய தெரு, வெலிகாமம்.

2. அஹமட் ஹொஸ்ஸான்,
தரம் 08B, க/களுகமுவ மத்திய கல்லூரி,
509/3A, களுகமுவ, கெலிஓயா.

3. செந்தில்குமார் தபிலோஷன்,
தரம் 07, இ/அல் மக்கியா தேசிய பாடசாலை,
இல. 37/1, பள்ளிவாசல் வீதி, பண்டாரவத்தை,
இரத்தினபுரி.

4. கு. துவாரகன்,
தரம் 05E கமு/கார்மேல் பற்றிமா கல்லூரி,
33A, சர்வோதய வீதி, பெரியநீலாவணை 01A.

5. வி. துவிசாலினி,
தரம் 05, இராமகிருஷ்ண பெண்கள் பாடசாலை,
திருமால்முக வீதி, காரைதீவு 07.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 24
சிறுவர் உலகம்
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



குறளமுதம் :

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.

தெளிவுரை :
செருக்கினால் தீங்கானவற்றைச் செய்தவரைத் தாம் தம்முடைய பொறுமைப் பண்பினால் பொறுத்து வென்று விட வேண்டும்.

சுற்றுச் சூழல் பாதுகாப்பில் மாணவர்களின் பங்கு



நம்மை சுற்றியுள்ள உயிருள்ள உயிரற்ற பொருட்களையே நாம் சுற்றுச்சூழல் என்கிறோம். ஒரு மனிதன் ஆரோக்கியமாக வாழ்வதற்கு சுற்றுச்சூழல் பெரும்பங்கு வகிக்கின்றது.

காற்று மாசுபாடு, நீர் மாசுபாடு, மண் மாசுபாடு, ஒலி, ஒளி மாசுபாடு, உணவுபொருட்கள் மாசுபாடு என நமது அன்றாட வாழ்க்கைக்கு தேவையான அனைத்தையும் நாமே மாசுபடுத்தி வருகிறோம்..

அக்கால மக்கள் சுற்றுபுறத்தை மாசுபடுத்தினாலும் அதனை சரி செய்வதற்கான வழிகளையும் கடைப்பிடித்தனர், இயற்கையை கடவுளாக வணங்கினார்கள் ஆனால் நாம் அதனைப்பற்றி கவலைக்கொள்வதே இல்லை. பருவநிலை மாறுதல்களின் விளைவை உணர்ந்த முதல் தலைமுறையாக நாம்தான் இருக்கிறோம், அதனை சரி செய்யும் கடைசி தலைமுறையாகவும் நாம் தான் இருக்கிறோம் என்று கூறியிருக்கிறார் ஜே இன்ஸ்லீ.



ஆண்டுதோறும் ஜூன் 5ஆம் திகதி உலக சுற்றுச்சூழல் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது, அன்றைய தினம் பாடசாலைகளில் மானவர்களுக்கான விழிப்புணர்வு விழாக்கள் நடத்துவார்கள், மாணவர்கள் அதனை ஒருநாள் மட்டும் என கடைப்பிடிக்காமல் தினமும் கடைப்பிடிக்க வேண்டும். கல்வி நிறுவனங்கள் இப்போது சுற்றுச்சூழல் பாதுகாப்பு முறைகள், கல்வி, சுற்றுச்சூழல் தொடர்பில் அறிவுரைகளை வழங்குகின்றன. மாணவர்கள் சிறு வயதிலிருந்தே சுற்றுசூழல் மீது அக்கறையுடன் வளர்ந்தால் அது நாட்டுக்கும் நல்லது.

சுற்றுச் சூழல் பாதுகாப்பில் மாணவர்களின் பங்கு சுற்றுச்சூழல் இது நீங்களும், நானும், இன்ன பிற உயிர்களும் வாழ முக்கியமானது. நிலம், நீர், காற்று, வெளி, நெருப்பு, உணவுச் சுழற்சி, வன ஜீவராசிகள், விவசாயம், பருவ நிலை ஆகியவை வலையைப்போல சுற்றுச்சூழலில் பிணைக்கப்பட்டுள்ளது. இவற்றில் எந்தவொரு இடத்தில் அற்றுப்போனாலும், அது நமக்கும். நம்மைச் சார்ந்த, சாராத உயிரினங்களுக்கும் பெரும் கேடு விளைவிக்கும்.

சுஜானி திருஆலன்,
வவுனியா.

லியனார்டோ டாவின்சி: மகத்தான ஓவியர்

இத்தாலியின் டஸ்கானி பிராந்தியத்தில், வின்சி குடியிருப்புப் பகுதியில் உள்ள அன்சியானோ என்ற கிராமத்தில் லியனார்டோ டாவின்சி 1452 ஏப்ரல் 15 அன்று பிறந்தார். தந்தையுடன் ஃபிளாரன்ஸ் நகருக்கு 1465இல் குடிபெயர்ந்தார். வெர்ரோசியோ என்ற ஓவியரிடம் பயிற்சி பெற்றார்.

வெர்ரோசியோவின் 'கிறிஸ்துவின் ஞானஸ்நானம்' தோன்றும் தேவதையை லியனார்டோ வரைந்தார். அவர் வரைந்த 'அர்னோ பள்ளத்தாக்கு ஓவியமே லியனார்டோவின் முதல் ஓவியமாகக் கருதப்படுகிறது.

மிலன் பகுதியை ஆண்டுவந்த பிரபு (Duke) லுடோவிகோ ஸ்ஃபோர்ஸவின் கீழ் பொறியாளர், கட்டிடக்கலை நிபுணர், சிற்பி, ஓவியராகப் பணியாற்றினார். பின்னர் ஆறாம் அலெக்ஸாண்டரின் மகன் சீசர் போர்கியாவிடம் ராணுவ கட்டுமான நிபுணராகவும் பொறியியலாளராகவும் பணியில் இருந்தார். ஃபிரெஞ்சு அரசர் 12ஆம் லூயி, முதலாம் ஃபாங்காய்ஸ் ஆகியோரின் கீழும் லியனார்டோ பணிபுரிந்துள்ளார்.

மனித உடல்களின் அங்கங்களைக் குறிப்பதன் மூலம் மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள உறவைப் புலப்படுத்தும் 'விட்ருவியன் மனித ஓவியம்' அவர் வரைந்ததே. அவர் வரைந்த ஓவியங்கள் பல இன்றும் நாம் பயன்படுத்தும் பறக்கும் இயந்திரம், கால்குலேட்டர், டாங்க், பாரசூட் உள்ளிட்ட பல்வேறு பொருட்களுக்கான தொடக்க காலக் கருத்துருக்களாக அமைந்துள்ளன. ஓவியத்தில் மட்டுமல்லாமல் அறிவியல் ஆராய்ச்சியிலும் லியனார்டோ தொடர்ந்து கவனம் செலுத்தினார்.

பல பரீட்சார்த்த நுட்பங்களை உள்ளடக்கிய இயேசுநாதரும் சீடர்களும் தோன்றிய 'கடைசி இரவு விருந்து' சுவரோவியத்தை 1495இல் வரைந்தார். புகழ்பெற்ற 'மோனாலிசா' ஓவியம் 1503இல் வரையப்பட்டது. 'ஞானஸ்நானம் செய்விக்கும் புனித ஜோன் ஓவியமே அவர் கடைசியாக வரைந்த ஓவியம் என கருதப்படுகிறது.

'மோனலிசா', 'மடோனா' 'கடைசி இரவு விருந்து', 'மேகியின் வழிபாடு' 'பாறைகளின் கன்னி', 'ஞானஸ்நானம் செய்விக்கும் புனித ஜான்' 'குழந்தையைத் தாங்கிய புனித ஆன்', போன்ற புகழ்பெற்ற ஓவியங்களை வரைந்த லியனார்டோ 1519 மே 2 இல் காலமானார்.

பெ. திலானுஷா,
வத்தளை, மாபோல.



மயிலும் இங்கே ஆடுது
மழையும் வரப் போகுது
குயிலும் கூவிப் பாடுது
குரலாய் தாளம் போடுது!

வட்டத் தோகை விரிக்குது
வண்ண மயில் சிலிர்க்குது
நீண்ட கழுத்தை ஒடிக்குது
நல்ல ஆட்டம் நடக்குது!

என்ன என்ன வண்ணங்கள்
எங்கும் அழகுச் சின்னங்கள்!
பார்க்க பார்க்க அழகுதான்
பாலர் நமக்கு விருந்துதான்!

கல்லொளுவை பாரிஸ்,
மள்வானை.

விரதமிருந்த வெள்ளைக் கொக்கு..!

பால்போல வெள்ளைநிறக் கொக்காரே
பனங்கிழங்குச் சொண்டழகுக் கொக்காரே
நீண்டநேரம் நீர்நிலையில் ஒற்றைக்காலில்
நின்றால் காலும் வலிக்காதோ கொக்காரே.

ஏனுமது மற்றக்காலுக்கு என்னஆச்சு
எவரேனும் கல்லெடுத்து அடிதாவிட்டார்
வாரும்அந்தக் காலுக்கு மருந்துபோட
வைத்தியரின் வீட்டுக்கு கூட்டிப்போறேன்.

மீன்கள் நூறு உமதருகே நீந்திவந்தும்
மிகஅமைதி காப்பதுமேன் கொக்காரே
நாளெல்லாம் உண்ணாது நோன்பிருந்தால்
நலிந்தெல்லோ உமதுடம்பு கெட்டுப்போகும்.

பாவமும்மை பார்க்கின்ற போதுஎல்லாம்
பரிதாபமாய் எனக்கிருக்கு கொக்காரே
நீண்டஉமது உண்ணாநோன்பு வெற்றிபெற
நெஞ்சார வாழ்த்துகிறேன் கொக்காரே.

என்வாழ்த்தின் ஈரலிப்பு ஓயும்முன்னே
எங்கிருந்தோ நீந்திவந்த பெரியமீனை
கண்டுவிட்ட கொக்காரும் பாய்ந்துகௌவி
கணைபோல விரைந்தோடி பறந்தாரம்மா..!

ஷெல்லிதாசன்,
திருகோணமலை.









கொழும்பு, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியின் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவியருக்கான பரிசில் வழங்கலும் கௌரவிப்பும் கல்லூரி அதிபர் திருமதி லலிதா ரவீந்திரராசா தலைமையில் கல்லூரி பிரதான மண்டபத்தில் கடந்த 10ஆம் திகதியன்று நடைபெற்றது. நிகழ்வின் பிரதம விருந்தினராக கொழும்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி M.H. பேகம், சிறப்பு விருந்தினர்களாக முருகேசு செந்தில்நாதன், இசையமைப்பாளரும் பாடகருமான ஸ்ரீ பிருந்தன் சண்முகராகவன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். வெகு விமர்சையாக நடைபெற்ற இந்நிகழ்விற்கு கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கம் மற்றும் மக்கள் வங்கி (பம்பலப்பிட்டி கிளை) அனுசரணை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இவ்வார மழலை




ஜி. சிவனேஸ்வரன் - ஏ. சுபோதனி,
ஹப்புத்தளை.

சிறுவர் சித்திரங்கள்





என். நுனுக்ஷியா,
தரம் 06, கே/தெஹி/ கதிரேசன் மத்திய கல்லூரி,
தெஹிவளை.



இனாம்,
தரம் 06, அல் மஹ்மூத் மகா வித்தியாலயம்,
மள்வானை.



எஸ். சக்திவேல்,
தரம் 09, கம்பஹா தமிழ் மகா வித்தியாலயம்,
கம்பஹா, மாத்தளை.



டீ. நதீஷான்,
தரம் 06, ஹ/இதல்கஸ்ஹின்ன தமிழ் வித்தியாலயம்,
இதல்கஸ்ஹின்ன, ஹற்பத்தளை.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

மஞ்சரி விளையாட்டு

பெக்கிங்ஹாம் கொமன்வெல்த் போட்டிகள் ;

இலங்கைக்கு 1 வெள்ளி 3 வெண்கலம் உட்பட 4 பதக்கங்கள்



இங்கிலாந்து பெக்கிங்ஹாமில் 22வது பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகள் 08 ஆம் திகதி நிறைவடைந்தது. 1 வெள்ளி, 3 வெண்கலம் உட்பட 4 பதக்கங்களை வென்று இலங்கை 31வது இடத்தைப் பிடித்துள்ளது. அஸ்திரேலியாவில் 1950 ஆம் அண்டு நடைபெற்ற நான்காவது பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் 1 தங்கம், 2 வெள்ளி,1 வெண்கலப் பதக்கத்துடன் 4 பதக்கங்களை கைப்பற்றியதன் பின்னர் வரலாற்றில் இரண்டாவது தடவையாக இம்முறை இலங்கை பதக்கங்களை வென்றுள்ளது.

அத்தோடு 2018ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற 21ஆவது பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் 1 வெள்ளிப் , 5 வெண்கலம் உட்பட 6 பதக்கங்களை வென்றதே இலங்கை பெற்றுக் கொண்ட அதிகமான பதக்கங்களாகும்.

பாலித வெள்ளிப் பதக்கம்

இந்த வருட பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளை பிரதிநிதித்துவப்படுத்திய ஒரேயொரு பாரா தடகள வீரரான பாலித பண்டார எடுத்த பதக்கமே இலங்கை எடுத்த பதங்களில் உயர்வானதாக கருதப்படுகிறது.

ஆண்களுக்கான வட்டு எறிதலில் F44/64 பகுதியை பிரதிநிதித்துவப்படுத்திய பாலிதா வெள்ளிப் பதக்கத்தை வென்றார். 44.20 மீட்டர் அவரது தனிப்பட்ட சிறந்த திறமையாக அமைந்தது. இலங்கையில் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் பாரா தடகள வீரர் வென்ற முதல் பதக்கம் இதுவாகும்.

பாலித தனது போட்டியில் முதல் முறையாக 39.54 மீற்றர் தூரத்தை எறிந்தார். அதன் பின்னர் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தனது திறமைகளை வளர்த்துக் கொண்டமை குறிப்பிடத் தக்கது.

அதன்படி, இரண்டாவது முறையாக 41.48 மீட்டர் தூரத்தையும், மூன்றாவது முறையாக 41.88 மீட்டர் தூரத்தையும், நான்காவது முறையாக 43.13 மீட்டர் தூரத்தையும், 5வது முறையாக 44.20 மீட்டர் தூரத்தையும் பதிவு செய்யதார். துரதிர்ஷ்டவசமாக கடைசி வாய்ப்பு நழுவி 944 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

வட்டு எறிதல் மற்றும் ஈட்டி எறிதல் ஆகியவற்றில் நிபுணரான 29 வயதான பாலித, 2018 இல் இந்தோனேசியாவில் நடைபெற்ற ஆசிய பாரா சாம்பியன்ஷிப், 2019 இல் துபாயில் நடைபெற்ற உலக பாரா தடகள சாம்பியன்ஷிப் மற்றும் 2020 இல் ஜப்பானில் நடைபெற்ற பாரா ஒலிம்பிக்ஸ் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார். .

திலங்கவின் முதல் பதக்கம்

பளுதூக்கும் வீரர் திலங்க இசுரு குமார இலங்கையின் பதக்கப் பட்டியலில் இணைந்த முதல் தடகள வீரர் ஆவார். ஆடவருக்கான 55 கிலோ பளுதூக்கும் போட்டியில் பங்கேற்ற டிலங்க வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

ஸ்னாட்ச் முறையில் 105 கிலோவும், கிளீன் & ஜெர்க்கில் 120 கிலோவும் தூக்கினார். அதன்படி அவர் தூக்கிய மொத்த எடை 226 கிலோ. ஸ்நாட்ச் முறையில் 112 கிலோ எடையையும், க்ளீன் & ஜெர்க் முறையில் 141 கிலோ எடையையும் தூக்க டிலங்கா முயற்சித்தார். ஆனால் முயற்சி வெற்றிபெறவில்லை.

திலங்க இதற்கு முன்னர் தாய்லாந்தில் 2019 பளு தூக்குதல் சாம்பியன்ஷிப் மற்றும் 2021 இந்தோனேசியாவில் நடந்த ஆசிய சாம்பியன்ஷிப் போட்டிகளில் பங்குபற்றியவர்.

யுபுன் ஒரு நிமிடத்தில் தவறவிட்ட வெள்ளிப் பதக்கம்

யுபுன் அபேகோன் இந்த வருட காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் 100 மீ ஓட்டத்தை 10 வினாடிகளுக்குள் முடித்த முதல் தெற்காசிய வீரராகவும், அதே போல் ஆடவர் 100 மீற்றர் போட்டியில் தெற்காசிய சாதனையிலும் இணைக்கப்பட்டுள்ளார்.

யுபுன் தனது முதல் ஆரம்ப சுற்றுப் போட்டியை 10.06 வினாடிகளில் முடித்ததன் மூலம் நிகழ்வில் குறிப்பிடத்தக்க ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் 10.20 மணிக்கு இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றார்.

எவ்வாறாயினும், யுபுன் பெற்ற இந்த வெற்றி ஆசிய சாதனையை இலங்கையால் மீண்டும் மாற்றியமைக்க முடிந்தது.

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் 100 மீற்றர் போட்டியில் பதக்கம் வென்ற முதல் ஆசிய வீரர் என்ற பெருமையை யுபுன் பெற்றுள்ள அதேவேளை, பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை வென்ற நான்காவது பதக்கமாகவும் இது வரலாற்றில் பதிந்துள்ளது.

1998ஆம் ஆண்டுக்குப் பின்னர் பொதுநலவாய தடகளப் பதக்கம் வென்ற முதல் இலங்கையர் என்ற பெருமையை யுபுன் பெற்றுக் கொண்டார்.

நெத்மி அஹிம்சா மல்யுத்த போட்டிகளின் வரலாற்றை புதுப்பித்தார்

86 கிலோ எடைப் பிரிவில் ஃப்ரீஸ்டைல் போட்டியில் பங்கேற்ற நெத்மி அஹிம்சா, வெண்கலப் பதக்கத்தை வென்றார். பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் மல்யுத்தத்தில் இலங்கையின் முதல் பதக்கம் இதுவாகும், மேலும் இலங்கையிலிருந்து காமன்வெல்த் பதக்கம் வென்ற இளம் வீராங்கனை என்ற பெருமையையும் பெற்றுள்ளார். 16வது சுற்றில் கேமரூனை









குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். அவர் களில் சாரங்கி டி சில்வா முன்னிலை வகிக்கின்றார்.

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் தெற்காசிய மகளிர் நீளம் தாண்டுதல் சாம்பியன் சாரங்கி டி சில்வா வெற்றி பெற்றார்.

பெண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டப் போட்டியின் இரண்டாவது ஆரம்ப பந்தயப் போட்டியில் கலந்து கொண்ட கயந்திகா அபேரத்ன, அந்தப் போட்டியில் வழமையான தளத்தை எட்டாத காரணத்தினால் 7ஆவது இடத்துடன் திருப்தி அடைய வேண்டியதாயிற்று. நிகழ்வை முடிக்க அவர் 4:16.97 நிமிடங்கள் எடுத்தார், ஆனால் அவரது தனிப்பட்ட சிறந்த நேரம் 4:09.12 நிமிடங்கள்.

அதில் கயந்திகா பலவீனத்தை வெளிப்படுத்திய போதிலும், தான் பங்குபற்றிய 800 மீற்றர் போட்டியை 2:01.20 நிமிடங்களில் நிறைவுசெய்ததன் மூலம் நிகழ்வில் தனது சிறந்த நேரத்தை பதிவுசெய்தார். கயந்திகாவின் ஆரம்பச் சுற்றில் அவரது ஆட்டம் அங்கிருந்து முன்னேற போதுமானதாக இல்லை என்ற காரணத்தால் அவர் வெளியேற்றப்பட்டார்.

3×3 கூடைப்பந்து

ஆண்களுக்கான போட்டியில் இலங்கை அணி பூல் ஏ அணியை பிரதிநிதித்துவப்படுத்தி ஸ்காட்லாந்து, கனடா, கென்யா ஆகிய நாடுகளுடன் போட்டியிட்டதுடன், எந்த ஒரு போட்டியிலும் வெற்றி பெறாமல் போட்டியை முடித்துக்கொண்டது. ஆனால் மொத்தம் 35 புள்ளிகள் பெற்றதால் 7வது இடத்தைப் பிடித்தனர்.

தடகள போட்டி

7 பேர் கொண்ட தடகள அணியின் பல பதக்க நம்பிக்கையாளர்களில் 4 ஆண்கள் மற்றும் 3 பெண்கள் இறுதி கட்டத்தில் தோல்வியடைந்தமை



பெண்கள் அணி பூல் ஏ சுற்றிலும் போட்டியிட்டது, அதில் அவர்கள் எந்த போட்டியிலும் வெற்றி பெறவில்லை. 16 புள்ளிகள் பெற்றதால் போட்டியில் 8வது இடம்.

பூப்பந்து

பேட்மிண்டன் கலப்பு அணி போட்டியில், இலங்கை அணி அரையிறுதிக்கு முன்னேறியது, ஆனால் மலேசியாவுக்கு எதிராக 30 என்ற கணக்கில் தோல்வியுடன் அவர்களின் பயணம் முடிந்தது. கலப்பு இரட்டையர் பிரிவில் சச்சின் டயஸ் மற்றும் திலினி ஹெண்டஹேவத் ஜோடியும், ஆடவர் இரட்டையர் பிரிவில் சச்சின் டயஸ் மற்றும் புவனேகா குணதிலக்க ஜோடியும் அரையிறுதிக்கு முன்னேறின. இதேவேளை, துமிந்து அபேவிக்ரம மற்றும் நிலுக கருணாரத்ன ஆகியோர் 16 ஆம் சுற்றுப் போட்டியிலும், சுஹாஸ்னி விதான 32ஆவது சுற்றுப் போட்டியிலும் தமது பயணங்களை முடித்துக் கொண்டனர்.

கடற்கரை கைப்பந்து

பெண்கள் மற்றும் ஆண்கள் பீச் ஒலிபோல் அணிகள் காலிறுதிக்கு முன்னேறியது ஆனால் போட்டியில் இருந்து விலகியது.

குத்துச்சண்டை

ஆண்களுக்கான குத்துச்சண்டைப் போட்டியில் ருக்மல் பிரசன்னா 54 கிலோ எடைப் பிரிவிலும் நடிகா புஷ்பகுமாரி 48 கிலோ எடைப் பிரிவிலும், கேஷானி ஹன்சிகா 50 கிலோ எடைப் பிரிவிலும், சஜீவனி குரே 57 கிலோ எடைப் பிரிவிலும் கலந்து கொண்டு காலிறுதிக்குத் தகுதி பெற்றனர்.

இந்த ஆண்டு பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் அதிக பதக்கம் வென்ற அணிகளில் இடம்பிடித்துள்ள குத்துச்சண்டை வீரர்களின் சரிவு, இலங்கையின் பதக்க பட்டியலை சரிவடைய செய்தது.

பெண்கள் கிரிக்கெட்

8 அணிகள் பங்கேற்ற இந்தப் போட்டியில் மகளிர் கிரிக்கெட் அணி பங்கேற்ற 3 போட்டிகளிலும் தோல்வியடைந்து கடைசி இடத்தைப் பிடித்தது. இதுவரை சர்வதேச கிரிக்கெட் களத்தில் கால் பதிக்காத கயானா, இலங்கை அணியை விட ஒருபடி மேலேயே இருந்தது.

ஜிம்னாஸ்டிக்ஸ்

ஜிம்னாஸ்டிக் குழு கலைநிகழ்ச்சியில் ஆண்கள் அணி 10வது இடத்தைப் பெற்றுக் கொள்ள முடிந்த அதேவேளை, தனிப் போட்டியில் இணைந்த ருசிர பெர்னாண்டோ 16வது இடத்திற்குள் நுழைந்தார். மகளிர் அணி போட்டியில், எமது வீராங்கனைகள் 8வது இடத்தைப் பெற்றுக் கொள்ள முடிந்த நிலையில், மில்கா கெஹானி தனது போட்டியை நடுவில் முடிக்க வேண்டியிருந்தது. ஆனால் அந்த நேரத்தில், அவரது திறமைகள் உகந்த அளவில் இருந்தன.

ஜூடோ

5 பேர் கொண்ட ஜூடோ அணியின் மிகச்சிறந்த வீரராக சாமர தர்மவர்தன இருந்தார். அவர் கலந்து கொண்ட போட்டியில் 7வது இடத்தைப் பிடிக்க முடிந்தது.

ரக்பி செவன்ஸ்

காமன்வெல்த் சுற்றுப்பயணத்தில் ஆண்கள் ரக்பி அணி 14வது இடத்திலும், பெண்கள் ரக்பி அணி கடைசி இடத்திலும் இருந்தது.

ஜாம்பியாவுக்கு எதிரான போட்டியில் ஆண்கள் அணி ஒரே வெற்றியைப் பெற்றாலும், பெண்கள் எந்தப் புள்ளிகளையும் பெறாமல் எதிரணியிடம் தோற்றனர்.

ஸ்குவாஷ்

ஸ்குவாஷ் போட்டிகளில் கலப்பு இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற சனித்மா சினாலி மற்றும் ஷமில் வக்கீல் ஜோடி பேசப்பட்டது. ஸ்குவாஷ் ஒற்றையர் பிரிவில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட அனைத்து விளையாட்டு வீரர்களும் 32வது சுற்றுடன் போட்டியை முடித்துக் கொண்டனர் மற்றும் ஆண்கள் இரட்டையர் போட்டியில் ரவிந்து லக்சிறி மற்றும் ஷமில் வக்கீல் 16வது சுற்றுக்கு தகுதி பெற்றனர்.

நீச்சல்

நீச்சல் போட்டிகளில் பங்குபற்றிய விளையாட்டு வீராங்கனைகளில் கங்கா சேனவிரத்ன திருப்பு முனையை பதிவு செய்த வீராராக மாறினார். அவர் பங்குபற்றிய 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் பேக்ஸ்ட் ரோக் ஆகிய இரண்டிலும் தனது சிறந்த நேரத்தை பதிவு செய்தமை குறிப்பிடத்தக்கது.

பளு தூக்குதல்

பளுதூக்கும் போட்டியில் திலங்க இசுரு குமாரவின் வெண்கலப் பதக்கம் இலங்கையின் பதக்க நம்பிக்கையை உயர்த்திய போதிலும், சதுரங்க லக்மால் மாத்திரமே ஏனைய விளையாட்டு வீரர்களுக்கு மத்தியில் நெருங்கி வந்தார்.

அவர் தனது நிகழ்வில் நான்காவது இடத்தில் ஒரு புள்ளி பின்தங்கி 5வது இடத்தைப் பிடித்தார். எவ்வாறாயினும், போட்டியின் முடிவில் இலங்கை அணியின் செயல்பாடு கடந்த வருடங்களைப் போன்று சிறப்பாக இல்லாவிட்டாலும் முன்னேற்றம் தென்பட்டது.

மல்யுத்தம்

மல்யுத்த வரலாற்றை புதுப்பித்த நெத்மி அஹிம்சாவுடன் சச்சினி வெரதுவகே 7வது இடத்துக்கும், சுரேஷ் பெர்னாண்டோ 8வது இடத்துக்கும், ஸ்ரீஆந்திகா நிரோஷனி 5வது இடத்துக்கும் முன்னேறியமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு சாமோத்ய கேஷானி 18 வயதில் 53 கிலோ பிரீஸ்டைல் போட்டியில் நான்காவது இடத்தைப் பெற்றுள்ளமை இலங்கை மல்யுத்த வரலாற்றில் மற்றுமொரு தனித்துவமான சாதனையாக பார்க்க முடியும்.



வென்று பதக்க பயணத்தை தொடங்கிய நேத்மி, கடந்த ஆண்டு நோர்வேயில் நடந்த உலக சாம்பியன்ஷிப் மல்யுத்த போட்டியில் இந்தியாவுக்கு முதல் பதக்கத்தை வென்ற அனுஷா மாலிக்கை அரையிறுதியில் எதிர்கொண்டார். அந்தப் போட்டியில் 100 என்ற கணக்கில் தோல்வியடைந்தார் அந்த தோல்வியின் பின்னர், அவர் வெண்கலப் பதக்கத்திற்கான போட்டிக்கு தகுதி பெற்றார். அதில் அவுஸ்திரேலியா வீராங்கனை ஐரீன் சிமியோனிடி ஸுக்கு எதிராக 100 என்ற கணக்கில் வெற்றி பெற்று வெண்கல பதக்கத்தை வென்றார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஓகஸ்ட் மாதம் 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

நோபலுக்கு பியர் குழாய் பரிசு



டென்மார்க்கைச் சேர்ந்த பௌதீகவியலாளரான நீல்ஸ் போஹ்ர் அணுக் கட்டமைப்பு மற்றும் குவான்டம் கோட்பாடு பற்றிய புரிதலை பெற பங்களிப்புச் செய்ததற்காக 1922 ஆம் ஆண்டு நோபல் விருதை வென்றார். இந்த பரிசை வென்றதற்காக அவருக்கு வீடு ஒன்று பரிசாகக் கிடைத்தது. அதுவும் சும்மா வீடு அல்ல, பியர் குழாய் பொருத்தப்பட்ட வீடு. அதாவது வீட்டில் குழாயை திறந்தால் பியர் தண்ணீர் போல் கொட்டும். கார்ல்ஸ்பர்க் மதுபானத் தொழிற்சாலைக்கும் அவரது வீட்டுக்கும் இடையே நேரடியாக பியர் இணைப்பு பொருத்தப்பட்டிருந்தது. பொஹ்ர் 1932 தொடக்கம் 1962 ஆம் ஆண்டு தான் மரணிக்கும் வரை அவர் அந்த வீட்டில் வாழ்ந்தார்.



கடலில் புதைந்து கிடக்கும் ஆபத்து

அமெரிக்க இராணுவம் 64 மில்லியன் இராத்தல் இராசாயன ஆயுதங்களை கடலில் வீசி எரிந்திருக்கிறது. இதில் நரம்பைத் தாக்குகின்ற மற்றும் மஸ்டார்ட் வாயு இராசாயனங்கள் அடங்கும். தவிர 400,000 இரசாயனம் நிரப்பிய குண்டுகள், கண்ணிவெடிகள் மற்றும் ரொக்கெட்டுகளுடன் சேர்த்து 500 தொன் கதிரியக்கக் கழிவுகளும் இவ்வாறு கடலில் வீசப்பட்டிருக்கின்றன. இரண்டாம் உலகப் போர் தொடக்கம் 1970கள் வரை இந்த வேலையை அமெரிக்கா செய்திருக்கிறது. ஆனால் ஒன்றரை தசாப்தத்திற்கு முன்னர்தான் இது பற்றிய உண்மை வெளியுலகுக்கு அம்பலமானது. இவ்வாறு வீசப்பட்ட மிக ஆபத்தான இரசாயனம் மற்றும் ஆயுதங்கள் கடலில் எங்கே இருக்கிறது என்பது தெளிவாக யாருக்கும் தெரியவில்லை. அது பற்றிய வரைபடங்கள் மற்றும் பதிவுகள் தெளிவற்று காணப்படுகின்றன. இந்த இரசாயன ஆயுதங்கள் கடலில் கசிந்தால் பல தலைமுறைகளுக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியது.
ஆரம்பத்தில் இவ்வாறு புதைக்கப்பட்ட 26 வலயங்களை இராணுவம் அவதானித்து வந்தபோதும் கடந்த 30 ஆண்டுகளாக அந்தக் காரியத்தை செய்வதையும் கைவிட்டுவிட்டது.

'ஹெமிங்வே சாபம்'

ஏர்னெஸ்ட் ஹெமிங்வே அமெரிக்காவின் பிரபல எழுத்தாளர். 20ஆம் நூற்றாண்டின் புனைகதை இலக்கியத்தில் பெரிதும் தாக்கம் ஏற்படுத்தியவர் என்று அழைக்கப்படுகிறார். கிழவனும் கடலும் போன்ற அவரது புத்தகங்கள் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன.



ஆனால் அவரது வாழ்வு அவ்வளவு அழகாக இருக்கவில்லை. அவர் தனது வாழ்நாளில் ஆந்த்ரக்ஸ் நோய்த் தொற்று, மலேரியா, நியுமோனியா, வயிற்றுப்போக்கு தொற்று, தோல் புற்றுநோய், ஹெபடைடிஸ், இரத்த சோகை, நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், இரு விமான விபத்துகள், சீறுநீரகப் பாதிப்பு, மண்ணீரல் பாதிப்பு, கல்லீரல் பாதிப்பு, முதுகெலும்பு முறிவு மற்றும் மண்டையோடு முறிவு என ஏகப்பட்ட நோய்கள், உடல் பாதிப்புகளை சந்தித்து வந்தார்.
ஆனால் அவர் இந்த எந்த நோயினாலும் இறக்கவில்லை. 1962 ஜூலை 2 ஆம் திகதி தனது 61ஆவது வயதில் தற்கொலை செய்து கொண்டார். இந்தத் தற்கொலையைக் கூட 'ஹெமிங்வே சாபம்' என்றுதான் அழைக்கிறார்கள். ஏனென்றால் அவரது குடும்பத்தில் அவர் மாத்திரம் தற்கொலை செய்துகொள்ளவில்லை. அவரது தந்தை, சகோதரி, சகோதரர், மகள் மற்றும் பேத்தியும் தற்கொலை சொய்துகொண்டனர்.

சூடானின் பெருமையை பறித்த பெர்லினி





பிரமிட் என்றால் எகிப்தைத்தான் சொல்வார்கள். ஆனால் எகிப்தை விடவும் அதிக பிரமிட்கள் இருந்த நாடு சூடான். தற்கால சூடானின் வடக்குப் பக்கமாக இருக்கும் மேரோ பிராந்தியத்தில் எகிப்தை விடவும் இரு மடங்குள் பிரமிட்டுகள் இருந்துள்ளன. ஆனால் இத்தாலியைச் சேர்ந்த புதையல் வேட்டைக்காரரான கியுசெப் பெர்லினி என்பவரே இந்த அழிவுகளுக்கு எல்லாம் காரணம். எகிப்து பிரமிட்டுகளுக்குள் செல்ல வாயில்கள் இருக்கும். ஆனால் சூடான் பிமிட்டுகள் அப்படியல்ல, வெளியே தெரிவதற்கு வாயில்கள் இருக்காது. எனவே, உள்ளே இருக்கும் புதையலை சூறையாடுவதற்கு பெர்லினி முழு பிரமிட்டையும் இடித்துத் தகர்த்தார். இவ்வாறு அவர் 40 பிரமிட்டுகளை அழித்திருக்கிறார்.

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

ஜனவரி 1ம் திகதி பிறந்த ஆப்கானியர்



ஆப்கானில் பெரும்பாலான மக்களின் பிறந்தநாள் சரியாக ஜனவரி முதலாம் திகதி வருகிறது. உதாரணத்திற்கு சமத் அலவி என்பவரின் பிறந்த நாள் ஜனவரி 1ஆம் திகதி. அவரது மாத்திரமல்ல அவரின் மனைவி, இரு மகன்கள், 32 நண்பர்களின் பிறந்தநாளும் ஜனவரி 1ஆம் திகதிதான். உண்மையில் இது எப்படி சாத்தியமாகிறது என்று பெரிதாக யோசிக்க வேண்டாம், அங்கே பெரும்பாலானவர்கள் தமது சௌகரியத்துக்கு ஏற்ப பிறந்த நாளை தீர்மானிக்கிறார்கள். ஏனென்றால் அதிகமானவர்களுக்கு பிறப்புச் சான்றிதழோ, பிறந்த உண்மையான திகதி என்னவென்றோ தெரியாது. ஆப்கானில் அமெரிக்காவின் படையெடுப்புக்குப் பின்னர்தான் வேலை தேடுவதென்றாலும், கடவுச்சீட்டு, வாகன அனுமதிப் பத்திரம் பெறுவதென்றாலும் பிறந்த திகதி கட்டாயமானது. எனவே, பெரும்பாலான மக்கள் இலகுவானது என்பதால் ஜனவரி 1ஆம் திகதியை தேர்வு செய்கிறார்கள். “ஆப்கானில் கிட்டத்தட்ட அனைவரின் பிறந்த நாளும் ஜனவரி 1ஆம் திகதிதான்” என்கிறார் 43 வயதான சமத் அலவி. ஆப்கான் மற்றும் ஈரானில் இஸ்லாமிய நாட்காட்டி பயன்படுத்தப்படுவதால் பிறந்த திகதி தெரிந்தவர்களும் அதனை இஸ்லாமிய வருடத்திலேயே தெரிந்து வைத்திருக்கிறார்கள். அதனை கிரிகோரியன் நாட்காட்டிக்கு மாற்றுவது தொந்தரவு பிடித்த வேலை என்பதாலும் தமது இஷ்டத்துக்கு பிறந்த திகதியை வைத்துக் கொள்கிறார்கள்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

செந்தூர மழலைச் செல்வங்கள்



ஷாருக்சான்
தாசதீபன் - லிங்கேஸ்வரி
போவேஷ், ஹப்புத்தளை.



13.08.2015
P. Heshagini
Kuppilan South, Earalalai



V. Abisalini
Vishvakanthan - Pradeepa
Kirulapone



S.S.Parrthan
Suman - Ponmalar
Grandpass.



Rithviga
Jenaarththanan - Vaithegi



யோகேஷ் அஸ்விந்
யோகேஷ் - ஸ்டெலா
காலி

திகிலூட்டும் பேய்!



சிங்கள மரபுவழி யக்ஷ கோத்தீர கதைகளின் அடிப்படையில் "மாசோன் யக்ஷயா" ஐந்து அவதாரங்களை பெற்ற மிகவும் கொடூர குணாம்சங்களைக் கொண்ட பயங்கரமான பிசாசுகளில் ஒன்றாக கருதப்படுகிறது.

சுடுகாடுகள், மலையுச்சிகள் மற்றும் கற்பாறைகளைக் கொண்ட மலைப்பாங்கான பகுதிகளில் தென்படுவதாக சொல்லப்படும் இந்த பிசாசு எல்லாளன் துட்டுகெமுனு (துஷ்ட கைமுனு) யுத்தத்தின் போது துட்டுகெமுனுவின் வெற்றிக்கு பெரிதும் உறுதுணையாக இருந்த இரு அரக்கர் இன சேனாதிபதிகளுக்கு இடையே ஏற்பட்ட மோதலின் பின் விளைவாகவே உருவானதாக சிங்கள மக்களிடையே பெரும்பாலும் நம்பப்படுகிறது.

துட்டுகெமுனு மன்னன் எல்லாளன் உடனான போரில் வெற்றிபெற்ற பின்னர் அப் போரின் வெற்றிக்கு பெரிதும் உறுதுணையாக இருந்த சேனாதிபதிகளில் ஒருவனான

"கோட்டயிம்பர" எனப்படும் அரக்கன் புதிய வீடொன்றை கட்டி அதன் புதுமனை புகுவிழாவில் கலந்து கொள்ளுமாறு பலருக்கும் அழைப்பு விடுத்திருந்தான்.

அந்த விருந்துபசாரத்தின் ஆரம்பத்திலேயே அதிகமாக மதுபானத்தை உட்கொண்ட கோட்டாயிம்பர மது மயக்கத்தில் மதி மயங்கி விட்டதால் அவனது மனைவியான "சோனா குமாரி" விருந்துக்கு வருபவர்களை வரவேற்கும் பணியில் ஈடுபட்டு இருந்தாள்.

இச் சந்தர்ப்பத்தில் அவ்வழியே பயணித்துக் கொண்டிருந்த இளம் வயதைக் கடந்த, கறுத்த, நன்கு வளர்ச்சியடைந்த பெரியதோர் உடலமைப்பை கொண்ட ஒருவர் யாருடைய அழைப்பும் இல்லாமல் விருந்துக்கு வந்திருப்பதாக மது மயக்கத்தில் இருந்த கோட்டயிம்பரவிடம் சோனாகுமாரி தெரிவித்தாள். குறித்த உடலமைப்பின் அடிப்படையில் வந்திருப்பது யாரென்று அடையாளம் கண்டு கொண்ட கோட்டயிம்பர உடனடியாக அவரை வரவேற்று நன்கு உபசரிக்குமாறு மனைவிக்கு கட்டளையிட்டான்.

அவன் வேறுயாருமல்ல பெயரைக் கேட்டால அனைவரும் பயந்து நடுங்கும் ரிட்டிகல மலைச் சாரலில் வசித்து வரும் அரக்கன் ஜயசேனவே. ஜயசேன இளவரசன் துட்டுகெமுனுவின் வெற்றிக்காக அரக்கர் படையை வழிநடத்திய பத்து யானைகளின் பலம் கொண்ட மஹா சேனாதிபதி ஆவார்.

கோட்டயிம்பரவின் கட்டளைக்கு இணங்க விருந்துபசாரத்தில் மது மற்றும் உணவுகளால் நன்கு உபசரிக்கப்பட்ட ஜயசேன மது மயக்கத்தில் தன்னை மறந்த நிலையில் மனதில் எழுந்த இச்சையின் காரணமாக சோனாகுமாரியை இறுக கட்டியணைத்து கொண்டான். இதைக் கண்ட சேனாதிபதியான கோட்டயிம்பர ஆத்திரத்தில் தூசன வார்த்தைகளால் ஏசி உடனடியாக தனது வீட்டைவிட்டு வெளியேறுமாறு கட்டளையிட்டான். இதனால் ஜயசேன வெக்கித் தலைகுனிந்தான். சினம் கொண்ட ரிட்டிகல ஜயசேன கோட்டயிம்பரவுக்கு தான் எந்த வகையிலும் சளைத்தவன் அல்ல எனவும் முடிந்தால் ஒரு வாரத்துக்குள் "தம்மென்னா" சுடுகாட்டில் மாபெரும் யுத்தத்தில் தன்னை எதிர்கொள்ளுமாறு மிகுந்த ஆவேசத்துடன் விருந்துபசார வைபவத்திற்கு வந்திருந்தவர்கள் மத்தியில் தெரிவித்தான். மதுபோதையில் இருந்த கோட்டயிம்பர இச் சவாலை ஏற்றுக் கொண்டதுடன் ரிட்டிகல ஜயசேனக்கு தானும் எந்த வகையிலும் சளைத்தவன் அல்ல உன்னை வாளால் அல்ல எனது வலது கால் சுண்டு விரலால் தலையை துண்டித்து விடுவதாகவும் விருந்தினர் முன்னிலையில் சவால் விட்டான்.

இதனையறிந்த மன்னன் துட்டுகெமுனு உடனடியாக இந்த விபரீத சண்டையை நிறுத்துமாறு கட்டளையிட்ட போதிலும் இருவரும் தங்களுக்கு ஏற்பட்ட அவமானத்தை நிவர்த்தி செய்து கொள்ளும் வகையில் இந்த மாபெரும் யுத்தத்தில்

ஈடுபட போவதாக அறிவித்தனர். யுத்தத்துக்கு முன்தினம் நன்கு மதுபானம் அருந்திதால் மயக்கத்தில் இருந்த கோட்டயிம்பர யுத்தம் நடைபெறவிருக்கும் தினத்தன்று நண்பகல் மயக்கம் தெளிந்த போது, தான் ஏற்றுக் கொண்ட சவால் ஞாபகத்தில் எழுவே திடீரென எழுந்து உணவை மறந்து இடுப்பில் அணிந்திருந்த ஆடையுடன் தோலில் இருந்த துண்டை தலைப்பாவாக இறுக கட்டிக் கொண்டு சுடுகாட்டை நோக்கி ஓடினான்.

விசால உடற்கட்டமைப்பை கொண்ட ரிட்டிகல ஜயசேன ஏற்கனவே தேவையான சகல முன்னேற்பாடுகளையும் செய்து முடித்து யுத்தத்துக்கு ஆயத்தமான நிலையில்

தனது உடல் முழுவதும் இரும்பு கவசம் ஒன்றை அணிந்து கோட்டயிம்பரவின் வரவுக்காக காத்திருந்தான். எனினும் ஜயசேனவின் உயரத்தில் பாதி அளவே கோட்டயிம்பர இருப்பதைக் கண்ட கோட்டயிம்பரவின் ஆதரவாளர்களும் யுத்தத்தை பார்வையிட வந்த ஏனைய பார்வையாளர்களும் கோட்டயிம்பர தோல்வியடைய போவதை எண்ணி அனுதாபத்துடன் அவனை நோக்கினர்.

யுத்தம் ஆரம்பமானதும் கூடியிருந்த தனது ஆதரவாளர் களுக்கும் நண்பர்களுக்கும் மரியாதை செலுத்திய பின்னர் ஒரு கணம் தனது எதிரியான ஜயசேனவின் முகத்தை உற்று நோக்கிய கோட்டயிம்பர யாரும் எதிர்பாராத வகையில் கண்ணிமைக்கும் நேரத்துக்குள் மேலே எகிறி பாய்ந்து தனது வலது கால் சுண்டு விரலால் ஜயசேனவின் கழுத்து பகுதியை தாக்கினான்.

இதனை சற்றும் எதிர்பாராத ரிட்டிகல ஜயசேன நிலைகுலைந்து போன நிலையில் தனது இஷ்ட தெய்வமான சனி பகவானை வேண்டிக் கொண்ட போதிலும் அவனது தலை சரீரத்தில் இருந்து துண்டித்து வீசப்பட்டது.



அவ்வாறு வீசியெறியப்பட்ட தலையானது ரிட்டிகல மலைத் தொடர் அமைந்துள்ள பக்கம் இருந்த "கரம்ப" என்றொரு மரத்தின் மேல் போய் சிக்கிக் கொண்டது. இன்றும் அந்த இடம் "ஒழுகரதன" என்றழைக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

நாராயணசாமி ஜெயரட்னம் ...✍
களுத்துறை சுழற்சி நிருபர்

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

காமராஜர் கல்விமாமணி விருது பெற்ற கலைஞானச்சுடர் சுபாஷினி



ஒரு துறையில் சிறந்து விளங்குவதற்கு அடையாளமாக வழங்கப்படுகின்ற தகுதிச்சின்னம் விருது ஆகும்.

அப்படிப்பட்ட சிறந்த பெறுமதியான கல்விமாமணி விருதினை கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியின் ஆசிரியரும் தேஜஸ்வ ராலயா கலைக்கூட இயக்குநருமான கலைஞானச்சுடர் ஸ்ரீமதி சுபாஷினி பெற்றுக்கொண்டார்.

"கல்வியே தேசத்தின் கண்களைத் திறக்கும்' என்று கூறி பாரதத்தின் பட்டி தொட்டிகளெல்லாம் பள்ளிக்கூடங்களைக் கட்டியபெருந்தலைவர் காமராஜர். ஏழைப் பிள்ளைகளும் பள்ளிக்கு வரவேண்டும் என்பதால் புரட்சிக்கரமான மதிய உணவுத் திட்டத்தை அறிமுகம் செய்தவர். தாம் முதலமைச்சராக இருந்தபோதும் வறுமையில் வாடிய தன் தாய்க்கு சிறப்புச் சலுகைகள் எதையும் தராதவர், தமிழகத்தில் நம்ப முடியாத நல்லாட்சியைத் தந்து இறவாப் புகழ் பெற்றவர் கர்ம வீரர் காமராஜர்.

அந்த உன்னத தலைவரின் சிறப்பைப் போற்றி திண்டுக்கல் பசுமைவாசல் அறக்கட்டளை, தமிழ்நாடு பனை வளம் காக்கும் பாதுகாப்பு இயக்கம், குமரிமாவட்டம், ஸ்ரீ சக்ஸஸ் கல்லூரி ஆத்தூர் சேலம் மாவட்டம், காமராஜர் இளைஞர் வளர்ச்சிப்பேரவை, குமரிமாவட்டம் என்பன இணைந்து கல்விக்கண் திறந்த கர்மவீரர் காமராஜரின் காலடிச்சுவட்டைப்பற்றி கலங்கரை விளக்காய் ஒளிகாட்டும் ஆசிரியர்களை இனங்கண்டு தேர்ந்து " கல்வி மாமணி விருதினை " வழங்கி கௌரவம் செய்துள்ளார்கள்.

இவர், இலங்கை கொழும்பிலே பிரபல கல்லூரியில் ஆசிரியராக திகழ்வதோடு ஏனைய நேரங்களில் கலை சார்ந்த பாடவிதானங்களையும் சமய ஆன்மீகம் சார்ந்த செயற்பாடுகளையும் மேற்கொள்கிறார். அயராது மாணவர்களின் முன்னேற்றங்களுக்காக பாடுபட்டுழைக்கும் கலைஞானச்சுடர் ஸ்ரீமதி சுபாஷினியின் பணி போற்றுதலுக்குரியது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக நுண்கலை பட்டதாரியான இவர், பல்கலை வித்தகியாக ஆளுமை மிக்க சாதனைகள் பல புரிந்து வரும் சிறந்த கலைஞராகவும் கவிஞராகவும் விளங்குகிறார்.

ஜக்கிய அமரிக்கா நியூ ஜெர்சி தமிழ்ச்சங்கத்தால் "கலாவித்தகி விருது", இனிய நந்தவனம் அமைப்பால் "சாதனைப்பெண் 2019"

பன்னாட்டுப் பெண்கள் அமைப்பால் "நடிகர் மனோரமா விருது"

இந்துக்குருமார் அமைப்பால் "கலைஞானச்சுடர் விருது"

கவியுலகப்பூஞ்சோலை குழுமத்தினரால் "கவிவித்தகர் விருது"

"கவியருவி விருது"முதலானவற்றையும் சிவா கவிதை பெட்டகத்தினரால் கவிமதி விருது, கவித்தரு விருது , புதுயுக கவி விருது, ஒண்மை கவி விருது போன்றவற்றையும் பெற்றுள்ளார். சிறந்த ஆளுமையோடு சமூகத்தில் குறிப்பாக ,எதிர்கால சந்ததிகளின் நல் வாழ்வு சிறக்கவென உழைக்கின்ற அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். வாழும்போதே அவர்களை வாழ்த்தி கௌரவிக்கின்ற நல்ல சிந்தனைகளும் வாழ்த்தப்பட வேண்டியவையே. "எல்லோருடைய வாழ்க்கையும் வரலாறு ஆவதில்லை. வரலாறு ஆனவர்கள் யாரும் தனக்காக வாழ்ந்ததில்லை "" என எழுதப்பட்ட இந்த விருதுப்பத்திரத்தினை கடந்த 15.07.2022 அன்று ஸ்ரீமதி சுபாஷினி பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தியா, பங்களாதேஷ் தேசிய கீதங்களை இயற்றிய தாகூர்



இந்தியாவின் தேசிய கீதமான 'ஜன கண மன' பாடலை இயற்றியவரும் பங்களாதேஷின் தேசிய கீதமான 'அமர் சோனா பங்களா' பாடலை இயற்றியவரும் இவரே. உலகிலேயே ஒரு கவிஞரால் இரு வெவ்வேறு நாடுகளின் தேசிய கீதங்கள் இயற்றப்பட்டது என்றால் அது பெருமைக்குரிய விடயமாகும். அப்பெருமைக்குரிய ஒரே ஒரு கவிஞர் இவரே. அவர்தான் ரவீந்திரநாத் தாகூர் ஆவார்.

ரவீந்திரநாத் தாகூர் கல்கத்தாவில் ஒரு பணக்கார பிராமணக் குடும்பத்தில் ஜோராசாங்கோ மாளிகையில் 07.05.1861 இல் தேவேந்திரநாத், சாரதா தேவி தம்பதியினருக்கு பதினான்கு பிள்ளைகளில் கடைசிப் பிள்ளையாக பிறந்தார். ரவீந்திரநாத் தாகூர் அவர்களது இளம்வயதிலேயே தாயார் இறந்துவிட்டதாலும் தந்தையார் அடிக்கடி பயணங்களை மேற்கொண்டதாலும் இவரின் வாழ்க்கையிலே அதிக ஆதிக்கம் செலுத்தியவர்கள் அவரது மாளிகையிலிருந்த பணியாட்களும் அவரது பாடசாலை ஆசிரியர்களும்தான். அவர்களிடமிருந்து கதைகளையும் பாடல்களையும் கேட்டு ரசித்து வந்த ரவீந்திரநாத் தாகூர் சிறுவயதிலேயே கவிதைகளைப் புனைவதில் ஆர்வம் காட்டினார். இவருக்கு பதினோரு வயதில் 'உபாநயன்' எனும் பூணூல் சடங்கு நடத்தப்பட்டது. இதன் பின்னர் தகப்பனாருடன் ரவீந்திரநாத் தாகூர் கல்கத்தாவை விட்டு புறப்பட்டு பலமாதங்கள் இந்தியாவின் இதர மாநிலங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

இவரது தந்தையாரின் 'சாந்தி நிகேதன்' தோட்டத்திற்கும் சென்றார். பின்னர் இமய மலைப்பகுதியான டால்கூசிக்கு செல்வதற்கு முன்னர் அம்ரித்சாரிலும் இவர்கள் தங்கினர். அங்கே அவர் பலருடைய வரலாறுகளை கற்றதுடன் வானியல், அறிவியல், சமஷ்கிருதம் ஆகிய பாடங்களை படித்தார். காளிதாசனின் கவிதைகளையும் கற்றார்.

அவரது பதினான்காவது வயதில் தமது கவிதையை பொதுமேடையொன்றில் அரங்கேற்றும் வாய்ப்புக் கிட்டியது. வங்காளக் கலாசார விழாவொன்றின் போது அவர் வாசித்த அந்தக் கவிதை அனைவரது பாராட்டையும் பெற்றது. அவர் எழுதிய முதல் நூல் 'மாலைப் பாடல்கள்' ஆகும். கங்கை நதியின் வனப்புகளை பற்றி அவர் இயற்றிய அந்தப் பாடல்கள் கற்றறிந்தோர் மத்தியில் அவருக்கு புகழைத் தேடிக் கொடுத்தது.

ரவீந்திரநாத் தாகூர் தான் ஒரு வழக்கறிஞர் ஆக வேண்டும் என்ற எண்ணத்தில் பிரைட்டன், லண்டனில் உள்ள ஒரு கல்லூரியில் 1878 ஆம் ஆண்டில் சேர்ந்தார். பின்னர் லண்டன் சர்வ கலாசாலையில் கல்வி கற்றார். ஆனால் ஷேக்ஸ்பியரினதும் அவர் போன்ற பிறரினதும் ஆக்கங்களை ஆராய்வதிலேயே ஆர்வம் காட்டியதால் பட்டம் பெறாமலே 1880 ஆம் ஆண்டில் கல்கத்தாவிற்கு திரும்பி வந்துவிட்டார்.

1883 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதம் ஒன்பதாம் திகதி பத்து வயது பெண்ணான மிருனாலி தேவியை மணந்தார். அவர்களுக்கு ஐந்து குழந்தைகள் பிறந்தன. ஆனால் இரண்டு குழந்தைகள் வாலிபப் பருவம் அடைய முன்னரே இறந்துவிட்டனர். 1884 இல் 'கோரிஓ கமல்' (ஷார்ப் மற்றும் பிளாட்) என்ற கவிதைத் தொகுப்பை எழுதினார். 1890 ஆம் ஆண்டில் ரவீந்திரநாத் தாகூர் இன்றைய வங்காளதேசத்தின் பகுதியாக உள்ள சிலைடாகா எனும் இடத்திலிருந்த குடும்பத்தின் பெரிய பண்ணையை நிர்வாகம் செய்யத் தொடங்கினார். 18931900 வரை ரவீந்திரநாத் தாகூர் ஏழு கவிதைத் தொகுதிகளான 'சொனார் தொரி' (கோல்டன் படகு) மற்றும் 'கனிகா' போன்றவற்றை எழுதியுள்ளார். 1901 இல் சிலைதஹாவில் இருந்து சாந்தி நிகேதனுக்கு குடியேறினார். அங்கு அவர் ஒரு ஆசிரமத்தை நிறுவினார். அங்கு அவர் ஒரு பிரார்த்தனைக் கூடம், ஒரு பாடசாலை , நூலகம் என்பனவற்றை நிறுவி, மரங்கள் பலவற்றையும் நட்டு ஓர் அழகிய பூஞ்சோலையை உருவாக்கினார். அங்கு மாணவர்களுக்கு தாய்மொழியில் கல்வி கற்பிக்கப்பட்டதுடன் தோட்ட வேலை, உடற்பயிற்சி, சமூக சேவை, விளையாட்டு என அத்தனை கலைகளும் கற்பிக்கப்பட்டன. பிற்காலத்தில் இப்பாடசாலை 'விஷ்வ பாரதி' எனும் உலகப் பல்கலைக்கழகமாக உருவெடுத்தது. சாந்தி நிகேதனுக்கு அருகில் உள்ள 'சுருள்' என்ற இடத்தில் 'ஸ்ரீ நிகேதன்' எனும் பெயரில் ஒரு மாதிரிக் கிராமத்தையும் அவர் உருவாக்கினார். 1910 ஆம் ஆண்டில் ரவீந்திரநாத் தாகூர் வெளியிட்ட 'கீதாஞ்சலி' எனும் கவிதை நூலே அவருக்கு பெரும் புகழை ஈட்டிக் கொடுத்தது. அவரது தாய்மொழியான வங்காள மொழியில் எழுதப்பட்ட அந்நூல், 1912 ஆம் ஆண்டு ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்தது. அதே ஆண்டு ரவீந்திரநாத் தாகூர் லண்டன் சென்ற போது

புகழ் பெற்ற ஆங்கிலக் கவிஞர்களுடன் அவருக்கு தொடர்பு ஏற்பட்டதன் விளைவாக அவரது கவிதைகளின் மொழிபெயர்ப்புகள் ஆங்கில சஞ்சிகைகளில் வெளிவரத் தொடங்கின. ரவீந்திரநாத் தாகூர் எழுதிய கீதாஞ்சலியது.

இதனால் அவர் சீனா, ஜப்பான், ஐரோப்பா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு அடிக்கடி விஜயம் செய்ய வேண்டியதாயிற்று.

நோபல் பரிசு பெற்ற முதலாவது ஆசிய நாட்டவர் என்ற பெருமைக்குரிய கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் கலை, இலக்கிய துறைகளில் ஆற்றிய பணி இன்றும் நினைவுகூர்ந்து போற்றப்படுகின்றது. 1915 ஆம் ஆண்டு பிரித்தானிய அரசர் ஜோர்ஜ் அவர்கள் ரவீந்திரநாத் தாகூருக்கு சேர் பட்டம் வழங்கி கௌரவித்தார். 1919 ஆம் ஆண்டில் பஞ்சாப்பில் உள்ள அம்ரித்சரசில் நடந்த கோரச் சம்பவத்தை கேட்டதும் ரவீந்திரநாத் தாகூர் அவர்கள் தமக்கு ஆங்கிலேயர் அளித்த சேர் பட்டத்தை துறந்ததுடன், உள்ளன்பில்லாத வெளி கவிதை நூலுக்கு 1913 ஆம் ஆண்டு உலகின் மிக உயரிய இலக்கியத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. கல்கத்தாவிற்கு அருகே சாந்தி நிகேதன் கல்விக் கூடத்தில் தங்கியிருந்த கவிஞரை பாராட்டுவதற்காக நாட்டின் பல பாகங்களில் இருந்தும் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்தார்கள். நோபல் பரிசு அவரை உலகப் புகழ் பெற்றவராக ஆக்கி நடப்பில் தமக்குப் பற்றில்லை என்பதையும் புலப்படுத்தி செவி தைக்கும்படி சுடுசொல் பகர்ந்தார். இந்திய அரசியலில் நேரடியாக ரவீந்திரநாத் தாகூர் அதிக ஆர்வம் காட்டவில்லை. இந்திய அரசியலில் மிதவாதம், தீவிரவாதம் என பிரிவினைகள் தோன்றியது மட்டுமின்றி முஸ்லிம், இந்துக்கள் பிரச்சினைகளும் தலை தூக்கவே நேரடி அரசியலில் இருந்து ஒதுங்கி இருந்தார்.

இந்திய அரசியலில் ரவீந்திர நாத் தாகூர் அதிக ஆர்வம் காட்டாத போதிலும் மகாத்மா காந்தியுடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார். 1916 ஆம் ஆண்டில் காந்தியை 'மகாத்மா' என்று குறிப்பிட்டு, அந்தப் பட்டத்தை பிரபலப்படுத்தியவரும் ரவீந்திரநாத் தாகூர் அவர்களே. ரவீந்திரநாத் தாகூர் தனது எட்டு வயதில் கவிதைகள் எழுத ஆரம்பித்து அவைகளை பானுஷங்கோ என்ற புனைப் பெயரில் 1877 ஆம் ஆண்டில் வெளியிட்டார்.

பதினாறாவது வயதில் சிறுகதைகளும் இருபதாவது வயதில் தனது முதல் நாடகத்தை (வால்மீகி பிரபிதா) எழுதினார். அவரது அறுபதாவது வயதில் ஓவியங்களை வரையவும் வண்ணங்களை தீட்டவும் ஆரம்பித்தார். தெற்கு பிரான்சில் சந்தித்த ஒரு கலைஞரின் ஊக்குவிப்பினால் தனது படைப்புகளை வைத்து பொருட்காட்சி நடாத்தினார். ரவீந்திரநாத் தாகூர் மகாகவி மட்டுமல்ல சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை ஆகியவற்றையும் திறம்பட படைத்துள்ளார். இது தவிர அவர் கைதேர்ந்த வண்ண ஓவியரும் கூட. அவர் தீட்டிய மூவாயிரம் நவீன பாணி ஓவியங்களும் வரைந்த கோட்டுச் சித்திரங்களும் கல்கத்தா 'விஷ்வ பாரதி' அரங்கில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.



கலாபூஷணம்
பரீட் இக்பால்..., யாழ்ப்பாணம்

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



"ஷாஜகான் தாஜ்மகாலைக் கட்டினார்" கரிகாலன் கல்லணையைக் கட்டினார் " நீ எதைக் கட்டுவே..?"

"நான்தான் தினமும் உங்க முன்னாடி
"கை'கட்டுகிறேனே
சார்..?"

ஆசிரியர்: ""?!..?!..?"

கடி ஜோக்

அந்த டாக்டர் ஒரு நாளைக்கு குறைஞ் சது நூறு பேரையாவது பார்ப்பாரு!"

"அவ்வளவு பிஸியா?"

"நீங்க வேற கிளினிக் வாசல நின்னு, ரோடுல போறவங்களை குறைஞ்சது நூறு போரையாவது பார்ப்பாருன்னு சொன்னேன்.







இப்போ உன்னை ரெண்டு அறை விட்டாரே, அவரு யாரு?

ஒன்னு விட்ட சித்தப்பா.

ஒன்னு விட்ட சித்தப்பாவா? ரெண்டு விட்ட சித்தப் பான்னு சொல்லு.





கணவன்: ஏம்மா! தேத்தண்ணியிலே சீனியே இல்லியே? ஏன்?

மனைவி: டொக்டர் ஒங்க உடம்புலேயே சீனி இருக்குன்னு சொன்னாரு! அதனால போடலே..!



என் உயிருக்கு உயிரான ஃப்ரெண்ட் டாக்டரா இருக்கான்"

"அப்ப குளோஸ் ஃப்ரெண்டுன்னு சொல்லு"





டேய் ராமு, பாம்பைக் கண்டால் படையும் நடுங்குமா?

படை நடுங்குதோ இல்லையோ முதலில் தொடை நடுங்கும் சார்



டாக்டர் : ஏன் சார்.. எதுக்கு நர்ஸ் கையை தடவிப் பார்த்தீங்க ளாம்..?

நோயாளி : நீங்கதானே சொன்னீங்க.. ஊசி போட்ட கையை தடவிக் கொடுங்கன்னு..!



"அந்த டாக்டர் ரொம்ப பெரிய டாக்டர்... பதினெட்டு வயசுக்கு மட்டும்தான் ஆபரேஷன் பண்ணுவாராம்..."

"ஏன்..?"

"அவர் மேஜர் ஒபரேஷன் மட்டும்தான் பண்ணுவா ராம்!"

ஒருவன்: "யோவ்! என்னய்யா அர்த்த ராத்தி ரியில அந்த வீட்ல இருந்து வேகமா ஓடிவந்து கம்பியை நீட்டிப் பிடிச்சிக்கிட்டு நிக்கிறே?"

திருடன்: "நான் தொழிலுக்குப் புதுசுங்க! வீட்ல பூந்து பணத்தைத் திருடிக்கிட்டு `கம்பி' நீட் டணும்னு என் நண்பன் சொன்னாங்க..



ஆடி மாதத்தில் நீதிமன்றத்தில் வழக்கு போடாதே என்று சொன்னனே!"

"என்ன ஆச்சு?"

"தள்ளுபடி ஆயிடுச்சு!"



மனைவி : ஏங்க மருந்து பாட்டிலைத் தடவிக்கிட்டு இருக்கீங்க..?

கணவன் : டாக்டர்தான் சொன்னார்.. கைவலிச்சா இதைத் தடவுங்கன்னு...!

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

கலைகளால் சாதிக்க முடியும்

கிராமிய நாட்டுக் கூத்து கலைஞன் பாக்கியராசா கதிஸ்வரன்



◆ நேர்காணலின் ஆரம்பமாக உங்களைப்பற்றிய அறிமுகத்தை எடுத்துரையுங்கள்?

எனது பெயர் பாக்கியராசா கதிஸ்வரன். சந்திவெளி கிராமத்தில் பிறந்தவன். தற்போது இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றி வருவதோடு கருடா கிருஷ்ண பக்தி கழகத்தின் நிறுவனராகவும் தமிழ் சங்கம் பாரம்பரிய கிராமிய கலை மன்றத்தின் தலைவராகவும் மட்டக்களப்பு ஆதினத்தின் செயலாளராகவும் செயற்பட்டு வருகின்றேன்.நான் பரம்பரை வழி வந்த நாட்டுப்புற கிராமிய நாட்டுக் கூத்து கலைஞராகவும், கவிஞராகவும் இலக்கிய ஆர்வலராகவும் கலைத்துறையில் பணியாற்றி வருகிறேன்.

◆ உங்களது மேலதிக திறமைகள், பங்குபற்றிய போட்டிகள் பற்றி ?

பாடசாலை காலத்திலே ஒரு மேடை பேச்சாளராகவும் நாடகக் கலைஞராகவும் தமிழ்த்தின போட்டி நிகழ்வுகளிலும் மற்றும் மேடை நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றி வெற்றி பெற்றிருக்கிறேன். பாடசாலைக் காலத்தில் பங்கு பற்றிய போட்டியாக நாட்டுக் கூத்து போட்டியே முதல் போட்டியாகும்.



◆ உங்களது முதல் மேடைநாடகம் மற்றும் முதல் நாட்டுக் கூத்துக்களைப்பற்றிய அரங்கேற்றத்தை சொல்லுங்கள்?

"சக்தியின் தத்துவம்" எனும் நாடகமே எனது முதல் நாடகம். பாடசாலை காலத்திலே எங்கள் கிராமத்தில் இயங்கி வந்த கன்னித் தமிழ் கலாமன்றம் எங்கள் ஊரில் உள்ள பழம்பெரும் ஆலயமான பிள்ளையார் ஆலய திருவிழாவில் மேடையேற்றிய மேடை நாடகத்தில் நான் கிருஷ்ணராக பாத்திரமேற்று நடித்திருந்தேன். நாட்டுக் கூத்தும் இதே ஆலயத்தின் மேடையில் தான் அரங்கேற்றம் செய்யப்பட்டது. எனது முதல் நாட்டுக் கூத்து அரங்கேற்றமானது மூத்த அண்ணாவியார் கலாபூஷணம் பாலிப்போடி கமலநாதனினால் நெறியாள்கை செய்யப்பட்ட "வாள வீமன்" தென்மோடி நாட்டுக் கூத்தாகும். இந்த நாட்டுக் கூத்தில் நான் சிறுவயதிலேயே கடோத்கஜன் பாத்திர மேற்று நடித்திருந்தேன்.



◆ கூத்துக்கலை மக்கள் மயப்படுத்தப்பட்ட காலம் என்ன வாக இருக்கும்?

நானறிந்த வகையில் எனது தந்தையார் மற்றும் அப்பாவினுடைய சகோதரர்கள் நாட்டுக் கூத்து கலைஞர்கள். சிறு வயதில் எங்கள் கிராமத்தில் ஆலய திருவிழாக்கள் மற்றும் சித்திரை வருடப்பிறப்பு நாட்களில் எல்லாம் நாட்டுக் கூத்து தான் பிரபல்யமான கிராமிய கலையாக இருக்கும். ஆகையினால் இந்த நாட்டுக் கூத்து கலைவடிவம், தமிழர்களுடைய பாரம்பரிய கலை வடிவமாகும். நாட்டு கூத்து எங்களுடைய பாரம்பரிய கலை என்பதால் பல தசாப்தங்களுக்கு முன்னே மக்கள் மயப்படுத்தப்பட்டிருக்கும் என்றே சொல்லலாம்.



◆ இந்த நாட்டுக் கூத்துக்கு பெயர் பெற்ற பிரதேசங்கள் எவை?

நாட்டுக் கூத்தானது அன்று தொட்டு இன்றுவரை பல கிராமங்களில் பேணி பாதுகாக்கப் பட்டு புத்துயிர் கொடுக்கப்பட்டாலும் இந்த நாட்டுக் கூத்துக்கு ஒருசில பிரதேசங்கள் பிரசித்தி பெற்ற பெற்றுள்ளது. அந்த வகையில் மாவட்டம் என்ற அடிப்படையில் இன்று வரை மட்டக்களப்பு மாவட்டம் இதற்கு பெயர் போன மாவட்டமாகவும் பிரதேச அடிப்படையில் கிராம மட்டத்தில் நான் பிறந்த பிரதேசமான சந்திவெளி கிராமம் மற்றும் படுவான்கரை பிரதேசம் ஆகியன பெயர் பெற்று விளங்குகின்றன. இன்றுவரை சந்திவெளி கிராமத்தில் மகிடி கூத்து, வசந்தன் கூத்து, வடமோடி, தென்மோடி நாட்டுக் கூத்து என இளம் சமூகத்தோடு பிணைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

◆ மக்கள் மயப்படுத்தப்பட்ட இந்தக் கலை நாட்டார் பாடல்கள் வடிவில் இருப்பது மக்களை சென்றடைய இலகுவழிதானே.... கிராமப்புறங்களில் உள்ளவர்கள் இந்தக் கலைக்கு அதிக நாட்டமும் ஊக்கமும் கொள்வதேன்?

சிறந்த கேள்வி உண்மையில் இவ் பாரம்பரிய கிராமிய கலை வடிவங்கள் மற்றும் நாட்டார் பாடல்கள் மக்களுடைய வாழ்வியலோடு பின்னிப் பிணைந்தவை. அவர்களுடைய வாழ்வியலோடு இணைந்திருப்பதால் மிக இலகுவாக புரிந்து கொண்டு அவர்களை சென்றடையும் என்பதில் சந்தேகமில்லை. கிராம புறங்களில் உள்ளவர்களின் உயிர் மூச்சு எதுவென்றால் அது அவர்களுடைய மொழியும், பண்பாடும், கலைகளும் தான். வயது முதிர்ந்தவர்கள் இக் கலைகளை அவர்களுடைய அடையாளமாக பார்க்கிறார்கள். அதனால் தான் அதிக நாட்டத்துடனும் இக் கலைகளை பாதுகாக்க வேண்டும் என்று ஊக்கமும் கொள்கிறார்கள்.

◆ திரைப்படங்களில் காண்பிக்கப்படும் புதிய வகையான நாடக வடிவமைப்புகள் மரபு வழியான நாட்டுக் கூத்துக்களின் செல்வாக்கை குறைத்து விட்டதா?

யதார்த்தமான கேள்வி. உண்மையில் திரைப் படங்களில் காண்பிக்கப்படும் நாடக வடிவமைப்புகள் ரசிகர்களை திருப்திபடுத்துவதற்காக கையாளப்படும் நவீன தொழில்நுட்ப உத்திகளானது பாரம்பரிய கிராமிய கலை வடிவங்களை திசை திருப்பி மரபுவழியான நாட்டுக் கூத்து மற்றும் அது சார்ந்த கலை வடிவங்களின் செல்வாக்கை குறைப்பது மட்டுமல்லாது ஓர் இனம் சார்ந்த அவர்களுடைய வரலாற்று அடையாளமாக பேணப்பட்டு வரும் கலை வடிவங்களை இளம் சந்ததியினருக்கு வேறு கோணத்தில் எடுத்து காட்டுவதாகவும் இருக்கிறது.

◆ சங்க இலக்கியங்களில் பேசப்பட்ட நாடக வகைகள் இன்றைய நவீன யுகத்தில் மருவி வருகிறதா?

தற்கால சூழலில் மருவி வருகின்றன என்பதே எனது கருத்து. ஏனெனில் இப்போது யாரும் சங்க கால இலக்கிய நாடகங்களுக்கோ பாரம்பரிய கிராமிய நாட்டுப்புற கலைகளுக்கோ முன்னுரிமை கொடுப்பதில்லை. ஒரு சிலரால் மட்டுமே ஆங்காங்கே நிகழ்நிலையில் பாதுகாக்கப்படுகிறது.



2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

இக்கால சமூகம் நாகரீக வளர்ச்சியில் தன்னுடைய அடையாளத்தையே கைநழுவும் சூழலில் தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் புதிய புதிய திரைப்படங்களுக்கும் மேலைத்தேய கலைகளுக்குமே முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

◆ பொருளாதார நெருக்கடிகள்...கல்விச் சமநிலையின்மைகள்...மன அழுத்தங்கள்....அரசியல் சீர்கேடுகள் நிறைந்த இந்தக் காலப்பகுதியில் எல்லாவற்றிலும் ஒரு விரக்தியான அவசியமற்ற தன்மை காணப்படுகிறது. இந்த சமயத்தில் உங்களது கலைகளை எப்படி சமூகத்துக்கு எத்தி வைப்பீர்கள்? என்ன செய்திகளை சொல்ல விரும்புவீர்கள்?

கலைகளால் சாதிக்க முடியும் எனும் நம்பிக்கை இருக்கிறது. அந்த வகையில் மன அழுத்தம், விரக்தியான மனநிலையில் உள்ளவர்களுக்கு கலை என்பது ஓர் சிறந்த மருந்தாகும். இவ்வாறான நிலையில் உள்ள சமூகத்திற்கு கலைசார்ந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டங்கள் மூலம் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட கொரோனா பெருந்தொற்று காலத்தில் கூட "கலையால் உலகை வெல்வோம்" எனும் தொனியில் நாட்டுப்புற கிராமிய நாட்டுக் கூத்து மூலம் கொரோனா விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டம் ஒன்றை கிராம மட்டங்களில் செய்து வெற்றி கண்டோம். கலையினாலும் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று சொல்லுகிறேன்.









◆ உங்களது பொதுப் பணிகளைப் பற்றி கூறுங்கள்....?

நான் சுமார் 07 வருடங்களாக தொடர்ச்சியாக சமூக பணிகளில் ஈடுபட்டு வருகின்றேன். கலை, கலாச்சாரம், இலக்கியம், தமிழ்ப்பணி, ஆன்மீகம், கிராமிய பௌதீக வளர்ச்சி என பல்வேறு துறைகளில் பலதரப்பட்ட அரச அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்கள் மூலமாகவும் சமூக மட்ட பொது அமைப்புகளிடம் தேவையுடைய திட்டவரைபுகளை முன் வைத்து அவ் அமைப்புக்களின் பங்களிப்புடன் இவ்வாறான பொதுப் பணிகளை முன்னெடுக்க வருகிறேன். கடந்த 2020 ஆம் ஆண்டு LG ALBANS மற்றும் KOREA FRIENDS OF HOPE INTERNATIONAL SRILANKA நிறுவனங்கள் இணைந்து நடாத்திய கிராமத்தை கட்டியெழுப்பும் பிரமுகர்கள் திட்டத்தில் எனது திட்டமும் தெரிவு செய்யப்பட்டு நான்கு மாவட்டங்களில் மட்டக்களப்பு மாவட்டம் சார்பில் எனது திட்டமும் தெரிவு செய்யப்பட்டு கிராமிய பௌதீக வள அபிவிருத்திக்காக ஒரு மில்லியன் நிதியுதவியும் கிடைக்கப் பெற்றது.



◆ மிகச் சரியான பாதையின் மூலம் இறைவனை நெருங்க ஆன்மீகத்தை தேர்ந்தெடுத்தீர்களா....?

ஆம். மதங்கள் வெவ்வேறு ஆனாலும் ஆன்மீகம் என்பது அனைவருக்கும் பொதுவானது. எனது மத நம்பிக்கையூடாக இறைவனை நெருங்க ஆன்மீகம் எனக்கு வழிகாட்டும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

◆ உங்களுக்கு கிடைத்த கவிதை, கட்டுரைக்கான விருதுகள்...மற்றும் ஏனைய விருதுகள்...?

நான் கவிதை, கட்டுரை, சிறு கதை,கலை இலக்கியம் என்று பல விருதுகளையும் வெற்றிச் சான்றிதழ்களையும் பெற்றுள்ளேன். அந்த வகையில் என் கலை இலக்கிய சமூக ஆன்மீக பணிகளுக்காக இதுவரை நான் பெற்ற விருதுகளும் பட்டங்களும் சான்றிதழ்களும்....

(01) இளம் கலைஞர் கௌரவம்
(02) இளம் கலைஞர் விருது
(03) ஔவ்வையார் விருது
(04) கவிமுகில் விருது
(05) நல்லாசான் விருது
(06) சந்தியூர் கலைமகன் விருது
(07) அகத்தியர் விருது
(08) பாரதி நேசன் விருது
(09) தமிழ்மணி அண்ணா விருது
(10) கலாம் அக்னி விருது
(11) கவிச் சிற்பி காந்தி விருது
(12) கவிக்கணையர் விருது
(13) கவி வித்தகர் விருது
(14) கவின்கவி விருது
(15) கலைமாமணி விருதும், சமூகஜோதி பட்டமும்.
(16) கவித்தேன் விருது
(17) AIM JOURNALஊடக வலயமைப்பினால் 2021 ஆம் ஆண்டு இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 73 வது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு நடாத்திய கவிதை போட்டியில் பங்குபற்றி முதலாமிடம் பெற்றதோடு ஐம் பதுக்கும் மேற்பட்ட வெற்றி சான்றிதழ்களையும் பெற்று இருக்கின்றேன்.





◆ உங்களது தொகுப்புகள் ஏதாவது நூலுருவில் வந்துள்ளனவா நேர்காணலின் இறுதியாக சொல்ல விரும்புவது?

இதுவரைக்கும் இல்லை. போட்டி நிகழ்வுகள் மற்றும் வேறு புத்தக வெளியீடுகள் பத்திரிகைகளுக்கு எழுதியுள்ளேன். நூலுருவில் படைப்பதற்கு என்னிடம் திறமை இருக்கிறது. இருந்தும் போதியளவு பொருளாதாரம் இன்மை, அவற்றை தள்ளிப் போட்டுக் கொண்டே வருகிறது.

இருந்தாலும் அடுத்த ஆண்டு எனது கன்னி படைப்பாக கவிதை நூல் ஒன்றினை வெளியிட காத்திருக்கின்றேன்.

இவ் நேர்காணல் ஊடாக இறுதியாக சொல்ல விரும்புவது பாரம்பரிய கலைகள் என்பது அவ் இனத்தின் அடையாளம் ஆகையினால் பாரம்பரிய கலைகளுக்குள் நவீன கலைகளை புகுத்தி அடையாளத்தை அழிக்கும் நிலைக்கு கொண்டு செல்ல வேண்டாம் ஓர் இனத்தின் அடையாளம் அழியுமானால் அவ் இனமே அழிந்ததற்கு சமமாகும். நன்றிகள்.

நேர்காணல் கண்டவர்:
பாத்திமா நளீரா

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

சினி பஜார் கேள்வி பதில்

மொழிவாணன்

எம்.எம்.முஸம்மில்
கல்முனை

கேள்வி: நடிகர் சந்தானம் நடித்த புதிய படங்கள் ஏதாவது வெளிவந்திருக்கிறதா?

பதில்: 'மேயாத மான்', 'ஆடை' ஆகிய படங்களை இயக்கியவரும்.விஜய் நடிப்பில் வெளியான'மாஸ்டர்',உலக நாயகன் கமல் ஹாசன் நடிப்பில் வெளியான'விக்ரம்'ஆகிய படத்தின் கதை விவாதங்களில் பங்களித்தவருமான இயக்குநர் ரத்னகுமார் இயக்கத்தில் தயாராகி இருக்கும் 'குலு குலு'படத்தில் கதையின் நாயகனாக நடித்திருக்கிறார். ஓர் இளைஞனின் சுய பரிசோதனையை சுவாரஸ்யமாக விளங்கும் வகையில் அவர் மேற் கொள்ளும் பயனத்தை மையப்படுத்தி 'குலு குலு'திரைப்படத்தின் கதை அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் நடிகர் சந்தானத்திற்கு ஜோடியாக நடிகை அதுல்யா சந்திரா எனும் புது முக நடிகை நடித்திருக்கிறார்.

எம்.மலர்ராணி
கொழும்பு13

கேள்வி: எனது அபிமான நடிகை தமன்னா இப்போது ஏதாவது படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறாரா?

பதில்; 'பப்ளி பவுன்சர்' எனும் பெயரில் திரைப்படமொன்று தயாராகியிருக்கிறது.இதில் கதையின் நாயகியாக நடிகை தமன்னா நடித்திருக்கிறார்.இவரது நடிப்பில் தயாராகிவரும்'பப்ளி பவுன்சர்' எனும் திரைப்படம் பட மாளிகையில் வெளியாகாமல்,நேரடியாக டிஜிட்டல் தளத்தில் வெளியாகிறது.'பப்ளி பவுன்சர்'படத்தை பொலிவுட் இயக்குநர் மதுகர் பண்டாகர் இயக்கியிருக்கிறார். இந்த திரைப்படம் வட இந்தியாவில் நிஜமான பெண் பாதுகாவலராக பணியாற்றிய ஒருவரின் வாழ்க்கையில் நடைபெற்ற சம்பவத்தை தழுவி திரைக்கதை எழுதப் பட்டிருக்கிறது. இந்தி, தெலுங்கு, தமிழ் ஆகிய மூன்று மொழிகளில் வெளியாகும் இந்த திரைப்படத்தைத் தவிர நடிகை தமன்னாவிற்கு வேறு படங்களில் நடிக்கும் வாய்ப்புகள் இதுவரை கிடைக்கவில்லை.

எஸ்.ஜே.மாதவன்.
மத்துமகல.

கேள்வி: கமல் ஹாசனின் படநிறுவனம் உதயநிதி ஸ்டாலினை வைத்து படம் தயாரிக்கப் போகிறதாமே ...உண்மையா..?

பதில்:ஆமாம் ...உண்மைதான்.கமல் ஹாசனே இதைச்சொல்லியிருக்கிறார்.அதற்குக் காரணமும் இருக்கிறது. தற்போதைய சமூலில் தமிழ் திரையுலக வணிகர்கள் அதிக அளவில் உச்சரிக்கும் ஒரே வார்த்தை உதய நிதி ஸ்டாலின்.இவருடைய ரெட் ஜெயன்ட் மூவிஸ் நிறுவனம் தமிழில் மற்றும் இந்திய அளவில உருவாகும் அனைத்து பெரிய பட்ஜெட் மற்றும் தரமான கதைகளைக் கொண்ட திரைப்பங்களை வெளியிட்டு தயாரிப்பாளர்களுக்கு நல்ல தொடர்பு இலாபத்தை வழங்கி வருகிறது. அண்மையில் உலக நாயகன் கமல்ஹாசன் நடிப்பில் வெளியான'விக்ரம்'படத்தினை இவரது ரெட் ஜெயண்ட் மூவிஸ் வெளியிட்டு பெரும் இலாபத்தை உலகநாயகன் கமலஹாசனுக்கு வழங்கியது.இந்நிலையில் ரெட் ஜெயண்ட் மூவிஸ் தொடங்கப்பட்டு 15 ஆண்டுகளானதை முன்னிட்டு நடைபெற்ற விழாவில் அதிதியாகக் கலந்து கொண்ட கமல் ஹாசன், தன்னுடைய நிறுவனம் தாயரிக்கும் பெயரிடப்படாத புதிய படத்தில் உதயநிதி ஸ்டாலின் கதையின் நாயகனாக நடிக்கிறார் என அறிவித்தார்.இதற்கு உதய நிதி ஸ்டாலின் நன்றி தெரிவித்தார். இதனிடையே நடிகர் உதயநிதி ஸ்டாலின் 'மாமன்னன்' எனும் படத்தைத். தொடர்ந்து அவரது நடிப்பில் தயாராகி வரும் புதிய' படத்திற்கு'கலகத் தலைவன்'என பெயரிடப்பட்டிருக்கிறது.உலகநாயகனும் கலகத்தலைவனும் அரசியலில் இல்லாமல் கலை உலகில் புதிய கூட்டணி அமைத்து வெற்றிபெற வேண்டும் என திரை உலகினர் விரும்புகிறார்கள்.



கே. லோகேஷ்
கிருலப்பனை

கேள்வி:ஆத்மிகா வாரிசு நடிகையை வம்புக்கு இழுப்பதாக கூறப்படுகிறதே அது பற்றி கூற முடியுமா?

தமிழ் சினிமாவில் பிரபலங்களின் வாரிசுகளுக்கு கிடைக்கும் வாய்ப்புகள் குறித்து நடிகை ஆத்மிகா மறைமுகமாக சாடியுள்ளார்.

பதில்:மீசையை முறுக்கு', 'கோடியில் ஒருவன்', 'காட்டேரி' போன்ற படங்களில் நடித்தவர் ஆத்மிகா. மாடல் துறையில் இருந்து சினிமாவுக்கு வந்த நடிகைகளில் இவரும் ஒருவர். ஆனாலும் இவருக்கு எதிர் பார்த்த அளவுக்கு படங்கள் அமையவில்லை. சமீப காலமாக ஆத்மிகா சமூக வலைதளங்களில் சர்ச்சைக்குரிய கருத்துக்களையே பதிவிட்டு வருகிறார். சமீபத்தில் நடந்த 'விருமன்' பட இசை வெளியீட்டு விழா குறித்தும் சில கருத்துக்களை அவர் வெளியிட்டிருந்தார். இதற் கிடையில் அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் ஒரு கருத்தை பதிவிட்டுள்ளார். "சிலருக்கு வாய்ப் புகள் எளிதாக கிடைத்து விடுகிறது. மற் றவர்களின் நிலைமை தான் என்ன? பார்த்துக் கலாம்", என்று அவர் அதில் குறிப்பிட் டுள்ளார். 'விருமன்' பட கதாநாயகி அதிதியை குறிவைத்துதான் ஆத்மிகா இந்த கருத்தை பதிவிட்டுள்ளதாக திரை யுலகினர் கிசுகிசுத்து வருகிறார்கள். அதிதி, டைரக்டர் ஷங்கரின் மகள் ஆவார். 'விருமன்' படத்தில் கார்த்திக்கு ஜோடியாக நடித்து தமிழ் சினிமாவில் அறிமுகம் ஆக இருக்கிறார். வாரிசு நடிகையை வம்புக்கு இழுக்கும் அளவுக்கு ஆத்மிகாவுக்கு அப்படி என்ன கோபம்? என ரசிகர்கள் கேள்வி எழுப்புகிறார்கள். என்ன பதில் சொல்லப் போகிறார் ஆத்மிகா?





சினி பஜார் கேள்வி பதில்,
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.



கௌதம் திருமணம்

நடிகையை கௌதம் கார்த்திக் திருமணம் செய்து கொள்ளபோவதாக தகவல் வெளியாகியுள்ளது. தமிழ் சினிமாவின் நவரச நாயகனான கார்த்திக்கின் மகன் கௌதம் கார்த்திக், மணிரத்தினம் இயக்கத்தில் வெளிவந்த 'கடல்' படத்தின் மூலம் தமிழ் சினிமாவுக்கு அறிமுகமானார். அதனைத் தொடர்ந்து 'இருட்டு அறையில் முரட்டு குத்து', 'ரங்கூன்', 'முத்துராமலிங்கம்', 'தேவராட்டம்' போன்ற பல படங்களில் நடித்துள்ளார். கௌதம் கார்த்திக்கும், மஞ்சிமா மோகனுக்கும் இடையே காதல் இருப்பதாக கிசுகிசுக்கப்படுகிறது. 'தேவராட்டம்' படத்தில் ஒன்றாக நடித்த போது காதல் மலர்ந்ததாகவும் கூறப்படுகிறது. இருவரும் பல இடங்களில் ஜோடியாக சுற்றுகிறார்கள். ஆனால் காதலை ஒத்துக் கொள்வதில் இரு தரப்பினரும் மவுனம் சாதித்து வருகிறார்கள். இந்நிலையில் ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்ற கௌதம் கார்த்திக்கிடம், உங்கள் திருமணம் எப்போது? என்று கேட்கப்பட்டது. அதற்கு, விரைவில் நடக்கும் என்று நம்புகிறேன், என அவர் பதில் அளித்தார். மஞ்சிமா மோகன் பற்றிய கேள்விக்கு சிரிப்பை பதிலாக்கி சென்று விட்டார்.



சித்ரா சிவா காதேதான் கடவுளடா

இயக்குனர் ஆர்.கண்ணன் இயக்கத்தில் சிவா கதாநாயகனாக நடித்துள்ள படம் காதேதான் கடவுளடா. இப்படத்தில் சிவாவிற்கு ஜோடியாக பிரியா ஆனந்த் நடித்துள்ளார். சித்ராலயா கோபு இயக்கத்தில் முத்துராமன், தேங்காய் சீனிவாசன், வெண்ணிற ஆடை மூர்த்தி, மனோரமா நடிப்பில் கடந்த 1972 ம் ஆண்டு வெளியாகி வெற்றி பெற்ற படம் 'காதேதான் கடவுளடா'. தற்போது இப்படத்தை ரீமேக் செய்துள்ளனர். ஆர்.கண்ணன் இயக்கும் இப்படத்தில் சிவா கதாநாயகனாக நடித்துள்ளார். இதில் யோகிபாபு, சிவாங்கி ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கின்றனர். இப்படத்தில் சிவாவுக்கு ஜோடியாக நடிகை பிரியா ஆனந்த் நடித்துள்ளார். சமீபத்தில் இப்படத்தின் டிரைலர் வெளியாகி ரசிகர்களிடம் நல்ல வரவேற்பை பெற்றது. இந்நிலையில், இப்படத்தின் புதிய அப்டேட் வெளியாகியுள்ளது. அதன்படி, 'காதேதான் கடவுளடா' படத்தின் ப்ரோமோ பாடலை படக்குழுவினர் முடித்துள்ளனர். இதனை புகைப்படம் ஒன்றை வெளியிட்டு படக்குழு அறிவித்துள்ளது. 'காதேதான் கடவுளடா' திரைப்படம் விரைவில் திரையரங்குகளில் வெளியாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.

பொன்னியின் செல்வன் ரவி

இயக்குனர் மணிரத்னம் இயக்கத்தில் ஜெயம் ரவி நடித்துள்ள படம் பொன்னியின் செல்வன். இதைத் தொடர்ந்து இயக்குனர் ராஜேஷ் இயக்கத்தில் ஜெயம் ரவி புதிய படத்தில் நடிக்கிறார். இயக்குனர் மணிரத்னம் இயக்கத்தில் "பொன்னியின் செல்வன்" நாவலை அடிப்படையாகக் கொண்டு உருவாகியுள்ள திரைப்படம் பொன்னியின் செல்வன். இந்தப் படத்தில், ஜெயம் ரவி, விக்ரம், கார்த்தி, த்ரிஷா, ஐஸ்வர்யா ராய் போன்ற திரைப்பிரபலங்கள் பலர் நடித்துள்ளனர். இரண்டு பாகங்களாக உருவாக இருக்கும் இப்படத்தின் முதல் பாகம் செப்டம்பர் 30ஆம் திகதி திரைக்கு உள்ளது. இதைத்தொடர்ந்து, இயக்குனர் எம். ராஜேஷ் இயக்கத்தில் ஜெயம் ரவி புதிய படத்தில் நடிக்கிறார். ஜெ.ஆர்.30 என தற்காலிகமாக பெயரிடப்பட்டுள்ள இந்த படத்தில் ஜெயம் ரவிக்கு ஜோடியாக பிரியங்கா மோகன் இணைந்துள்ளார். மேலும், இதில் நட்டி, வி.டி.வி கணேஷ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர். இப்படத்திற்கு ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைக்கிறார். இந்நிலையில், ஜெயம் ரவி நடிக்கும் 30வது படத்தின் படப்பிடிப்பு பூஜையுடன் தொடங்கியுள்ளது. இதன் புகைப்படங்கள் சமூக வலைதளத்தில் வைரலாகி வருகின்றது. மேலும் இப்படத்தின் அப்டேட்கள் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.



விஜய் தேவரகொண்டா லைகர்

பூரி ஜெகந்நாத் இயக்கத்தில் விஜய் தேவரகொண்டா நடித்துள்ள படம் லைகர். லைகர் படம் இந்தி, தமிழ், தெலுங்கு என பல மொழிகளில் வெளியாகவுள்ளது. இப்படத்தில் விஜய் தேவரகொண்டா குத்துச் சண்டை வீரராக நடித்துள்ளார். அவருடன் பிரபல குத்துச் சண்டை வீரர் மைக் டைசனும் நடித்திருக்கிறார். மேலும், இப்படத்தில், அனன்யா பாண்டே, ரம்யா கிருஷ்ணன், உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கின்றனர். மிகப்பெரிய பொருட்செலவில் உருவாகியுள்ள இந்தப் படம் தமிழ், தெலுங்கு என பல மொழிகளில் ஆகஸ்ட் 25ஆம் திகதி வெளியாகவுள்ளது. சமீபத்தில் வெளியான இப்படத்தின் பாடல் மற்றும் டிரைலர் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது.

சர்ச்சைக்கு 'காஜல்' முற்றுபுள்ளி

கமல்ஹாசன் நடிப்பில் 'இந்தியன்2' படம் இயக்கப் போவதாக ஷங்கர் அறிவித்தார். படப்பிடிப்பு பணிகளும் தொடங்கியது. பின்னர் பல்வேறு காரணங்களால் படப்பிடிப்பு பணிகள் நிறுத்தப்பட்டன. அதன் பின்னர் ஷங்கரும், கமல்ஹாசனும் வெவ்வேறு படங்களில் பிஸியானார்கள். 'விக்ரம்' பட வெற்றிக்குப் பிறகு, ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்ற கமல்ஹாசன், 'இந்தியன்2 நிச்சயம் தொடங்கும்' என தெரிவித்திருந்தார். 'இந்தியன்2' படத்தில் காஜல் அகர்வால் நடிப்பதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார். இதற்கிடையில் படத்திலிருந்து அவர் நீக்கப்பட்டதாக செய்திகள் வெளியானது. சமீபத்தில் குழந்தை பெற்றெடுத்த காஜல் அகர்வால் இதற்கு எந்த கருத்தும் கூறாமல் அமைதியாக இருந்தார்.

இதனால் அவருக்கு மாற்றாக வேறொரு கதாநாயகி நடிப்பார் என்று கருதப்பட்டது. இந்த நிலையில் சமூக வலைதளத்தில் காஜல் அகர்வால் ஒரு தகவலை பதிவிட்டு இருக்கிறார். அதில், 'இந்தியன்2 படத்தில் நான் நிச்சயம் நடிக்கிறேன். படப்பிடிப்பு செப்டம்பர் 13ந்தேதி முதல் தொடங்குகிறது', என்று குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் தொடர்ச்சியாக எழுப்பப்பட்டு வந்த வதந்திகளுக்கு காஜல் அகர்வால் முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார். 'இந்தியன்2' படத்தின் படப்பிடிப்பு பணிகள் மீண்டும் தொடங்க உள்ளதையொட்டி ரசிகர்கள் மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள்.



ஐஸ்வர்யா ராஜேஷின் 'டிரைவர் ஜமுனா'

ஐஸ்வர்யா ராஜேஷ் கதையின் நாயகியாக நடித்திருக்கும் படம் 'டிரைவர் ஜமுனா'. 'டிரைவர் ஜமுனா' படத்தை இயக்குனர் பா.கின்ஸ்லின் இயக்கியுள்ளார். வத்திக்குச்சி' படத்தை இயக்கிய இயக்குனர் பா.கின்ஸ்லின் இயக்கும் அடுத்த படம் 'டிரைவர் ஜமுனா'. இதில் நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ் கதையின் நாயகியாக நடித்திருக்கிறார். இவருடன் 'ஆடுகளம்', நரேன், ஸ்ரீ ரஞ்சனி, 'ஸ்டான்ட் அப் காமடியன்' அபிஷேக், 'ராஜாராணி' பட புகழ் பாண்டியன், கவிதா பாரதி, பாண்டி, மணிகண்டன் ராஜேஷ் உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள். இப்படத்தின் டிரைலர் சில தினங்களுக்கு முன் வெளியாகி அனைவரின் கவனத்தையும் ஈர்த்து வைரலானது. இந்நிலையில், இப்படத்தின் புதிய அப்டேட் வெளியாகியுள்ளது. அதன்படி, 'டிரைவர் ஜமுனா' படத்தில் இடம் பெற்றுள்ள "கூல் டியூட்" பாடலின் ப்ரோமோ வீடியோ ஆகஸ்ட் 4ஆம் திகதி மாலை 5 மணிக்கு வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது. இதன் போஸ்டரை நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ் தனது சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

பெண்மையின் எழில் அழகு



ஒரு பெண் தன்னை அழகாகக் காட்டிக் கொள்ள விரும்புவது அவளுடன் பிறந்த குணம். அவளுடைய அந்தச் சுதந்திரமான ஆசை, கலாச்சாரத்தின் ஓர் அம்சமாகி விட்டது.

செல்வம் படைத்த ஆணையே பெண் விரும்பி மதிக்கிறாள். எழில் மிகுந்த பெண்ணையே ஆண் விரும்பி ரசிக்கிறான். இனப்பெருக்கம் நிகழ்வதற்காக இயற்கை சில தந்திரங்களைச் செய்திருக்கிறது. பூக்கள்கூட தங்களை வண்ணமயமாக அழகுபடுத்திக் கொள்வதால்தான் தேனீக்களைக் கவர்ந்திழுக்கின்றன. மிருக இனத்திலும் பறவை இனத்திலும் கூட இது பரவலாகக் காணப்படுகிறது.

மனிதர்கள் இந்த விஷயத்தில் வேறு பட்டவர்கள்.

ஓர் ஆண் தன்னை வீரியம் மிக்கவனாகக் காட்டிக் கொள்ள விரும்புகிறான். அந்தச் சக்தி உடல் பலமாகவும் இருக்கலாம்; பண பலமாகவும் இருக்கலாம்.

ஆண்களுக்குப் பணம் என்னவெல்லாம் செய்யுமோ, அதைப் பெண்களுக்கு அழகு செய்து தரும். பணம் படைத்த ஆணிற்கு தடை என்பது பெரும்பான்மையாக இருப்பதில்லை. எங்கு வேண்டுமானாலும் அவனால் தடையின்றிப் போக முடியும். அழகுமிக்க பெண்ணிற்கோ, பணம் தேவையில்லை. அந்த அழகே போதுமானது. உலகில் பெரும்பான்மையான கதவுகள் அவளுக்காகத் திறந்து நிற்கும்.

செல்வம் படைத்த ஆணையே பெண் விரும்பி மதிக்கிறாள். எழில் மிகுந்த பெண்ணையே ஆண் விரும்பி ரசிக்கிறான். அன்றாட வாழ்வியலில் இதுவே நடைமுறை என்பதால், பெண்கள் தங்களை அழகாகக் காண்பிக்கப் பிரயத்தனப்படுகிறார்கள். இது இயல்பானதுதான்!

"பணத்தை விட அழகு வேகமாக அழியக்கூடியது அல்லவா? அதை முன்னிலைப் படுத்துவது பரிதாபம் அல்லவா?"

பணம், அழகு இரண்டுமே நிலையானவை அல்ல! அவற்றை வைத்து இறுதியான தீர்ப்புகள் வழங்க முடியாது.

காலம்காலமாக இப்புவியின் ஜனத்தொகையில், ஆண்களை விட பெண்களின் விகிதம் கூடுதலாகவே இருந்து வந்திருக்கிறது. பழங்காலத்தில், ஆண்களின் எண்ணிக்கை போர் காரணமாக மேலும் குறைந்தது. குறைவான ஆண்களுக்கு அதிகம் பெண்கள் போட்டி போட வேண்டியிருந்ததால், அழகு முன்னிலை பெற்றது. மாறாக, ஆண்களைவிடப் பெண்களின் எண்ணிக்கை குறைவாக இருந்திருந்தால், நிலைமை தலைகீழாகி விடும்.

இன்றைக்குச் செயற்கைக் கருத்தடை காரணமாக ஆண்பெண் விகிதநிலை மாறிவிட்டது. கருத்தடை என்று ஒன்று இல்லாதிருந்தால், ஒவ்வொரு பெண்ணும் சராசரியாகப் பன்னிரண்டிலிருந்து பதினெட்டு குழந்தைகளுக்குத் தாயாக முடியும். அப்படிப் பிறக்கும் குழந்தைகளில் பெண்களின் விகிதம் தான் கூடுதலாக இருக்கும்.

தங்கள் தோற்றத்தைப் பற்றிப் பொருட்படுத்தாது, விருப்பப்படி மேம்பட்ட வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் பெண்கள் சரித்திர காலத்திலும் சரி, இன்றைக்கும் சரி... மிகச்சிலரே!

தோற்றத்தில் ஆணுக்குரிய கம்பீர அழகு இல்லாதவனாய் இருந்தாலும், பணம் மிகுந்திருந்தால் அவனிடம் ஓர் அதிகாரம் கூடுகிறது. பெண்கள் அதனால் ஈர்க்கப்படுகிறார்கள்.

ஆண்களிடம் பெண்கள் எதிர்பார்ப்பது கம்பீரமான, அதிகார பலம்தான். அதை அவனுக்கு முன்பு உடல் பலம் தந்தது; இன்று செல்வம் தருகிறது.

அறிவாற்றலில் குறைபட்டிருந்தாலும், அழகு மிக்கவளாக இருந்தால், ஆண்களுக்கிடையில் ஒரு பெண் சக்தி மிக்கவளாகி விடுகிறாள். இயல்பு வாழ்க்கையில் இதுதான் நிதர்சனம்.

இதுதான் அழகு என்று யாரும் அறுதியிட்டுச் சொல்லிவிட முடியாது. ஒருவர் அழகா, இல்லையா என்பது பார்ப்பவர் மனதில்தான் இருக்கிறது.

உள்ளே எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றிய அக்கறை இருப்பவர்கள், தங்கள் வெளித்தோற்றம் பற்றி அலட்டிக் கொள்வது இல்லை. உங்கள் கவனம் வெளியிலிருந்து உள்நோக்கித் திரும்ப வேண்டும் என்பதே என் அவா! ஐம்புலன்களைத் தாண்டியதொரு அனுபவத்தின் அழகு அபரிமிதமானது.

பாதங்களின் பராமரிப்பு

குளிக்கும்போது நகங்கள், பாதம் மற்றும் குதிகால் ஆகியவற்றில் தனி கவனம் செலுத்தி சுத்தம் செய்ய வேண்டும். நகங்களைச் சுற்றியுள்ள இறந்த செல்கள் மற்றும் தோல்களையும் நீக்க வேண்டும். இதற்கு மென்மையான பிரஷ்களை பயன்படுத்தலாம். தினமும் முக அழகை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் பல பெண்கள், வாரத்துக்கு ஒரு முறை கூட பாதங்களின் பராமரிப்புக்கு நேரம் ஒதுக்குவது இல்லை. இவ்வாறு பாதங்களை கவனிக்காமல் இருந்தால், நாளடைவில் பக்டீரியா மற்றும் பூஞ்சைத் தொற்று, சரும வெடிப்பு போன்ற பிரச்சினைகள் ஏற்படும்.



கைகளைப் போலவே, கால்களிலும் நகங்களை நீளமாக வளர்த்தல் கூடாது. சொக்ஸ் மற்றும் ஷூக்களில் உள்ள அழுக்குகள், கால் நகங்களின் இடுக்குகளில் படிந்து அங்கு கிருமித்தொற்றை ஏற்படுத்தக்கூடும். எனவே தினமும் சவர்க்காரம் போட்டு கால்களைக் கழுவ வேண்டும். குளிக்கும்போது நகங்கள், பாதம் மற்றும் குதிகால் ஆகியவற்றில் தனி கவனம் செலுத்தி சுத்தம் செய்ய வேண்டும். நகங்களைச் சுற்றியுள்ள இறந்த செல்கள் மற்றும் தோல்களையும் நீக்க வேண்டும். இதற்கு மென்மையான பிரஷ்களை பயன்படுத்தலாம். தினமும் ஷூ அணிபவர்களின் பாதங்களில் இருந்து வெளியேறும் வியர்வை, ஷூக்களில் படிந்து, அதன்மூலம் கிருமித் தொற்று ஏற்படலாம். இதைத் தவிர்க்க வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் ஷூக்களை வெயிலில் நன்றாக உலர வைத்து பயன்படுத்துவது நல்லது.

மருதாணி அலங்காரம்

பெண்கள் மருதாணி அலங்காரம் செய்து கொள்ள எப்போதுமே விரும்புவார்கள். ஏனென்றால் அது அவர்களுக்கு அழகோடு, ஆரோக்கியத்தையும் சேர்த்து தருகிறது.

இந்தியத் திருமணங்களில் மணப்பெண்களுக்கு பாரம்பரிய முறையில் பதினாறு வகையான அலங்காரங்களை செய்கிறார்கள். அதில் முக்கியமானது மருதாணி அலங்காரம். பெண்கள் மருதாணி அலங்காரம் செய்துகொள்ள எப்போதுமே விரும்புவார்கள். ஏனென்றால் அது அவர்களுக்கு அழகோடு, ஆரோக்கியத்தையும் சேர்த்து தருகிறது. மருதாணி உடலில் பித்தத் தன்மையை கட்டுப்படுத்தி, குளிர்ச்சியை தருகிறது.



பாத்திரங்களை பளிச்சிடவைக்கும் சவர்க்காரம் முதல், துணி துவைக்க பயன்படுத்தும் பவுடர் வரை எல்லாமுமே தற்போது இரசாயன கலவைகளாக மாறி வருகின்றன. அவைகளால் பெண்களின் கைகளுக்கு ஏற்படும் அனைத்து பாதிப்புகளையும் போக்கும் சக்தி இயற்கையான மருதாணிக்கு இருக்கிறது. கால், கைகளில் ஏற்படும் பித்த வெடிப்பு, தோலுரிதல் போன்றவைகளும் மருதாணியால் மறையும்.

இத்தகைய மருத்துவ குணங்கள் கொண்ட மருதாணி சுப நிகழ்ச்சிகளில் மங்கள பொருளாகவும் விளங்குகிறது.

மருதாணி அரைத்து கைகளை அழகுபடுத்திக் கொண்டு சில மணி நேரம் காத்திருக்க வேண்டியிருப்பதால் இன்றைய அவசர யுகத்தில் பெண்கள் அதற்கெல்லாம் நேரம் ஒதுக்குவதில்லை. அதனால் மருதாணி, பெண்களின் பயன்பாட்டில் இருந்து ஓரங்கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதை உணர்ந்த வியாபாரிகள் அதிலும் ரெடிமேட் வகைகளை கொண்டு வந்துவிட்டார்கள். வைத்ததும் அது காய்ந்துவிடும் என்றாலும், அதில் இயற்கையான மருத்துவ குணம் குறைவு. கிளிட்டர் மருதாணி, நெயில் பொலிஷ் மருதாணி, ஜர்தோசி மருதாணி என்று இப்போது அதற்கு பல பெயர்கள் உண்டு. அவைகளை பயன்படுத்தி கைகளில் அழகிய உருவங்களை வடிவமைக் கிறார்கள். அதன் மூலம் குறுகிய நேரத்திலே அந்த அலங்காரத்தை செய்து முடித்துவிட முடிகிறது. காய்வதற்காக காத்திருக்கவேண்டிய அவசியம் இல்லை.

அழகு நிலையங்களில் விதவிதமான மருதாணிகளை தயார் செய்து வைத்திருக்கிறார்கள். திடீர் விருந்து, விழாக்களுக்கு செல்லும்போது அதனை விருப்பம்போல் பயன் படுத்திக்கொள்ள முடியும்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

செல்ஃபி உலா



சிரேஷ்ட கலைஞன் பொன். பத்மநாதன், கொழும்பு



பிரபல அறிவிப்பாளர் கூல் தேவா, கொழும்பு



பிரபல நடிகை ஆஷா,



Anukeerthy



கலாவிபூஷண உதயா
களுத்துறை



இலங்கை எம்.ஜி.ஆர்.
கலைஞர் மாணிக்கம்



சிரேஷ்ட
கலைஞன்
கலைஞரீ



காவ்யா



அனிதா



கீதா




2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -


நிறம் தீட்டுங்கள்




வழிகாட்டுங்கள்




05 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



தொடர்புபடுத்துங்கள்



உருக்களின் சரியான எண்ணிக்கையை வட்டமிடுங்கள்



2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

இளம் தொழில் முயற்சியாளர் விருது வென்ற கிண்ணியா எம். ஆர். எம். றிபாஸ்

நான் ரொம்ப பிஸி...

பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து தடைகளைத் தாண்டி வாழ்வை வளமாக்குதல் பெரும் போராட்டம்தான். அவ்வாறான நிலைக்கு தன்னை தயார் படுத்தி வருகிறார் இளைஞனான " இளம் தொழில் முயற்சியாளர்" விருது வென்ற **எம். ஆர். முகம்மது** றிபாஸாகும். அவரை நான் ரொம்ப பிஸி பகுதிக்காக அவரது இல்லத்தில் சந்தித்தபோது...

கேள்வி : உங்கள் ஆரம்பம் பற்றி சொல்லுங்களேன்?

எனது பெயர் றிபாஸ், கிண்ணியா றஹ்மானியா எனும் பிரதேசத்தில் முகம்மது றசீது மஸாஹிரா தம்பதியின் இரண்டாவது மகனாக பிறந்த நான் கிண்ணியா அல்அக்ஸா கல்லூரியில் உயர் தரம் வர்த்தக பிரிவில் கல்வி கற்றேன்.தற்போது கட்டையாறு வீதியில் வசித்து வருகிறேன்.

கேள்வி : சிறு தொழில் முயற்சியாளர் விருது உங்களுக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்ததா?

ஆம், எல்லா புகழும் இறைவனுக்கே! கிழக்கு மாகாணத்தில் அரச அனுமதி பெற்றதும், மாகாணத்தில் இது முதலாவது தொழில் முயற்சி என்ற வகையிலும் நிச்சயமாக இந்த விருது எனக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்தது.

கேள்வி : இவ்விருது கிடத்த பின்னர் உங்கள் மனதில் ஏற்படுத்திய மாற்றம்?

இது எனது முயற்சிக்கு கிடைத்த அங்கிகாரமாகும், இதுவே எனது வாழ்வில் முதல் விருது தேசிய ரீதியில் மேலும் பல விருதுகளையும் பெற வேண்டும் என்ற ஆர்வமும் எனது மனதில் ஏற்பட்டது. அதற்காக முயற்சிகள் செய்கிறேன். அதற்கான காலநேரம் கடவுள் துணை என்பன அமைந்தாகவேண்டும் .



கேள்வி : எவ்வகையான சிறு தொழில் முயற்சியில் ஈடுபட்டு வந்தீர்கள்?

தென்னை சார்ந்த பெறுமதி சேர் உற்பத்திகள் (Coconut shell charcoal , charcoal cubes)

கேள்வி : இதற்கான மூலப்பொருட்களை எங்கிருந்து பெற்றீர்கள்?

வீடுகள், உணவகங்கள், முப்படை முகாம்கள், தொழிற்சாலைகள், ,வைத்தியசாலைகள் ஆகிய இடங்களிலிருந்து கொள்வனவு செய்யப்படுகிறது.



கேள்வி : நீங்கள் கற்ற கல்வி இம்முயற்சிக்கு துணை புரிந்ததா?

நிச்சயமாக, நான் எனது பாடசாலை அல் அக்ஸாவில் வர்த்தகப்பிரிவில் கல்வி கற்றதால் எனது உற்பத்தி நிறுவனத்தைக் கொண்டு நடாத்துவதற்கான ஆரம்ப அறிவைப் பெறக்கூடியதாக இருந்தது. மேலும் ஆரம்பமாக தலைநகர் கொழும்பில் நிறுவனம் ஒன்றில் பணி புரிந்த அனுபவமும் துணையாக அமைந்தது.

கேள்வி : உங்கள் இந்த முயற்சிக்கு காரணமாக அமைந்தது எதுவாக இருந்தது?

அரச தொழில் ஒன்றை எதிர் பார்த்து ஏமாற்றம் அடைந்ததால் இவ்வாறான தொழிலில் ஈடுபாடு காட்ட வேண்டிய நிலைக்கு தள்ளப் பட்டேன். மேலும் வேலை இல்லாமல் காலத்தை விரயம் செய்வதை விட வேலையுடன் காலத்தை பயனுடையதாக ஆக்குவது மேலாகும்.

கேள்வி : இதனூடாக வருவாய் அதிகரித்துக் கொள்ள என்ன திட்டம் கொண்டுள்ளீர்கள்?

பல திட்டங்கள் என்னுள் முடங்கிக் கிடக்கின்றன. அதற்கான சரியான முதலீடு இல்லாமல் எனவேதான் முதலீடு கைகூடும் போது எனது திட்டங்களை பயன் படுத்திக் கொள்வேன்.

கேள்வி : எப்போதிலிருந்து இச்சிறுதொழில் முயற்சியில் காலடி வைத்தீர்கள்?

2014 தொடக்கம் இம்முயற்சியில் ஈடுபாடு காட்டி வருகிறேன்.

அதன் பின்னர் அதனைப் பதிவு செய்தல், அதற்கான தனிச் சூழலை ஏற்படுத்தல், சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத பாதுகாப்பு முறைகளை கையாளல் என படிப்படியாக முனேற்றகரமான நிலைக்கு கொண்டு சென்றேன்.

கேள்வி : இன்னும் நீங்கள் சாதிக்க விரும்புவது?

சாதிக்க விரும்புவது என்பதை விட தொழில் ரீதியாக அதனை விரிவுபடுத்தி அதற்கான சந்தையை உருவாக்குதல், மக்களிடம் இதனது பயன்பாடு பற்றியும் கிடைக்க இருக்கும் நன்மைகள் பற்றியும் தெளிவுபடுத்தல். ஆரம்பமாக வீடு வீடாகச்சென்று இது சம்பந்தமாக விளம்பரங்களை செய்தல் போன்ற விடயங்களில் பெரும் பிரயத்தனம் செய்யவேண்டியுள்ளது.





நேர்காணல் :
ஏ.எம் கஸ்புல்லா

கேள்வி : இளம் வயதில் இவ்விருது பெற்ற நீங்கள் இன்றைய இளைஞர்களுக்கு செல்லக்கூடியது?

வாழ்க்கையில் எமக்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களை பயன் படுத்த பழிக்கொள்ள வேண்டும் 'சிறுதுளி பெருவெள்ளம் என் பார்கள் ' சிறிய விடயமாயினும் முயற்சியால் வெற்றி காண வேண்டும். தொழில் ஒன்றிற்காக காத்துக்கொண்டு இருக்க வேண்டாம்.

செய்யும் தொழிலே தெய்வம் என்பது போல நமக்கு பிடித்த களவு , பொய் இல்லாத நேர்மையான வழியில் தொழிலை செய்யுங்கள் பிறருக்கும் வழிகாட்டுங்கள். வாழ்க்கை நலமாகும்.

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

மறுசால்

முல்லை முஸ்ரிபா

ஊமக்காச்சி 09

எனக்கு ஞாபகமிருக்கிறது பின்வேலி முள்ளுக் கம்பியிலிருந்து வெட்டியெடுத்த துண்டில் வளைத்தெடுத்து டபுளாக்கி நான்கு பக்கமும் முள் கொழுக்கி வைத்துக் கம்பியால் இறுக்கிக் கட்டி அதனை நீண்ட கயிற்றில் இணைத்து வாப்பாவே தயார் செய்தார். ஏனிதென்று தெரியாத பிராயத்தில் புதினம் பார்க்கும் கண்டுபிடிக்கும் அவசரத்திலிருந்தேன்.

பிறகு அதனை எடுத்துக் கொண்டு கிணற்றடிக்குப் போனார். நானும் பின்னாலோடினேன். அதனைக் கிணற்றிலிறக்கி துலாவுவதும், பின்னர் மெதுவாக மேலே எடுப்பதும், கீழே விடுவதுமாக அவரது கைகள் செயற்பட்டன.

நான் உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டே நின்றேன். என்னைவிட உயர்ந்த கிணற்றுக் கட்டு நீர் முட்டும் ஆழக்கிணறு வீட்டின் பின் புறம் இருக்கிறது. கிணற்றைச் சுற்றி சின்னதாகக் கமுகந்தோப்பு. பத்துப் பன்னிரெண்டு பாக்கு மரங்கள்ள செழித்து நின்றன. பாக்கு குலைகுலையாய்த் தொங்கியது. உம்மம்மாவுக்கும் பூட்டிக்கும் வெற்றிலை போட பச்சைப் பாக்கு வாய்க்கும். வாய்க்கு ருசியாய் இருக்கும். நாங்கள் கமுகம் ஓலை கீழே காய்ந்து விழும் அல்லது விழத் தொங்கிக் கொண்டிருக்கும் கமுகமட்டையை இழுத்தெடுத்து வண்டியாக்கி விளையாடுவோம். என்ன விளையாட்டு. அதன் மடலில் ஒருத்தர் இருக்க மற்றவர் இழுக்க ஒரு பயண அனுபவம் முற்றத்தில் பாதை கட்டும். சீலனும் நானும் வண்டி இழுத்து விளையாடுவோம். முற்றத்தில் எங்கள் விளையாட்டு முற்றும்.

பூட்டி, 'பட்டிணத்தா' யாழ்ப்பாணத்துக் கிழவி. காசிக்கட்டி சேர்த்து வெத்திலை போடுவா. காசிக்கட்டி கடும் பிறவுண் நிறத்தில் வட்டமான கட்டியாய் இருக்கும். நான் நாக்கில் வைத்து விறுவிறுத்துப் போவேன்.

நான் அடிக்கடி கிணற்றடிக்குப் போவதற்கு இன்னொரு காரணமுமுண்டு. கிணற்றின் ஒரு பகுதியில் ஏப்ரம் உண்டு. அதில் நின்றுதான் தண்ணியள்ளுவார்கள். உலண்டி போட்டு கயிற்றில் வாளி கட்டி உலண்டி வழியால் வாளியை இறக்கி நீர் நிறைத்து இழுக்க நீர்வாளி மேலே வரும். ஏப்ரத்தில் நின்று குளிப்பதுண்டு. அதனையண்டி தொட்டி, மூன்றடி அகலம் ஐந்தடி நீளம் நான்கடி ஆழம். அதனில் உம்மா தண்ணி நிரப்பித் தருவார். உள்ளிறங்கிக் குளிப்பது எனக்கு களிப்பானது.

வாப்பா ஒரு மூன்று நான்கு நிமிடத்தில் கிணற்றிலிருந்து மேலே எடுத்தார். நேற்று கயிறு அறுந்து விழுந்த வாளி. ஓ...கிணற்றிலிருந்து பொருளையெடுக்கப் பயன்படும் கருவிதான் வாப்பா செய்த பாதாளக் கரண்டி. ஒன்றுக்கும் உதவாது என்று ஒன்றுமில்லை. பழைய கம்பி பாதாளக் கரண்டியாக மாறியது.

வீடு மேய்வது ஒரு விஷேடமென்றால் கிணறு இறைப்பதுவும் ஒரு விஷேஷம்தான்.

என் சின்னக்காலத்திலும் எங்கள் கிணறு இறைப்பு பார்த்திருக்கிறேன். ஓரளவு தண்ணீர் குறைந்த கோடைகாலத்தில் கிணறிறைப்பு நடக்கும். அதனை கிணறு குளிக்



கும் நாளென்பேன் நான். பெரிய வாளியை கயிற்றிலிறக்கி தண்ணீரை அள்ளி அள்ளி இறைக்க வேண்டும். வாப்பாவும், நானும், ராத்தாமாரும் சேர்ந்து நீரிறைப்போம். நீர் கமுகந்தோப்பில் தொம்பி நிற்கும்.

நீர் குறையவும் தூர் எடுக்க வாப்பா கிணற்றில் இறங்குவார். உள்ளே நின்று சேற்று நீரை இறைத்து மேலே அனுப்புவார். அதற்குள் எனது விளையாட்டுப் பொம்மை, கழன்று விழுந்த பழைய உண்டியல், கறல் பிடித்த வாளி, செம்புக் குடம் என்று பழைய சாமான்கள் வரும். தூரெடுக்க தூரெடுக்க நினைவுகளும் தூரெடுபடும். (நா. முத்துக்குமாரின் தூர் கவிதை ஞாபகத்தில் வருகிறது..... 'ஆழ் நீருக்குள் அப்பா முங்க முங்க அதிச யங்கள் மேலே வரும் கொட்டாங்குச்சி, கோலி, கரண்டி, கட்டையோடு உள்ளி முத்து துருப்பிடித்த ராட்டினம்.....')

ஒன்றுக்கும் உதவாது என்று ஒன்றுமில் லைத்தான். எங்கள் வீட்டில் அபூர்வமான பல சாமான்களிருந்தன. ஞாபகங்கள் பட்டியல் போடும்போது ஒவ்வொன்றாய் துலங்குகின்றன. பழைய பக்கிசுப்பெட்டி, பெரிய குத்துவிளக்கு, வடிவான வெற்றி லைகத்தட்டம், பாக்குரல், பூண் போட்ட உலக்கைகள், பருத்த மரஉரல், தாலாட்டுத் தொட்டில், வேலியடைக்கும் குத்தூசி, அரிவு வெட்ட அரிவாள், வேலகாரன்தடி, மிள காய்க்குத் தண்ணி வார்க்கும் பிழிபட்டை, போட்டு நடந்தால் டக்.... டக் கென்று சத்தம் போடும் மிதிவடி, முன் வீட்டு ராசையா வுக்கு இரவல் கொடுக்கும் கொம்புக் கத்தி, காத்தடிக்க பழைய பம்ப், உடுப் புக் கொழுவ மான்கொம்பு கொழுக்கி, ட்ரக்க..... இப்பிடித்தான் பழைய சாமான் பட்டியலொன்று எனக்குள் வளர்ந்தது.

ஒன்றுக்கும் உதவாததென்று வாப்பா அடிக்கடி சொல்வார். சொல்வாரென்ன செய்தும் காட்டுவார். பாதாளக் கரண்டி உள்ளே விழுந்து மேலெழுந்து போல எனக்குள் ஞாபகங்களை மீட்கும் பாதாளக் கரண்டியாக எழுத்து வளர்கிறது.

ஒளவன் கவிதை



எலுமிச்சை நிறக் கனவு

வாசத்தோடு பரவிற்றுப் பரவசம்
ஒளியின் துளியொன்று
முகத்தில் விழுந்திற்று
கனவையள்ளி முகர்ந்தவாறே
நடுப்பொழுதும் கடந்திற்று
நூற்றாண்டு கடந்த வலி
மையச் சூர்யனின்
குணங்கொண்டதொரு சுடர்
ஏந்துகிறாய் கனவில் நீ
இருளர் காலத்தைக்
கொளுத்திற்றுன் சுடர்
மகா பொழுதொன்றில்
என் மௌனம் தவித்திற்று

எலுமிச்சை நிறக் கனா அறாப்பொழுதில்
மெல்லிய இசையோடொத்த மஞ்சள் நிற ஆறொன்று
என் புறத்தால் பாய்ந்திற்று

ஆயிரம் தருக்களில் எலுமிச்சை
நிறத்தொளி பூத்திற்று

ஆவநாழி மென்னிதழின் அழகு

ஆவநாழி கலை, சினிமா, இலக்கிய மென்னிதழ் அழகு வண்ணமாய் 2020 ஆம் ஆண்டு முதல் வெளிவருகிறது. தரு வெளியீடாக வந்திருக்கும் ஆவநாழியின் ஆசிரியர், வெளியீட்டாளர் சுதேசமித்திரன், இணையாசிரியர் ஓவியர் ஜீவா ஆகியோரின் இலக்கிய உழைப்பு மென்னிதழில் மின்னிடுகிறது.



Ashmediaவின் வடிவமைப்பு அலாதி, ஓவியங்களின் காட்சி உயிர்த்துடிப்பு, உள்ளடக்கத்தின் கனதி காத்திரம்.

ஆவநாழியின் முதல் இதழ் 2020 ஆகஸ்ட், செப்டம்பரில் வெளிவந்தது. விலையற்ற, விற்பனையற்ற தனிச் சுற்றுக்கு மட்டுமான இணைய இதழ் ஆவநாழி.

கதை, கவிதை, மொழிபெயர்ப்பு, ஓவியம், நேர்காணல், சினிமா, விமர்சனம், கட்டுரை, ஆல்பம், தொடர் என அதிகபட்சமாக படைப்பு வகைகளில் 133 பக்கங்களில் அழகு நிறையும் மின் பனுவலிது. ஜீவா, பாப்லோ பிக்காசோ, ஷாராஜ் ஆகியோரின் தூரிகையழகு சேர்க்கும் ஆவநாழி ஒரு வாசிப்பு ஆவல்.

சிற்றிதழ் சூழல் வலிமையானது. தொடர்த்தேர்ச்சியானது. தொடர்த்தேர்ச்சியென்பது கடினமானது, சவாலானது. கடுமையான உழைப்பின் வெளிப்பாடாய் நிற்பது. இத்தகைய பின்புலத்தில் தொடர் அறாமல் பன்னிரண்டாவது மின்னிதழாக 2022 ஜூன், ஜூலையில் வந்திருக்கிறது மென்னிதழ் அழகு.

சுந்தரர். எம், ஜோசப், ராய் கந்தழி, ஜீவா என ஓவியங்களின் தூரிகைக் கரங்கள் வியாபிக்கின்றன. கீதாஞ்சலிசிறி, அட்டைப் படக் கட்டுரையை அலங்கரிக்கிறார். அழகிய பெரியவன் ஆல்பமாகிறார்.

கவிதைகளும், சிறுகதைகளும், மொழிபெயர்ப்புமென இலக்கிய எழுத்தின் பெறுமானத்தை ஆவநாழி வழி கொண்டு வருகிறது. ஒரு சஞ்சிகையின் உருவமும் உள்ளடக்கமான ஒன்றிணைந்த பெறுமானம் அதன் தொடர்ச்சியை நிலைநிறுத்தவல்லது. அதுமட்டுமன்றி இன்றைய இலக்கியச் சூழலில் நவீன பாய்ச்சலாக மின்னிதழ் வடிவமெடுத்து நிற்கும் ஆவநாழியின் தேர்ந்;த பக்கங்களில் தெளிக்கப்பட்டிருக்கும் நிறக்கலவை வாசிப்பை மெருகூட்டச் செய்கிறது. நவீன வாசகர்களும் வாசிப்பாற்றுப்படை அனுபவமாக விரிவெடுத்து நிற்கும் ஆவநாழி மென்னிதழின் அழகில் நீங்களும் நனையலாம். aavanalzhi@gmail.com ஊடாகத் தொடர்பு கொள்ளலாம்.

பசியை வெல்லும் புரிதல்



உலகில் இன்றும் பசி வாழ்கிறது. பசியை வெல்லுதலென்பது அத்துணை இலகுவானதல்ல. எனினும் பசியினூடாக மேற்கிழம்பும் மானீகம் என்பதும் அது எத்துணை துயரங்களைத் தந்துவிடுகிறதென்பதும் நொடிப்பொழுதில் அவஸ்தைகளை வெளிக்காட்டி விடுகின்றன. பசியை வெல்லுதலை பொருளாய்க் கொண்ட ஒரு நிமிட ஈரானியப் படம் உணர்த்துவது மானுட நேசிப்பையும், மானீகத்தைக் காத்தலின் மேன்மையையும் அழகுறப் பேசுகிறது.

ஒரு நிமிடத்துக்குள் நான்கு பாத்திரங்கள், சில உரையாடல்கள், பல உணர்வுகளென விரியும் கணப்பொழுதுகளின் கனம் மானுட நேசிப்பின் ஈரம் வற்றாக் காட்சிதான்.

ஒரு ஏழைத் தந்தை சிறிய மகளுடன் கடைக்குச் செல்கிறார். அங்கே ஒரு ரொட்டியைத் திருடுகிறார். மகள் காணவில்லை. அவளது பசியும் பாக்கியாகவுள்ளது. கடைக்காரன்காணுகிறான். கடைக்காரன்கண்டபின் என்ன நடக்குமென்பது எல்லோருக்கும் தெரிந்த கதை.

ஆனால் ஈரானிய இயக்குநர் மையப்படுத்தும் பொருள் இங்கு முனைப்புறுகிறது. தந்தையும் மகளும் போக எத்தனிக்கும் போது கடைக்காரன் கூப்பிடுகிறான். தந்தை மனம் எப்படி இருக்கும். மகள் விபரம் புரியாது இங்கு என்ன நடக்கிறது என வினவுகிறாள். தன் மகளுக்கு முன்னாலேயே தனது இழி செயலுக்குத் தண்டனை கிடைக்குமே என்கிற பதட்டம், பயம், ஒருவகைக் கையறு நிலை தந்தையின் முகத்தில் காட்சியாகிறது.

ஆனால் கடைக்காரன் பணத்தை எண்ணியபடி மிகுதிப் பணமெனக் கொடுக்கிறான். அந்த சிறுமியைப் பார்த்து உங்கள் தந்தை மிகுதிப் பணத்தை வாங்க மறந்து செல்கிறார் என கூறுகிறார். தந்தை தடுமாறுகிறார். மகள் சாதாரணமாகிறாள். தந்தையோ எதுவும் பேச வார்த்தை–யற்று தன்னைத்தான் நொந்த நிலையில் வெளியேறுகிறான். காருண்–யத்தைக் கடைக்காரனூடாக இயக்குநர் குழந்தை உளவியல் பூர்வமாகச் சொல்கிறார். இது கதை நகர்ச்சியின் திருப்பமென்றால், அடுத்த திருப்பம்.

இன்னொருவர், இந்தச் சம்பவத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும் ஒரு நுகர்வோர் செல்ல முனையும் தந்தையையும் மகளையும் அழைக்கின்றான்;. இந்த சாமானை எடுக்காமல் செல்கிறீர்களென்பதாக ஒரு பையைக் கொடுக்கிறான். அதனையும் தந்தை பெறுகிறான். மகள் அருகில் நிற்கிறாள்.

அவன் மேலும் குறுகியவாறு நடக்கிறான். காட்சி முடிகிறது... முடிகிறதென்ன முடிகிறது... மனிதாபிமானம் பார்வையாளனைக் குடையத் தொடங்குகிறது. வறுமை திருடவும் செய்கின்ற சுழல் பலரது வாழ்விலும் நிகழ்ந்துவிடுவதுதான். ஆனால் இங்கு கடைக்காரனைனும் மற்றவரதும் நடத்தைக் கோலம் மானுடப் பண்பின் உச்சமாக நிற்கின்றது எனலாம். இந்தக் குறும்படம் சொல்லும் செய்தியும் முக்கியமானது.

ஈரானிய நவீன திரைமொழி மற்றும் யதார்த்தக் காட்சிப் படிமங்கள் குறித்த நீண்ட கதையாடல் விரிந்துள்ளன.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் அழைப்பிலும், மதகு ஊடகத்தின் அனுசரனையிலும் தென்னிந்திய திரையுலகின் நடிகர், தயாரிப்பாளர், இயக்குநர், பாடகர் எனப் பன்முகத்திறமையுடைய தனிப் பெரும் ஆளுமையாகத் திகழும் நாசர் மட்டக்களப்பிற்கு விஜயம் செய்த போது... (படம்: புதிய காத்தான்குடி தினகரன் நிருபர் MOHAMED SARAFDEEN NOORDEEN)

நம்மில் நாம் கொள்வோம் திடம்

உழைத்து உனக்கு
உதவிடும் உறவு
உயிரிலும் உன்னதம்.
உணர்தல் உத்தமம்.

நாடி அறிந்து தேடி
ஓடிப்போகும் இயல்பு
இருப்பது இல்லை இங்கு.
திருந்தலும் இல்லை.

கருத்தில் கொண்டு
கவனம் எடுத்து
மாற்றியவர் இல்லை.
மாறிடலும் இல்லை.

நம்மில் உள்ள
குறைகள் காணலும்
நம்மை நாமே
திருத்தலும் நன்று.

அப்படியே நாமும்
நம்மில் உள்ள திறமை
கண்டு கொண்டு
பெருமை கொள்ளனும்.

கூட இருப்பார் அவர்
ஆற்றல் காண அவரை
தானே நடந்திட விடனும்.
ஆற்றலை போற்றிடனும்.

உழைப்பை மதித்து
ஊறு இல்லாத வாழ்வு
வாழ்ந்திட எண்ணினால்
மதிப்பு தானாய் வரும்.

நம்மையும் நம்மில்
சார்ந்தோரையும் பார்.
அங்கே உள்ள ஆற்றல்
தேடி வாய்ப்பை கொடு.

வென்று நின்ற போது
போற்றி வாழ்த்தி மகிழ்.
எங்கோ உள்ள ஒருவர்
புகழ் பாடுவதிலும் மேல்.

தன் பிள்ளைக்கு
அடுத்தவர் பிள்ளையை
எடுத்துக்காட்டல் தவறு.
பிள்ளையின் திறன் காண்.

இப்படித் தான் நாம்
வாழ்ந்திட மாறிடனும்.
நமக்குள்ளாகவே திறமை
வளர்த்திட நல்ல வழி.

சின்ன முயற்சியும்
வென்றிட வாய்ப்பளி.
உனக்குள்ளே அது
சாத்தியம் என்றுரை.

வென்ற பின் வாழ்த்தலை
வெல்லும் முன்னும் சொல்.
வென்றிட உன் வாழ்த்தும்
உரமாகும் எண்ணம்
கொள்.

அன்புடன் நதுநசி

மின்சார பிளக் ஊசிகளில் கீறல் இருப்பதற்கான காரணம் என்ன?

மின்சார பிளக்கின் மூன்று ஊசிகளிலும் கீறல் இருப்பதற்கான காரணம் என்னவென்றால், மின்சார பிளக்கின் ஊசிகள் சூடாகும் போது அவற்றின் வடிவத்தை மாற்ற முடியாதபடி வெட்டப்படுகின்றன. அத்தகைய ஊசிகளின் வழியாக மின்சாரம் பாயும் போதெல்லாம், வெட்டுக் காரணமாக மின்சாரம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது, இதனால் அவை விரைவாக வெப்பமடையாது. அதனால் சேதம் ஏற்படும் அபாயம் இல்லை.

கேரளாவில் பிறந்த நடிகர் முரளி





முரளி 1954 மே 25 இல் பிறந்தார். 2009 ஓகஸ்ட் 6 இல் 55 வயதில் கேரளா திருவனந்தபுரத்தில் அமரரானார். இவர் இந்தியாவின் சிறந்த நடிகருக்கான தேசிய விருது பெற்ற மலையாள நடிகர். மலையாளம், தமிழ் திரைப் படங்களில் நடித்திருக்கிறார்.

இவரின் நடிப்புக் காலம்1986 2009.

கேரள மாநிலத்தில் கொல்லத்தில் பிறந்த முரளி ஆரம்பக் கல்வியை குடவத்தூரிலும், உயர் கல்வியை திரிகண்ணமங்கலத்திலும் பெற்றார். பின்னர் பட்டப்படிப்பை மகாத்மா காந்தி கல்லூரி, பின்னர் தேவசும போர்ட் கல் லூரியிலும் பெற்றார்.

மாணவப் பருவத்தில் எஸ். எஃப்.ஐ இன் உறுப்பினராக தீவிரமாய் பங்கேற்றார். திருவனந்தபுரம் சட்டக் கல்லூரியில் சட்டத் துறையில் பட்டம் பெற்றார். படிப்பை முடித்து கேரள அரசு நலத்துறையிலும், பின்னர் கேரள பல்கலைக் கழகத்திலும் பணியாற்றினார்.

1979 ல் "ஞட்டாடி" என்ற மலையாளத் திரைப்படத்தில் கதாநாயகனாக முரளி நடிக்க ஆரம்பித்தார். ஆனால் இப்படம் திரைக்கு வரவில்லை. இவர் நடித்து வெளிவந்த முதல் திரைப்படம் "சிதம்பரம்". குறுகிய காலத்தில் மலையாள சினிமாவின் தவிர்க்க முடியாத நடிகராக உயர்ந்தார்.

"ஆதாரம்" என்ற திரைப்படத்தில் முதன் முதலாக கதாநாயகனாக நடித்தார். நான்குமுறை மாநில அரசு வழங்கும் சிறந்த நடிகருக்கான விருதை பெற்றார். ஒருமுறை சிறந்த துணை நடிகருக்கான விருதும் இவருக்கு கிடைத்தது.

2002ல் சிறந்த நடிகருக்கான தேசிய விருதையும் "நெய்துக் காரன்" என்ற திரைப்படத்தில் தனது சிறப்பான நடிப்பால் வென்றெடுத்தார். தமிழில் முரளியை அறிமுகப்படுத்தியவர் அழகம் பெருமாள்.

அவரது டும் டும் டும் படத்தில் முக்கியமான வேடத்தில் நடித்தார்.

சரணின் ஜெமினி, அமீரீன் ராம் , வெற்றிமாறனின் பொல்லாதவன் ஆகிய படங்களில் முரளி தனது சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தியிருந்தார். ஆதவன் படத்தில் நீதிபதியாக சூர்யாவுடன் நடித்தார்.

நீரிழிவு நோயால் அவதிப்பட்டு வந்த முரளி திருவனந்தபுரத்திலுள்ள தனியார் மருத்துவமனையில் இறந்தார்.

முரளிக்கு மனைவியும், ஒரு மகளும் உள்ளனர்.



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ் ...✍
கம்பளை

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலய மஹோற்சவ திருப்பணி குழுவினர்



கொழும்பு வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலய 35ஆவது ஆடிப்பூர மஹோற்சவ திருப்பணி குழுவினர்...

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஓகஸ்ட் மாதம் 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.